# வாழ்வரசி



தமிழண்ணல்

# வாழ்வரசி

செட்டிநாட்டு வட்டார வழக்குப் புதினம்

நகரத்தார் சமூகத்தில் பிறந்த பெண்ணொருத்தியின்
கண்ணீர்க் காப்பியம்

தமிழண்ணல்
முனைவர் இராம. பெரியகருப்பன்

**செல்லப்பா பதிப்பகம்**
48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி : அலுவலகம் : 2345971 வீடு : 9486009826

முதற் பதிப்பு: பிப்ரவரி, 1979

மறுபதிப்பு: மார்ச், 2023

விலை ரூ. **150.00**

## நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வாழ்வரசி |
| ஆசிரியர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | புதினம் |
| விலை | : | ரூ. **150.00** |
| பக்கங்கள் | : | 192 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| நூல் அளவு | : | 12.5 x 18.5 செ.மீ. கிரௌன் |
| பைண்டிங் | : | அட்டைக்கட்டு |
| தாள் | : | 13.6 NS புக் பிரிண்ட் |
| அச்சிட்டோர் | : | பூச்சரம் பிரிண்ட்ஸ், காரைக்கு- |

**CHELLAPPA PATHIPPAGAM**
48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi: 99421 76893
Email: sala.kasi@gmail.com

# நன்றி சொல்வதானால்...

இன்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், என் இனிய நண்பர் **தினகரன்** அவர்கள் சென்னையிலிருந்து '**தமிழ்**' என்றதோர் இலக்கியத்திங்கள் இதழைத் தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு தொடங்கி நடத்தி வந்தார். என்னை அவர் தம் இதழில் தொடர்கதை எழுதுமாறு தூண்டினார். சங்க காலச் சமுதாயப் பின்னணியில் ஒரு வரலாற்று நாவலை அதில் எழுதத் தொடங்கினேன். **இருதலைப் பறவை** என்பது அதன் தலைப்பு. சில திங்கள்கள் மட்டுமே என் நெடுங்கதை அதில் வந்தது. முகப்பட்டை முதல், பக்கத்திற்குப் பக்கம் படம்போட்டு, ஏதோ பெரியதொரு நாவலாசிரியரை அறிமுகப்படுத்துவது போல் என்னை அவர் அறிமுகப்படுத்தி விட்டார்.

தமிழ்நாட்டுக்கேயுரிய வழக்கிற்கு ஏற்ப, இச்சிறந்த 'திங்களேடும்' நின்றுவிட்டது; என் கதையும் தடைப்பட்டுவிட்டது.

ஆனாலும் அன்று விதைக்கப்பட்ட ஆர்வம் வேள்வித் தீயென என்னுள் ஓர் விழைவை எழுப்பிக் கொண்டே இருந்தது.

சிலவற்றை எழுதுவேன்; விட்டுவிடுவேன். தொடக்கமிருக்கும்; முடிவு இராது. இதுவே கதை எழுதும் என் கதை.

நேரமின்மையும் ஒரு காரணம்.

திறனாய்வு, ஆய்வு என 'டாக்டர்' பட்டத்திற்காக எழுத எண்ணியதிலிருந்து, நோக்கம் திசை திரும்பியதும் ஒரு காரணம்.

'வாழ்வரசி' கதையை எழுதத் தூண்டியவர்கள் என் இனிய நண்பர்கள் நா. இளங்கோவன், இராம. ஆண்டியப்பன் இருவருமாவர். தங்கள் 'நகர மலர்' திங்களிதழில் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் (1977-'78) இதனை அவர்கள் வெளியீட்டுதவினர்.

இது நகரத்தார் என்ற குறிப்பிட்ட சமூகத்தைச் சித்திரிக்கும் புதினம். கதை மாந்தர்களும் நிகழ்ச்சிகளும் முழுக்க முழுக்கக் கற்பனையே.

அச்சுப் படிகள் திருத்தியுதவிய டாக்டர் இரா. மோகன், மா. வண்ணமுத்து இருவருக்கும், அழகுற அச்சிட்டுதவிய கோனார் அச்சக உரிமையாளர் சீ. சடகோபன் அவர்களுக்கும், மேலே குறிப்பிட்ட நண்பர்களுக்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

தமிழண்ணல்

# 1

பன்னீர்மரம் வெளிமுற்றத்தில், முகப்புக்கு எதிரே மிக உயரமாக வளர்ந்து நின்றது. மாலை மயங்கும் செவ்வான ஒளிக்கதிர்கள், அம் மேற்குப் பார்த்த முகப்பு வீட்டுக்கு, குவி விளக்கைப் போல ஒளியைச் சிதறிக் கொண்டிருந்தன. நாடகத்தில் குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் குவிவிளக்குகள் ஒளி சிந்துவதை அது நினைவூட்டியது. வெள்ளைப் பறவைகள் வானத்திலிருந்து பறந்து பறந்து வீழ்வதேபோல, அந்த உயர்ந்த பன்னீர் மரத்தி லிருந்து வெண்ணிறப் பூக்கள் ஒவ்வொன்றாக இறங்கி வந்துகொண்டிருந்தன. அதன் மென்மை யான நறுமணம், அந்தத் தேக்குமரத்தால் இழைக் கப்பட்ட இரட்டை முகப்பிலே, பூங்காற்றுடன் இழையோடிக் கொண்டேயிருந்தது. பருமாத்தேக் கில் இழைக்கப்பட்ட நிலைவாயிற்படி, முகப்புக்கு ஒரு பெருமிதக் காட்சியை நல்கியது. அதில் இழைத்து இழைத்துச் செய்யப்பட்ட வேலைப்பாடு கள்-நிலைமேலே திகழ்ந்த கசலட்சுமிக் காட்சி, அந்த வீட்டில் செல்வவளம் என்றும் குடியிருப்பதை, மனமகிழ்ந்து வெளிப்படுத்துவதுபோல இருந்தது.

அன்று அங்கு ஒரே பரபரப்பாக இருந்தது. அணுக்கமான சுற்றத்தாரெல்லாம், மதியத்திலிருந்து ஒவ்வொருவராக வந்துகொண்டே இருந்ததால், இப்போது வீடு நிறைந்து காணப்பட்டது. வலையபட்டியில் அடைக்கன்குளம் தாண்டி, உலகம்பட்டி போகும் வழியில் இருந்தது கோலக் கஞ்சார் குமா. வீடு. இன்று அது திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. பேச்சுக் கலகலப்பாக இருப்பவர்கள் வீடும் கலகலப்பாகஇருக்கும் என்பதற்கு அந்த வீடு ஓர் எடுத்துக்காட்டு. வருடா வருடம் ஆடிச் செவ்வாயன்று நடக்கும் அழகிய நாச்சியம்மன் கோயில் தேரோட்டம் என்றால், இந்த வீட்டிற்கு உற்றார் உறவினர் எல்லோரும் வந்து விடுவது வழக்கம். அது அவர்கள் குலதெய்வம்.

இன்று தேரோட்டம் என்று சொல்லவும் வேண்டுமோ? குமரப்ப செட்டியார்க்கும் லெட்சுமி ஆச்சிக்கும் பிறந்த ஒரே மகன் அழகப்பன். மதுரையில் டாக்டருக்குப் படித்துவிட்டு, இப்போது 'ஹவுஸ் சர்ஜ'னாக இருக்கிறான். இன்று அவனும் விடுமுறை போட்டுவிட்டு வந்திருந்தான். அவனுக்கு ஒரே தங்கை அழகி; நெடுநாட்களுக்குப் பின் பிறந்த சிறுமி, வீடே அதிரும்படி ஓடி ஆடிக் கொண்டு திரிந்தாள்.

ஒருநாள் முன்னதாகவே அந்த வீட்டின் கொல்லைப் புறத்தில் சிறு கொட்டகை போட்டார்கள். முதல்நாள் இரவே சமையற்காரர்கள் வந்து விட்டார்கள். அன்று முழுவதும் காலையிலிருந்து விருந்துபசாரம் நடந்தவண்ணமிருந்தது. இப்போது அங்கிருந்து பல வகையான பலகாரமணம் வீசிக் கொண்டிருக்கிறது. பலர் தேரோட்டம் பார்த்து விட்டுத் திரும்பியிருந்தார்கள்; சிலர் திரும்பிக்

கொண்டிருந்தார்கள்; மற்றும் சிலர் இன்னும் திரும்பவில்லை. அவர்கள் பச்சைத் தண்ணீரில் விளக்கெரிவதைப் பார்ப்பதற்காக அங்கேயே நின்றிருந்தார்கள். ஆம், அழகிய நாச்சிகோயிலில் அது ஓர் அற்புதம்! கோயிலுக்கு எதிரே மிக உயரமான குதிரைகள் எகிறிக் குதிப்பனபோல் நிற்கும் இடம். அதன் முன்னே நின்றிருக்கும் பெரிய ஆலமரம், வடக்குப்பக்கத்தே உள்ள சிறுமடம், மற்றும் சுற்றுப்புறம் என எல்லா இடங்களிலும் ஒரே மக்கள் வெள்ளம்! இரவு நேரத்தில் ஆங்காங்கு படுத்தும், கிடந்தும், நின்றும், நடந்தும் உரையாடியும் இருக்கின்ற காட்சிகள்!! எங்கும் விளக்கொளி சொலித்தது. அதற்கும் மேலாக வானத்தில் முழுநிலவின் பவனி...!

○ ○ ○

அழகப்பன் இந்த ஆரவாரத்தை விட்டு விலகி புதிதாகக் கட்டப்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்குப் பின்னால் ஒரு சிறு பாறையின் மேல் தன்னந்தனியே உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்த நிலவைப் பார்ப்பதும் இந்த உலகைப் பார்ப்பதுமாய்ப் பெருமூச்செறிந்து கொண்டிருந்தான். சற்றுத் தூரத்தே மக்கள் வலையபட்டியை நோக்கி விரைந்து கொண்டும் எதிரே கோயிலை நோக்கி நடந்துகொண்டும் இருந்தார்கள். அழகப்பன் முகம் சலனமற்று, விருப்பு வெறுப்புக்களைத் துறந்துவிட்ட ஞானிபோல் காட்சி அளித்தது. படிப்புத்தான் மருத்துவத் துறைக்குப் படித்தானே தவிர அழகப்பன் உள்ளம் ஒரு ஞானியினுடையது போன்றது. அவன் வாய்விட்டு அதிகம் பேசுவதில்லை. உள்ளமோ ஆயிரமும் சிந்திக்கும்; உலகை வலம்வரும்.

யாரோ ஒருத்தி ''வள்ளி, வள்ளி!'' என்று கத்திக்கொண்டே வருவதும், முன்னே ஒரு பெண் 'சலக்கு சலக்கு' என்று, சதங்கை கொஞ்ச ஓடு-வதும் அவன் காதுகளில் ரீங்காரமிட்டன.

திரும்பத் திரும்ப அந்தச் சலங்கை ஒலி ... அவர்கள் போய் நேரமான பிறகும் அந்தச் சலக் ... சலக் ... சலக் ... ஒலி போவதும் வருவதுமாய்ச் சுற்றிச் சுழல்கிறது. அழகப்பன் தனிமை கலைந்து எழுந்து கோயிலை நோக்கி நடக்கிருன். பள்ளி-யைத் தாண்டிப் போகும் அந்தச் சிறு இட்டறை வழியில் ... கோயிலிலிருந்து வந்து கொண்டிருந்த அந்தக் கன்னி, தன் தங்கை ... சலக், சலக் எனச் சதங்கை ஒலிக்க ஓடுபவளிடம்... ''அடியே, வள்ளி! எங்கேடி ஒரு கால் தண்டை... காலில் காணுமேடி .. அடி ... ஆத்தா ... நான் என்ன பண்ணுவேன் ... புதிசாப் பண்ணி ஒரு முறை கூடப் போடலியே... ஆத்தா கோவிச்சுக்குவாளே! ஆசாரிக்குக் கூலி கூடக் கொடுக்கலியே. நான் என்னடி பதில் சொல்லு வேன்... அப்பதே ஆத்தாகூடப் போடீன்னு சொன் ளேனே... கேட்டியா? என்னையில்ல கவனமில்லாமே விட்டுட்டேன்னு திட்டுவாக ... அட கழுதை ... இப் பிடியா நினைப்பில்லாமேப் போவாய்...அப்பச்சி வருத் தப்படுவாகளே, நான் என்ன செய்வேன்'', என்று பதறினுள். கண்கள் குளமாகிவிட்டன. தங்கையும் கதறிவிட்டாள்!. ''வா'ச்சி! கோயிலுக்கே போயித் தேடிப் பார்ப்போம் ...'' இருவரும் மறுபடியும் கோயிலை நோக்கிப் புறப்பட்டார்கள்.அழகப்பனுக்கு ஓர் இரக்கவுணர்ச்சி ... அவன் அங்கு ஒரு புறமாக மர நிழலில் நின்றதை அவர்கள் கவனிக்கவில்லை. அவனுக்கோ அச்சிறுமியும் சின்னப் பெண்ணும் பதறியது வியப்பாக இருந்தது. அவன் செட்டி

நாட்டோடு மட்டுமல்லாமல், பல திறப்பட்ட மக்க ளோடு, பெண்களோடு பழகக்கூடிய எம்.பி.பி.எஸ். படித்தவன். ஒரு சிறு பெண் ஏதோ ஒரு வெள்ளித் தண்டை தவறிப் போனதற்கு, உலகத்தையே பறி கொடுத்ததுபோல் துடிக்கின்ற காட்சி அவனுக்குப் புதுமையாகக்கூட இருந்தது. அவர்கள் மிக மெது வாக, மிகமிக மெதுவாக நடந்து கொண்டே, கண்-களை அங்குமிங்கும் நோட்டமிட்டுக் கொண்டு சென்றுர்கள். நிலவொளியில் சங்குக் கழுத்தின் பின்புறம் மின்ன, அதில் நீலமணி பதித்ததுபோல் நீண்ட கருங் கூந்தல் பின்னல் கலந்து காற்றில் துவள, பூப்போட்ட தாவணி காற்ருேடு உறவாட, சந்தன நிறத்துப் பாவை அன்ன நடையிட்டுப் போகும் பின்னழகு மிகவும் கவர்ச்சியாகத்தான் இருந்தது. "ஆயினும் மெதுவாக நடக்கும் பெண் களுக்குப் பின்னே, தான் அதிலும் மெதுவாக ... அதுவும் அந்த நேரத்தில்" ... உலகம் என்ன நினைக்கும்? அழகப்பன் எட்டி அடி எடுத்து வைத்து அவர்களுக்கு முன்னே கோயிலை அடைந்தான். அவனுடைய கண்கள் அங்கே அந்த வெள்ளித் தண்டையைத்தான் துருவித்துருவித் தேடின. அவ னும் ஒரு முறை, இரு முறை கோயிலைப் பிரகாரம் வந்து விட்டான். ஒவ்வொரு முறையும் அவர்கள் திருச்சுற்றில் எதிர்ப்பட்டார்கள். ஆனுல் முகங்கள் எதிர் கொள்ளவில்லை. கோயிலின் பின்புறம், அழகப்பன் சென்றபோது அங்கே ஒரு சுமை தாங்கிக் கல்லுக்குப் பக்கத்தே, வெண்ணிறத் தண்டை ஒளியை உமிழ்ந்து கொண்டு கிடப்பது தெரிந்தது. அப்பெண் அவனிடம் 'எனக்கு இழந்த நகையைத் தேடித்தா' என்று கேட்கவில்லை. ஆனுல் அவளுடைய கடைக் கண்களில் வழிந்த ஒரு

சொட்டுக் கண்ணீர், முன்பின் அறிமுகமில்லா அவ் ஆடவனை முக்கால் மணி நேரமாய்த் தேடிக் கண்டு பிடிக்க வைத்துவிட்டது!

○ ○ ○

"வள்ளி ... கழுதை ... தொலைச்சுட்டியே ... சனியன் ... யாரு எடுத்தாகளோ ... அதுக்கேத்த தண்டை ... போச்சு ... யாராவது நரி முகத்திலே இன்னைக்கி விழிச்சிருப்பாக!" ... இப்படி அலுத்துக் கொண்ட அக்கன்னி தன் கையிலிருந்த மற்றொரு தண்டையைச் சரி பார்த்துப் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

"இது உங்களுடையதா?" ... குரல் வந்த திசையில் சிறுமியும் பெண்ணும் திரும்பினார்கள். ஒருவரும் பேசவில்லை. சிறுமியின் முகத்தில் வியப்பு ரேகை படர்ந்தது. அவளோ கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'ஆம். அது எங்களு டையதுதான்!'— அவள் உள்ளந்தான் பேசியது; உதடு பேசவில்லை.

மலர்ந்த முகம் இப்போது வாடியிருப்பதும் கரு விழிகள் இப்போது கலங்கியிருப்பதும் கூட அவளுக்கு ஓர் அழகைத் தந்தன. பூரண நிலவொளியில், தந்தப்பதுமை உயிர்பெற்று நிற்பதுபோல அவள் நின்றாள். அவளது ஒவ்வோர் அசைவும், ஒவ்வொரு சொற்பொழிவாகச் செய்வது போலிருந்தது. ஆனாலும் அவள் வாய் திறந்து பேச வில்லை... அந்தத் தண்டையை, 'அறிமுகமில்லாத ஓர் இளைஞனிடம் போய் வாங்குவது யார்?'... அவள் சிறுமியைப் பார்த்தாள். சிறுமி அழகப்பனைப் பார்த்தாள் அவனுக்குப் புரிந்தது... சிறுமியை அழைத்து நீட்டினான். சிறுமி வாங்குவதற்குக்

கையை நீட்டிக்கொண்டு தாவினுள். அவன் நீட்டிய கையை, இழுத்துக்கொண்டான்; சிறுமிக்கு ஏமாற்றமாய் இருந்தது.

"இது உன்னுடையது என்பதற்கு என்ன அடையாளம்?" அழகப்பன் குறும்பாகக் கேட்டுச் சிரித்தான். திகைப்படைந்த சிறுமி தன் ஆச்சி-யைப் பார்த்தாள். ஆச்சி, தலையை அசைத்துக் கையிலிருந்த தண்டையைச் சிறுமியிடம் நீட்டினுள். அதைப் புரிந்துகொண்ட சிறுமி, விரைந்தோடிச் சென்று அந்தத் தண்டையை வாங்கிக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கித் தன் கையிலிருந்த தண்டையோடு இப்படியும் அப்படியும் வைத்து, ஒப்பிட்டுச் சோடி சரிதானு என்று பார்த்தான். இடையிடையே அவன் கண்ணையும் அவளையும் பார்த்துக்கொண்டதை, அவளும் எப்படியோ கவனித்துக் கொண்டாள். 'இதற்கு அதுதான் சோடி' என்பதை அவன் உறுதி செய்து கொண்டதும் அச்சிறுமியிடம் இரண்டு தண்டைகளையும் சேர்ப்பித்தான். வாங்கிக் கொண்ட மகிழ்ச்சியில் துள்ளி ஓடிய சிறுமி, ஆச்சி கையிலே அவற்றைக் கொடுத்தாள். அவள் அவற்றை வலது கையில்வாங்கிக்கொண்டு, சற்றே இமைகளைத் தூக்கி நன்றிப்பெருக்கோடு, அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அடுத்த கணமே நாணத்தால் கனத்த இமைகள் கீழே தாழ்ந்தன. அவள் பார்வை வீச்சு ஒவ்வொன்றும் 'தனக்கு மாலையிடுவது போல்' வந்து, தன் மேனி முழுவதும் வீழ்வதாக அவன் உணர்ந்தான்.

சிற்பக்கலைக்கு இவள் மூக்கும், விழியும், முகமும் சாயலும் முன்மாதிரியாக உதவக்கூடும். திருமகளே நேரே வந்ததுபோல், எந்நேரமும் கனிவுடன் காட்சிதரும் தோற்றம் அவன் உள்ளத்தை ஈர்த்தது.

'பெயர் என்ன?' தயங்கித் தயங்கிக் கேட்டான். அவள் முகம் மேலும் சிவந்ததே தவிரப் பெரியவளிடமிருந்து பேச்சு வரவில்லை.

'சவுந்தரவல்லி' — முத்து உதிர்ந்தது போல் மொழிந்தாள் சிறுமி.

'உன் பெயரைக் கேட்டேன்?' — சிறுமியைக் கேட்டதுபோல் சமாளித்தான் அழகப்பன். இருவர் பெயரையும் தனித்தனியே சந்தேகத்திற்கிடமின்றித் தெரிந்துகொண்டுவிடலாம் அல்லவா?

'வள்ளி' — சிறுமி கூறினாள். 'நல்ல பெயர்கள்' என்றான் அவன். அதற்குமேல் அவளுக்கு நிலை கொள்ளவில்லை. சௌந்தரவல்லி தன் தங்கையுடன் புறப்பட்டாள் நடப்பதற்காகச் சற்று திரும்பியதும் தன் தங்கையிடம் அவள் 'போயிட்டு வாரோமுன்னு சொல்லிக்கடி' என்று கூறியதையும் அச்சின்னஞ்சிறுமியும் வெட்கப்பட்டுக்கொண்டு தன் பக்கம் திரும்பாமல் போனதையும் அழகப்பன் கவனித்தான். அவன் உள்ளம் என்னவோ கோயில்மணி ஓசையுடன்கூடிச் 'சௌந்தரம், சௌந்தரம்' என்று எதிரொலித்தபடி இருந்தது.

## 2

மறுநாள் காலையில் பலகாரம் சாப்பிட்டுக் கொண்டே பெண்கள் நடுவளவில் ஊர்த்தாக்கல்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள். சமையற்காரர்கள் பலகார வகைகளைக் கொண்டுவந்து, சாப்பிடச் சாப்பிடப் பரிமாறினார்கள். இட்டளி, இடியாப்பம், பால்பணியாரம், வெள்ளைப் பணியாரம், வடை எல்லாம் அன்று செய்யப்பட்டன. 'அத்தனையை-

ுமா சாப்பிடப் போகிறோம்? வீணாகிவிடாதா?' என்று யாரும் நினைப்பதில்லை. 'இன்னைக்கு நம்ம வீட்டிலே அஞ்சு பலகாரம்; அவுக வீட்டிலே மூணுதானும்ல' என்று பெருமைப்பட நினைக்கும் கூட்டம் இது. 'இந்த இனத்துக்குச் சிக்கனத்திலே அதிக அக்கறையா? தற்பெருமை, பகட்டில் அதிக அக்கறையா?' என்பது இன்னும் தீர்மானமாக-வில்லை. விசேட வீடுகளில் சமையற்காரர்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் சரிபாதிக் கூட்டம் அவர்களாகத்தான் இருக்கும்; இந்தச் செட்டுச் சமையற்காரர்கள் வந்தால்தான் கலியாணமோ, புதுமையோ, திருவிழாவோ சிறப்பாக இருக்கும். சமையற்காரர்களின் எண்ணிக்கை கூடக்கூட, அந்த வீட்டில் பணவசதி அதிகமென்று மற்றவர்-கள் நினைத்துக் கொள்வார்கள். எனவே, விசேடம் வந்துவிட்டால் போதும், வழக்கமாகப் பார்க்கிற வேலைகளில் பலவற்றைக்கூட வீட்டு ஆச்சிமார்கள், அந்த இரண்டொரு நாளைக்கு வேலைக்காரர்களிடம் விட்டுவிடுவார்கள்!

அழகப்பன் பட்டகசாலையில் படுத்துக் கொண்டு, வளவில் சாப்பிடுபவர்களைப் பார்த்துக் கொண்டு சிந்தனையில் மூழ்கிக்கிடந்தான். அவன் நினைவுகளெல்லாம் எங்கோ குடி போய்விட்டன. சிறுமியர் சலங்கை ஒலிக்க நடப்பதைக் கேட்டால் போதும், பின்னேயே அந்த அழகுத் தேவதை அன்ன நடையிட்டு வருவதை அவன் மனக்கண்-கள் பார்த்தன. பூங்கொடி அசைந்து வருவதைப் பார்த்தால் எப்படி இருக்கும்? சௌந்தரம் நடந்து வருவதும் அப்படித்தான் இருக்கும். யாரோ ஒருவன் 'முல்லைக்குத்தன் பொன் தேரைக்கொடுத்து விட்டுப் போன பாரி ஒரு முட்டாள்' என்றானும். சே!

இந்தப் பூங்கொடிபோல் இருக்குமானுல், பாரி தன் தேரை என்ன... தானே வந்து நின்றுகொண்டு, அம்முல்லைக்கொடி 'தன்னைப்பற்றிப் படரட்டுமே?' என்று விட்டிருப்பானல்லவா?... இந்தச் சவுந்திரம் என்ற முல்லைக்கொடி, தன்னைப்பற்றிப் படர்வதாக அழகப்பன் உள்ளுக்குள் ஒரு கிளுகிளுப்பு... சிரித்த முகம்... எப்போதும் முகை மொக்குள் மலர்வது போன்ற முகம்... ஆமாம். "இவளுக்குக் கோபம் வருமா, வராதா?...இவளுக்குக் கோபம் வந்தால், தனது இயல்பாகவே புன்னகை பூத்த முகத்தை, இவள் எப்படி மாறவைத்துக்கொண்டு பேசுவாள்? இவளைக் கலியாணம் செய்துகொள்பவன் பாக்கிய வான்! அவன் எதிரே எப்போதும் மலர்ந்த முக முடைய, இந்தத் திருமகள் ஓடி, ஆடி வேலை பார்த்துக்கொண்டே இருப்பாள். அவன் வாழ்வே 'தாமரை பூத்த தடாகமாக' நிறைந்தொளிரும்... அந்தச் சிரிப்பில்தான் என்னென்ன...முத்து, வயிரம், வயிடூரியம்... எல்லாமா இருக்கும்!" "சௌந்தரம்! அடிக்கடி பணப்பெட்டியைத் திறப்பதுபோல், புன்னகை பூத்துப் பூத்துக் குலுங்குகிறுயே? அதற்கே என்னை இழந்துவிட்டேன்!" என்றது அவன் நெஞ்சு. அப்போது அந்த நீண்ட கருங்கூந்தல்— கருநாகம்போல் பின்னிப் பிணைந்து, நெளிநெளியாய் அவள் முன்தானை மேல் கிடந்து புரள்வது 'என்ன என் அழகு மட்டமா?' என்று கேட்டது. எலுமிச்சம் பழம் போன்ற நிறமும் கார்மேகக் கூந்தலும் தாங்கிய அவளுக்குக் கடைசல் வேலை தெரிந்த மரத்தச்சன் கவின் பொருந்தச் செய்த பாவையின் வண்ணம் படிந்திருந்தது. சற்றுஉயரமானவள்; ஆனுல் நிரம்பவும் உயரமானவள் அல்ல. ஒல்லியானவள்; ஆனுல் மிகவும் மெலிந்த உடல் அல்ல. கட்டுடல் பெற்றவள்; இதனுலேயே இந்த நாட்டுச் சிலைகள் கற்பனை-

ண் அல்ல என்று மெய்ப்பிப்பவள். எல்லாவற்றை-ம் விட, அந்த அன்ன நடை... அதைக் காட்டிலும் அவளுடைய பார்வை! ஒவ்வொரு முறை பார்க்கும் பாதும் பொன்போன்ற இமைகளைச் சற்றே உயர்த்-ப் பின் தாழ்த்துவது, மாலையிடுவதுபோல் இருக்-றது. அந்தப் பார்வை, முதல் முறை வந்து விழும் போது 'இவள் உறுதியானவள், தீர்மானமானவள், லனமற்றவள், திருத்தமானவள்' என்று பேசுகின்-றது. மறுமுறை சற்றுக் கூர்ந்து பார்க்கும்போது அப்பார்வை 'இவள் பற்று மிகுந்தவள், பாசம் மிக்-கவள், உணர்ச்சி வசமானவள், ஒரு கவிதை வடி-வானவள்' என்று பேசுகிறது!

எல்லாவற்றுக்கும் மேலாகப் பொன்னிறமான கைகளும், திருந்திய கைவிரல்களும் மின்னொளி வீசுகின்றன. செங்காந்தள் கார்காலத்தில் மட்டும் வேலியோரத்திலேதான் பூத்து நிற்கும். இவ்விரல்களோ எப்பொழுதும் மலர்ந்து விளங்கும் மலர்கள்! ''உங்கள் கை தொட்டது பொன்னாகும்' என்பார்கள். இப்படிப்பட்ட கை தொட்டாலல்லவா பொன்னாக முடியும்?'... இவ்வாறு அவள் அழகில் இலயித்துப் போயிருந்தான் அழகப்பன். வளவில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆச்சி ஒருத்தி சாம்பார் வரவில்லை என்றுபோட்ட சத்தம் அவன் கவனத்தைக் கலைத்தது.

○ ○ ○

"ஆமா... உங்க அழகப்பன்தான் டாக்டருக்குப் படிச்சு முடிச்சுட்டானும்ல. கலியாணத்தை முடிக்க வேண்டியதுதானே? இப்படி வர்ற இடத்தையெல்லாம் விட்டுவிட்டு என்ன செய்வீக!"

"என்ன மங்களாச்சி! இன்னம் ஒரு வருசம் பெரிய ஆஸ்பத்திரியிலேயே இருந்து வைத்தியம்

செய்து பழகணுமாம். முடிஞ்சுதான் கலியாணம் பேசணுமுன்னு அப்பச்சியும் மகனும் பிடிவாதம் பண்ணுருக...''

''அவுக கிடக்கிருக... பிள்ளேங்களுக்கு வியாழ நோக்கம் வந்துட்டா, படிப்புக்கு இடையிலே கூடச் செஞ்சுபுடுருக... நீங்க என்னணு யோசிக்கிறீக. குழி பிறையிலே 101 பவுனும் எழுபதாயிரமும் தாரோமுண்ணுகளாமுல்ல ... விடலாமா?''

''மங்களாச்சி! வர்றவுகளுக்கு என்னுலே பதில் சொல்ல முடியல்லே... மகிபாலன்பட்டியிலே, அந்த நல்ல கருப்பி ஆச்சிக்கு நாத்தஞர் வீடு செய்யிருேமுங்கிருக...வயிரப் பூச்சரம், வயிரத்தோடு, இரண்டு வயிர வளேயல், வயிரத்தாலி எல்லாம் வயிரமாப் பூட்டுறமுங்கிருக!''

''பேசி முடிக்க வேண்டியதுதானே. எல்லாமே பெரிய நகையாயிருக்கே, லட்சுமி!''

''வேளே வரவேணுமில்ல ... அந்தப் பொண்ணு கொஞ்சம் கருப்பாம்!''

''கருப்பா இருந்தா என்ன? இத்தனே வயிரத்தையும் பூட்டுனு அதுதான் பளிச்சினு தெரியும்!''

''நல்லாச் சொன்னிங்க மங்களாச்சி! மா நிறம்... கொஞ்சம் மூக்கு நீட்டிக்கிட்டிருக்குதாம்... பல் வெளியே தெரியுதாம்... கண் கெருட பார்வையாம்... கொஞ்சம் குந்தி நடக்கிருளாம் ... எல்லாம் வாழ்ந்து வடிஞ்சாச் சரியாப் போகும் ... கேக்க மாட்டமுங்கிருகளே!''

''லட்சுமி! எங்க வீட்லேயும் இந்த அநியாயம்தான். சொல்றதைக் கேக்கவே மாட்டாக... இந்தா ஒரு சனியனே என் தலேயிலே கட்டியிருக்காக பார்த்தியா? மூத்த மருமகள்னு... ஆமா...

சேப்பட்டியா ஐம்பதும் ஐம்பதும் தர்றேன்... அறுபத்தைஞ்சு பவுன் போடுறேன்னுள்னு சொன்னுங்களே ... பேசப்படாதா. அத்தப் பொண்ணு கிளியாட்டம் இருப்பாளே...''

''கூடவே தாரோமுன்னு இப்பச் சொல்லிவிட்டிருக்காக, ஆச்சி!''

''வேகுப்பட்டியிலே ... உன் அண்ணன் வீட்டிலே கூட நாலு பொண்ணு, இன்னும் மூணு இருக்கு...''

''சனியன்! அந்தப் பேச்சை எடுக்காதே ... ஏதோ தம்பி பழநியப்பன் வீட்டிலே இருந்தால் இப்பவே கட்டிக் கூட்டி வரலாம். அவனும் அப்படிச் சம்பாரிக்கிறுன். அண்ணன் தான் ஒண்ணுமில்லாமேப் போனுரு...இந்தப் பெண்டாட்டியைக் கட்டிக்கிட்டு அழுகிருரு!''

''மூத்த பெண்ணைக் கட்டிக்கொடுத்த இடமும் வழியில்லே. அவள் ஆத்தாவீட்டிலேயே வந்து கெடக்கிறுளாம். அவன் ஒரு குடிகாரப் பயல்... அடகு வைக்க வேண்டியது பாக்கியில்லையாம்... அத்தனை நகையையும் வித்துத் தீர்த்துப்பிட்டு, வெறுமனே வீட்டுக்கனுப்பியிருக்கிறுனும்...!''

''அவுக பேச்சு நமக்கெதுக்கு, இருபது வருசமா கூட்டு, நாட்டத்துப் போச்சு ... என்னைக்கு, நான் ஒருத்தி பிறந்தவளுக்குச் செய்யிறதுக்கு, அவள் வயிறெரிஞ்சாளோ அன்னைக்கே அறுத்துக் கழுவிப்பிட்டேன்.. பொங்கப் பானைக் கதையைக் கேட்டியா ...ஆச்சி!''

தன் தாயார் என்ன சொல்லப் போகிருர்கள் என்று அழகப்பனுக்குத் தெரியும். அதை அவன்

ஆயிரம் முறை கேள்விப் பட்டுவிட்டான். பொங்கல் பானை கொண்டு வந்ததில் ஏதோ சில குறைகள்... இதனால் குடும்ப உறவே இருபது வருடமாகப் பாதித்துப் போச்சு...பொய்யான கவுரவம், வீண் பிடிவாதம்! ''ஆச்சிமார்கள் எல்லாமே இப்படித் தானே?'' சட்டென்று எழுந்த அழகப்பன், பட்டக சாலைச் சன்னலில் இருந்த கண்ணாடியை எடுத்துத் தலையை ஒழுங்குபடுத்திக் கொண்டு, பக்கத்தில் முருகன் படத்துக்கு எதிரேயிருந்த திருநீற்றை வலது கைக் கட்டை விரலால் தொட்டு, நெற்றி யில் இட்டுக் கொண்டு, வீட்டை விட்டுப் புறப்பட் டான். நேரே அடைக்கன்குளம் தென்கரைக்கு வந்து, கச்சேரிக் கூடத்துக்கு முன்பாக வேப்ப மரத்தடியில் நின்று கொண்டே வருபவர்களையும், போகின்றவர்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் யாரையோ தேடுவது போலத் தோன்றின. அடைக்கன்குளத் தில் சிலர் குளித்துக் கொண்டிருந்தார்கள். கரை யில் சிலர் காய்கறிகளை வைத்து வியாபாரம் செய்வதும் தெரிந்தது. மற்றொரு பக்கத்தில் சில இளைஞர்கள் விளையாட்டாகப் பேசிச் சிரித்துக் கொண்டு நின்றார்கள். அழகப்பன் இந்தக் காலத்து இளைஞர்களைப் போல வெட்டிப் பொழுது போக்கு பவனோ, வீதியில் நின்று இளிப்பவனோ அல்ல. நல்ல வாகான தோற்றமும், மாநிற உடலும், எடுப் பான பார்வையும் உடையவன். டாக்டராவதற்கு மிகவும் தகுதியுடையவன். உயரமும் பருமனும் நிறமும் தோற்றமும் பிறரை ஆளும் தகைமையைக் காட்டுவன. அவன் குரலிலும் அந்த ஆளுமை உண்டு. எப்போது பார்த்தாலும் எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பவன்போல் காட்சியளிப்-

பான். எதிரேயிருக்கும் உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் மனம் வேறு எங்கோ சுற்றிக் கொண்டிருக்கும். சின்னப் பிள்ளை-யில், அவனை அவனுடைய தாயார் 'மௌன சாமி' என்று கேலியாகக் கூப்பிடுவார்கள். கல்லூரி உணவு விடுதியில், வேலையாட்கள் யார் சொன்னாலும் கேட்க மாட்டார்கள். ஆனால் அழகப்பனின் பார்வை, பேச்சு அவர்களையும் கட்டுப்படுத்தி விடும்! அவன் அதிகமாகப் பேசமாட்டான்; பேசினால் ஆணித்தர மாகப் பேசுவான். அவன் தலைமுடி அழகாகப் படிந் தும், சற்றே முன் எழும்பியும், நெளி சுருண்டும் இருக் கும். அவன் மீசை வைத்திருந்தான். சிறு அரும்பு மீசை! டாக்டருக்குப் படிக்கிற பையன் என்று, அவ தந்தையாரும் அதைப் பார்த்தும் பாராதவர் பே விட்டு விட்டார். அழகப்பன் தன் தாய் தந் யருக்கு மிகவும் கட்டுபட்டவன். அதுவும் ஆத்தா அதட்டிப்பேசி விட்டால், அப்படியே கீழ்ப்பபடி வான். அப்பச்சி அவ்வாறு, ஆத்தாள் சொல்கிறபடி விட்டுக் கொடுத்துப் போவதை அவன் அடிக்கடி பார்த்திருக்கிறான்.

திடீரென்று அவன் சிந்தனை ஓட்டம் தடைப் பட்டது. 'சலக்சலக்' ஒலி ஊகூம்... அது வள்ளி யல்ல...என்ன, என்ன? அதோ வருவது வள்ளி தான்!...எங்கே ஓடுகிறாள்? ஐஸ் புரூட் வாங்கு கிறாள் ... ஒன்றே ஒன்று ... எங்கே ... எங்கே... அவள் பின்னேயே அழகப்பன் கண்களும் ஓடிய திசையில்...மேற்குக் கரைப்பக்கம்...அதோ... அந்த இனிய தேவதை நின்று கொண்டிருக்கிறாளே!... பச்சைநிறப் பாவாடை, பச்சை நிறத் தாவணி, பச்சை கலந்த பூப்போட்ட இரவிக்கை ... ஒரே ஒரு பொற்சங்கிலி கழுத்தில் கிடந்து மின்

வெட்டியது. அவள் அசைவதும், தங்கையை அதட்டுவதும் ... அப்பப்பா! தன்னை மறந்து நின்ருன் அழகப்பன்! தன்னை அவள் பார்த்துவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்தது அவன் நெஞ்சம்,

## 3

அப்போது, ஐஸ் கம்பெனியை ஒட்டிச் சில இளைஞர்கள் கைநீட்டி அவளைக்காட்டிப் பேசுவதையும், அவள் அழகை இரசிப்பதையும் கண்டு அவன் மனம் கொதித்தது. அவனையும் முந்திக் கொண்டு அவனுடைய மனம் அவளைத் தனக்கே உரியவள் என்று சொந்தங் கொண்டாடியது, அவனுக்கே வியப்பாகவும் உள்ளூறத் தோன்றியது. ஏதோ தனக்கேயுரிய சொத்தினை, யாரோ அபகரிக்க முயல்வது போல் மனம் பதறியது 'ஏன் இந்தத் தவருன அறிகுறி?' அவன் தன் நினைவை மாற்றிக் கொண்டான். ஆனுலும் அவர்கள் மீது அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

அந்த நேரத்தில் பச்சைக்கிளியும் சிட்டுக் குருவியும் தென்கரை வழியே வந்து, தெற்கு நோக்கிப் போகும் அந்த நீண்ட சாலை வழியே போகின்றமையைக் கனவுலகில் நிற்பவன் போலக் கண்டு கொண்டு, தன்னை மறந்து நின்ருன் அத் தலைமகன். அத்தலைவியோ பச்சை வண்ணத்துள் பொன்னிறம் பூத்த புதுமலர் போல், சிறகை விரித்து மெதுவாகப் பறக்கும் பசுங்கிளிபோல் நடந்து கொண்டிருந்தாள். பெண் சிற்பங்களுள் வில்லிப்புத்தூர் ஆண்டாள்போல், மதுரை மீனுட்சிபோல் நாட்டிய நுட்பத்துடன் கூடிய

அழகிய திருவுருவங்கள் உண்டு. சவுந்தர வல்லியிடம் சாதாரண அழகன்று; இத் தெய்வீக அழகையே கண்டு மகிழ்ந்தான் அழகப்பன். ஒரு நாட்டிய நங்கைக்கு வேண்டிய இடையும் நடையும் அவளிடம் காணப்பட்டன. ஒரு கையில் கருப்பு வாரால் கட்டிய சிறு கடிகாரம்; மறு கையில் இரண்டே இரண்டு பொன் வளையல்கள்; கழுத்தில் ஒரு சிறு பொற்சங்கிலி; காதுகளில் அழகான முத்துத்தோடு. வேறு அணிகள் இல்லை; பகட்டு இல்லை. 'பெண் அழகாய்த்தான் இருக்கிறாள்; வயிரத் தோடுகூட இல்லையே' என்பது வசதி படைத்த ஆச்சிமார் பேச்சு. ஆனால் அழகப்பன் அமைதி தவழும் வட்ட நிலவிற்குவிந்த புருவமும் கருவிழிகளும் குமிண் சிரிப்பும் கண்டே தன் விலைமதிக்க ஒண்ணாத உள்ளத்தைக் கொள்ளை கொடுத்துவிட்டான். எத்தனை அணிகள் பூண்டாலும் இவளுடைய அழகு அவற்றைத் தோற்கடித்து விடும். அதனால் எளிமையாக இருக்கும் அவள் அழகே அழகப்பனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஒருகணம் அவள் நிமிர்ந்த போது தன்னை ஏறிட்டுப் பார்ப்பதுபோலவும் இருந்தது; பாராதது போலவும் இருந்தது. ஏன்? பெரும்பகுதி அவள் தன்னைப் பார்த்தாள் என்பதுதான் உண்மை; இல்லையென்றால் நீண்ட தூரம் போனபின் ஒரு முறை திரும்பிப் பார்ப்பானேன்? என் நெஞ்சுள் அவள் குடிபுகுந்ததுபோல் தன் நெஞ்சுள் எனக்கு இடம் கொடுத்திருப்பாளா அந்தத் தையல் என்பதே அப்போது அவனுடைய ஏக்கமாய் இருந்தது.

''என்னடா அழகப்பா? அம்மான் மகளை வச்சகண் வாங்காமே பாத்துக்கிட்டிருக்கியா?'' என்ற குரல் கேட்டு அழகப்பன் திகைத்துத்

திரும்பினான். எதிரே மெய்யன் சோமநாதன் நின்று கொண்டிருந்ததை, அப்போதுதான் அவன் கவனித்தான். சோமநாதன் பத்தாம் வகுப்பில் அழகப்பனுடன் படித்தவன். அப்போதே சீட்டுப் போடுவதில், சுற்றுவதில், ஊர் வம்பளப்பதில் நிரம்பப் பிரியப்படுகிறவன். ஊரிலுள்ள பெண்களைப் பற்றியெல்லாம் அறிந்து வைத்திருப்பான். அவனுடைய தந்தையார் அவனைப் படிக்க வைக்க எவ்வளவோ பாடுபட்டார். அவனும் பத்தாம் வகுப்பில் என்னென்னமோ செய்துபார்த்தான். அதற்குமேல் படிப்பு ஏறவில்லை. வேறு பேச்சின்றி, அவனுக்கு உடனே கலியாணம் செய்து வைத்து விட்டார்கள். இப்போது இரண்டு பிள்ளைகள். சாப்பிட்டதும் அவனைச் சீட்டுக் கொட்டகையில்தான் பார்க்கலாம்; இரவு பெரும்பாலும் சினிமாக் கொட்டகையில் பார்க்கலாம். இடையில் ஊரிலுள்ள வம்புகளை அளப்பதே அவனுடைய பொழுபோக்கு. அவன் வாழ்க்கையை மிக எளிதாக எடுத்துக் கொண்டவன். எதிர்பாராமல் அவனைக் கண்டதும் துணுக்குற்ற அழகப்பன் நினைவை மாற்றிப் பேசத் தொடங்கினான். அவன் அகத்திலுள்ளதை முகத்தில் கண்ட சோமநாதனே, "அது செளந்தரம். வேகுப்பட்டி... ஒங்க அம்மான் நாகப்பண்ணனின் ரெண்டாவது மகள் ... ஆயா வீட்டுக்குத் திருவிழாவுக்கு வந்திருக்காக!" என்று செய்தி சொன்னான். இதைக் கேட்டதும் அழகப்பன் நெஞ்சம் அதிர்ந்தது. அதை அவன் மறைக்க முயன்றான்.

முன்பே சோமநாதனுக்கு ஊதியம் கருதாத 'உள்ளூர் நிருபர்' என்று பெயர். பள்ளிக்கூடத்து வாத்தியார் தன்னிடம் படித்த பெண்ணை எப்படிக் கூட்டிக் கொண்டு போய்க் கலியாணம் செய்து கொண்டுவிட்டார் என்பது முதல், சினிமாக்

கொட்டகையில் புதிய படத்துக்கு வசூல் எவ்வளவு என்பது வரை அவன் 'நியூஸ்' சொல்லுவான். அவற்றில் எல்லாம் உண்மையும் சிறிது சிறிது இருக்கும் என்பதனுல்தான், அவனை 'மெய்யன்' என்று விளையாட்டாகக் கூப்பிட்டார்கள். இப்போது மெய்யன் சொன்னதுவும் பொய்யாக இருக்க முடியாது. அழகப்பன் தலை சுழன்றது. "அடடா! முறைப்பெண்ணுயிருந்தும், இருபது வருசமா கூட்டத்துப் போன குடும்பத்திலே பிறந்து வளர்ந்தவளா இவள்?" இதை நினைத்ததும் அவன் எதிரே அவன் தாயார் லெட்சுமி ஆச்சி, பூதாகாரமாய் - விசுவ ரூபமாய் வானுக்கும் மண்ணுக்கும் சரியாக வளர்ந்து நின்று, கைகளைக் கொட்டி, வசைமாரி பொழிந்து, கொக்கரிப்பது போல இருந்தது. தான் கட்டிய கோபுரம் பூகம்பத்தால் நடுங்குகிறதே? தான் தேக்கிய அணைக்கட்டு உடைந்து எங்கும் வெள்ளக் காடாகிவிட்டதே? அவன் மனம் ஆழ் கடலில் மூழ்கிவிட்ட மனிதனைப் போல் தவித்து, 'சௌந்தரம்', 'சௌந்தரம்' என்று முணுமுணுத்தது. ஒருகணப் பொழுதில் முழுவதையும் புரிந்து கொண்டுவிட்ட சோமநாதன், அழகப்பனை வையாபுரிக் கரைப்பக்கம் அழைத்துச் சென்ருன். வழியில் 'இளநீர்' வாங்கிக் கொடுத்தான். வையாபுரி மேற்குக் கரை அரசமர நிழலில் போட்டிருந்த ஆசனக்கல்லில் இருவரும் உட்கார்ந்தார்கள்.

சோமநாதன்தான் பேச்சைத் தொடங்கினுன்: "நம்ம பக்கத்திலேயே ரொம்ப அழகான பொண்ணின்னு சௌந்தரத்துக்கு இப்பப் புகழ். 'பிரீதி பிரியதர்சினி'ன்னு ஒரு சினிமா நடிகை இருக்கிருள் இல்லையா? அவள் மாதிரியே இருக்கிறதா நினைச்சு, இப்போ நம்ம பையன்கள் இந்தப் பச்சைக்கிளிக்கு

வச்சிருக்கிற பெயர் 'பிரியதர்சினி!' குழிபிறை யிலே பெரிய கோடீசுவரர் அறுபது வயதுக் கிழவர். அவருக்கு இரண்டாந்தாரமாக் கேட்டு, வலை வீசிக்கிட்டிருக்காங்க...''

அழகப்பனுக்குச் சோமநாதனின் கூற்றில் முன் பாதி வெறுப்பாய் இருந்தது; பின்பாதி அவனைத் திடுக்கிட வைத்தது. அந்தத் திருமணத்தையும் நடக்கவொட்டாமல் செய்யலாம். ஆனால் தன் தாயாரை யாராலும் மாற்ற முடியாதே என்றுதான் அவன் தயங்கினான்; மயங்கினான். அதையும் உணர்ந்தவன் போல், சோக முகத்துடன் இருந்த அழகப்பன் எதிரே சோமநாதன் பேசத் தொடங்கினான்: ''ஒங்க ஆத்தா ஒத்துக்கிட்டா ஒரு கவலையில்லே. அவங்களை ஒத்துக்க வைக்கிறது தான் பெரிய கஷ்டம். எத்தனையோ வருசத்துக்கு முன்னாலே, உங்க ஆயா வீட்டு ஐயா செத்த பிற்பாடு, மூத்த அம்மான் நாகப்ப செட்டியார் பொங்கப் பானை கொடுத்துவிட்டது போதல்லேன்னு திருப்பி விட்டுட்டாக... அம்மானும் கோபத்திலே சிபாரிசு பண்ணித் திரும்பவும் கொடுக்காமே நிறுத்திப்புட்டாங்க... அதிலே வந்த சண்டைதான். உங்க சின்ன அம்மான் பழனியப்ப செட்டியார் கலியாணம் ஆன பிற்பாடு, இப்போ விடாமேப் பொங்கப் பானை கொடுத்து வருறாரு...'' அழகப்பன் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்-தானே தவிர, எதுவும் பேசவில்லை. மௌனம் சம்-மதத்திற்கு அறிகுறி என்பார்கள். அதன்படி அவன் பேசாமலே இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்ததை வைத்துத்தான், அவனுக்குச் சௌந்தர வல்லி மீது ஆசையுண்டென்பதை மற்றவர்கள் உய்த்துணர முடியும். அந்த அளவு அவன் அடக்க-

மானவன். தன் கருத்தை எளிதில் வெளிப்படுத்தவும் மாட்டான்; மாற்றிக் கொள்ளவும் மாட்டான். 'டவுன் கிளப்பு'ப் பக்கமிருந்து சீட்டாட ஒரு கை குறைகிறதென்று ஒருவர் கூப்பிடும் குரல் கேட்டது தான் தாமதம்; சோமநாதன் மீண்டும் சந்திப்பதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டான்.

○ ○ ○

சோமநாதன் பிரியும் வரை மௌனம் சாதித்த அழகப்பன் உள்ளம் இப்போது கொந்தளிக்க ஆரம்பித்தது. பிறர் எதிரே தன் உள்ளத்தைப் பெரிதும் மறைத்துக்கொள்ளும் பண்புடைமையே, பிறரெதிரே ஒன்றுமறியாதவன்போல் காட்டியும் காட்டாமலும் நடந்து கொள்ளும் இயல்பை அவனிடம் வளர்த்தது. இப்போது ''சௌந்தரவல்லி பிறருக்கு உரிமையாகி விடுவாளோ?'' என்று அவன் ஏங்கத்தலைப்பட்டான். அதனுல் அவன் நெஞ்சம் நெருப்பில் விழுந்துவிட்ட பறவை போலத் துடியாய்த் துடித்தது. உடனே தாயிடம் ஓடிக் காலில் விழுந்து கதறிக் கெஞ்ச வேண்டும் என்று அவன் மனம் நினைக்கும்; பிறகு பின்வாங்கும்! அப்பச்சியிடம் முறையிட வேண்டும் என்று உள்ளம் துள்ளி ஓடும்; ஓட்டமும் நடையுமாய்த் திரும்பிவரும். ஏன் சௌந்தர வல்லியையே பார்ப்பது ... ''என்னைத் தவிர யாரையும் மணக்காதே?'' என்று கூறுவது; அவளிடம் கையிலடித்துச் சத்தியம் வாங்கிக்கொள்வது. பிறகுதான் நிம்மதியாக மதுரைக்குப் போய் வேலைபார்க்கமுடியும் என்று அவன் நினைத்தான். உடனே அவன் நெஞ்சமே அவனைப் பார்த்துச் சிரித்தது. ''எப்படிச் சத்தியம் வாங்க முடியும்? அவள் நம்மை விரும்புகிருள் என்பது என்ன நிச்சயம்? பாராமுகமாக இருந்து விட்டால்...சரி,

முதலில் தன்னை அவள் காதலிக்கிருளா என்பதைக்கூட எப்படி அறிவது? கடிதம்...காதற்கடிதம் ...எழுதலாமா?வள்ளியைப் பிடித்துக் கொடுத்தனுப்பலாமா? சேச்சே...யாருக்கும் தெரிந்தால் கேவலமாகப் போய்விடாதா? சரி, நேரே சந்தித்துக் கேட்டு விடலாமா? அதுவும் நாகரிகமாகப் படவில்லையே''... இப்படி ஏங்கியது அவன் மனம். கதைகளில் வருவதுபோல் அவள் ஒரு பெரிய விபத்தில் சிக்க இருந்து தான் திடீரென்று காப்பாற்ற நேர்ந்தால் எப்படியிருக்கும்? அப்போது அருகிலே வந்துவிடுவாள் அவள் . சமயம் பார்த்து உண்மை கேட்டு, உறுதிமொழி வாங்கிவிடலாம்... இவ்வாறு எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணினுன் அழகப்பன்.

அந்தக் கவ்விலேயே வருபவர், போகின்றவர்-களைக் கவனியாமல் மதியம் பனிரெண்டு மணிவரை அவன் இருந்திருக்கின்ருன்... ''அவன் மருத்துவமனைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்ருன். சவுந்தரவல்லி வழியனுப்ப வருகின்ருள்; அவன் கோட்டைச் சரிசெய்துவிட்டு, ஸ்டெதாஸ்கோப்-பினை அவன் கழுத்தில் மாலைபோல் மாட்டி விட்டு முன்நின்று அழகு பார்க்கின்ருள். அந்த மழை மேகக் கூட்டம் கலைந்து, கூந்தல் தோகையை அவிழ்த்து, காற்றில் அக் கருங்கூந்தல் தழையத் தழையவும் இழைய இழையவும் அம் மயிலனையாள் அசைந்தாடும் தேர்போல், கன்னம் குமிழியிடச் சிரித்துக் கணவனை வாயிற்படிவரை வந்து வழி விடுகின்ருள். அந்த உற்சாகத்தில் நோயாளிகளின் பகையாகிய நோய் அரக்கனை வெற்றி கொள்ள, வில்லேந்திய இராமன் என, அழகப்பன் நடை போடுகின்ருன் ..!'' இப்படிப் பல இன்பமான வாழ்வுக்காட்சிகளைக் கனவு கண்டுகொண்டே

இருந்தான் அவன். அதிகமாக உள்ளத்தைப் பிறரிடம் வெளியிடாதவர்கள் இப்படித்தான் அதிகமாகப் பகற்கனவு காண்பார்கள். 'ஒரு பொருளில் அதிக விழைவு வைத்தால் தவறிவிடும் என்பார்களே; ஒன்றில் அதிகம் ஆசைப்பட்டால் நிறை வேருமல் போய்விடும் என்பார்களே' என்றெல்லாம் அவன் மனம் தள்ளாடியது. இருந்தாலும் அவனுல் அந்த 'ஆசை நினைவு'களை மறக்க முடியவில்லை. அப்போது மலையாண்டி கோயில் மணி ஓசை கணீர் கணீர் என்று ஒலித்தது. உச்சிக்காலம் ஆகப் போகிறது போல் இருக்கிறது. 'நல்ல சகுனம்! போய்த் தரிசனம் செய்துவிட்டு வீடு போவோமே' ...எழுந்து, கரையைச்சுற்றி, மலைஏறி நடக்கத் தொடங்கினுன் அழகப்பன்.

○ ○ ○

மலையின் மேல் வந்ததும் கோயிலுக்குள் நுழைந்தான். எதிரே புதிய மலையாண்டிக்குத் தீபம் காட்டுகிறநேரம். தும்பிக்கைப் பெருமானின் தூயதிருமேனிக்கு மாலையிட்டுவிட்டு, தட்டில் சூடத்தை வைத்து, ஒளியேற்றினுர் அருச்சகர்! கைகூப்பித் தொழுத அழகப்பன் தன் எதிரில் அந்தப் பச்சைக்கிளியாள், பிரியதரிசினி, மாமயிற் சாயலாள் நின்று கும்பிடுவதைப் பார்த்தான்! ''அழகப்பனும் நோக்கினுன்; அவளும் எதிர்நோக்கினுள்!'' ஐயர் தட்டைக் கொண்டு வந்து காட்டினுர்; தீர்த்தம் கொடுத்தார்; திருநீறு வழங்கினுர்; குங்குமமும் தந்தார். அவன் இரண்டணு எடுத்துத் தட்டில் வைத்தான். அவர் அழகப்பனிடம் பிள்ளையாருக்குப் போட்டிருந்த சரத்தில் கொஞ்சம் கிள்ளி எடுத்து வந்து கொடுத்துவிட்டு''இதைப் பொண்ணு கையிலே கொடுங்கோ... தீர்க்க ஆயுசா இருப்பேள் ...அம்மா! தலையிலே வைச்சுக்குங்க. 'தீர்க்க சுமங் கலி பவ''' என்றும் வாழ்த்தினுர்.

அழகப்பன் மனம் வியந்ததா? திடுக்கிட்டதா? தெரியவில்லை. அந்தணர் தந்த மல்லிகைச்சரத்தை அவன் அவளிடம் நீட்டியபோது, அங்கு யாரும் இல்லை. ஐயரும் அவர் வேலையாக இருந்தார். அவள் தயங்கியது போல் தோன்றியது, ஒரு கணமே. மறுகணம் அவள் அதை வாங்கிக்கொண்டாள். தலையில் சூடிக்கொண்டாள்!

எல்லாம் வானுலகில் நடப்பதுபோல் நடந்தன. திருமணங்கள் வானுலகில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது இதுதானோ?

''சௌந்தரம்...!''

கடைக் கண்ணால் பார்த்தாள்; கனிவும் இருந்தது.

''என்னை மறக்கமாட்டாயே ... நாளை மதுரை போகிறேன்.''

தலையசைத்தாள் மறுக்கின்றாளா? மறக்கமாட்டேன் என்கின்றாளா?

''கடைசிவரை நாம் இருவரும் ஒருவரை ஒருவர் பிரியக்கூடாது.''

முதன் முறையாகப் பேசினாள் அவள்: ''நடக்குமா? அயித்தை சம்மதிப்பாங்களா?''

''நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''யார் சொன்னாலும் கேட்கமாட்டாகளே! நேற்றுக் கூட எங்களைப் பெத்தவுகளைத் திட்டு திட்டென்று திட்டியிருக்கிறாக ... நீங்க நினைக்கிறது நடக்கவே நடக்காது. நீங்க எத்தனையோ இடம் ... கட்டிக்கிட்டு நல்லபடியா இருங்க ... ஒத்துக்கவே மாட்டாக ... உங்களுக்குத் தெரியாது.''

"நேற்று, தன் வீட்டில் தாயார் திட்டியது உடனே அம்மான் வீட்டிற்குப் போயிருக்கிறது. எப்படி? விருந்துக்கு வந்த யாரோ உடனே போய்ச் சொல்லியிருக்க வேண்டும். செட்டிய வீட்டில் நல்லதும் கெட்டதும் இப்படித்தான் பரவு கிறது'' என்று அழகப்பன் எண்ணிக் கொண்டான்.

''தெரியும் செளந்தரம்... தெரியும் ... என் உயிர் இருக்கும் வரை போராடுவேன். குழிபிறையிலே கேட்கிருங்களாமே. நீ அதுக்கு ஒத்துக்கவே கூடாது.''

"முன்பே மறுத்து விட்டேன்''

''இனி...''

மௌனமானுள் நங்கை.

''சொல்லு செளந்தரம் சொல்லு! உன் உறுதி தெரிந்தால்தான் நான் நிம்மதியாக மதுரை போக முடியும் !''

''நடக்காததைப் பற்றி நினைப்பானேன் ...''

"என்னுல் மறக்க முடியவில்லை ...நீ மறக்கக் கூடியவள் போல் இருக்கிறது''

வெறுமனே வறட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

''என்ன சிரிக்கிருய்?''

''அயித்தைக்குத் தெரிஞ்சா எங்களைக் குடி வைக்க மாட்டாக, உங்களை மயக்கிப்புட்டோ- முன்னுகூடப் பேசுவாக...''

''செளந்தரம்... எல்லாமே எனக்கும் தெரியும்... ஆனுல் நான் வாழ்ந்தால் உன்னுடன்தான் வாழ் வேன்... இது உறுதி... இந்த உயிருள்ளவரை இன்-

ஞெருத்தியை மனசாலே தொடமாட்டேன் ... இது சத்தியம்!'' —தன் கையிலிருந்த குங்குமத்தை அவளிடம் நீட்டினுன்.

அதை அவள் தொட்டுத் தன் நெற்றியிலே இட்டுக் கொண்டாள்... ''அத்தான்...! (அவள் குரல் கம்மியது) உயிருள்ளவரை உங்களுடையவ ளாகவே இருப்பேன்... அயித்தை சம்மதிக்கும் வரை காத்திருப்பேன்...அப்படி நிறைவேருமல் உயிர்போனுலும், அடுத்த பிறவியிலேனும் உங்க ளுடையவளாக ஆவேன்...இது உறுதி...நிம்மதி யாக மதுரைக்குச் செல்லுங்கள்...!''

''ஆமாம்...செளந்தரம்...! ஒன்று கேட்கிறேன்: இந்த ரெண்டு நாளாக—அழகிய நாச்சியம்மன் கோவிலில் பார்த்தது முதல் நீ என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருந்தாய்...?''

ஏறிட்டுப் பார்த்தாள் அந்தப் பாவை.

''என் நினைவாகவே இருந்தாயா?''

தலையசைத்தது தந்தச்சிலை.

''என்னைப் போலவே, நீயும் என்னை நினைத்து, உறுதி எடுத்துக்கொண்டாயா? வருந்தினதுண்டா? சொல்லு.''

சிலை சிரித்தது: ''இல்லை ... உங்களை விட அயித்தை நினைவுதான் எனக்கு அதிகமாய் இருந் தது!''

''ஓகோ, நீ அயித்தையின் பக்தையோ?'' அவன் சிரித்தான். அவள் முகம் மலர்ந்தாள் கையிலிருந்த தேங்காயை வாயிற்கடித்தபடி ஓடி வந்த வள்ளி, இருவரையும் சோடியாகக் கண்டு திடுக்கிட்டாள். 'அயித்தானு!' அவள் வாய்திறந்து கூவிச் சிரித்-

தாள். முதலில் சாமிக்குப் பண்ணின அருச்-சனை முடிந்ததும் தேங்காயைத் தட்டித் தின்ன வெளியே ஓடினவள் இப்போதுதான் திரும்பினாள். அயித்தான் ஆச்சியின் சோடிப் பொருத்தம் —நிரம்பப் பொருத்தமென்று, அந்தப் பிஞ்சுமனமும் குதித்துக் கும்மாளம் போட்டது. "நேற்று நம் கால்தண்டைச் சோடியைக்கூடச் சரிபார்த்துத் தந்தாரே...இப்ப ஆச்சிக்கு எவ்வளவு தகுதியான சோடியாக இருக்கிறார்!" என்று அவள் மனம் வியந்தது.

நேரமாகி விட்டது. யாரோ வரும் ஓசை கேட்கலாயிற்று. துள்ளும் புள்ளிமானும் தோகை மயிலும் போல் இருவரும் மலையாண்டியின் மலைப் பாதையில் இறங்கிப்போவதை, மன்னவன் போல உயர இருந்தபடி அழகப்பன் பார்த்துக் கொண்டு நின்றான். தழையப் பின்னிய கூந்தல் காற்றிலே பறக்கச் சவுந்திரவல்லி விரைந்து நடந்தது, கள்ளம் அறியாப் பறவை ஒன்று பறந்து செல்வது போல் இருந்தது. அடுத்த கணம், அவன் தங்கள் வீட்டு வேலைக்காரன் வெள்ளையன் தேடிவருவதைப் பார்த்தான். அழகப்பன் நெஞ்சம் இணைபிரிந்த அன்றில்போல் ஏங்கத் தொடங்கியது.

## 4

அழகப்பன் வீட்டை விட்டே போவதில்லை. எப்போதும் புத்தகமும் கையுமாக வீட்டிற்குள்ளேயே - தோட்டம், முகப்பு, மேல்வீடு, மொட்டை மாடி எங்காவது இருப்பான். ஒவ்வொரு சமயம் கச்சேரிக் கூடத்திற்குச் செய்தித்தாள் பார்க்கப் போவான். மாலை நேரத்தில் உலகம்பட்டி வண்டிச் சாலையில் ஒரு கல் தூரம் நடந்து போய்த் திரும்பு-

வான். அவனுடைய தாயார் திருவிழா, சினிமா, கூட்டம் என்று எதற்கும் போகாத தன் மகனை 'அடைக்கோழி' என்றும் கேலி செய்வதுண்டு. ஆனால் இந்த முறை அவன் வீட்டிலேயே தங்-காதது எல்லோர்க்கும் வியப்பாக இருந்தது. சாப்பாட்டு நேரம் வந்துவிட்டால் உடனே சாப்பிட்டுத் தீரவேண்டும். பசி பொறுக்கமாட்டான். ஆனால், இன்றைக்கு மணி ஒன்றரையாகியும் அவன் வீட்டுக்கு வராதது, பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

அவன் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்த போது, அவனுடைய தாயார் வேகுப்பட்டி நாகப்ப அம்மான் வீட்டை திட்டிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது. இது வழக்கமான அருச்சனைதான் என்றாலும், முன்பெல்லாம் அதைப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல், காதில் போட்டுக் கொள்ளா-மலே போய்விடுவான். இப்போதோ,அவன் இரண்-டாம் கட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, வளவில் அவன் தாயார் செய்து கொண்டிருந்த அருச்சனை, எரிச்சலை மூட்டியது. சவுந்தரவல்லி சிரித்த முகத்தோடு எதிரே நின்று ''பாத்திகளா? உங்க ஆத்தா என்னை ஏத்துக்கவே மாட்டாக ... நான் சொன்னது சரியாப் போச்சா? நீங்களே கேட்டுக்குங்க ... நல்லாக் கேட்டுக்கங்க!'' என்று கேலி பேசுவதுபோல் இருந்தது.

''நான் ஒருத்தி பொறந்தவளுக்குப் பொங்கப் பானை இல்லேனுட்டாகளே. எங்க அப்பச்சி இருக்கிறவரை இருபது வருசம் நானும் நல்லாத் தான் பொங்கப்பானை வாங்கிக் கிட்டிருந்தேன். இவ கரியாப் போவாள் வந்து, பொண்ணுப் பெத்துக் கட்டழிஞ்சுபோனதுக்கு அப்புறம் அந்த

வீடே கெட்டுக் குட்டிச்சுவராப் போச்சு. இல்லேன்னு எப்படி இருந்தாக. என்னைக் கட்டிக் கொடுக்கிறப்-போ எல்லாம் எட்டுக் கண்ணும் விட்டெரிச்சுது வேகுப்பட்டியிலே மட்டுமா? இந்தப் பக்கத் திலேலே அவங்க விலாசம்தான் மேலா இருந்தது.''

''இது என்னடி சந்தேகம்? வேகுப்பட்டி யிலேயே நீ பொறந்த வீட்டுக்குத் தானே பங்களா வீடுன்னு பேரு'' என்று மங்களாச்சி ஒத்தூதினார்-கள்.

''எங்க அப்பச்சி செத்துப்போன மறு வரு இவள் கடையழிஞ்சவள். எனக்குப் பொங் பானையே இல்லேன்னு விடப்பிடாதா ... ஊருக்கா பயந்து கொஞ்சம் கொஞ்சம் வச்சு, 101 ரூபாய தந்த இடத்திலே 51 ரூபாய்கூட இல்லாமே 21 ரூபாய் வச்சு அனுப்பி என்னை மோசம் பண்ணினுக. அவுக வீடும் விளங்காமேப் போச்சு!''

''அப்படி எல்லாம் திட்டாதே...கூடப் பிறந்த அண்ணன் வீடுதானே...ஏதோ அவங்க நிலைக்கு ஏற்பத் தந்திருப்பாக ... அப்பச்சி வெளிநாட்டிலே சம்பாரிச்சாக ... ஏதோ பொன்னை வைக்கிற இடத்திலே பூவை வைக்கிற மாதிரி-அவங்க முதன் முதல் தந்ததை நீயும் வேண்டாமுன்னு திருப்பி விட்டிருக்க வேண்டாம்'' என்று மங்கையாச்சி குரல் கொடுத்தார்கள். அவர்கள் கொஞ்சம் படித்தவர்கள். எதிலும் நிதானமாகச் சிந்தனை செய்து பேசக்கூடியவர்கள் மற்றைய ஆச்சிமார்கள் எல்லாம் அழகப்பனின் ஆத்தாளை எதிர்த்துப் பேச வில்லையே தவிர, அவர்களுக்கு இந்தக் கருத்தும் உண்டென்பது அவர்கள் எல்லோரும் அமைதி யாக இருந்ததிலிருந்து தெரிந்தது.

அவ்வளவுதான்...மறுகணம் லெட்சுமி ஆச்சி யின் குரல் கொற்றவை, சாமி வந்தாடும் மாகாளி யின் குரல்போல் உயர்ந்தது. ஆங்காரத்தோடு அவர்கள் கத்தியபோது, உலகமே இருண்டு, பட படத்தது; நிலைகுலைவதுபோல் தோன்றியது.

“ஐந்து பேரு பொறந்த இடத்திலேகூட ஒரு அண்ணனே, தம்பியோ இருந்து முறை செய்யலையா? நான் ஒருத்தி பொறந்து, ஓவியமா வாழ்க்கைப்பட்டவருக்கா இப்படிப் பண்ணு வாக? அது என்ன மங்கையாச்சி ஓர வஞ்சகமே பேசறீக...பதினறு படி பச்சரிசி தந்த இடத்திலே பதினேரு படின்னு சரி...அஞ்சுபடியாப் போனு ஆத்திரம் வராதா? ஏழு வீசை வெல்லம் மூனு வீசையாப் போச்சு...அப்படியா அண்ணைக்கே ஒண்ணுமத்துப் போனுக...எனக்கு இல்லேன்னுக... எல்லாம் போச்சு.”

லெட்சுமி ஆச்சி தன் ஆத்திரத்தையெல்லாம் கொட்டிப் பேசினர்கள். அவர்களை யார் நிறுத்து-வது, எப்படி நிறுத்துவது என்று யாருக்கும் விளங்கவில்லை. விருந்துக்கு வந்த சிலர் இடை யிடையே, ஒத்துத் தாளம் போட்டு, நல்ல பெயர் எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். லெட்சுமி ஆச்சியின் பேச்சு மேலோங்கி அடிக்கடி கேட்ட வண்ணம் இருந்தது. “நாலு பொண்ணு பெத்து, ஒண்ணு உருப்படாமேப் போச்சு...இப்ப ஊரூராப் போயி...பகட்டி...யாரு வலையிலே விழு வான்னு திரியிருக...வெட்கங் கெட்டதுக...ஆத்தா புத்திதானே பொண்ணுகளுக்கு வரும்” என்றெல் லாம் லெட்சுமி ஆச்சி, பேசிக்கொண்டே போன போது, அழகப்பன் ஏதோ வதந்தி அதற்குள் பரவி விட்டது போல் உணர்ந்தான். அவன் நேரே மாடிக்-

குப் போய், மதுரைக்குப் புறப்படப் பொருள்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். எல்லாவற்றையும் எடுத்து வைத்த பிறகு, சற்றே கண்ணயர்ந்தான். அரைமணி நேரம் கழித்து தன் ஆத்தாளின் காட்டமான குரலைக் கேட்டு அவன் விழித்துக் கொண்டான்.

கீழே மெய்யன் சோமநாதன் வந்திருப்பதையும் விருந்துக்கு வந்த பலரும் போய் விட்டார்கள் என்பதையும் தன் அப்பச்சியும் ஆத்தாளும் தன்னைப் பற்றி ஏதோ இறைந்துஇறைந்து பேசிக்கொள்கிறார்கள் என்பதையும் அழகப்பன் உணர்ந்தான். தான் தன் அம்மான் மகள்மீது கொண்ட காதல் இப்போது-இவ்வளவு விரைவாக எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அதைப் பற்றி அவன் கவலைப்பட வில்லை. எப்பொழுது மலையாண்டியின் திருமுன்பாக அவள் பூச் சூட்டப் பெற்றாளோ, அன்றே அவள் தன்னுடையவளாகிவிட்டாள் என்றும், இனி இந்த உலகமே எதிர்த்து வந்தாலும் தங்களைப் பிரிக்க முடியாதென்றும் அவன் மிக உறுதியாக இருந்தான்.

அழகப்பனின் அப்பச்சி கும. அவர்கள் தன் மைந்தன் உள்ளத்தை மதித்துப் பேசினார் அவன் எதையும் தானாக முடிவு செய்யமாட்டான், செய்தால் மாற்றமாட்டான் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். லெட்சுமி ஆச்சிக்கும் இது நன்றாகத் தெரியும். ஏதோ கையிலிருந்த பாத்திரம் தவறி விழுந்து விட்டதுபோல் அவர்கள் துடியாய்த் துடித்ததற்குக் காரணமே, காரியம் விஞ்சிவிட்டதே என்ற நினைப்பில்தான். முடிந்தவரை தன் தமையனார் வீட்டை அவர்கள் திட்டினார்கள். அந்த வசையைக் கேட்கக் கேட்க, அந்தக் குடும்பத்தின்மீது அழகப்பனுக்கு இரக்கம் வளர்ந்ததே தவிர, சிறிதும் வெறுப்பு ஏற்-

படவில்லே. மெய்யன் இடையிடையே அவர்களைச் சமாதானம் பண்ணித் திருமணத்திற்குச் சம்மதிப்பதைத் தவிர வேறு வழியில்லே என்பதை விளக்கிக் கொண்டிருந்தான். அவன் 'பெண்'ணின் பெருமையைச் சொல்லிப் பணம் இல்லாவிட்டாலும் பண்பான பெண் என்று கூறியபோதெல்லாம், தன் தாய் ஆங்காரமாகத் திட்டியதைக் கேட்டு அழகப்பன் உள்ளம் கண்ணீர் வடித்தது. 'தனக்கு மருமகளாக வரப்போகிறவளை இப்படித் திட்டுகிருளே; அவளைப் பற்றி இவ்வளவு மட்டமான கருத்துக்களை இப்பொழுதே சேர்த்து வைத்துக் கொள்கிருளே;என்ன ஆகுமோ' என அவன் மனம் மறுகியது. ஒரு குடும்பத்தின்மீது கொண்ட குரோத உணர்ச்சியின் காரணமாக, அவளைப் பற்றி எதுவுமே தெரியாதிருந்தும், இப்படி எடுத்துக் கட்டிப் பேசுகிருளே என அவன் வாடினுன்.

விதி அப்படி இருந்தது. யாரை லெட்சுமி ஆச்சி வேரோடு களைய நினைத்தாளோ, அந்தப் பசுங் கொடி, அவர்கள் வீட்டிலேயே வந்து வேர் விட்டுத் தழைக்கவேண்டும் என்று எழுதியிருந்தால் யார் மாற்ற முடியும்? இருந்தாலும் செட்டி நாட்டிற் போல யாரும் சொந்தக்காரர்களிடம் இவ்வளவு குரோதம் கொள்வார்களா என்பது ஐயப்பாடேயாகும். மேல்மாடியிலிருந்து அழகப்பன் இறங்கி வந்தபோது, மெய்யன் மட்டும் பேசினுன்: "வேந்தன்பட்டியில் வரும் பேச்சை முடிக்கலாமா?" என்று மட்டுமே கேட்டான். உடனே, யாரும் சற்றும் எதிர்பாராத வகையில், அழகப்பன் "வேகு பட்டியிலேயே பேசி முடிக்கலாம் ... சொந்தத்தில் பெண் இருக்கும் போது ஏன் வெளியில் பேச வேண்டும்?" என்ருன்.

"அவங்க நம்மளை மதிக்கலே. ஒரு பொங்கல் பானை கூடக் கிடையாது. கூட்டு நாட்டத்து இருபது வருசமாச்சு ... நம்ம தரத்துக்கு எத்தனை யோ இடம் வருதே தம்பி'' — தயக்கத்தோடு தான் லெட்சுமி ஆச்சி பேசினார்கள். ஆனால் அவர்கள் பேச்சுக்கு, அடித்த பந்தைப் போல், அழகப்பனிடமிருந்து பதில் வந்தது.

"எனக்கு இந்த இடந்தான் பிடிச்சிருக்கு ... பணத்துக்கு என்ன வந்தது ... நம்மகிட்ட இல்லா ததா? ... வேற சாதியா இருந்தா முறைப்பெண்ணை விட்டுட்டு வெளியிலே போக விடமாட்டாக...!''

"முறைப்பொண்ணுதான் முறைப்பொண்ணு'' என்று லெட்சுமி ஆச்சி தாடையில் இடித்துக் கொண்டபோது, 'ஐயோ பாவம் ஆத்தாவுக்கு வலிக்குமே' என்று அழகப்பன் மனம் இரக்கப் பட்டது. குமரப்ப செட்டியார் பேசினார்கள்: "அப்போ, சோமநாதா சீக்கரமாப் பேசி முடிக் கிறதுக்கு ஏற்பாடு பண்ணு.. சாமிக்கு முடிஞ்சிட்டு ஒருமுறை குல தெய்வத்தைக் கும்பிட்டுட்டு வந்ததும் முடிவு செய்துடலாம் ... சீக்கிரமே தேதி வைச்சுக்கலாம். எனக்கும் 'பிளட்பிரஷர்' இருக் குன்னு டாக்டர் சொல்லுருரு... சீக்கிரமாக் கலியா ணத்தை முடிச்சிடுவோம்... சாதகத்திலேயும் சொந்தத்திலே முடியுமுன்னுதான் இருக்கு'' என்று அவர் கூறியதைக் கேட்டு, ஆச்சி மறுக்கவும் இல்லாமல், ஏற்கவும் விரும்பாமல் உள்ளே 'விருட்' டென்று போனார்கள். மெய்யனும் விரைவில் எல்லா ஏற்பாடுகளும் செய்வதாகக் கூறிப் புறப் பட்டான்.

○ ○ ○

சவுந்தரவல்லியின் மனம் களிப்பில் துள்ளியது. வள்ளியோ ஓடுவதும் பாடுவதுமாய் இருந்தாள். அவர்கள் ஆயா(ள்) வீட்டில் எல்லோருமே குதூகலமாய்க் காணப்பட்டார்கள். ஆனாலும் நாகப்ப செட்டியார் முகம் வாடியே இருந்தது. தன்னை மதிக்காத தங்கையின் வீட்டிலே பெண்ணைக் கொடுக்க அவர் மட்டுமே தயங்கியதாகத் தெரிந்தது. சவுந்தரவல்லியின் தாயாருக்கும் மாப்பிள்ளை டாக்டருக்குப் படித்தவன் என்பதனால் உள்ளூறப் பெருமையாகவே இருந்தது. நாகப்ப செட்டியார் முதலில் மறுத்தார். சோமநாதனிடம் ''எதிர்காலத்தில் என் தங்கச்சி என் பொண்ணை நன்ருக வாழவிடுவாளா? என்னையும் கௌரவமா நடத்துவாளா?' என்று அழாக்குறையாகக் கேட்டார். ''இனி என்ன உங்களுக்கெல்லாம்? காடு வாவா என்கிறது.வீடு போபோ என்கிறது. பிள்ளைக நன்ருக இருக்க வேண்டும். அவர்கள் மனம் கோணுமல், இந்தக் கலியாணத்திற்கு நீங்கள் சம்மதிக்கத்தான் வேண்டும்'' என்று சோமநாதன் வாதாடினுன். தழைத்துவரும் பூங்கொடி போல் சிரித்த முகத்தோடு எந்த நேரமும் காட்சியளிக்கும் சவுந்திர வல்லியைப் பார்த்துப் பார்த்து நாகப்பரின் உள்ளம் பெருமூச்சுவிட்டது. ''இவளுடைய வாழ்க்கை என்ன ஆகுமோ? ஒருவேளை எல்லோரும் நினைப்பது போல் அவள் வாழ்க்கை சீரும் சிறப்புமாய், பேரும் புகழுமாய் விளங்கினுல் நல்லதுதான். அல்லாமல் அந்தக் கொடுமைக்காரியின் பழிக்கு ஆளாகி, கண்ணீரும் கம்பலையுமாய், எப்பொழுதும் இருண்டு, வறண்டு போய்விட்டால்...'' நாகப்பரின் மனம் இருண்டது. அங்கே இடிஇடித்தது; மின் வெட்டியது; உலகமே அழியும்படியான பிரளயம் எழுந்து வந்தது!

எப்படியோ தமது மனத்தையும் சாந்தப்படுத்திக்கொண்டு அவரும் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டார். எல்லாம் இரண்டொரு நாட்களில் முடிந்துவிட்டன. சாமிக்கு முடிய 6¼ ரூபாய் கொண்டுவந்து ஆச்சி கொடுத்தார்கள். தெய்வானையம்மன் கோயிலுக்கு மறுவாரமே இரு வீட்டாரும் சேர்ந்து போய் வருவதென்று முடிவாகியது. ஐப்பசி மாதத்திற்குள் எல்லாம் பேசி முடித்து, கார்த்திகை முதல் வாரமே நல்ல நாள் பார்த்துத்திருமணம் செய்வதென்றும்முடிவு செய்யப்பட்டது.

○ ○ ○

மாலை ஏழு மணி இருக்கும். பொன்னமாரபதியில் அமராண்டான் நிரம்பி வழிந்தது. அதன் கிழக்குக் கரையில் மதுரை வண்டியை நோக்கிக் காத்து நின்றான் அழகப்பன். சவுந்தரவல்லியும் அவள் வீட்டாரும் பஸ் நிலையம் நோக்கி வருவதை அவன் கடைக்கண்களால் பார்த்தான். அவள் தனியே வள்ளியுடன் வந்திருந்தால் கூப்பிட்டுப் பேசியிருப்பான் அழகப்பன். கூட்டத்தோடு வருகிறாளே என்று அவன் பாராமுகமாக நின்றான்.

அவர்களுக்கும் ஒரே பரபரப்பு, அவனை அங்கே பார்த்ததில், சவுந்தரவல்லியின் தாயார் பூக்கடையில் பூ வாங்கச் சென்றார்கள். நாகப்பசெட்டியார் ஒருமுறை அழகப்பனைப் பார்த்துவிட்டு ‘கார் எப்போது வரும்’ என்று விசாரித்துக் கொண்டிருந்தார். சவுந்தரவல்லி அடிக்கடி கடைக் கண்ணால் அழகப்பனைப் பார்க்க முயன்றாள். அவன் எங்கோ முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்ததுபோல் இருந்தது. ஒருகணம் அவனும் அவளைப் பார்த்துவிடத் திரும்பினான். இருவர் முகங்களும் மலர்ந்தன. மதுரை வண்டி வரும் ஓசை ... மக்களிடையே ஆரவாரம் ... பையை எடுத்துக்கொண்டு விரைந்த

அழகப்பனின் கண்கள் சவுந்தரவல்லியிடம் விடை பெற்றுக் கொள்கின்றன. காரினுள் அவன் ஏறி அமருமுன்பே அது புறப்படுகின்றது. முண்டி யடித்து, அமர்ந்தபின் வண்டி திரும்பிப் புறப்படு கிறது. சற்றே எட்டிப் பார்த்து பெருமூச்செறியும் அழகப்பனைச் சவுந்தரவல்லி கவனித்து விடுகிருள். வள்ளி அத்தான் இருக்குமிடம் தெரியாமல் திகைக் கிருள். வண்டி புறப்பட்டு விடுகிறது.

## 5

மங்களகரமான நல்வேளையில் சவுந்தர வல்லிக்குத் திருமணப் பேச்சு ஆரம்பமாயிற்று. கும. வீட்டில்தான் பேச்சு நடந்தது. உள்வளவில் பட்டகசாலையை ஒட்டி, சமுக்காளம் விரித்திருந் ததில் அனைவரும் இருந்தார்கள். வேகுப்பட்டியி லிருந்து நாகப்ப செட்டியாரும் அவர் மனைவி ஏகம்மை ஆச்சியும் பெண்ணைப் பெற்றவர்கள் என்ற முறையில் வந்திருந்தார்கள். ஏகம்மை ஆச்சியின் தமையனுர், வலையபட்டி உள்ளூர்க் காரர் ஆதலால் அவரையும் கூட்டி வந்திருந் தார்கள். வேகுபட்டியிலிருந்த பங்காளி சிவ. வும் வந்திருந்தார்கள். அதுபோலவே மாப்பிள்ளை வீட்டாருடன் அவர்கள் பங்காளி ஒருவரும், மெய்யன் சோமநாதனும், ஆச்சிமார் இருவரும் வந்திருந்தார்கள். கடவுள் வாழ்த்தோடு கூட்டம் தொடங்குவதுபோல, லெட்சுமி ஆச்சியின் கார சாரமான பேச்சோடு அது தொடங்கியது. அப சகுனம் போல அவர்கள் பேசியது மற்றவர்களின் மனத்தை வருத்தியது. "ஒருத்தரும் கெட்டுப் போகாமல் இருக்கணும்னு ஆறேகால் ரூபாய் எடுத்து சாமிக்கு முடிங்க. கால், அரையெல்லாம்

பத்தாது. நான் வயிறெரிஞ்சு வேண்டிக்கினது'' என்ருர்கள் லெட்சுமி ஆச்சி. ''அதென்ன லெட்சுமி! நீ சொல்றபடி செய்வோம்; கோபப்படாதே! கோயிலுக்குச் சேர்ந்தே போயிருக்கலாம். நீ ஒத்துக்கலே. தனித்தனியாவாவது போயிட்டு வந்துட்டீக...இப்போ, ஆறேகால் ரூபாயா பெரிசு... முடிஞ்சுவைங்க'', என்ருர் வலையபட்டி பங்காளி ஒருவர். அதன்படியே இருவரும் பணம் எடுத்து முடிந்துவைத்துவிட்டு மேற்கொண்டு பேச்சைத் துவங்கினுர்கள்.

கிட்டத்தட்ட மூன்றுமணிநேரம் காரசாரமாகப் பேச்சு நடந்தது. லெட்சுமி ஆச்சி கூடப்பிறந்த அண்ணனை-நாகப்பரை - 'வாங்க' என்று வாய் விட்டுக் கேட்டிருக்கலாம்; தலையை அசைத்தே முடித்துக் கொண்டார்கள். அண்ணமுண்டியை மட்டும் முகத்தையெல்லாம்மாறவைத்துக் கொண்டு 'வா' என்ருர்கள். இடையிடையே லெட்சுமிஆச்சி ''இப்பக் காலம் கெட்டுப்போச்சு. அந்தக் காலத் திலே நாங்க வீட்டைவிட்டே வெளியே போக மாட்டோம்...கலியாணத்துக்கு முன்னுலே மாப் பிள்ளையை ஏறிட்டுக்கூடப் பார்க்க மாட்டோம்... இந்தக் காலத்திலே பொம்பளைப் பிள்ளைக பகட்டுறது ஊரே கெட்டுப்போயிடும் போல இருக்குது...பொம்பளை சிரிச்சாப் போச்சுன்னுக, இந்தக் காலத்திலே பொம்பளை தான் சிரிச்சுச்சிரிச்சு மயக்குரு...செட்டிய வீட்டுச் சனம் கொஞ்சம் நல்லாருந்தது...இப்ப அதுவும் குட்டிச்சுவராப் போச்சு'' என்று, இவ்வாறு திரும்பத் திரும்பக் குத்தலாகவும் சாடையாகவும் பேசினுர்கள். அவர்கள் பக்கத்திலிருந்து எச்சில் பணிக்கம் நிரம்பி வழிந்தது. கோபத்தையெல்லாம் வெத்திலை மீது காட்டி, மென்று துப்பித் தள்ளினுர்கள். போர்க்

களத்தில் எதிரிகளைக் கொன்று குவித்ததால், குருதி வெள்ளம் கரை புரள்வது போல் இருந்தது அது! ஏகம்மை ஆச்சியும் அதற்காக விட்டுவிடவில்லை. ''இப்ப யாரு ஊரிலே போயிக் கெட்டுப்போறுக... உறவிலே பேசமாட்டாகளா...நாங்களும் ஒருத்தருக்கு முந்தாங்கி விரிச்சு ஒருத்தரே கதியினு வாழ்ந்த பரம்பரையிலே வந்தவுகதான்...'' என்றெல்லாம் சாதுரியமாகப் பேசினார்கள், ஏகம்மை ஆச்சி. ''தாயைத் தண்ணித்துறையிலே பார்த்தால் மகளை வீட்டிலே போய்ப் பார்க்கவேண்டாம் என்பாக'' என்று, சவுந்தரவல்லியை மட்டுமல்லாமல் ஏகம்மை ஆச்சியையும் போய்க் குத்துகிற அளவுக்கு லெட்சுமி ஆச்சி பேசினபோது ''நாங்க என்னமோ இல்லாதவுகதான். அதுக்காக நாக்கிலே நரம்பில்லாமே எங்களைப் பேசவேண்டாம்...நாங்க ஒண்ணும் அவுசேரி போகலை; களவாங்கலை; பொறத்தியார் பணத்தை எடுத்துக்கலை... என்னமோ எங்களுக்கு நல்ல நேரம் இருந்தா நாங்களும் நல்லா வந்திருவோம்...'' என்று ஏகம்மையாச்சியும் பதிலுக்குப் பதில் கூறிச் சமாளித்தார்கள்.

திருமணப் பேச்சும் பேசிமுடிந்தது. அதோடு அதுவாக லெட்சுமி ஆச்சியும் ஏகம்மை ஆச்சியும் தங்கள் மனத்தில், நெடுநாட்களாகப் பொங்கி நின்ற குமுறல்களையும் ஆசாபாசங்களையும் பேச்சோடு பேச்சாகப் பேசித் தீர்த்துக்கொண்டார்கள்.

○ ○ ○

பெண்ணுக்கு வைரக்காதோலை, மாப்பிள்ளைக்கு வைரமோதிரம் அவசியம் என்று கூறிவிட்டார்கள். 'வயிரமாப் பூட்டுகிற இடமெல்லாம் விட்டுவிட்டோமே' என்று லெட்சுமி ஆச்சி அடிக்கடி

வயிறெரிந்தார்கள். மாப்பிள்ளைக்கு மைனர் செயினும் கடிகாரமும் கடிகாரச் சங்கிலியும் போடுவது கட்டாயமென்பது, லெட்சுமி ஆச்சியின் பிடிவாதம். டாக்டருக்குப் படித்தவனுக்கு இது கூடப் போடாவிட்டால் ஊர் மதியாது என்று அவர்கள் கூறிவிட்டதால் அதற்கும் பெண் வீட்டார் சம்மதித்தார்கள். பெண்ணுக்கு 43 பவுன் போடுவது என்று முடிவாகி இருந்ததால் பெண் வீட்டார் 'மாப்பிள்ளைக்குக் கடிகாரம் வாங்கித் தருகிறோம். சங்கிலி வேண்டாம்' என்று எவ்வளவோ மன்றாடிப் பார்த்தார்கள். அது நடக்கவில்லை. தொகை மாமியார் சாமானுக்குப் பத்தும் சீதனம் பதினைந்தும் என்று முடிவாயிற்று. லெட்சுமி ஆச்சி "எங்க கிட்டே இதை வாங்கித்தான் கலியாணம் பண்ண வேணும்னு இல்லே. எல்லாரும் மாமியார் சாமானுக்குக் கூடுதலாகவும் சீதனத்தைக் குறைச்சும் பேசருக...எங்களுக்குப் பத்தும் சீதனம் பதி-னைஞ்சும் தாங்க" என்று வாதிட்டு வென்றார்கள். மாமியார் சாமானுக்கே வேண்டாமென்றிருந்தால் மிகவும் பெருந்தன்மையாக இருக்கும் என்று ஒருவர் இருவர் நினைத்தார்கள். மற்றும் பலர் லட்சக் கணக்கில், நாற்பது ஐம்பது என்று மாமியார் சாமானுக்குத் தருகிறோம் என்று கூறும் பொழுது இதுகூட வாங்காமல் இந்த ஆச்சி என்ன செய்வார்கள் என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டார்கள்.

தேவகோட்டை போன்ற பகுதிகளில் 'தோதுச் சீட்டு' வைத்துக்கொண்டு, சாமான்கள் வைக்கச் சொல்லுகிறார்கள். இங்கு நல்ல வேளையாக அந்தப் பழக்கம் இல்லை. இருந்தாலும் அடிக்கடி லெட்சுமி ஆச்சி 'இத்தனை அடுக்கு இருக்கவேண்டும். இப்படி இப்படி இருக்கவேண்டும்' என்பதைக் குறிப்பாகக்

கூறிவிட்டார்கள். 'ஒரு வருஷத்து முறைக்கு என்று ரூபாய் 1200/- கொடுக்கவேண்டும்' என்றும் முடிவாயிற்று. இந்தச் சமயத்தில் லெட்சுமி ஆச்சிக்கு 'பொங்கல்பானை' நினைவுவந்து சிறிதுநேரம் காரசாரமாகப் பேசித் தீர்த்தார்கள். ''நாங்க(ள்) ஏதோ எங்களுக்குக் கிடைச்சதைக் கொடுத்துத்தான் விட்டோம்...நீ தான் திருப்பி விட்டுட்டே...'' என்று ஏகம்மை ஆச்சி சொன்னதும், லெட்சுமி ஆச்சிக்குக் கோபம் இரண்டு மடங்காகி விட்டது. பிறகு ஒருவழியாக, யாவும் பேசி முடிந்தன. மாப்பிள்ளை வீட்டார் தாலிக்குத் தங்கம் கொடுப்பது 16 பவுன் என்று முடிவாயிற்று. ''எங்களுக்குக் கலியாணச் செலவு இருபத்தையாயிரம் வரும். ஒரே பையன். அவனுக்குத் தெரிஞ்சவுகளே ஆயிரம் பேர் வருவாக......''என்று லெட்சுமி ஆச்சி பெருமையடித்துக் கொண்டார்கள். இறுதியில் கார்த்திகை ஏழாம் தேதி திருமணம் என்றும் நாலாம் தேதி பாக்கு வெத்திலையென்றும் முடிவாயிற்று.

எவ்வளவு குறைத்துச் சிக்கனமாக நடந்தாலும் இந்தப் பேச்சின்படி 'ஒரு இலட்சம் ரூபாய் வருமே' என்று நினைத்தபோது, நாகப்ப செட்டியாரின் தலை சுழன்றது. பெண்ணைப் பெற்றவனின் தலை சுழன்றுதான் தீரவேண்டும் என்பதை அவர் தீர்க்கமாக அறிந்திருந்ததால், சமாளித்துக் கொண்டார். எல்லாவற்றையும் இரண்டு தாளில் எழுதி, மஞ்சள் தடவி, ஆளுக்கொன்றாக வைத்துக்கொண்டார்கள்.

○ ○ ○

மதுரையில் 'நகரத்தார் சங்கக் கூட்டம்' நகர விடுதியில் நடந்து கொண்டிருந்தது. அழகப்பன் 'ஹவுஸ் சர்ஜ'னாக இருப்பதால், அவனுக்குத் தவ-

ருமல் அழைப்புப் போய்விடும். அதனல் அவனும் போவதுண்டு. அன்று தன் அம்மான் வீட்டார் நகர விடுதியில் இருப்பதை அவன் பார்த்தான். சௌந்-தரவல்லியும் வந்திருந்தாள். கூட்டம் முடிந்தபின், அம்மானை 'வாங்க' என்று கேட்டு, வள்ளியையும், மற்றவர்களையும் பார்த்துப் பேசினன் அழகப்பன். கலியாணச் சாமான் வாங்க வந்திருப்பதாகவும் போவதற்கு ஓரிரு நாட்கள் ஆகக்கூடும் என்றும் கூறினர்கள். அழகப்பனும் அடிக்கடி வந்து, அவர்-களுக்கு உதவிகள் செய்தான். பணஉதவி மட்டும் அவனல் செய்ய முடியவில்லை. நூறு, இருநூறு என்-ருல் அவனே உதவியிருப்பான். ஒருநாள் வந்த போது பிற்பகல் நான்கு மணியிருக்கும். எல்லோரும் கடைத் தெருவுக்குப் போய்விட்டார்கள். சௌந்தரவல்லி மட்டும் அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். இருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு சௌந்தரத்தை அழைத்துக் கொண்டு, மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு அழகப்பன் சென்ருன். சௌந்தரத்தின் அடுத்த தங்கையிடம், சாமி கும்பிட்டுவிட்டு, ஒரு மணி நேரத்திற்குள் திரும்பிவிடுவதாகக் கூறிப் புறப்பட்டார்கள்.

○ ○ ○

மாரியம்மனைத் தரிசித்துவிட்டு, இருவருமாகத் தெப்பக்குளத்தின் மேற்குக்கரைப் படிக்கட்டில் போய் அமர்ந்தார்கள். அன்று பௌர்ணமிக்கு மறுநாள். எங்கும் பால்மதியின் ஒளிவண்ணம் படர்ந்து பரவியது. தெப்பக்குளத்தில் அளவான தண்ணீர் கிடந்ததால் அது அழகாகக் காட்சியளித்தது. தெப்பக்குளத்தைச் சுற்றிலும் அழகான பூங்காவாக இருந்தது. ஆங்காங்கு இளைஞரும் முதியவருமாக, மணமானவர்களும் காதலர்களு-

மாக, சிறுவரும் சிறுமியருமாக இருந்து, இனிதே பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். கருநாகம் போல் கிடந்த கூந்தலை, முன்னே இழுத்துவிட்டுக் கொண்டு, சௌந்தரம் அழகுத் தேவதையாக அழகப்பன் முன் அமர்ந்திருந்தாள். திருமணப் பொலிவு அவள் முகத்திற்கு ஒருவிதப் பூரிப்பைத் தந்திருந்தாலும், அதில் சோக இழைகளும் ஊடுருவி நின்றன. 'சௌந்தரம்' ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?' என்று அழகப்பன் கேட்டான். 'ஒன்றுமில்லை' என்று சமாளித்தாலும் அவளை அழகப்பன் வற்புறுத்தினான்; 'ஒரு குடி தழைப்பதற்குள் பழைய குடி தளர்ந்துவிடும் போல இருக்கிறது' என்று அவள் தளுதளுக்கப் பேசினாள். 'எப்படிச் சமாளிக்கிறார்கள்?' என்று அழகப்பன் மீண்டும் கேட்கவே, அவள் தயங்கித் தயங்கி, ஓரளவு விவரம் கூறினாள். ''மலேயாப் பணம் நன்கொடை ரூ 2500 கிடைத்து விடும். பங்காளி ஒருவரிடம் காலில் விழுந்து கும்பிட்டு ஐயாயிரம் ரூபாய் இரண்டு வட்டிக்கு வாங்கியிருக்கிறது. சேர்வார் ஒருவர் கொஞ்சம் வசதியுள்ளவர்; 20 மூடை நெல் கடன் கொடுத்திருக்கிறார். ஆயா வீட்டில், அம்மானிடமிருந்து கொஞ்சம் உதவி கிடைத்திருக்கிறது. ஆயாள் போட்டிருந்த சங்கிலி ஒன்று, ஆறு பவுன் எடையுள்ளதைக் கொடுத்துள்ளார்கள். வேகுப்பட்டிச் சின்ன வீட்டை மோடு, கூரையெல்லாம் பிரித்து ஏழயிரத்துக்கு விற்று, அது இப்பொழுது குட்டிச் சுவராக நிற்கிறது. சௌந்தர வல்லியின் தாயாருடைய பெரிய தாலி அடைமானம் இருந்ததை இப்போது விற்று விட்டார்கள், புதிய தாலி செய்யத் தங்கம் வாங்குவதற்காக. இவையெல்லாம் போதாதென்று, சீதனத்திற்கும் மாமியார் சாமானுக்கும் கொடுப்பதற்காகப்

பெரிய வீட்டையும் அடகு வைத்து, இருபத்தை யாயிரமும் கேட்டிருக்கிருர்கள். கொஞ்சநஞ்சம் நிலம் இருந்ததும் விலை பேசி இருக்கிறது.'' சௌந் தர வல்லி கூறிய இந்த விவரத்திலிருந்து, அவள் திருமணத்திற்குப் பிறகு, அவள் பிறந்த வீட்டின் கதி என்ன ஆகும் என்று அழகப்பன் நினைத்தான். அவனுக்கே மயக்கம் வருவது போல இருந்தது.

பால் நிலவொளியில் தலைநிமிர்ந்து நின்றமைய மண்டபம். தெப்பக் குள நீர் மட்டத்தின் மேல் எழுந்த அலைகளில், நெளிந்து நெளிந்து பிரதி பலித்தது. கும்பகோணம் திருநாகேசுவரம் கோயி லின் சுற்றுப்புறத்திலுள்ள, அற்புதமான அழகுச் சிலை போல சௌந்தரவல்லி எதிரே அமர்ந்திருந் தாள். அழகும் பண்பும், அறிவும் அன்புமே செல்வங்-கள் என்ருல், அவள் ஒரு விலை மதிக்க முடியாத கருவூலம். எந்த விதமான தியாகமும் செய்து திருமணம் கொள்ளக்கூடியவள் அவள். இருந்தா-லும் சமுதாயக் கட்டுப்பாடு, பழக்க வழக்கம் காரண மாகத் தான் பிறந்த குடும்பத்தையே நசிவுறச் செய்துவிட்டு அவள் தன் வாழ்க்கையைத் தொடங்க வேண்டியிருக்கிறது. 'நண்டு, சிப்பி, வேய், கதலி போன்றவற்றை அவையவை கொண்ட கருவே அழிக்கும்' என்பார்கள். 'வாழையடி வாழை' என்று குல வளர்ச்சியை வருணிப்பார்கள். புதிய கன்றை ஈன்றதும் தாய்வாழை வாழ்வை இழக் கிறது.! 'அது இனி ஈனுது' என்று வெட்டி எடுத்து விடுகிருேம் அல்லவா? நகரத்தார் சமூகத்திற்கு இது மிகவும் பொருந்துகிறது. புதிய குடி ஒன்று தோன் றும் போது, பழைய குடி அழிவுறுகிறது. பிறந்த குடியைச் சிதைத்துவிட்டு, மகள் புக்ககம் போகின்-ருள். மகளின் தாலி புதியதாய்ச் செய்யப் படு

வதற்காகத் தாயின் பழைய தாலி பறிபோகிறது. நகரத்தார் சங்கத்தில் ஒரு முறை இப்படி ஒருவர் கவியரங்கேற்றியதையும், அதிலுள்ள அவலச் சுவையை நகரத்தார் இனத்துப் பெருமக்களும் ஆச்சிமார்களும் கேட்டு இரசித்ததையும் அவன் நினைவுகூர்ந்தான். இந்த நகரத்தார் குலத்தவர்கள் எல்லோருமே சீர்திருத்தம் பேசுகிறார்கள்; மேடையில் ஏறிச் சிரிக்கச் சிரிக்க எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால் ஒருவராவது பின்பற்ற வேண்டுமே? அவனுக்குத் தெரிந்தவரை செட்டி குலச் சீர்த்திருத்தத்திற்கு முயன்ற பலர், தத்தமது முயற்சியைக் கைவிட்டு வேறு பயனுள்ள செயல்களுக்குப் போயினர் என்பதே வரலாறாகும்.

மகிபாலன்பட்டி சின்னையா செட்டியார் எடுத்த முயற்சிகள் என்ன ஆயின? அமராவதிபுதூர் சொ. முருகப்பா கடைசியில் கம்பராமாயணமே கதி என்று போய் விட்டார்கள். இந்த இனத்தைத் திருத்தச் சண்டமாருதமாய் முழங்கிய அவர்கள், தம் முயற்சியெல்லாம் பயனளிக்காது என்ற முடிவுக்கு வந்த பிறகே, அதைக் கைவிட்டார்கள். கானாடுகாத்தான் வை சு.சண்முகனார் வைராக்கியத்தோடு, ஒதுங்கி விட்டார்கள். காரைக்குடி ராய. சொ. சமூக முயற்சிகளாலல் பயனில்லை என்று தெளிந்து 'தமிழ்க் கடலாய், வாழ்ந்து மறைந்தார்கள். எவராலும் திருத்த முடியாத இனமென்று ஒன்று இருக்குமானால் அது இதுதான். இவ்வாறு அழகப்பன் சிந்தையெல்லாம் குழம்பி நின்றது. செளந்தரவல்லி பொறுமை இழந்தாள்.

''ஏன் ஒருமாதிரியா இருக்கிறீங்க?'' —அவள் கண்களும் நீர் தளும்பி நின்றன.

''உன் கலியாணம் முடிஞ்சதும் உங்க வீட்டிலே என்ன பண்ணுவாங்க? சின்ன வீடும் தரைமட்ட மாயிடுச்சு. வயலையும் வித்துப்பிடுவாங்க. பெரிய வீட்டுக்கும் வட்டி விஷம்போல வளர்ந்து, பறிபோனுல்.........''

''அப்பச்சி புத்தி பேதலிச்ச மாதிரி குழம்புறுங்க. அடிக்கடி மறந்துடறுங்க ... நேத்து நூறு ரூவா நோட்டைக் குடுத்துட்டுச் சில்லரை வாங்காமேப் புறப்பட்டுட்டாங்க ... கடைக்காரன் நல்லவன் ... கூப்பிட்டுக் கொடுத்ததினுலே நல்லதாப்போச்சு...''

''எல்லாத்துக்கும் நான்தான் காரணம் சௌந்தரம். லீவுக்கு ஊருக்கு வந்ததும் சரி. உன்னைப் பார்த்ததும் சரி. உங்க குடும்பத்துக்கே பெரிய துயரமாப் போச்சு...''

''அப்படிச் சொல்லாதீங்க...என்னைக்கிருந்தாலும் செட்டிய வீட்டிலே ஒருநாள் இல்லாட்டி ஒருநாள் இந்தத் துயரம் வந்துதான் தீரும். பெத்த பெண்ணைக் கட்டிக் கொடுக்காட்டாலும் துயரம். கட்டிக் கொடுத்தாலும் துயரம். சீக்கிரம் கட்டிக் கொடுத் தாலும் துயரம். நாள் ஆகிக்கிட்டேபோனு, அதை விடத் துயரம்...அதனுலே, உங்கமேலே குத்தம் இல்லை. இந்த நிலையிலே, உங்க படிப்புக்கு நீங்க எங்களைத் தேடி வந்ததும் நாங்க செய்த பாக்கியம்...''

''சௌந்தரம் ... மத்த சாதிக்காரங்க மாதிரி அம்மன் சன்னதியிலேயே வச்சு உன்னைக் கட்டிக் கிட்டா ... அதுவுமில்லேன்னு சுய மரியாதைக் கலியாணமா யாருடைய தலைமையிலாவது கலியாணம் பண்ணிக்கிட்டா ... இவ்வளவு துயரம் ஒருத்தருக்கும் இல்லே. உன்னைப் பெத்தவக

கண் கலங்க வேண்டியதில்லை ... நாளைக்கு நடுத் தெருவிலே அவுக நிக்க வேண்டியதில்லை...''

''அடி ஆத்தா ... அப்புறம் நம்ம ஊருக்குள்ளே தலை காட்ட முடியுமா? நம்மளைப் புள்ளியிலே சேர்த்துக்குவாகளா?''

''இப்படிச் சமூகத்துக்கு பயந்து பயந்துதான் நாம அழிஞ்சுக்கிட்டிருக்கிறோம். சௌந்தரம்! இப்ப ஆகப்போற செலவுகளினாலே என்ன பலன்? உங்க வீட்டை வித்து, மாட்டை வித்து நீங்க தரப்போற பணம் வந்து என்ன ஆகப் போவுது? எங்க வூட்டுலே தூங்கப் போவுது. நகைநட்டா வரப்போறது, சாமான் சட்டா வரப்போறது, எல்லா-மே 'இடமாற்றம்' ஆகப்போவுதே தவிர, என்ன பலன்? அவசரத் தேவை எதுவுமில்லை. ஆடம்-பரமாப் பகட்டிக் காட்டறதுக்குக் குடும்பங்களை அழிக்கிறோம். அதைவினால் உங்க வீட்டிலே பத்தாயிரம், எங்க வீட்டிலே பத்தாயிரம் தடை-முறைச் செலவு, சாப்பாட்டுச் செலவிலே அடிபடப் போகுது...இந்த இனத்தைப் போயிச் செட்டான இனமுண்ணு சொல்ருகளே? சிக்கன மானவங்-கண்ணு புகழுருகளே? சிக்கனமானவங்கண்ணு புகழுருகளே...அட பாவமே...!'

அழகப்பனின் ஆத்திரம் எல்லைகடந்து போய்க் கொண்டிருந்தது. சௌந்தரமோ மிகவும் நிதான மாகக் காட்சியளித்தாள். அவள் முகத்தில் ஆன்ம ஒளி மேலோங்கி நின்றது. ஒரு தெய்வீகப் பேரொளியுடன் அவள் புன்னகை பூத்த முகத் தோடு இருந்தாள். கண்கள் பனிபடர்ந்த மலர் போல விளங்கின. ஆற்றவொண்ணுத் துன்பத்தை அவளுடைய இதயம் தாங்கி நின்றது. இந்தக் காட்சியில் தன்னை மறந்திருந்த அழகப்பனும்,

அவனைப் பார்க்காமல் பார்த்து உள்ளூற மகிழ்ந்தும் அந்த மகிழ்ச்சிக்காகத் தன் பெற்றோர் அடையப் போகிற துன்பத்தை நினைத்து வருந்தியும் திண்டாடு-கிற சௌந்தரமும் திடுக்கிடும்படி ஒரு குரல் கேட்டது ... ... ஆம். வள்ளியின் குரல்தான் அது!

''ஆச்சி! இங்கேயோ இருக்கிறீக ... உங்களை எங்கேயெல்லாம் தேடறது?''

மாரியம்மன் தெப்பக் குளத்திற்குப் போவதாகச் சொல்லிவிட்டு வந்ததனால், வள்ளியும் அவள் பின்னே சௌந்தரத்தின் அடுத்த தங்கை இன்ப வல்லியும் அவளுக்குப் பின்னே ஏகம்மை ஆச்சியும் நாகப்ப செட்டியாரும் எல்லோருமே படையெடுத்து வருவதுபோல் வந்து கொண்டிருந்-தார்கள். இளம் மகளிரை இந்த இனத்தவர்கள் பாதுகாப்பார்கள்; கண்ணை இமை காப்பது போல் காப்பார்கள்; அவ்வளவு காப்பாற்றிக் கட்டிக் கொடுக்க முடியாத அளவு சமுதாயக் கட்டுகளை வளர்த்து, கண்ணைக் குத்துவது போல் குத்தவும் செய்வார்கள்! தம்மகளை அழகப்பன்தான் அழைத்துச் சென்றிருக்கிறான் என்றாலும் அவர்களால் அமைதியாக இருக்கமுடியவில்லை ''நாங்களும் அம்மங் கோயிலுக்கு வந்துட்டுப் போகலாமுண்ணு புறப்பட்டு வந்தோம். ஊரிலேயிருந்து வரும் போதே உண்டியலிலே போடுறதா வேண்டிக்கிட்டேன்,'' என்றார்கள் ஏகம்மை ஆச்சி. அதற்குப் பொருள் என்ன தெரியுமா? ''நாங்கள் ஒன்றும் சந்தேகப் பட்டுப் பின்னேயே வரவில்லை. நாங்களும் ஒரு வேலையாகத்தான் இங்கு வந்தோம்'' என்று தங்கள் வீட்டு மாப்பிள்ளைக்கு அவர்கள் உணர்த்தாமல் உணர்த்தினார்கள். மாப்பிள்ளைக்கும் அது புரியாமல் போகவில்லை. புன்னகை பூத்த முகத்தோடு

சௌந்தரமும் அழகப்பனும் எழுந்து நின்ருர்கள். வெண்ணிற நிலா வெளிச்சத்தில், நீலம் பூத்த தெப்பக்குளமும் நீண்டுயர்ந்த மைய மண்டபமும் ஆகிய பின்னணியில், அவர்கள் இருவரும் அருகருகே எழுந்து நின்ற போது - மணமக்களாக நிற்கும் அப்புதிய மலர்களைப் பார்த்ததும் — நாகப்ப செட்டியாருக்கும் ஏகம்மையாச்சிக்கும் ஏற்பட்ட பெருமகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. துன்பமெல்லாம் வெயில் கண்ட பனி போல விலகின. தெப்பக்குளத்துத் தண்ணீரில் நிலவொளி மின்னுவதுபோல், அவர்கள் உள்ளமும் முகமும் பளபளவென்று ஒளிவீசி நிற்க, மகிழ்ச்சியிற் திளைத்த னர்.

## 6

கார்த்திகை மாதம் நாலாம் தேதி பெண் வீட்டில் வைத்துப் பாக்கு வெற்றிலை மாற்றிக் கொண்டார்கள் மாப்பிள்ளை வீட்டார் 16 பவுனும் சொக்கத் தங்கமாகக் கொண்டுவந்து, தாலிக்குத் தங்கம் தட்டிக் கொடுத்தார்கள். ஆனுலும் லெட்சுமி ஆச்சியின் மனம் அந்தத் தங்கம்போல் அமையவில்லை. தங்கத்தைத் தட்டுவதற்குப் பயன் படுத்துகிருமே கருவிகள் பட்டடையும், சம்மட்-டியும் அவைகளைப் போல இருந்தது ஆச்சியின் உள்ளம். 'எந்த நேரமும் அவர்கள் முகம் கர்ண கடூரமாய் இருந்தது. குற்றம் கண்டவிடத்துத் தண்டிப்பதென்றில்லாமல், குற்றத்தை எங்கே காணலாம்? எப்போது காணலாம்?' என்று அவர் களுடைய கண்கள் துருவிக் கொண்டிருந்தன. எடுத்ததற்கெல்லாம் தம் கணவர் மீது அவர்கள் எரிந்து விழுந்து கொண்டிருந்தார்கள். இடையிடை-

யே அழகப்பனுக்கும் 'அருச்சனை' செய்த வண்ண-மிருந்தார்கள். தங்களை வரவேற்றது சரியில்லை; பலகார வகைகள் உபசரணை தங்கள் தரத்துக்குப்-போதாதென்று அரற்றிக் கண்ணீர் சிந்துவது போல் புலம்பி 'அபசகுன'மாக நடந்து கொண்டார்-கள். எவ்வளவோ உயர்ந்த இடங்களை விட்டுவிட்டு இப்படிப் பள்ளத்தில் விழ நேர்ந்ததென்று அவர்கள் அடிக்கடி அலுத்துக் கொண்டார்கள். உடன்பிறந்த அண்ணன் வீடென்ருே தான் பிறந்த வீடுதான் என்ருே ஒரு துளியாவது பாசம், பந்தம் இருக்க வேண்டுமே. ஆம், இந்த அளவு நாகரிகமற்ற பண்பாடற்ற இயல்பையும் செட்டிநாட்டில்தான் காணலாம். பணப்பற்றில்லாதவர்கள் உலகத்தில் எவரும் இலர். இருந்தாலும் செட்டியார்கள் அதற்-கொரு எல்லைக்கோடு வகுத்துக் காட்ட வல்லவர்-கள். ஆச்சிகள் தான் அந்தக் கோட்டை வரைந்து நிலைபெறச் செய்யும் வண்ணத் தூரிகைகள் போல் செயற்படுகிருர்கள்.

லெட்சுமி ஆச்சியின் தம்பி பழனியப்ப செட்டியார் வீட்டார் அனைவரும் கல்யாணம் முடியும் வரை திரும்புவதில்லை என்று குடும்பத்தோடும் பிள்ளைகுட்டிகளோடும் வெளியூர் போய்விட்டார்-கள். அவருக்குத் தம் அண்ணன் மகளை ஆச்சி மகன் மணந்து கொள்வதில் அவ்வளவு பொருமை? அவர் மனைவிக்கு அவ்வளவு வயிற்றெரிச்சல்? "எங்கே இவர்கள் நன்ருக வாழ்ந்து விடுவார்களா பார்ப்போம்"-இது அவர்களின் சபதம். பழனியப்ப செட்டியாரின் மனைவிக்குத்தான் பாசமில்லை. அவர்கள் வேறு வீட்டிலே பிறந்து இங்கே வாழ்க்கைப்பட்டவர்கள். பழனியப்பருக்கு இரத்த-பாசமே அற்றுப்போய்விட்டதே! எப்படி? இதுவும் நகரத்தார்களுக்கு உரிய சிறப்புக்களுள் ஒன்று. ஒரு

மகன்வழி உறவையோ, மகனையோ நேசிப்பதில்லை. ஒரு கணவன் தன் மனைவிவழி உறவையோ மனைவியையோ அன்புகூர்வதுபோல, தன்வழி உறவுகளில் பற்றுவைப்பதில்லை. அண்ணன் தங்கையானாலும் சம்பந்தி என்று ஆகிவிட்டால் கொடாக் கண்டனும் விடாக்கண்டனுமாக மாறி, எந்த நேரமும் கருவிக்கொண்டிருக்க வேண்டுமே தவிர, அன்பாக மாறிவிடக் கூடாது. லட்சுமி ஆச்சிக்குப் பாக்கு வெற்றிலை மாற்றிக்க வந்தபோது, தாங்கள் கொண்டுவந்த முறைகளெல்லாம் மிக உயர்வாகப் பட்டன; தங்களுக்கு ஏகம்மை ஆச்சி வீட்டார் செய்தன எல்லாம் மிகக்குறைவாகப் பட்டன. பெட்டி பெரிதாக இல்லை; சட்டி போதாது; பணமும் சரியாகத் தரவில்லை. 'இவர்கள்' இப்படி முறைதலைகளைத் தேய்த்து விடுகிறார்களே' என்பது ஆச்சியின் வருத்தம். எந்த நேரமும் தங்கள் தகுதியை நோக்கியே அவர்கள் பேசினார்கள். தங்களுக்கு வேறு இடங்களில் செய்திருக்கக்கூடிய கூடுதலான முறைதலைகளைப் பற்றி எண்ணி எண்ணியே ஏங்கிப் பொருமிப் பேசினார்கள். தம் உடன்பிறந்த அண்ணன் வீட்டைக் காறித்துப்பினார்கள்; வாய்க்கு வந்ததை ஏசினார்கள்; அண்ணமுண்டியைப் பார்த்து மோவாயைத் தோள்பட்டையில் இடி இடியென்று இடித்துக் கொண்டார்கள். கலியாண வீட்டில் எல்லாம் தரமாய் நடக்காவிட்டால், பூகம்பமே கிளம்பும் என்பது போன்ற எச்சரிக்கையுடன் புறப்பட்டார்கள்.

ஊரிலிருந்தவர்களோ, லெட்சுமி ஆச்சிவீட்டாரை எதுவும் குறை கூறவில்லை அவர்கள் பணக்காரர்கள் ஆயிற்றே? பல சமயங்களில் இங்கு நீங்கள் கூர்ந்து கவனித்தால் பணமுள்ள பக்கத்திலேயே நியாயம் தாய் தன் மகள்வழி உறவை நேசிப்பதுபோல்

சாய்வதை வாய்மொழியாகக் கேட்கலாம். இது விரலுக்குத்தகுந்த வீக்கமில்லியே. ஏன் இப்படிச் செலவழிக்கிருக? ஒரு பெண்ணுக்கே எல்லாத்தை-யும் விட்டுவிட்டால் மத்த பொண்ணுக கதி என்ன? இதுக்கு எங்கேயாவது ரெண்டாந்தாரமாவாவது கட்டிக்கொடுக்கலாமே?'' என்றெல்லாம் பேசி-ஞர்கள். நாகப்பசெட்டியார் குடும்பத்தையே இப்படி நயமாகத் தாக்கிஞர்கள்.

இவ்வளவு அம்பலோடும் அலரோடும் துன்பத்-தோடும் துயரத்தோடும் தொடங்கியது திருமணம். முதல்நாள் இரவு மாப்பிள்ளை அழைப்பின்போதே பெண்ணுக்கு வைரத்தோடு போடுவதாகச் சொன்-னபடி, செய்தாகிவிட்டதா என்று கேட்டு விட்டார்-கள். 'செய்து வரவில்லை; வந்துவிடும்' என்ற பதில் வந்தது. மிகவும் தொல்லைப்பட்டுக் கடைசி நேரத் தில் செய்யக் கொடுத்ததால் வரவில்லை. விடிவதற் குள் கொண்டு வருவதாக ஆசாரியார் கூறியிருந் தார். இருந்தாலும் இப்படி ஒரு சந்தேகத்தை யாரோ ஓர் ஆச்சி பற்றவைக்க அது லெட்சுமி ஆச் சியிடம் பற்றி எரியலாயிற்று. மாப்பிள்ளை இரவு பதிஞேரு மணிவரை அழைக்கப்படவில்லை. கோயில் வாசலிலேயே அவர் இருக்கும்படி ஆயிற்று. எல்லா வற்றுக்கும் ஏற்பாடாகி விட்டது என்பதையும் பவுன் குறையாமலும் பணம் குறையாமலும் செய்து விடுவதாக நாகப்ப செட்டியார் பங்காளிகளிடமெல்-லாம் பன்னிப்பன்னிப் பேசி, இரண்டு பணக்காரச் செட்டியார்களிடம் தமக்காகச் சாமீன் சொல்லும்-படி கேட்டுக் கொண்டார். அழாக்குறையாக அவர் பேசியதைக் கேட்ட அவ்வசதி படைத்த பங்காளிப் பெருமக்கள், ''ஏதோ உங்களுக்காக நாங்க சாமீன் ஏத்துக்கிறேம். சொன்னபடி நடந்துக்கங்க', என்று கூறி விட்டு லெட்சுமி ஆச்சியிடமும் குமாவிடமும்

கூறிச் சமாதானப்படுத்தி, நள்ளிரவு நேரத்தில் மாப் பிள்ளை அழைக்க ஏற்பாடு செய்து முடித்தார்கள்.

நாகப்ப செட்டியார் மாப்பிள்ளையை வரவேற்று மாலை அணிவித்து, கடிகாரச் சங்கிலியுடன் கடிகார மும் கழுத்துக்கு மைனர் செயினும் வைர மோதிரமும் அணிவித்து அழைத்துக் கொண்டு மேளதாளத் துடன் புறப்பட்டபோது அவர் முகம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்திருக்க வேண்டும். ஆனால் அவர் மனத்திலிருந்த சோகக் குமுறல், அப்படியே பிரதிபலித்ததே தவிர மகிழ்ச்சியான இரேகைகள் தானும் அங்கு தென்படவில்லை.

இவ்வாறு மாப்பிள்ளை அழைத்தலிலேயே தடங்க லாகத் தொடங்கிய திருமணம், பெண்வீட்டைப் பொறுத்தவரை கண்ணீரும் கம்பலையுமாக நடை பெற்றது. லெட்சுமி ஆச்சியின் முகம் எப்போதும் 'உம்'மென்று இருந்தது. எல்லோர் மீதும் சிடுசிடு என்று விழுந்தார்கள். வேலைக்காரர்கள் ஆச்சியின் பக்கம் போகவும் அஞ்சினார்கள். பேசும்போது நறுக்கு நறுக்கென்று ஆச்சி வார்த்தைகளைக் கொட்டியதும், அடிக்கடி தாடையைத் தோளில் இடித்துக் கொண்டதும், அவர்கள் உள்ளம் எரிமலையாய் வெடிப்பதைப் புலப்படுத்தின.

மகாலட்சுமிபோல ஒரு பெண் வீட்டுக்கு வரு கிறாள். அதுவும் தன் சொந்த அண்ணன் மகள் தன் மருமகளாக வருகிறாள். தன் வீட்டிலே எதுவுமே குறைவில்லை. வீடு, வாசல்; வயல், வரப்பு; சொத்து, சுகம் மூன்று தலைமுறைக்குப் போதும். இந்த நிலையில் அப்படியே மகிழ்ச்சியில் திளைத்து, எல்லோரையும் அரவணைத்துப் போக வேண்டிய

தகுதி இருந்தும் லெட்சுமி ஆச்சி, எரிமலையாகித் தாமே 'எரிந்து' வெடித்துக் கொண்டிருந்தார்கள். எப்போதோ மனத்தில் ஏற்பட்ட குமுறல், குரோதம் அவர்கள் உள்ளத்தை முழுவதும் நஞ்சாக்கி விட்டது. யாராவது 'லட்சுமி! வந்தியா!' என்று கேட்டால்கூட 'ஆமா' என்று, அடிக்குரலில் கூவி, அவர்கள் தலையசைத்தது, அவர்கள் எவ்வளவு தூரம் பொங்கிப் பொருமிப் போயிருக்கிறார்கள் என்று காட்டியது.

இரவு மாப்பிள்ளை அழைத்தபின், உள் நடு வீட்டில் ஏற்றி வைத்திருந்த குத்து விளக்கு நின்று விட்டது. ஐந்து மணி போல் எழுந்த ஆச்சி இதைக் கவனித்துக் கூச்சல் போட்டார்கள். விளக்கில் எண்ணெய் இல்லாமல் நின்று போயிருந்தது. யாரை-யாவது, எதையாவது கவனிக்க விட்டால் தானே? கும. அவர்களுக்கு இது தீய அறிகுறியாகப்பட்டது. சரியாகக் கவனித்து, எண்ணெய் ஊற்றி வைக்காத-தற்காக வேலைக்காரர்களை அவர் கண்டித்தார். ஆனால், லெட்சுமி ஆச்சி செட்டியார் மீது நேரே சண்டைக்குக் கிளம்பினார்கள். 'இந்த இழவுக்கு நாங்க என்ன பண்ணுவோம். இதுக்குத் தான் ஒண்ணுமத்தவுக வீட்டிலே சம்பந்தமே வேண்டா மின்னேன். கடவுளுக்கே பொறுக்கல்லை. விளக்கு நிண்ணு போச்சு. என்ன நடக்கப் போகுதோ' என்றார்கள். செட்டியார்க்குக் கடுங் கோபம் வந்துவிட்டது. இருந்தாலும் திருமண வீடு, போர்க் களமாய்ப் போய்விடக் கூடாதே என்று, அவர் அடங்கிப் போனார். விரைவில் அவ் விளக்கைத் திரும்ப ஏற்றுவதில் அவர் முயற்சி மேற்கொண்டார். அன்பு என்ற எண்ணெய் வார்க்க வார்க்கக்

குடும்ப விளக்குத் துலங்கி எரிகிறது; அந்த எண்ணெய் வற்றிவிட்டால் சுடர் உள்ளடங்கி மாய்கிறது. லெட்சுமி ஆச்சியின் உள்ளத்திலிருந்த அன்பு எண்ணெய் முழுவதையும் பணப் பேய் குடித்து விட்டுப் போய்விட்டது!

திருமணம் நடத்துவதில் முதன்மையான லெட்சுமி ஆச்சியின் மனம் சரியில்லாததால், அத் திருமணமே ஒரே களேபரமாகத்தான் நடை பெற்றது. ஒவ்வொரு சடங்கிலும், ஒவ்வொரு முறையிலும் ஏதாவது குற்றங் குறை கண்டு பிடித்துக் கொண்டே இருந்தார்கள் அவர்கள். ஆச்சிமார்களுக்கு வேறு வேலையே கிடையாது. விருந்துக்கு வந்த பலர் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதே தம் கடமையாகக் கொண்டார்கள். முதலில் சாமான் வைத்தது சரியில்லை என்று லெட்சுமி ஆச்சி காதில் விழும்படி சிலர் பேசினார்கள். எல்லாவற்றையும் விற்று, தங்களுடையதும் மற்றைய பெண்களுடையதுமான எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப் படாமல், இருக்கிறதையெல்லாம் வைத்திருப்பதைப் பார்த்து ஆறுதல் சொல்லாதது மட்டுமன்று, எதிராக எத்தனை 'நொண்டல்கள்' பேசினார்கள், இந்த ஆச்சிமார்கள்! ஏழு அடுக்கு வைத்தது போதாதாம். டாக்டருக்குப் படித்தவனுக்கு வெண்கலச் சாமான் பதினாறு அடுக்கு வைத்திருக்கலாமாம். அடுக்குகளும் இலேசாகக் காற்றில் பறக்கிற மாதிரி இருந்தனவாம்.

வெள்ளிச் சாமான் இரண்டு மூன்றை மட்டும் வைத்து ஏமாற்றி விட்டார்களாம்.

''எவர்சில்வர்ச் சாமான் எங்கே வாங்கினார்களோ தெரியலை. ஒண்ணுகூட வடிவமா, திருத்தமா,

அழகா இல்லே'' என்பது ஓர் ஆச்சியின் குற்றச் சாட்டு.

''அடி, வச்சதுதான் வச்சாக! பொண்ணுக்குக் கூடப் பரவாயில்லே. மாமியாளுக்கு இப்படியா பாடாவதியா வைக்கிறது? ஒரு சாமான் கூட உருப்படியா இல்லேயே? ம்ம்... நமக்கெதுக்கு அந்தப் பேச்சு?'' என்று பங்காளி ஆச்சி ஒருத்தி, ஏற்கனவே பொங்கிக் கொண்டிருந்த லெட்சுமி ஆச்சியின் கோபத்துக்குத் தூபதீபம் காட்டினர்கள்.

''டாக்டருக்குப் படிச்ச மாப்பிள்ளைக்கு ஒரு 'சூட்'டைக்கூடக் காணும் பார்த்திகளா? வேட்டியைப் பார்த்தா, கம்பவுண்டர் கூடக் கட்டிக்க மாட்டான்!'' என்று, ஒரு வேகுப்பட்டி ஆச்சி கடகடவென்று சிரித்துத் தம்முடைய நகைச்சுவையைத் தாமே இரசித்துக் கொண்டார்கள்.

''என்ன செய்யறது? அவன் தலைவிதி? இந்த இடத்திலேதான் சம்பந்தம் வேணுமின்னுன். ஒண்ணுமத்தவுக, மொட்டைக் கழுதைகள். இப்படி மோசம் பண்ணிட்டாக'' என்று லெட்சுமி ஆச்சி, தம் கூட்டத்திடையே தலைமையுரையாற்றினர்கள். செட்டி நாட்டில், இவ்வாறு ஒரு கொடுமையான 'நாகரிகம்' பரவியிருப்பதை யாரும் எடுத்துப் பேசுவதில்லேயே என்று மணமகன் உள்ளூற நைந்து கொண்டிருந்தான். அவன் மௌனமாக இருந்தானே தவிர, கண்ணும் செவியும் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தன.

○ ○ ○

'தாலி கட்டியது'க்கு என மாப்பிள்ளைக்குத் திருப்பூட்டு முடிந்ததும் சில்வர்ச் சட்டி, ரப்பர்வாளி, பழம், பாக்கு வெற்றிலே, ரூ 31 எல்லாம் வைத்துப்

பெண் வீட்டில் கொடுத்தார்கள். சில்வர்ச் சட்டி பெரிதாக இல்லை என்றும், பணம் போதாதென்றும் லெட்சுமி ஆச்சி பொரிந்து தள்ளினூர்கள். உடனே பெண்ணுக்குத் தந்தை பயந்து ரூ51 ஆகக் கொடுத்து விட்டார். இருந்தாலும் லெட்சுமி ஆச்சி மனக்குறை தீரவில்லை. அவர்கள் மனம் அடிவானம் போன்றது. எவ்வளவு நடந்தாலும் அடிவானம் எட்டாமல் போய்க்கொண்டே இருப்பதுபோல, எவ்வளவு கொடுத்தாலும் அவர்கள் போன்ற ஆச்சிகளின் மனம் குறைப்பட்டுக்கொண்டே இருக்கும். அது நிறைவை எட்டவே எட்டாது!

திருப்பூட்டுச் சடங்கை லெட்சுமி ஆச்சியே செய்தார்கள். அவர்கள் பெண்ணின் கழுத்தில் திருநீறு பூசிய ஒவ்வொரு தடவையும், ஏதோ கழுத்தைப் பிடித்து முறிக்கப் போகின்றவர்கள் போல் காணப் பட்டார்கள். முகம் அவ்வளவு கடுகடுப்பாகக் காட்சி அளித்தது. மணவரைச் சடங்கை அழகியைச் செய்யச் சொல்லி, ஆச்சி ஒருத்தி உதவினூர்கள். அழகி விளையாட்டாகச் சிரித்துக்கொண்டே செய்த சடங்கு ஒன்றுதான் மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தது. சடங்குகளுக்கு என்று சட்டி, பெட்டி, வாளி, பழம், பாக்குக்குப்பணம் என்று பெண் வீட்டார் கொடுத்த போதெல்லாம் போதாது, போதாது என்ற போராட்டமே லெட்சுமி ஆச்சியிடம் தொடங்கியது. எவரையும் பொறுமை இழக்கச்செய்யும் அளவுக்குப் போர்க் கொடி உயர்த்திக் கொண்டே இருந்தார்கள். இன்று அரசியலில் எதிர்க் கட்சிகள் நடந்து கொள்வது போல இருந்தது அது. ஆளுங்கட்சி என்ன செய்தாலும் எதிர்க்கப் பிறந்ததுதான் எதிர்க்கட்சி என்று நினைக்கிறூர்களே, அதுபோல.

பணமெழுதின பிற்பாடு 'வேவு' எடுத்தினார்கள். பெண்வீட்டார் 5 கடகம் அரிசி முதல், ஏதேதோ வைத்து மேளதாளத்துடன் கொண்டுவந்தார்கள். ஆட்டுக்கடாமுதல் அனைத்தும், வரிசை வரிசையாகக் கொண்டுவரப்பட்டன. ரூ 101/- வைத்துக் கொடுத்தார்கள். லெட்சுமி ஆச்சி பணம் போதாது, அரிசியும் நல்லதாயில்லை, எதுவும் போதாது என்று எல்லோரும் வெட்கப்படுமளவு சண்டை பிடித்தார்கள். ஆச்சிமார் சிலர் கூடவே சேர்ந்து, இந்தக் கொடுமைக்குத் தாளம் போட்டார்கள். "காலையிலே சாப்பிடும்போது கடைசிப் பந்திக்கு வடை தீர்ந்து போச்சு; மத்தியானம் போட்ட அரிசி மொச்சைக் கொட்டை மாதிரி இருந்திச்சு" என்பது ஓர் ஆச்சியின் குற்றச்சாட்டு. இவ்வளவு பெரிய விருந்தில், கணக்காகப் பலகாரம் போடமுடியுமா? இந்த ஆச்சியை யார் கடைசிப் பந்திக்கு வரச்சொன்னார்கள்? அதுவும் அவர்கள் சொன்ன மாதிரி வடையே இல்லாமல் போய் விடவில்லை. இரண்டு வடை அவர்களுக்கு வைக்கப்பட்டது. அதற்குப் பிறகும் அவர்கள் எதிர்பார்த்தபோது, தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. இதை முற்றிலும் அறிந்த வேலைக்காரி ஒருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். ஆனால் அவள் ஆச்சியை எதிர்த்துப் பேசுவது நியாயமாகாது என்று பேசாமல் இருந்துவிட்டாள். ஆச்சிமார்கள் சாப்பாட்டில் என்னென்ன குறையென்று ஒரு பட்டியல் போட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். லெட்சுமி ஆச்சி தங்களுக்குப் பெண்வீட்டார் தந்த முறைகளில் என்னென்ன குறை என்பதை ஒப்பித்துக் கொண்டிருந்தார்கள். பெண்வீட்டார் ஏழை என்பதால் அவர்கள் சார்பாக யாருமே பேசவில்லை. செட்டியார் குலத்திலேயே 'வாழ்ந்தார்க்கு

மாரடிக்கும்' பழக்கம்தான் மிகுதியாக உண்டு என்று அழகப்பன் தன் மனத்திற்குள் சிந்தித்துச் சங்கடப் பட்டான். அங்கு நடப்பதையெல்லாம் அவனுல் கவனிக்க முடிந்தது. சில சமயங்களில் கடுங்கோப மாக வந்தாலும், அவன் தன் வரம்பை மீற விரும்ப வில்லை. 'விருந்துக்கு வருகிற ஆச்சிமார்கள் கூடு-மானவரை குடும்ப ஒற்றுமைக்கு உதவாமல் இப்படி வேட்டுவைத்துவிட்டுப் போகிருர்களே! இதுதான் இந்தச் சமூகத்தின் நாகரிகமா?' என்று அவன் மனம் வருந்தியது. 'ஏழை பணக்காரர் என்ற வர்க்கபேதம் அதிகமாக இல்லாதவரை இச்சமூகம் நன்ருகவே வளர்ச்சி பெற்றது. எப்போது இவ்வேறுபாடு இங்கு தலைதூக்கியதோ, அன்றிலிருந்தே இச்சமூகமும் தாழ்ந்துபோகத் தொடங்கிவிட்டது' என அவன் நினைத்துக்கொண்டான். 'ஒரு சமூகத்தில் பணக் காரர்களே வாழமுடியுமென்ருல் ஏழை எளியவர்-களே பெரும்பான்மையாக இருக்கும் அச்சமூகம் நசிக்காமல் என்ன செய்யும்?' என அவன் மனம் மேலும் வாதித்தது.

○ ○ ○

அன்று இரவே 'பெண்ணழைத்துக்' கொண்டு வலையபட்டிக்கு எல்லோரும் புறப்பட்டார்கள். சௌந்தரவல்லி தன் கணவனுடன் இல்லறம் ஏற்க வலது காலை எடுத்து வைத்துத் தன் வீட்டினுள் புகுந்தாள். எப்போதும் குனிந்த தலையுடனும், அடக்கத்துடனும் இருந்த அப்பெண்ணுக்குத் தன் மாமியின் கொடுமைகள் முழுதும் தெரியவில்லை. திருமணத்தின்போது தன் தாயும் தந்தையும் அடிக்-கடி கண்ணீர் மல்கியதை அவள் காணவில்லை. இருந்தாலும் மாமியின் சிடுசிடுப்பும் கடுஞ்சொற்-களும் அவள் செவிகளில் அவ்வப்போது எதி-

ரொலிக்கவே செய்தன. பொறுமையின் சின்னமான அவள் எல்லாவற்றையும் புன்னகையோடு தாங்கிக் கொண்டாள். இன்னும் அவள் எவ்வளவு கொடுமையாக நடத்தப்படப்போகிருள் என்பதற்கு அம்முதல் நாளே ஒரு தொடக்க விழாவாக அமைந்தது போல் இருந்தது. முதல்நாள் இரவு, நள்ளிரவாகி விட்டது, பெண்ணழைத்துக் கொண்டு, அவர்கள் வீடுபோய்ச் சேருவதற்கு. அதற்குப் பிறகு மேல்மாடி அறையில் தற்செயலாகச் சௌந்தரத்தை அழகப்பன் சந்தித்தான் அவள் முகத்தை உயர்த்தி அழகு பார்த்தான். இவர்கள் இருவரும் எங்கிருக்கிருர்கள் என்பதையே துருவித் துருவி ஆராய்பவள்போல அங்கு வந்த லெட்சுமி ஆச்சி, ஆல்வீட்டுக் கதவை அதிரும்படி சாத்திஞர்கள். திடுக்கிட்டு நின்ற சௌந்தரத்தை இரண்டு திட்டுத் திட்டிப் 'போடி இரண்டாங்கட்டுக்கு' என்று விரட்டி விட்டார்கள். அன்றில் பறவைகளைப் பிரிக்கவந்த, இடியோசை போல அவர்கள் குரல் கர்ச்சித்தது!

அன்று இரவு முழுவதும் சௌந்தரத்துக்கு அழுகை அழுகையாக வந்தது. காலையில் அவள் வீட்டுப் புழக்கடைப்பக்கம் தனியே ஒதுங்கி நின்ருள். மணப்பெண்ணுக இருக்கும்போது ஏற்படும் களை முழுவதும், அவள் முகத்தில் அப்படியே ததும்பியது. இருந்தாலும் வாடிய மாந்தளிர் போல அவள் சோம்பி, ஒதுங்கி நின்ருள். தூரத்திலிருந்து இதைக் கவனித்த அழகப்பனுக்குத் தன் மனைவி 'வீட்டுக்கு வரப்படாது போலும்', என்று முடிவு செய்ய நெடுநேரமாகவில்லை.

கீழ்வீட்டு ஆலில் பெண்ணுக்கு வைத்துக் கொடுக்கிற சாமான்கள் வரிசையாகப் பரப்பப் பட்டிருந்தன. எல்லோரும் அதைப் போய்ப் பார்த்-

தார்கள். அழகழகான புடவைகள், துணிகள், கைக் குட்டைகள், சீவிக்கிற பெட்டி, அழகுப்பொருள்கள் அனைத்தும் அன்போடு குழைத்துக் கொடுக்கப்படுபவையாகத் தோன்ருமல், 'எங்களிடம் உள்ள செல்வம் எவ்வளவு தெரியுமா?'என்று பகட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டன போலக் காட்சியளித்தன. மாமியார் மருமகளுக்குக் கொடுக்கிற வரிசைப் பொருள்கள் அவை. 'பரிவினில் தழுவியவை என்ருல் பவித்திரம்' என்ருன் கம்பன். அன்போடு குழைத்துச் சிலவற்றைத் தந்தாலும் அது பெருமகிழ்ச்சியைத் தரும். அன்பே இல்லாமல், இப்படி அடுக்கி வைப்பதால், பெருமையை வெளிப்படுத்தும் விளம்பரப் புத்தி தெரிகிறதே தவிர, அன்பா அதில் விளங்குகிறது? லெட்சுமி ஆச்சியின் பரிசுகளும் உள்ளீடின்றிச் சிரித்துக் கொண்டிருந்தன.

## 7

அன்பில்லாமல் விருந்து வைப்பது, பாசமில்லாமல் வாழ்த்துவது, பற்றில்லாமல் பகட்டுவது முறையாகுமா? லெட்சுமி ஆச்சிக்கு இதையெல்லாம் சிந்திக்க நேரமில்லை. பெண்ணை முதல்நாள் இரவே மாப்பிள்ளையோடு பேசவொட்டாமல் விரட்டியடித்தார்கள். சௌந்தரவல்லி தூரத்தே, புதரில் மலர்கள் பூத்துக் குலுங்குவதுபோல் சிரிப்பதை, அழகப்பனின் கடைக்கண்கள் கவனிக்கின்றன என்று தெரிந்துவிட்டால் போதும், கும்பி எரிந்தார்கள். வேறுயாரையேனும் கடிந்து, கத்தி அந்தச் சாக்கில் எல்லோர்மீதும் எரிந்து விழுந்தார்கள். எந்தச் சமூகத்திலும் ஒரு தாய் புதிதாக மணம் செய்துகொண்ட தன் மகனும் மருமகளும் கூடிக்

குலவிப் பாடி மகிழவேண்டும் என்றே ஆசைப் படுவாள். பொய்யாகிக் கனவாகிப் போய் ஒழியும் பணத்தையே பெரிதாக நம்பிக்கிடக்கும் இந்த நகரத்தார் சமூகத்தில் பிறந்த லெட்சுமி ஆச்சிக்குத் தன் மகன் கடைக்கண்ணால் தன் மனைவியைப் பார்ப்பதுகூட நஞ்சாயிருந்தது.

அவர்கள் மனம்போல மறுநாளே சௌந்தர வல்லி 'வீட்டுக்கு வரப்படாது' என்ற நிலையை அடைந்தாள். அதையே ஒரு காரணமாக வைத்து, அவளைப் புழக்கடைப்பக்கம் ஓடஓட விரட்டி-னார்கள். தன் கணவன் எதிரில் அந்த இளம் மயில் நடனமிடுவதுபோல் நடை பயில்வதை அந்த மாமியார் மனம் ஏனோ ஒப்ப மறுத்தது. 'டாக்ட ருக்குப் படிச்ச பெண்ணுககூட வீட்டுக்கு வரப் படாதுன்னு ஒதுங்கி விடுதுக. மொட்டைக்கழுதை, உள்வீட்டுக்கே வருது!இந்தவீடேதீட்டாப்போச்சு,' என்று லெட்சுமி ஆச்சி வருத்தப்பட்டார்கள். அடிக்-கடி அவர்கள் வாயில் 'மொட்டைக்கழுதை' என்ற வாசகம் மந்திரம்போல் ஒலித்தது. சௌந்தரம் பிறந்தவீட்டில் ஒன்றுமில்லை; அவர்கள் ஏழைகள் என்பதைக் குத்திக்காட்டவே இந்த வாசகம் அவர்-கள் வாயில் நடமாடியது. இப்படிக் குத்திக் குத்திக் காட்டுவதில் அவர்கள் குத்தூசியை விடக் கூர்மை யானவர்கள்; கொடுமையானவர்கள்! வானம்பாடி-கள் போல் தம் மக்கள் பறந்துதிரிந்து பாடிப்பரவச-மாக வேண்டுமென்று உலகம் ஆசைப்படும்.இந்த ஆச்சி மனமோ அவற்றின் இறக்கைகளை ஒடித்தும், நூலாற்கட்டியும் தரையில் இழுத்துப் போட்டுத் துடிதுடிக்க வைக்க வேண்டும் என்றே ஆசைப் பட்டது. பணப்பேய் பிடித்த செட்டிநாட்டுத் தாய்மனம் இது! தன் குஞ்சையே கொத்திவிரட்டும் கோழியைவிட இது கொடுமையாய் இல்லையா?

சௌந்தரவல்லியை இவ்வாறு வெளியே விரட்டி விட்டுப் பெண்ணுக்குக் கொடுக்கிற சாமான்களைப் பார்க்க அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்களுக் கெல்லாம் அழகியை விட்டுச் சொல்லச் செய்தார்கள், ஆச்சி. மற்றசமூகங்களில் ஒரு பெண்ணுக்குச் சீர்தனமாகக் கூட இவ்வளவு சாமான்கள் வைப்பார்களா என்பது சந்தேகமே. குளிக்கிற வாளி எவர்சில்வர்! சாப்பிடுகிற தட்டும் கிண்ணியும் வெள்ளியில்! லோட்டா வெள்ளியில்! சோப்பு, சீப்பு, கண்ணுடி வகையரு எல்லாம் மிகமிக உயர்ந்தவை! சேலைகள் ஏழு. அவை எல்லாமே பட்டுச்சேலைகள்! ரவுக்கைத் துணிகள் பதினொன்று! ரப்பர் வாளி, ஊத்திக்குளிக்கிற கப், துண்டு எல்லாம் அங்கே இருந்தன. எல்லாவற்றையும் தம் மருமகள் சௌந்தரம் மீதுகொண்ட கருணையினுலா அவர்கள் கொடுக்கிருர்கள்? அல்ல! அல்ல! அவளைத் தான் இரண்டாம் கட்டுக்கு அந்தப்புரத்திலேயே கிடக்கும்படி விரட்டிவிட்டார்களே. வந்து பார்க்கிறவர்கள் தங்களைக் கண்டு வியப்படைய வேண்டும்; பெரிதாகப் பேசவேண்டும் என்பதுதான் அவர்களுடைய ஆசை. கண்ணுக்குத் தீட்டுகிற மை முதல், காலுக்குத் தடவக்கூடிய செம்பஞ்சுக் குழம்புவரை எல்லாம் இருந்தன அங்கே! அவற்றுள் சில, அழகப்பன் தன் மனைவிக்கெனத் தேர்ந்தெடுத்தவை. இருந்தாலும் அவை லெட்சுமி ஆச்சியின் 'உம்'மென்ற முகம் போலவே பற்றின்றிப் பாசமின்றிப் பரப்பிய தட்டுமுட்டுச் சாமான்களாய்க் காட்சி தந்தன!

○ ○ ○

வீட்டுக்கு வீடு ஆளனுப்பிக் கூட்டி வந்து காட்டிய லெட்சுமி ஆச்சி, அவை யாருக்காக-

வென்று கொடுக்கப்படுகின்றனவோ 'அவள்' பார்க்கவேண்டுமென்று ஒருகணம் கூடச் சிந்திக்க வில்லை சௌந்தரம் இவற்றையெல்லாம் போட்டு அணிந்துகொண்டு வந்தால் சௌந்தரிய தேவதை போல இருப்பாள் என்று அழகப்பன் உள்ளூற மனம் மகிழ்ந்தான். ஆனாலும் தன் தாய் கடுகடு வென்று பேசி, சிடுசிடுவென்று விழுவதைப் பார்த்த அவனுக்குத் தன் வாழ்க்கையே பாலைவனம்போல் மாறித் தன்முன் விரிந்து பரந்து கிடப்பதாகப் பட்டது.

ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும் சௌந்தரம் சீரோடு வளர்க்கப்பட்டாள். அவள்தான் அந்த வீட்டிற்கே செல்லப்பிள்ளை. நாகப்ப செட்டியார்க்கு ஆண்குழந்தை இல்லாத குறையைத் தீர்க்கப் பிறந்தவள்போல் அவள் வளர்ந்தாள். அழகாலும் அறிவாலும் பொலிவாலும் முக மலர்ச்சியாலும் அனைவரையும் ஈர்க்கும் சக்தி அவளிடமிருந்தது. அவ்வளவு பெரிய ஈர்ப்பாற்றலும் லெட்சுமி ஆச்சி என்ற 'கிரகத்தை' அசைக்கமுடியவில்லை. மாமியார் வீட்டில் அவள் துணையற்றவள்போல் உணர்ந்-தாள். வேலைக்காரிகூட அவளுக்கு உதவிசெய்ய அஞ்சினாள். எங்கே பெரிய ஆச்சி பார்த்து விடு வார்களோ என்று அவள் தயங்கினாள். அழகி ஒருத்திதான் யாரையும் சட்டைபண்ணாமல் அண்ணமுண்டிக்கு ஓடியாடி உதவினாள். இதைக் கவனித்த லெட்சுமிஆச்சி அழகியைக் "கழுதை", 'குரங்கு', 'சனியன்' என்று தொடர்ந்து அருச்சனை செய்தபடி இருந்தார்கள். அது அந்தச் 'சனியனுக் குப்' புரிந்தால்தானே? தான் தன் அண்ணன் மனைவிக்குச் செய்கிற உபசரணைகள் போதாதென்று தான், ஆத்தாள் கோபித்துக் கொள்கிறாளோ

என்று எண்ணிய அழகி, மேலும் மேலும் தன் அண்ணிக்கு உதவி செய்து கொண்டே இருந்தாள்।

○ ○ ○

தலையில் எண்ணெ வைத்துக்கொண்டு குளிக்கப் போன சௌந்தரம் அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த வெந்நீரை இறக்கப் போனாள். நன்றாகக் கொதித்துப் போயிருந்ததால், தவலை நழுவிச் சிறிது வெந்நீர் கையில் கொட்டி, இடது கை விரல்கள் வெந்து போனதுபோல் ஆகிவிட்டன. 'ஆத்தா' என்று தவலையைக் கீழே வைத்துவிட்டு, தவியாய்த் தவித்த சௌந்தரம் பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். வேறு ஒரு பெண்ணாக இருந்தால் வீடே அதிர்ந்திருக்கும். 'என்னமோ ஆகிவிட்டதென்று' ஓடி வந்த அழகி கையைப் பிசைந்து கொண்டிருக்கும் அண்ணியின் கையை உற்றுப் பார்த்தாள். சிறு சிறு கொப்புளங்கள் தெரிந்தன...'அடி ஆத்தி' என்று கத்தியபடி ஓடிப் போய்த் தன் பேனாவை எடுத்து வந்து, அதிலிருந்த மை முழுவதையும் அண்ணியின் விரல்களில் ஊற்றித் தடவினாள். சிறிது நேரத்தில், இச் செய்தி எங்கும் பரவிவிட்டது. மை ஊற்றியது போதாதென்று சிலரும், வாழை மட்டையைச் சாறு பிழிந்து ஊற்றியிருக்க வேண்டும் என்று சிலரும் கூறினார்கள். 'பர்னால்' தடவியிருக்க வேண்டும் என்று டாக்டர் அழகப்பன் உள்ளம் துடித்தது. ஆனால் லெட்சுமி ஆச்சி ''சனியன்! விடிஞ்சதும் விடியாததுமா முதல் நாளே வீட்டுக்கு வரப்படாது ...இந்த இழவு வேறையா? அந்தக் கழுதை அழகிக்கு என்ன தெரியுது? வெளியே கிடக்கிறவுகளைத் தொடலாமா? தொட்டுப்பிட்டுக் கழுதை நடுவீடு வரைக்கும் போகுது. இவ்வளவு காலமா

நாம கட்டுதிட்டமா இருந்ததனுலே சாமி குறை எதுவும் வராமே வீடு நல்லா இருந்தது. இனி இந்த மொட்டைக் கழுதைகள் என்ன ஆட்டம் ஆடப் போகுதோ?'' என்று கர்ச்சித்ததனுல், எல்லோருமே சௌந்தரம் அருகே போகக் கூட அஞ்சினுர்கள். அவள் கணவனே கண்களில் நீர் துளிக்கப் பிறர் காணுத வகையில் இந்த அவலக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்!

அன்று பத்து மணி அளவில் நாகப்பசெட்டியார் வண்டி ஓட்டிக் கொண்டு 'மகள் வீட்டை' நீர்ச் சோறு இட அழைத்துப் போக அங்கே வந்திருந்தார். லெட்சுமி ஆச்சி தன் கூடப் பிறந்த தமையனுரை, யாரோ வேலைக்காரனைப் பார்ப்பது போல் நோக்கி, தலையை மேலும் கீழுமாக அசைத்து வரவேற்ற விதத்தை அழகப்பன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனும் அவன் தந்தையும் நன்கு வர வேற்ருர்கள். பணமிருந்தால்தான் செட்டிய வீட்டில் பற்கள் தெரியச் சிரித்து 'வாங்க, வாங்க' என்று வரவேற்கிருர்கள். பணம் இல்லாதவர்களை மற்ற இனத்திலும்கூட மதிப்பதில்லைதான். ஆனுல் உடன்பிறப்பு, பாசம், வாஞ்சை என்பதெல்லாம் செல்வமிருந்தால்தான் செட்டிய வீட்டில் பேசப் படும். பணமில்லையென்ருல் கேவலப்படுத்தவும் தயங்கமாட்டார்கள். ஒரே இனம்தானே, உறவு தானே என்ற எண்ணம் யாருக்கும் வருவதே இல்லை. பாசமெல்லாம் பணத்திற்குப் பிறகுதான். அழகப்பன் உள்ளம் தன் சமூகத்தை நினைத்துக் கூம்பிக் குறுகியது.

''அப்பா! நீ மதுரைக்குப் போகணும்...சாப் பிட்ட உடனே திரும்பி வந்துவிடு!'' என்று

மகனுக்கு லெட்சுமி ஆச்சி ஆணையிட்டனுப்பினார்கள். நாகப்ப செட்டியார் 'நாளைக்கு வரட்டுமே. ரெண்டுபேரையும் கூட்டியாந்து விடுகிறோம்', என்றார். லெட்சுமி ஆச்சி, 'அதுக்கு அவள் வீட்டுக்கு வரப்படாது. முழுகவிட்டு வருவாள். அவன் இன்னைக்கே வந்திரட்டும். நாளைக்கு மதுரைக்குப் போயித்து, பிறகு ஒரு நாள் வருவான்,' என்று கடுமையானகுரலில் பேசினார்கள். அதை எதிர்த்துப் பேசுவதற்கு அந்த வீட்டில் யாருமே இல்லை. கும. அவர்கள் தினமணி பேப்பரில் தலையைப் புதைத்துக் கொண்டு, செய்தி படித்துக்கொண்டிருந்தார்கள். இந்தமாதிரிச் சமயங்களில் அவர்களுக்குச் செய்திப் பத்திரிகைகள்தான் உதவுவது வழக்கம்!

வேகுப்பட்டியில் மாப்பிள்ளையையும் மகளையும் அழைத்துக் கொண்டு போய், வண்டியை விட்டு இறங்கியபோது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்கள். ஏகம்மை ஆச்சி மகளையும் மாப்பிள்ளையையும் பார்த்துப் பூரித்துப் போனார்கள். தங்கை வள்ளி ஓடோடி வந்து வரவேற்றாள். சௌந்தரத்திற்கு— மாமியார் இவ்வளவு கடுமையாக நடந்துகொண்டிருந்தும் — திருமணக் களை முகத்தில் படிந்திருந்தது! உரமூட்டிய பயிர், தலைநீட்டிச் சிலிர்த்து எழுவது போல், ஒரு மகிழ்ச்சி உந்துதலே ஒரு தனிப் பொலிவைத் தந்து விடுகிறது. புடம் போட்ட தங்கம் போல் சௌந்தரவல்லி திருமணத்திற்குப் பிறகு மேலும் அழகாகக் காட்சி தந்தாள். 'திரு' எனப்படும் அந்த அழகு,அந்த எழில் உன்னதமாக விளங்கியது. அவள் அடி எடுத்துவைப்பதே, மலர்களின் மீது அரசி ஒருத்தி நடை பயின்று வருவது போல இருந்தது. மாப்பிள்ளை டாக்ட-

ருக்குப் படித்தவர், சோடிப் பொருத்தமானவர், பெருந்தன்மை மிக்கவர் என்பன எல்லாம் அக் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு புதுத் தெம்பைத் தந்தன. ஒரே பையன், பத்து லட்சத்திற்குக் குறை யாத பணம், சொத்துசுகம்...எல்லாம் மனத்திற்குள் ஒரு கிளுகிளுப்பை மூட்டவே செய்தன. 'இரண் டாம் தாரமாகவாவது ஓர் இடம் கிடைக்குமா?' என்று குழையும் போது, இப்படிப்பட்ட மாப்பிள்ளை கிடைத்தால் மனம் மகிழாதா?

அன்று சௌந்தரத்திற்கும் மாப்பிள்ளைக்கும் 'இராஜோபசாரம்' என்பார்களே, அந்த அளவு உபசாரம் நடந்தது. அந்தக் கிறுகிறுப்பில், மறு நாள் போகலாம் என்று அழகப்பன் அங்கேயே தங்கிவிட்டான், தாயின் ஆணையையும் மறந்து.

வேகுப்பட்டி நகரத்தார்கள் 'என்ன இருந் தாலும் நாகப்பன் இப்படி எல்லாத்தையும் வித்து, ஒரு கலியாணத்திலேயே செலவழிச்சிருக்கக் கூடாது. இவனுக்கோ வயசாச்சு. பாக்கி மூணு புள்ளைக கதி என்ன? விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பாக. மனுசன் யோசனை பண்ணி நடக்க வேண்டாமா?' என்று பேசிக்கொண்டார்கள். 'என்னமோ, டாக்டர் மாப்பிள்ளையா எடுத்துப் பிட்டமுன்னு ஏகம்மைக்குக் கொள்ளலே. அங்கே லெட்சுமி புடுங்கிற புடுங்கு கொஞ்ச நஞ்சம் இல்லே யாம். எல்லாத்தையும் இவள் கொட்டிக் கொட்டிக் கொடுத்தாலும், அவள் பத்தலேன்னு அடிக்கிறாளாம். டாக்டருக்குப் படிச்சிருந்தா என்ன? மாப்பிள்ளை இவுகளுக்கா சம்பாரிச்சுப் போடப் போறான்?' என்று ஆச்சிமார் உலகத்தில் பேச்சு அடிபட்டுக் கொண்டிருந்தது.

அன்று பிற்பகல் தனிமையில் மாலை மங்கிய நேரத்தில் தன் தாய் வீட்டுப் பின் புறத்தில், வேப்ப மரத்தடியில் சௌந்தரம் உட்கார்ந்து, தன் தங்கை வள்ளியுடன் தாயம் விளையாடிக் கொண்டிருந்தாள். 'நானும் வரலாமா?' என்று கேட்டுக் கொண்டே அங்கு அழகப்பன் வந்து நின்றான்.

## 8

வேப்பமர நிழலில், அந்தப் பிற்பகல் நேரத்து வெம்மை சிறிது தணிந்திருந்தது. மேலும் சௌந்தரவல்லி அங்கு தாயம் விளையாடிக்கொண்டு அமர்ந்திருந்த திருக்கோலம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. உள்ளம் மகிழ்வதனால் உடலில் ஒரு பூரிப்பு ஏற்படுகிறதே, அதற்குத்தான் 'பொலிவு' என்று பெயர். எவ்வளவுதான் உணவுவகைகளைச் சாப்பிட்டாலும் இந்த உவகையினால்வரும் உள்ளக் களிப்பை, அவை முகத்திலோ, உடலிலோ பிரதிபலிக்க முடிவதில்லை. சௌந்தரத்தைப் போன வாரம் பார்த்ததற்கு, இப்பொழுதொரு மாற்றம் இருந்தது. இந்த அழகு, பொலிவு, எழில் எப்போதும் அவளிடம் நிலைபெற்றிருக்கவேண்டுமே என்று அழகப்பன் மனத்திற்குள் ஆசைப்பட்டான். விலை மதிப்பற்ற பொருளைப் பெற்ற ஒருவன் அது கைதவறி விடக்கூடாதே என்று நினைப்பது போலிருந்தது அத் தவிப்பு.

அவள் தரையில் உட்கார்ந்திருந்த அழகு, ஒரு மயில் தோகையை விரித்துக் கிடப்பதுபோல் இருந்தது. சற்றே அருகில் அமர்ந்து, வள்ளிக்கு ஆட்டம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினான் அவன். சற்று நேரத்தில் அவனே வாங்கி ஆடவும் தொடங்கினான். ஆனாலும் பயன் என்ன? சௌந்-

தரம் வெற்றி பெற்றுவிட்டாள். அப்பா! தன் கணவனை வென்றுவிட்ட மகிழ்ச்சியில் அவள் துள்ளிக் குதித்த அழகு! ஆடின ஆட்டம்! எத்தனை முறை வேண்டுமானாலும் தோற்கலாம் போல இருந்தது அழகப்பனுக்கு! இருந்தாலும் அவன் வெளியில் விட்டுக் கொடுக்காமல் "சேச்சே, வள்ளி சின்னப்பிள்ளைனு ஏமாத்திப்பிட்டே!" என்றான். அதை மறுதலித்த அவள் 'நல்லாருக்கே, நீங்க வந்துதான் முக்கால்வாசி ஆட்டம் சொல்லிக் கொடுத்தீகளே. இன்னும் சொல்லப்போனா நீங்க ரெண்டு பேரு. நான் ஒருத்தி...ம்ம்......" என்று சாடினாள். வள்ளி தன் தாய் குரல் கேட்டு உள்ளே ஓடினாள்.

"சௌந்தரம்! நான் ஊருக்குப் புறப்பட நேர மாகிட்டுது. ரெண்டு பேரா வந்தோம். நான் தனி யாகத் திரும்பிப் போறேன். எனக்கு உன்னை இங்கே விட்டுட்டுப் போறதிலே மனசே இல்லை. ஏன்? நீ வீட்டுக்கு வரப்படாதுன்னா என்ன? அதுக்காக உன்னை எதுக்கு ஆத்தாவீட்டிலே விடணும்? ஒரு வேளை பொறந்த ஊரு ரொம்ப தூரமா இருந்தா என்ன செய்வாக? எனக்கென்னமோ, இதெல்லாம் புடிக்கலை!"

"அதுக்கு என்ன செய்யறது... நான் வரமாட் டேங்கிறேனா...?"

"நீ இல்லை சௌந்தரம், இந்தச் சாதியைச் சொல் றேன்... சமூகத்தைச் சொல்றேன்... ஒருத்தரையும் வாழவிடமாட்டாங்க போல இருக்கே"

"அப்படிச் சொல்லாதீங்க! நீங்க மதுரை போனதும் கடுதாசி போடுங்க! என்ன? ஒருவாரம் போனதும், நான் வலையபட்டி போயிட்டு, அவுகளை

வண்டி ஏத்திவிடச் சொல்லி அங்கே வந்துட றேன்!''

''அங்கே வந்துடுவே...வந்து தனியா என்ன செய்வே? மதுரை தெரியுமா? இடம் தெரியுமா?''

''ஓ! சின்னப்புள்ளையிலே மதுரைக்கு வந்திருக் கேனே......தெரியும்...... இப்போக் கலியாணத்துக்-குச் சாமான் வாங்க வந்து, நகரவிடுதியிலே ஒரு வாரம் தங்கலியா? நல்லாத் தெரியுமே!''

''சரிதான்! நகர விடுதியும் மீனாட்சியம்மன் கோவிலும் தெப்பக்குளமும் தெரிஞ்சாப் போதுமா? நீ பாட்டுக்கு வந்து நிக்காதே! நான் வந்து காரடி யிலே உனக்காகக் காத்துக்கிட்டு நிக்கிறேன்... சரி, வாடகைக்கு வீடெல்லாம் பார்த்திடட்டுமா? இல்லை ராணி வந்துதான் பார்த்து முடிவு செய்யணுமா?''

'' ராஜாவே பார்த்து முடிவுசெய்யலாம்!''

'' இது...''

'' ராணியின் உத்தரவு!''

இருவரும் கலகலவென்று சிரித்தார்கள்.

'' நீ ரொம்பத் துளிர்த்திட்டே...''

'' நீங்க என்னைக் கட்டிக்கிட்டதுதான் காரணம்.''

இந்தச் சமயம் பார்த்து வள்ளி ஓடிவந்தாள். ''என்ன ஆச்சி சிரிக்கிறீக! என்ன சிரிப்பு?'' என்று அவள் துருவித்துருவிக் கேட்டாள். ''ஒண்ணுமில் லையடி...ஒங்க அத்தான் மதுரையிலே வீடு பார்க் கப் போறாகளாம்...'' என்றாள் சௌந்தரம்.

''ஆச்சி! ஆச்சி! என்னையும் கூட்டிக்கிணு போங்க ஆச்சி! எனக்கும் மதுரை வரணும்னு ஆசையாயிருக்கு!''

''போடி, போ! என்னையே அவுக கூட்டிப் போருகளோ இல்லையோ...?''

இந்தச் சமயம் அழகப்பன் கடுமையாகக் கடைக்கண்ணுல் பார்க்கவே, சௌந்தரம் பேச்சை நிறுத்திக்கொண்டாள். பலகாரம் சாப்பிட நேரமாகிறது என்றும், வண்டி வந்து நிற்கிறது என்றும் மீண்டும் யாரோ சத்தம் போட்டதால், அழகப்பன் பரிவோடும், பாசத்தோடும் மனைவியைப் பார்த்துச் செல்லமாகக் கோபித்துக்கொண்டு, ''சிறுபிள்ளை கேட்டால்,உன்னையுந்தான் கூட்டிப்போரேமுன்னு சொல்லேன். எதுக்கு அபசகுனமாப் பேசறே'' என்று கடிந்தான். அவளைப் பிரிவதல்ல கடினம்! பிரிவதாக நினைப்பதே கடினமாக இருந்தது அழகப்பனுக்கு!

வண்டி புறப்பட்டபோது, தோட்டத்து வாசல் பக்கம் இரண்டு கண்கள் கலங்கிச் சுழல்வதை அவன் கவனிக்க முடிந்தது. ஒரு வாரம் கழித்துத் தான் சௌந்தரம் வலையபட்டிக்கே வரக்கூடும் என்று அவன் எண்ணியபோது, காலம் நகராமல் யுகக்கணக்கில் அப்படியே தன் எதிரே நிற்பதுபோல அவனுக்குத் தோன்றியது. வண்டி விரைந்து ஓடிக்கொண்டிருந்தது.

○ ○ ○

மதுரைக்கு அழகப்பன் வந்து ஒரு மாதம் ஆகப் போகிறது. மனைவியை அழைத்துக்கொண்டு போய் வலையபட்டியில் விட்டுவிட்டுத் தன் மாமனுர் திரும்ப முயன்ருர் என்றும், லெட்சுமி ஆச்சி, அவரைப் பல வழிகளில் பழித்துப் பேசிச் சௌந்தரத்தையும் மறுநாள் வேகுப்பட்டிக்கே திருப்பி அனுப்பிவிட்டார்

என்றும் அவன் கேள்விப்பட்டான். உடனே வேகுப்பட்டி போய் உண்மை அறிய அவன் உள்ளம் துடித்தது. இருந்தாலும் தாயிட்ட கோட்-டைத் தாண்டவும் முடியாமல் அவன் தவித்தான்.

இரண்டொரு நாளில் அவனுக்கு அவனுடைய தாயிடமிருந்து கடிதம் வந்தது. அக் கடிதத்தில் யாரோ மூன்ருமவர் எழுதியிருந்தது போல் அத் தாய் சுற்றி வளைத்து எழுதியிருந்தாள். சௌந்தரம் வீட்டார் சற்றும் மரியாதை இன்றிக் கௌரவக் குறைவாக நடந்து கொண்டதாகவும், பெற்ற தாய்க்கு நேர்ந்தது பிள்ளைக்கு நேர்ந்ததுபோல் தான் என்றும் இதற்கு ஒரு முடிவேற்படுகிறவரை அவர்கள் வீட்டிற்குப் போவதில்லை என்றும் அவனையும் அழைத்து வருவதில்லை என்றும் அக் கடிதத்தில் சபதமிடப்பட்டிருந்தது. கடிதத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தான் அழகப்பன். கண்ணீரால் கடிதத்தில் தீட்டிய மை கலந்தது. கடிதம் எழுதிய தாயின் மனத்தை அந்தக் கண்ணீராலும் கலக்க முடியாதே என்று அவன்மனம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது!

ஊரிலிருந்து வந்தவர்களிடமிருந்து விசாரித்த தில் பெரியாச்சிதான் வலிய வம்புக்கு இழுத்த தாகத் தெரிய வந்தது. தங்க நகைகள் சொன்ன படி பவுன் போடவில்லை என்று யாரோ பற்ற வைத்திருக்கிருர்கள். இரண்டொரு பவுன் குறை கிறதென்று சொல்ல, சந்தேகம் வலுத்து, அது சச்சரவில் முடிந்திருக்கிறது. நாகப்ப செட்டியார் ஒரு சொற்காரர். எனவே 'வேண்டுமானுல் நிறுத்துப்பார்த்துக் கொள்ளுங்கள்' என்று அவர் நேர்மையாகக் கூறியிருக்கிருர். உடனே பெரியாச்சி நிறுத்துப் பார்த்து, சேதாரமாகக் குறைந்த ஒரு

பவுனும் சில கிராம்களும் பெருங்குறையென்று எடுத்துப்பேசி, பெண்ணைத் தாய்வீட்டுக்கு விரட்டி விட்டிருக்கிறார்கள். ஊரே இதை அநியாயம் என்று பேசினாலும் ஆச்சியை அதட்டிக் கேட்க ஊரில் நாதியில்லை. கும. அவர்கள் இதையெல்லாம் மறப்பதற்காக, இப்போது அதிகமாகச் செய்தித்தாள் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வேறு என்ன செய்வார் பாவம்?

அழகப்பன் இதையெல்லாம் கேள்விப்பட்டு மிகவும் மனம் உருகினான். சௌந்தரத்திற்கு ஒரு வாரத்தில் மதுரை போகலாம் என்றிருந்த கனவு சிதைந்தது; கண்ணீரும் கம்பலையுமாகத் தாய்வீட்டில் ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாள். லெட்சுமி ஆச்சியின் மனம் எப்போதும் தனிப்பட்ட குரோதத்தையே எண்ணிஎண்ணிக் கறுவிக்கொண்டிருந்தது. தனக்கு வேண்டாததை வேரறுக்கும் அந்த மனப்பான்மை ஒரு பேய்போல அந்த ஆச்சி மனத்தில் குடிகொண்டு ஆட்டிப் படைத்தது. போதாதற்கு அவர்கள் பணத்தின் மீது கொண்ட பேராசையும் ஒரு பிசாசுபோல் அவர்களைச் சுற்றி வளைத்து நின்றது.

○ ○ ○

சௌந்தரத்தின் தாய்க்கு உடல் நலமில்லை. ஒருநாள் 'ஆகிவிட்டதென்று' ஊரே கூடிவிட்டது. மாப்பிள்ளைக்குத் தந்தி கொடுக்க வேண்டும் என்ற முறைக்குத் தந்தி கொடுத்தார்கள். வலையபட்டிக்குச் சொல்லியனுப்பினார்கள். ஆனால் சம்பந்தி வீட்டிலிருந்து யாரும் எட்டிப் பார்க்கவில்லை. தந்தி கிடைத்ததும் அழகப்பன் நேரே தன் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தான். அப்போது, ஆச்சுப் போச்

சென்று ஆனதால், புதுக்கோட்டைக்குத் தூக்கிப் போயிருக்கிறார்கள் என்ற தகவல் வந்தது. அழகப்பனுக்கு உடனே போய்ப் பார்த்துவிட வேண்டும் என்றும் சௌந்தரத்துக்கு ஆறுதல் கூறவேண்டும் என்றும் மனம் துடியாய்த் துடித்தது. லெட்சுமி ஆச்சியோ, "இதெல்லாம் சும்மா, கஜகர்ண வித்தையிடா! இதை நம்பியா நீ வந்தே ... நல்லவேளை போ! உடனே மதுரைக்குத் திரும்பி உன் வேலையைக் கவனி! அவளாவது, சாகிறதாவது?" என்று, சிறிதும் இரக்கமின்றிப் பேசினார்கள். அழகப்பனுக்கு ஆத்தாவை மீறவும் மனமில்லை; மனமோ மறுபக்கம் இழுக்கிறது. இருதலைக் கொள்ளி எறும்பு போல் அவன் மனம் சஞ்சலப்பட்டது. சமயம் பார்த்துத் தந்தையிடம் சொல்லிப் பார்த்தான். அவர் பதிலே சொல்லவில்லை. ஆத்தாளுக்குப் பயப்படுகிறாரா? அல்லது அவருக்கும் பந்தபாசம் இல்லையா? என்பது அழகப்பனுக்குப் புரியவில்லை.

மதுரைக்குப் புறப்படுவதைத் தவிர வேறு வழி புலப்படவில்லை. மெய்யன் சோமநாதனிடம் கேட்டதில் தன் மனைவியும் புதுக்கோட்டைக்கே போயிருப்பதாகக் கேள்விப்பட்டான். நாளைக்கே ஓர் 'ஆபரேசன்' என்றும் அதில் பிழைத்தால்தான் உண்டு என்றும் ஊரில் பேசிக்கொண்டார்கள். இவ் விவரம் கேட்டதும் 'என்ன செய்வது? என்று பன்னிப் பன்னிப் பதைபதைத்தான் அழகப்பன். சோமநாதன் ஒருவழி சொன்னான். "புதுக்கோட்டைக்குப் போய்விட்டு அங்கிருந்து மதுரைக்குப் போ! ஆத்தா சொன்னாலும் ஆபத்துக்குப் பாவம் இல்லே. அதோட சௌந்தரத்துக்கும் கண் விழிச்சுச் சிறிது காய்ச்சல், நேற்றுத்தான் பார்த்திட்டு வந்தேன்...!" என்றான் அவன்.

வீட்டில் மதுரைக்குப் போவதாகச் சொல்லி விட்டுப் பொன்னமராவதி பஸ் நிலையத்திற்கு வந்தான் அழகப்பன். அங்கிருந்து புதுக்கோட்டை போவதா, மதுரை போவதா என்று அவன் மனம் வாதிட்டது. இறுதியில் புதுக்கோட்டை போவதென அவன் முடிவு செய்தான். சீட்டு வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினான். வண்டி வலையபட்டியை நகர்வலம் வந்து, புதுக்கோட்டை நோக்கிப் புறப்படுவதற்கு ஆயத்தமானது. எதிர்பாராமல் அதே வண்டியில் அவன் தந்தையாரும், ஏறியது மட்டுமின்றி, அவரும் புதுக்கோட்டைக்கு 'டிக்கட்டு' எடுத்ததைப் பார்த்து அவன் அதிர்ந்துபோனான். அவன் ஐம்புலன்களும் ஒடுங்கி, முதல் வரிசையில், ஓரமாக, அடக்க ஒடுக்கத்துடன் இருந்தான். அவன் மனம், கையும் களவுமாக அகப்பட்ட திருடனின் மனம்போலத் தளர்ந்து, திகைத்துப் படபடவென்று அடித்துக்கொண்டது.

## 9

புதுக்கோட்டை சேரும்வரை மகனும் தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவில்லை; கவனிக்காதவர் போலவே இருந்து விட்டார்கள். புதுக்கோட்டையில் போய் இறங்கியவுடன் அழகப்பன் தயங்கித் தயங்கி 'அப்பச்சி' என்றான். அவரும் "ஏன்? புதுக்கோட்டை போயிட்டு மதுரை போகிறேன் என்று சொல்லியிருக்கப்பிடாதா? நீயும் வந்து பார்க்கலைன்னுதான், நோத்தா என்னைப் போகச் சொன்னா. ஒருத்தரும் போகாட்டி நல்லா இருக்காதுல்ல", என்று பேசினார்.

"என்னைத்தான் ஆத்தா புதுக்கோட்டை போக வேண்டாமுன்னுட்டாகளே", என்றான் மைந்தன்.

"அவ அப்படித்தாண்டா சொல்வா... நீதான் கட்டாயம் போகனும்னு புறப்பட்டிருக்கணும் ... நீ புறப்பட்ட பிற்பாடு, தொண்டைக்கு நெஞ்சுக் குமா கிடக்கிருள்னு பேசிக்கிருக... இந்த நிலையிலே ஒருத்தர்கூடப் பார்க்கப் போகலேன்னு ஊர் தூத் தும்... நீங்க போயி தலையைக் காட்டிட்டு வாங்க... நாளைக்கு என்னமும் ஆகிப்போச்சுன்னு, பார்த்தீ-களா, மாப்பிள்ளைகூட வந்து பார்க்கப்படாதான்னு தான் ஊர்உலகம் பேசும். அதனுலே நீங்க போயி 'அவனுக்கு மதுரையிலே தலைக்கு மேலே வேலை யிருக்கு! அதனுலேதான் வரலே'ன்னு சொல்லி விட்டுப் பார்த்துட்டு வாங்கன்னு' என்னைப் போகச் சொன்னுள்'என்று தந்தையார் தாம் வந்த கார ணத்தை விளக்கினுர்.

ஊர் உலகத்துக்காகத்தான் இவர்கள் பார்க்க வருகிருர்களே தவிர, இரத்த பாசத்தினுலோ, மரு-மகளுக்குத் தாயாயிற்றே என்றோ வரவில்லை என் பதை அழகப்பன் நன்ருக அறிந்து கொண்டான். நகரத்தார் மரபில் பணம் பெறுகிற அளவு இடத்தை உறவோ, பாசமோ, பந்தமோ பெறுவதில்லை என் பதை அவன் நன்கு உணர்ந்தான். இதை அவர்-கள் பேச்சே காட்டிவிடும். மகனை மதுரைக்குப் போகச் சொல்லிவிட்டுத் தன் கணவனை ஒப்புக்கு அனுப்பி, ஊர் உலகத்துக்காகச் சாகப்போகிற நிலை யிலுள்ளவரைப் பார்வையிட அனுப்பிவைக்கும் தன் தாயை நினைக்கும் போதெல்லாம் அழகப்பனுக்கு ஒருவித அருவருப்பு உணர்ச்சி ஏற்படலாயிற்று. இவ்வளவு காலமாகத் தன் தாய் என்ருல் ஒருவித மட்டு மரியாதை அவனிடம் இருந்து வந்தது; சிறிது பயமும் சொன்ன சொற்கேட்கும் பழக்கமும் கூடவே இருந்தன. இப்போது அன்பற்ற ஒரு மாமிசப் பிண்டம் போலவும் பணப்பேய் போலவும்

அவனுக்குத்தாயின் தோற்றம் நினைவில் வரலாயிற்று. அவன் எவ்வளவு முயன்றும் மீண்டும் தன் தாயைப் பற்றிய எண்ணத்தைப் பழைய நிலைக்கு அவனால் மாற்றமுடியவில்லை.

○ ○ ○

மருத்துவ மனையில் டாக்டர் இராமச்சந்திரனார் அன்பின் திருவுருவமாகக் காட்சியளித்தார். அவரது அன்பும் கனிவும் ஈர்த்தன. அவனுக்கு இராமரின் திருவருள்தான் இராமச்சந்திரனாராகத் தோன்றி நலிந்தவர்களைக் காப்பதாகவும் நோயுற்றவர்களை வாழ்விப்பதாகவும் பட்டது. தானும் ஓர் இளம் டாக்டர் என்பதனால் போலும், டாக்டர் அழகப்பனை அந்த 'இராமானுக்கிரக' மருத்துவமனை அவ்வளவு ஈர்த்தது. மருத்துவர் நோயாளிகளைப் பரிசோதித்துக் கனிவுடன் பேசி ஆலோசனை கூறும் முறை, அங்கு நர்சுகள், கம்பவுண்டர்கள் நடந்து கொள்ளும் முறை, நோயாளிகளிடையே காணப்படும் ஒழுங்குமுறை போல்வன ஒவ்வொன்றையும் கூர்மையாக நோக்கினான் அழகப்பன். அங்கு நடு ஹாலின் மேலே ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. அது 'பிரதரு'டைய படம் என்றார்கள். படத்தின் அடியில் 'அண்ணலார்' என்று எழுதப்பட்டிருந்தது. அவர் உதவியால்தான் இராமச்சந்திரன் கல்விகற்றுப் பெருநிலை அடைந்தாராம்; அவருடைய நற்பண்புகளும் பழக்கவழக்கங்களுமே வழிகாட்டியாக அமைந்து இன்று இராமச்சந்திரனாரும் மற்றும் அவருடைய நண்பர்களும் சிறப்பாகத் திகழ்கிறார்களாம். இவற்றை எல்லாம் கேள்விப்படக்கேள்விப்பட அழகப்பனுக்குச் சிந்தனைகள் பெருகின. ஒரு மனிதனின் நல்வாழ்வு, பண்பாடு, உயர்வில் அவனுடைய சூழ்நிலை, பின்னணி போன்றவை பெரும் பங்கு வகிக்-

கின்றன. தன் தாயிடம் தான் சிறுபிள்ளையில் வளர்ந்த விதம், கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகத் தான் கல்வி கற்ற இடங்கள், தன் நண்பர்கள் — என்று இப்படியே அவனுக்கு ஒவ்வொன்ருக நினைவிற்கு வந்தன. நகரத்தார் சமூகத்தில் இப்படிப்பட்ட பின் புலங்கள் வாய்ப்பதரிது என்று கருதிய போது, அவனுக்குச் சமூகத்தின் மேலேயே ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. எல்லாவற்றையும் பணம் ஒன்றையே வைத்து மதிக்கும் சமூகம் இது. மற்ற சமூகங்களில் பணத்தையும் மதிப்பார்கள்; பணத்தைச் சற்று அதிகமாகக்கூட மதிப்பார்கள். மற்றவற்றையும் அதுபோலவே மதிப்பார்கள். நகரத்துச் செட்டியார்கள் பணத்தைத்தான் மதிப்பார்கள். மற்ற எது இருந்தாலும் இல்லையென்ருலும் பணம் தான் அவர்களுக்கு முக்கியம். இல்லையென்ருல் தன் தாய் தன்னுடன் பிறந்த அண்ணன் குடும்பத்தை இந்த அளவு புறக்கணிப்பார்களா என்று அவன் நைந்தான். சாகக் கிடக்கிறவர்களைக் கூடக் காண வராமல், 'என்ன தந்திரம் செய்கிருர்கள்?' என்று நினைத்து நினைத்து அவன் உள்ளம் காய்ந்தது. அவன் மனம் சிறிதுசிறிதாக வயிரம் பாய்ந்தது.

○ ○ ○

தன் மாமியார் கட்டிலில் படுக்கையில் ஒட்டிக் கொண்டு கிடந்தது பரிதாபமாக இருந்தது. ஏதோ ஒரு துணியோ, போர்வையோ படுக்கை மீது கிடந்தாலும் இதைவிடச் சற்றுப் பருமனுகக் கிடந்திருக்கும். ஒரு சிறு அறுவைச் சிகிச்சை நடந்து முடிந்ததாகவும், இனிப் பயமில்லை என்றும் கூறினுர்கள். நன்ருக அயர்ந்து உறங்கிய ஆச்சி அவர்கள், அரவம் கேட்டு விழித்தார்கள். அருகில் நின்றவர்களின் உருவங்கள் அவர்களுடைய கண்களில் பிரதிபலித்தன. அந்த நிலையிலும் அவர்கள் பக்கத்-

தில் நின்ற வள்ளியிடம், தூக்க இயலாத வலது கையைச் சிறிதே உயர்த்தி, வாயைக் குவித்துச் சைகை காட்டினுர்கள். உடனே வள்ளி அத்தானை-யும், அம்மாணையும் 'வாங்க! சாப்பிட' என்று அழைத்துச் சென்ருள். அவர்கள் அடுத்த தெருவில் ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்திருந்தார்கள். அங்கு எல்லோரும் பயந்து பயந்து உபசரித்தது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. நோயுற்றவர்-பால் இரக்கம் கொள்வது மனித இயற்கை. இங்கு தன் அப்பச்சி ஏதும் மனம் வருந்தக் கூடாதே என்று அவர்கள் மிகவும் பயந்து உபசரித்த விதங்-களிலிருந்து, தாங்கள் அனைவருமே கொடுமைப் படுத்துகிற குடும்பமோ என்று அவனுக்கு மனக் கசப்பாய் இருந்தது.

சாப்பாடு முடிந்ததும் முடியாததுமாய் கும. அவர்கள் வலையபட்டிக்குப் புறப்பட்டார்கள். யார் என்னசொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. 'நாளைக்-குத் தையல் பிரிக்கிருர்கள்' என்று கூறி, ஒருநாள் தங்கிவிட்டுப் போகுமாறு கேட்டுக் கொண்டதை அவர் கவனிக்கவில்லை. லெட்சுமி ஆச்சி அனுப்பி வைத்த தூதுவர்போல் வந்த அவர், ஒரு முறை 'கடனுக்குப் பார்த்ததும் கடமை முடிந்ததெ'ன்று புறப்பட்டு விட்டார். இனிமேல் ஊர் உலகம் 'சாகக் கிடந்தவனைப் பார்க்க வரவில்லை' என்று குறைகூற முடியாதல்லவா? சாகக் கிடந்தவருக்காக உறவினர்-கள் என்ன செய்யக்கூடும்? முடிந்தால் உதவி செய்யலாம்.இல்லையென்ருல்இறைவனிடம் வேண்டி வழிபாடு செய்யலாம். அல்லது மனக்கனிவை-இரக்கத்தை - முகத்தில் வெளிப்படுத்தி, ஆறுதல் கூறலாம். இவற்றில் எதனையுமே கும. செய்யவில்லை. அவர் அவ்வளவு 'கல்' மனம் படைத்தவர் என்ப தன்று இதற்குக் காரணம். லெட்சுமி ஆச்சி இதற்கு

மேல் அவர் எது செய்தாலும் விரும்பமாட்டார்கள் என்று, அவருடைய அடிமனம் கூறியதே அதற்குக் காரணம். 'இவ்வளவு தூரம் வந்து அந்த ஆச்சி இங்கு நடப்பதைப் பார்க்கப் போகிறுர்களா?' என்பது கேள்வியன்று. நாளைக்கு எப்படியும் செய்தி பரவிவிடும். ஒருவேளை தாமே மறந்து போய்ப் பேச்சோடு பேச்சாக உண்மையைக் கக்கிவிட நேரக்கூடும். எனவேதான், கும. அவர்கள் ஒரு பற்றும் அற்றவர்போல் நடந்து கொண்டு, ஊருக்குப் புறப்படலானுர். ''அழகப்பா! நீயும் புறப்படு! வா, போகலாம்!'' என்ருர் அவர். அழகப்பன் இதுவரை தன் கண்ணெதிரே வராத தன் மனைவியைத் தேடினுன். 'அவள் எங்கே?' என்று கேட்கவும் கூசினுன். ஆனுலும் 'எங்கே சௌந்தரம்?' என்று அவனுடைய உள்மனத்தில் எதிரொலிகள் எழுந்த வண்ணம் இருந்தன. சற்று நேரத்தில் அங்கே வள்ளி ஓடி வந்தாள். மீண்டும் தந்தை அச்சமயம் பார்த்து ஊருக்குப் போவதை நினைவுபடுத்தினுர். அழகப்பன் சற்று உரத்த குரலிலேயே பதில் கூறினுன். ''அப்பச்சி! நீங்க வலையபட்டி போகிறீர்கள். உங்களுக்கு 3½ மணிக்கு வண்டி. அதைவிட்டால் சாயந்திரம் தான். அதனுல் நீங்க புறப்படுங்க. எனக்கு அடிக்கடி வண்டியிருக்கு... நான் பிறகு புறப்படுவேன்'' என்று அழகப்பன் இதுவரை இல்லாத அழுத்தத்தோடு கூறியதைக் கேட்ட தந்தை அதிர்ந்து போனுர். தாம் போகிற திசையும், தம் மகன் போகிற திசையும் பிரிகின்றன என உணர்ந்தவர் போல அவர் புறப்படலானுர்.

அவர் போன பிறகு அழகப்பன் வள்ளியைக் கூப்பிட்டு, 'உன் ஆச்சி எங்கே?' என்ருன். அவள் குறும்பாக இரண்டாவது ஆச்சி இன்பவல்லியைக்

காட்டி 'இதோ' என்றாள். பிறகு அவன் 'குறும்பு பண்ணாதே, உன் ஆச்சி எங்கே இருக்கிறாள்?' என்று அதட்டினான். அவனுக்கு ஓர் அறையைக் காட்டினாள் வள்ளி. அங்கு போய்ப் பார்த்தபோது உலர்ந்த சருகு போல், மழை காணாது வாடிய பயிர்போல் அவன் மனைவி படுத்திருந்தாள். அருகில் சென்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்; காய்ச்சல் நெருப்பாய்க் கொதித்துக் கொண்டிருந்தது!

## 10

சௌந்தரத்தின் நெற்றியைச் சிறிதே தடவி, காய்ச்சலின் வெம்மையில் தன்னையும் ஒன்றுவித்துக் கொண்டான் அழகப்பன். கலியாணம் ஆன பிற்பாடு, இரண்டு மாதமாகியும் அவர்கள் இருவரும் இவ்வளவு அருகருகே இருக்கவில்லை. இப்போது அறையின் தனிமையும் அவன் தந்த ஆறுதலும் அவளுக்கு இதமாக இருந்தன. அயோத்தியை விட்டுப் பிரிந்த சீதையும் இராமனும் போல, 'அந்த இரண்டு உள்ளங்களும் தவக்கோலம் பூண்டு விட்டனவோ?' என்று எண்ணும்படி இருந்தது. ஆமாம். அவள் இன்னும் கன்னி கழியவில்லை. அவனும் மனத்தை ஒருவழி நிறுத்திய முனிவன் போல இருந்தான். சூழ்நிலை அவர்களை அப்படி ஆக்கியிருந்தது. போதாததற்கு அழகப்பனின் தாயிட்ட சபதத்தை நினைத்தது, அப்பெண்ணின் பேதை நெஞ்சம். கடைக்கண்களின் வழியே கண்ணீர் பொங்கிப் பெருகி வழிந்தது.

வற்றி உலர்ந்த கொடியில் ஈரப்பசை தட்டுப் படுவது போல் இருந்தது அக்காட்சி. காய்ச்சலின் கொடுமையோ என அழகப்பன் துணுக்குற்றான்.

அவளை அப்படியே தூக்கி, மடிமீது கிடத்திக் கொண்டு கண்ணீரைத் துடைத்துவிட்டான். ''ஏன்? மேல், கால் வலிக்கிறதா? மண்டையுடையா? காய்ச்சல் நெருப்பாய்க் கொதிக்கிறதே? எதை நினைத்துக் கவலைப்படுகிருய், சௌந்தரம்?''.

''எதை நினைப்பேன்? எதை மறப்பேன்? அத்தான்!''

''சும்மா சொல்லம்மா! துன்பம் சொன்னுல் தான் குறையும். இல்லையென்ருல், இட்டலிச் சட்டிக்குள் எழுந்த ஆவிமாதிரி துன்பம் நம்மை வேக வைத்து விடும்.''

''கலியாணத்திலே போட்ட தங்கத்தை நிறுத்துப் பார்த்து, ஊரே சிரிக்கும்படி செய்தாக. ஒரு பவுனும் ரெண்டு கிராமோ என்னவோ எடை குறைவா இருந்துதாம்... ஒரு பங்காளிவீடு பாக்கியில்லே. சொந்தக்காரங்க ஒருத்தரை விடலே... 'மோசம் பண்ணிட்டாக ... கரியாப் போவாக...' அப்படி இப்படின்னு, ஏசின ஏச்சும் பேசின பேச்சும்...''

''அவுங்க குணந்தான் உனக்குத் தெரியுமே சௌந்தரம். அதுக்காக வருத்தப்பட்டு உடம்பை அலட்டிக்கலாமா?''

''அதை நான் காதிலேயே போட்டுக்கலே... கலியாண வீட்டிலே எல்லாத்தையும் கொடுத்தவுக ...ஒரு வருசத்து முறைக்குப் பேசின ஆயிரத்து இரு நூறு ரூபாயைக் கொடுக்கமுடியலேயாம் ... அதுக்கு ஒரு வருசத்திலே தர்றதா ஒப்புக் கொண்டு சீட்டெழுதிக் கொடுத்திருக்காகளாம் ... 'அதைப் போயி உடனே வாங்கிட்டு வாடி... வக்கத்த பய மகளே'ன்னு திட்டிருக. 'நான் உங்க அண்ணனைத் தானே இப்படித் திட்டுறீக'ன்னு கேட்டேன். ஒரு

வருசமாகலையே. அதுக்குள்ளே என்ன அவசர முன்னு சொன்னேன்.''

''பரவாயில்லையே நீயும் வாயைத் திறந்து மாமி-யார் கிட்டே பதில் சொன்னியா?''

''ஐயோ, நான் பதிலே பேசறதில்லை. என்ன பேசினாலும், சீண்டுற மாதிரி அவுக யாரையும் வச்சிக்கிட்டுக் கத்தினாலும் பேசறதே இல்லை. ஆனால் அதுக்கும் திட்டுவாக. பேசாட்டாலும் வம்பா இருக்கு. 'அவன் ஒரு மௌனசாமி; இவள் ஒரு மௌனசாமி. ஊமை ஊரைக் கெடுக்கும் இவள் என் குடும்பத்தையே கெடுக்க வந்தவ. பேச மாட்டாள்'னு திட்டுவாக!''

''அதுசரி...நீ சொன்னதுக்கு எங்க ஆத்தா என்ன பதில் சொன்னாக?''

''அதுக்கு வந்த கோபத்திலே 'வருசமுறையைத் தராத வரைக்கும் ஒன்னை வாழாவெட்டி ஆக்கு வேன். எங்கே என்னை ஏமாத்திப்பிட்டு நீங்க வாழற தைப் பார்த்துப்புடுறேன். எந்த நேரத்துலே அவன் லீவுக்கு ஊருக்கு வந்தானோ... அவங்கிட்டே கண்ணைக் காட்டி, கழுத்தைக் காட்டி மயக்கிப் பிட்டீக... ஆத்தாள், மகள் எல்லாமாச் சேர்ந்து ... இனி அது நடக்காதுன்னு எவ்வளவு கேவலமாப் பேசமுடியுமோ அவ்வளவும் பேசினாக...''

''தெரிஞ்சதுதான் சௌந்தரம்...சீக்கிரமே நாம ரெண்டு பேரும் மதுரைக்குப் போயிடுவோம்...அப்புறம் எப்பவாவது வீட்டுக்குப் போறபோதுதானே அவங்க தொந்தரவு?''

''அதுக்கில்லை அத்தான்! வருசமுறை தராத வரை வாழாவெட்டி ஆக்குவேன்னாகளே!!''—

சௌந்தரம் கண்கள் இதைச் சொல்லி முடிப்ப தற்குள் ஆருய்ப் பெருகின. அந்த மெல்லிய மலர் போன்ற உள்ளம் இந்தக் கொடுஞ்சொற்களால் எவ்வளவு நைந்து போயிருக்கிறது என்பது இதனுல் புலனுகியது. மடியிற் கிடந்த மங்கைக்கு அழகப்பன் இதமான ஆறுதலளிக்க விரும்பினுன். ''அவுக என்ன சொன்னுலும் சரி! நீ கவலைப்படாதே... உன்னை மதுரைக்குக் கூட்டிப்போக நான் சீக்கிரமே எல்லா ஏற்பாடும் செய்கிறேன்'' என்று உறுதி கூறி-ஞன் அவன்.

''அதுக்கு இல்லைங்க! நான் உங்களோடே என் மனசாலே வாழ்ந்துக்கிட்டுதான் இருக்கிறேன். எந்த நேரமும் உங்க நினைப்புத்தான். நீங்க எந்த நேர மும் என் பக்கத்திலேயே இருக்கிற மாதிரியும், நாம இனிமையாக் குடும்பம் நடத்துறமாதிரியும், ரெண்டு பேருமா 'வாக்கிங்' போற மாதிரியும், நான் உங்க டிஸ்பென்சரியிலே உங்களுக்கு நர்சுபோல உதவுற மாதிரியும் எந்த நேரமும் மனதாலே வாழ்ந்துக் கிட்டே இருக்கிறேன். என்னை எப்படி இவுக வாழா வெட்டி ஆக்கமுடியும்? வாழமுடியாதவனை வாழா வெட்டி ஆக்கலாம்.. மனதாலே வாழுற வாழ்வு-தாங்க பெரிய வாழ்வு.. அமரவாழ்வு.. அது போதுங்க எனக்கு!''

''அடி அசடு! என்னஇருந்தாலும் நாம மனுசங்க... நாம கூடிக்களித்து, உடலாலே ஒன்றி இணைஞ்சு, பிள்ளை குட்டிக பெத்து வாழத்தான் வேணும்... அவுக கிடக்கிருக... உங்க ஆத்தா சும்மா இருக் கட்டும். நாளைக்கே டிஸ்பென்சரி திறக்கப்போ-றேன்.. தனியா வீடு பார்க்கப் போறேன்.. அதுசரி இதையெல்லாம் பார்த்து, எங்க ஆத்தா படுத்துற கொடுமையாலேதான் உன் தாயார் இப்படி ஆயிட் டாகளா?''

"இல்லே. . இல்லே. . இப்ப நான் சொன்ன எதுவுமே இங்கே யாருக்கும் தெரியாது. அதனுலேதான் உங்க கிட்டே அவ்வளவும் சொன்னேன். வள்ளி என்கூட வலேயபட்டிக்கு வந்தாள். அவளேக் கூடக் 'கண்டதைக் கேட்டதை வேகுப்பட்டியிலே சொல்லிக் கவலேப்பட வைக்காதே'ன்னு கண்டிச்சு வச்சிருக்கேன்."

"நல்ல வேளே"

"அவங்க கவலேக்கு வேறு காரணம்"

"அது என்ன?"

"கலியாணத்துக்குப் பங்காளி ஒருத்தர்கிட்டே ஐயாயிரம் ரூபாய் ரெண்டு வட்டிக்கு வாங்கினுக... சொன்னேன் இல்லேயா?"

"ஆமா."

"அவரு முதல்லே மெதுவா வாங்கிக்கிறதாச் சொன்னவரு, இப்ப மறுமாசமே பணத்தை எண்ணி வைங்க இங்குருரு. யார்கிட்டேயோ ஒண்ணு வட்டிக்கு வாங்கி நம்மகிட்டே ரெண்டுவட்டிக்குக் கொடுத்திருக்கிருரு...இப்ப அவுக திடீர்னு கேக்குருகளாம். அதனுலே அவரு இவங்களே நெருக்குருரு!"

"அட பாவமே!"

"இருபது மூடை கடன்கொடுத்த சேர்வாரரு இவங்க நிலத்தையெல்லாம் வித்ததைக் கேள்விப் பட்டவுடனே, 'நீங்க அடுத்தடுத்த வருசம் விளேய விட்டித் தருவீகன்னு நினேச்சேன். நீங்க என்னுடான்னு நிலத்தையும் வித்துப்பிட்டு, வீட்டையும் எழுதி வச்சிட்டீங்க... கொண்டாங்க நெல்லே'ன்னு தொல்லே பண்ணுருரு..."

''ம்ம்...ம்ம்...''

''சில்லறைக் கடன்கள்...அன்ருடம் சாப்பாட்டுக்கே பிரச்சினை ஆயிட்டுது...அப்பச்சிக்கும் ஆத்தாவுக்கும் ஒரே கவலை...ஆத்தா உடம்பு தாங்கலே... போதாக்குறைக்கு இப்ப வைத்தியச் செலவு வேறே...''

''கவலையெல்லாம் சூரியனைக் கண்ட பனிமாதிரி விலகிவிடும்! நீ ஒண்ணும் கவலைப்படாதே...மதுரையிலே நமக்கு ஆஸ்பத்திரி தொடங்கி, கொஞ்சம் பழக்கமாயிட்டுதுன்னு, இந்தக் கவலைக்கெல்லாம் மருந்து தேடிப்பிடலாம். அதுவரை சமாளிக்கச் சொல்லு... இன்னும் ஒரு வருசம்...அவ்வளவுதான்! நம்ம முயற்சியிலே தங்கைகளையெல்லாம் வாழவைக்கலாம். நான் சம்பாரிச்சு என்ன ஆகப்போவுது? அழகி கலியாணத்துக்கு வேண்டியது இருக்கு. நான் மட்டும் சம்பாரிக்க ஆரம்பிச்சுட்டேன்னு... சௌந்தரம்... உனக்குப் பிறந்த வீட்டுக்கவலையும் இராது. பிறகு உனக்கு எந்தக் கவலையும் இராது!''

டாக்டர் அழகப்பனின் குரலில் உறுதிஇருந்தது. அதைக்கேட்ட சௌந்தரம் கண்களில் ஒளி மிகுந்தது. மனிதனுக்கு நம்பிக்கைஒளி போல, வாழ்வுக்கு ஒளியூட்டுவது பிறிதொன்றில்லை. தூரத்தில் தெரியும் கலங்கரை விளக்கத்தையே பார்த்துக்கொண்டு மிதக்கும் கப்பல் போன்றது மனித வாழ்க்கை. கப்பல் கரை சேர்ந்தாலும் சேராமற்போனாலும் 'சேர்வோம்' என்ற நம்பிக்கை ஒளியை ஊட்டிக் கொண்டிருப்பது கலங்கரை விளக்கு.

சௌந்தரம் எழுந்து உட்கார்ந்தாள். அவள் உடலில் தெம்பு வந்ததுபோல் தெரிந்தது. நேரமறிந்து ஓடிவந்த வள்ளி ஆச்சிக்கு மாத்திரை

கொடுத்தாள்; கொஞ்சம் வெந்நீரும் கொண்டு வந்து நீட்டினுள்.

''என்ன வள்ளி! ஆத்தாவுக்கு எப்படியிருக்கு?'' என வினவினுன் அழகப்பன்.

''அது பரவாயில்லே...இனிப் பிழைச்சுக்குவாங் கன்னு டாக்டர் சொல்லிட்டாரு ... ஆச்சிதான் துரும்பா இளைச்சுப் போச்சு...! உங்க வீட்டிலே இருக்கவேண்டிய ஆச்சியையும் எங்க வீட்டிலேயே விட்டுட்டா எப்படி?''

அழகப்பனுல் அத்தங்கையின் மனக்கசிவை உணர முடிந்தது. கலியாணம் செய்து கொடுக்காத பெண்பிள்ளைகள் ஒரு வீட்டுக்குப் பாரமாகயிருக்க லாம். செய்துகொடுத்தவள் பாரமாக இருக்கலாமா? அதுவும் இப்படித் துன்பப்பட்டுக் கடனைவாங்கிக் கட்டிக் கொடுத்தவள் தாய்வீட்டிலேயே இன்னும் பாரமாக இருக்கலாமா? தன் மனைவியைத் தன்-னுடன் அழைத்துப்போகவேண்டியது தன் கடமை என உணர்ந்தான் அழகப்பன். தன் தாய்க்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதுதான். ஆனுல் தன் தாய் வார்த்தையை மீறித் தான் கலியாணத்துக்கு முடிவு செய்ததே சௌந்தரத்தைக் காப்பாற்ற முடியும் என்கிற நம்பிக்கையிலேதானே? இப்போது நட்டாற்றில் விட்டால் எப்படி? அழகப்பன் தீவிர மாகச் சிந்தித்தான். அவன் முடிவு உறுதிப்பட்டது. தன் மாமனுர் வருவதைக் கவனித்த அவன் அறையை விட்டு வெளியேறி முன்வாசலுக்கு வந்தான். சௌந்தரமும் அவன் தோளைப் பற்றிக் கொண்டு வெளியில் வந்தாள்.

நாகப்ப செட்டியாரும் துரும்பாக இளைத்திருந்-தார். அவர் காலையில் வந்தவுடன் வெளியே போன-

வர்; கண்ணிலேயே அகப்படவில்லை. பணத்துக்கு அலையவே அவருக்கு நேரம் சரியாக இருந்தது. செட்டிய வீட்டில் இருக்கிறவர்கள் இல்லாதவர்கள் என்கிற வேறுபாடு யாருக்குத் தெரிகிறது? சிறு வேலைக்காரர்கள் கூட, செட்டியார்கள் என்றால் கொஞ்சம் கூடுதலாகத்தான் கேட்கிறார்கள்.

"அம்மான்! அடுத்த மாதம் அல்லது சித்திரை முன்தேதி வாக்கிலே, தனியா டிஸ்பென்சரி ஆரம்பிக்கலாமுன்னு இருக்கிறேன். கடிதம் எழுதுகிறேன்... சௌந்தரம் நீங்க எல்லாரும் அவசியம் வந்திருங்க...அப்புறம் சௌந்தரம் என் கூடவே இருக்கட்டும்!"

நாகப்ப செட்டியார் 'ம்ம்' கூட்டினாரே தவிர, எதுவும் பேசவில்லை. சிரிக்கவுமில்லை; வெறுக்கவுமில்லை அவர். ஒருபுறம் சந்தனம்கொண்டு பூசினாலும் மறுபுறம் அரிவாள் கொண்டு வெட்டினாலும் மனத்தைச் சமநிலையில் வைத்திருக்கும் முனிவர்கள் என்று புகழ்வார்களே அந்த மனநிலையில் அவர் இருந்தார். பிறகு அன்று இரவும் மறுநாளும் அழகப்பன் அங்கு தங்கியிருந்தான். வேளாக்கு மருந்து கொடுத்து, மனைவிக்கு வேண்டிய உதவி செய்தான். அவளுக்கு அது எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. மருத்துவ மனையில் மாமியாரும் நலம்; வீட்டில் மனைவியும் நலம் என்ற மனத்தெம்புடன் அவன் மதுரைக்குப் புறப்பட்டான். அவனுடைய மாமனார் காரடிக்கு வந்து வழியனுப்பி வைத்தார்.

அழகப்பன் மதுரை வரும் வரை எதேதோ எண்ணிக்கொண்டே வந்தான். ஓடும் காருடன் அவன் சிந்தனையும் போட்டியிட்டு ஓடிக் கொண்டிருந்தது. 'உன்னை வாழாவெட்டி ஆக்குவேன்'

என்று தன் ஆத்தாள் சபதமிட்டதை, சௌந்தரம் அடிக்கடி ஆராமல் சொல்லிக் கொண்டிருந்தது அவன் நினைவில் நின்று உறுத்தியது. "எவ்வளவு கடுமையான வார்த்தை? இதற்கா இவளைக் கலியாணம், செய்து கொண்டோம்? இவளை 'வாழ்வரசி'யாக்குவோம் என்றுதானே மணம், செய்துகொண்டோம்?நம்தாய் இவளை'வாழாவெட்டி ஆக்குவதிலேயே நினைவாக இருந்து,தடைசெய்வது மிகப் பெரிய தீங்கு அல்லவா?" — இவ்வாறு அவன் தீவிரமாகச் சிந்தித்தான். அவன் இளமை முதல் பழகிவந்த மன ஓட்டம் மாறி, இளகிய அந்த மனமும் இப்போது இறுகத் தொடங்கியது. தாய் சொல் தட்டாத அந்தத் தங்கமனம் இப்போது தாயைப் பகையாக நினைக்கத் தொடங்கியது. திருமணத்தின்போதும் பிறகும் எல்லாம் அவன் தன் தாயை நேசிக்கவே செய்தான். பணத்தின் மீது கொண்ட மோகத்தால் தாய், தன் திருமணத்தை வெறுத்தாலும் காலப் போக்கில் அந்த மனம் திருந்திவிடும் என அவன் எதிர்பார்த்திருந்தான். இவ்வாறு அவர்கள் மனம் கல்லாகிப் போய்விடும் என்று அவன் நினைக்கவே இல்லை. இனியும் தான் சோர்வுற்றிருப்பது இருபாலும் தீமையை விளைவித்து விடும் என எண்ணித் தன் மனத்தைத் திடப் படுத்திக் கொண்டான் அவன்.

# 11

மருத்துவ மனைத் தொடக்க விழாவிற்கு மூன்று நாள் முன்னதாகவே சௌந்தரவல்லி வந்து சேர்ந்தாள். அழகப்பன் தனிக்குடித்தனத்திற்கு ஏற்பாடு செய்திருந்தான். சௌந்தரவல்லியின் பெற்றோரும் தங்கைகளும் கூட வந்திருந்தார்கள். மேல மாசி வீதியில் இருந்த 'லெட்சுமி மருத்துவ மனை', ஒரு

கட்டிடத்தின் கீழ்ப் பகுதியில் அமைக்கப்பட்டி ருந்தது. பத்துப் படுக்கைகளும் நல்ல இடவசதியும் இருந்ததால், பார்ப்பதற்கு மிக உயர்வாகவும் சுத்த மாகவும் அது காட்சியளித்தது. மாடியிலேயே குடி யிருக்க வீடும் அமைந்ததால் மிகவும் சௌகரியமாக இருந்தது.

சௌந்தரவல்லி ஓடிஆடி வேலைபார்த்தாள். அவள் தாயாருக்கு உடல் தேறியிருந்தது. கவலை- கள் மாறும் என்ற நம்பிக்கையே மனிதர்களை வாழவைக்கிறது. எப்போதும் இந் நம்பிக்கையை ஊட்டும் வண்ணம் வாழ்க்கை அமைந்தாலும் போதும். மனிதன் சிறிதளவே வாழ்கிறான். பெரும் பங்கு நம்பிக்கையில் தான் அவன் காலம் கழிகிறது. பலருக்கு நம்பிக்கைதான் வாழ்வாக இருக்கிறது.

''ஒங்க ஆத்தாவுக்குச் சொல்லலையா? நம்ம வீட்டிலேயிருந்து யாரும் வரல்லையே?''

“அப்பச்சி ஒரு முறை வந்துட்டுப் போனாக. ஆத்தாவும் அப்பச்சியும் முதல்நாள்தான் வர்றதாச் சொன்னாக. நாளைக் காலை வரை பார்க்கிறது. பெரும்பாலும் செவ்வூர் வண்டியிலே வருவாக. வரலைன்னா ..''

''ஒரு வண்டி எடுத்துட்டுப் போயிக் கூட்டிக் கிட்டு வந்திருங்க. ஒருவேளை நான் இப்படி நேரே வந்திருக்கிறதைக் கேள்விப்பட்டால் என்ன நினைக்கி றாகளோ! ஒருவேளை எங்க அப்பச்சி, ஆத்தா வந் திருக்கிறது புடிக்கலைன்னா, அவுகளைப் போகச் சொல்லிடுவோம்!''

''சேச்சே . .இங்கே ரெண்டு பேருக்கும் பொது இடம்தான். அவங்கவந்து அவங்கபாடு இருக்க

வேண்டியதுதான். நான் ஊர்போயிவர நேரமில்லே. நாளைக்கும் வரலேன்னு வேற வழியும் இல்லே.. போய்க் கூட்டிக்கிட்டு வருகிறேன்'', என்று வேண்டா வெறுப்பாகக் கூறினான் அழகப்பன்.

அழகப்பன் இடைப்பட்ட வேளைகளில் தன் மனைவியைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றான்; சக டாக்டர்களுக்கு அறிமுகப்படுத்தினான்.

கடைத்தெருவில் இருவரும் அடிக்கடி காணப்பட்டார்கள். எதைச் செய்தாலும், எதை வாங்கினாலும் அழகப்பன் ஒருமுறை சௌந்தரத்தின் சம்மதத்தைக் கேட்டுக்கொள்வான். இது ஒரு குடியாட்சி வாழ்க்கைபோன்றது. முதலமைச்சருக்கு உரிமையிருந்தாலும்,மசோதாவில் ஆளுநர் கையெழுத்திட்டால்தான் நிறைவேறியதாக ஆகும்.

மருத்துவ மனையில் மேசை நாற்காலிகளை ஒழுங்குபடுத்திப் போடுவதுமுதல், விருந்து ஏற்பாடு வரை ஒவ்வொன்றிற்கும் அவன் தன் மனைவியிடம் யோசனை கேட்டான். தாயைச் சார்ந்தே வளர்ந்த அவன் இப்போது, தன் மனைவியிடம் உள்ள பாசம் காரணமாக அவளைக் கேட்டுக் கேட்டுச் செய்வதில் மன அமைதி கண்டான். ஒருவேளை ஒருபொழுது தவறாமல் கணவனும் மனைவியுமாகக் கலந்து பேசிச் செயல் ஆற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த நல்ல நேரத்தில் மெய்யன் சோமநாதன் வந்துசேர்ந்தான். அவன் கொண்டுவந்த செய்தி அதிர்ச்சி தருவதாக இருந்தது. அழகப்பனுடைய பெற்றோர்கள் ஆஸ்பத்திரி திறப்புவிழாவிற்கு வருவதில்லை என்று முடிவு கட்டிவிட்டார்களாம். ''வேகுப்பட்டியார்கள் எப்படி நேரே வரலாம்? யாரைக் கேட்டு வந்தார்கள்? இன்னும் வேறுவைக்கும் முன்னாடி, மதுரையில் தனிக்குடித்தனம் நடத்தச் சௌந்தரத்தை

எப்படிக் கூட்டிப் போகலாம்? பெரியவுக இருக்கும் போது, அவங்களைக் கேட்காமே எல்லாம் நடக்குது .. நடக்கட்டும்!'' என்று லெட்சுமி ஆச்சி பொரிந்து தள்ளுகிறார்களாம்.

'உடனே ஒரு வண்டி எடுத்துக்கிட்டுப் போய்த் தாய் தகப்பனைக் கூட்டிவரும்படியும், அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் தாங்கள் போய் விடுவதாகவும்' அழகப்பனின் மாமனாரும் மாமியாரும் கூறினார்கள். ஆனால் அழகப்பன் இந்தமுறை விடாப் பிடியாக இருந்துவிட்டான். மெய்யனிடம் தான் எதைப்பற்றியும் கவலைப்படப் போவதில்லை என்றும், வைத்த தேதிப்படி மருத்துவமனைத் திறப்புவிழா நடக்கும் என்றும் கூறிவிட்டான். தனக்காக மெய்யன் ஊர்போய்த் தாய் தகப்பனாரைப்பார்த்துப் பேசுவதை அவன் தடுக்கவில்லை. அழகப்பனின் பெற்றோர் வரவில்லையென்றால் நன்றாக இராது என்று கருதி நாகப்ப செட்டியார் மெய்யன் சோம நாதனையே வலையபட்டிக்குத் தூது அனுப்பினார். தாங்கள் சொன்னதாகச் சொல்லாமலே அவனைச் சமாதானம் செய்து வைப்பது போல் இதில் தலையிடும்படி கேட்டுக் கொண்டார்.

விடிந்தால் மருத்துவமனைத் திறப்புவிழா. எல்லாம் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் அழகப்பன் பெற்றோர் இரவு 9 மணி வரை வரக்காணோம். செளந்தரம் எவ்வளவோ மன்றாடியும் அழகப்பன் ஊர்போய் வர மறுத்துவிட்டான். தன் பெற்றோர் வராமல் இருப்பது கூட நல்லதென்றே அவன் உள்மனம் நினைத்தது. ஆனால் இரவு பனிரெண்டு மணியிருக்கும்; ஒரு டாக்சி வந்து ஆஸ்பத்திரி எதிரே நின்றது. செளந்தரமும் அழகப்பனும் நெடுநேரம் அலுவல்களைப்

பார்த்துவிட்டு, நன்கு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். சௌந்தரம் எழுந்துவந்து சன்னலைத் திறந்து பார்த்தாள். டாக்சியிலிருந்து தன் மாமியாரும் மாமனாரும் மெய்யனும் இறங்குவது தெரிந்தது.

மெய்யன் சோமநாதன் கதவைத் திறப்பதற்குள் அது திறக்கப்பட்டது. வெளியில் வந்துகொண்டிருந்த பெற்றோர்களை 'அப்பச்சி வாங்க, ஆத்தா வாங்க, சோமநாதா!' என்று வரவேற்றான் அழகப்பன். தந்தையார் தலையை மட்டும் அசைத்தார்; தாயார் அதுவும் செய்யவில்லை. அவர் முகம் கடுகடுவென்று இருந்தது; எள்ளும் கொள்ளும் தூவினால் குளிர்மிக்க அந்த நள்ளிரவிலும் வெடிக்கும் போல் இருந்தது.

மெய்யன் அவர்களை முன்னே அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான். சௌந்தரம் கதவோரமாக நின்றுகொண்டு 'அயித்தை வாங்க! அம்மான் வாங்க! . . வாங்க!' என்று மெதுவாகக் கூறினாள். அவள் குரலில் நடுக்கமிருந்தது; அழகப்பனிடமிருந்த உறுதி அவளிடம் காணப்படவில்லை. அத்தை தன் கையில் வைத்திருந்த சிறு பையை வாங்கப் போனாள் சௌந்தரம். அப்போது கையை ஒரு இழு இழுத்துக்கொண்டு, முகவாய்க்கட்டையை அத்தை இடித்துக் கொண்ட விதம் உருத்திர தாண்டவம்போல் இருந்தது.

அந்த இரவு நேரத்தில் தன் மகனையும் மருமகளையும் ஒருசேரப் பார்த்ததில் தாய்க்குப் பொறுக்கவில்லை. ஆமாம், பெற்ற தாய்க்குத்தான் பொறுக்கவில்லை. தாய் என்ற புனிதம் மிக்க கோயிலுக்குள் 'பணம்' என்ற அரக்கன் குடியிருந்தான். செட்டி

நாட்டில் மட்டுமே இந்த அக்கிரமக் காட்சிகளைக் காணமுடியும். எப்பொழுது திருமணமாகி விட்ட-தோ, பிறகு தமக்கென்ன மேலுரிமை என்று அவர்கள் எண்ணுவதில்லை. பெரிய குடும்பத்தைச் சார்ந்தே சிறிய குடும்பம் வாழ வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். வாழையடி வாழையாக வாழ்வது நல்லதுதான்; அடிமையாக நடத்துவது தகுமா?

சாப்பாடு பற்றி அழகப்பன் விசாரித்தான். எல்லாவற்றையும் வலையபட்டியிலேயே முடித்துக் கொண்டு புறப்பட்டதாக மெய்யன் கூறினான்.

○ ○ ○

மறுநாள் மருத்துவமனைத் திறப்புவிழா மிகக் கோலாகலமாக நடைபெற்றது. செட்டிநாட்டு அரசர் அவர்கள் வந்து திறப்புரை ஆற்ற, அரசியார் குத்து விளக்கேற்ற, தியாகராசர் வாழ்த்துரைக்கத் தீந்தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் சிறப்புரையாற்ற விழா இனிது நிறைவெய்தியது. மாலையில் தேநீர் விருந்தொன்று சிறப்பாக வைக்கப்பட்டது. குமர. அவர்கள் எதிலும் பட்டும் படாமல் நடந்து கொண்டார்கள். தன் தந்தையைப் பலரிடமும் அழகப்பன் அறிமுகப்படுத்தினான்.

செளந்தரவல்லி பொலிவோடு காணப்பட்டாள். அவளைக் கடந்த சில நாட்களாகப் பல டாக்டர்-கள், நண்பர்கள் கண்டு அறிமுகமாகி இருந்ததால் எல்லோரும் அவளிடம் வந்து வந்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அவள் தன் கைகளால் பரிசுப் பொருள்களை வாங்கி வாங்கி ஓய்ந்து போனாள். டாக்டர்கள் புறப்படும் பொழுது, அழகப்பனிடம் சொல்லிக் கொள்வார்கள். பிறகு அவர்கள் சுற்று முற்றும் பார்க்கிற குறிப்பைக் கொண்டு, அழகப்பன் 'செளந்தரம், செளந்தரம்!' என்று அழைப்பான்.

தழையத் தழையப் பின்னிய கூந்தலசைய, தலையில் சூடியிருக்கும் 'ஒருகொத்து' மலர்களும் குலுங்க, புன்னகை தவழச் சௌந்தரிய தேவதை ஓடிவருவாள். அவளிடமும் சொல்லிக் கொண்டு, அவர்கள் புறப்பட்டுச் செல்வார்கள்.

பழப்பை கொடுக்க வேண்டுமென்றால், 'மொய்' எழுதியதைத் தரவேண்டுமென்றால், 'சாப்பாடு நடக்கிறதா?' என்று விசாரிக்கவேண்டுமென்றால் அழகப்பன் மனைவியைக் கூப்பிடுவதும், அவன் கூப்பிட்ட குரலுக்கு அவள் ஓடிவருவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அன்றைய விழா அவர்களின் விழாவாகவே கோலாகலமாக இருந்தது. 'தூமணி வண்ணனும் அவன் துயர்தீர்த்த நப்பின்னையும் போல', 'செங்கோட்டு வேலனும் செவ்விதழ் வள்ளியும் போல' அழகப்பனும் சௌந்தரவல்லியும் அன்று எல்லோருடைய கண்களிலும் நிறைந்து விளங்கினார்கள். அவர்கள் இருவரும் ஒருசேர நின்று வரவேற்கும் போதும், விடைகொடுக்கும் போதும் எத்தனையோ காமிராக்கள் 'கிளிக்கு கிளிக்கு' என்று ஒலித்தன; ஒளிவீசின. கன்னங் குழிவிழுக அவள் சிரிப்பதும், கணவனுடன் கனிவுடன் பேசுவதும் எல்லோரையும் மனம் மகிழச்செய்து கவர்ந்தன. அவர்களுடைய திருமண நாளில்கூட அவர்கள் இவ்வளவு கலகலப்பாக இருக்கவில்லை. இருக்கமுடியாதல்லவா? இருக்க விடவில்லை என்பதும் ஒரு காரணம்தானே? இன்று பார்த்தவர்கள் பொறுமைப்படும்படி இருந்தது, அவர்கள் மகிழ்ச்சி, களிப்பு! நிச்சயமாகக் கண்ணேறு பட்டிருக்க வேண்டும்.

ஆனாலும் என்ன பயன்? செட்டிநாட்டுக் குடும்பங்கள் பண்பையா பார்க்கின்றன? லெட்சுமி ஆச்சி

'உம்'மென்ற முகத்துடன் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் முகத்தில் இக்காட்சிகள் அனைத்தும் பெருமகிழ்ச்சியை விளைவித்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக ஈ ஆடாத முகத்துடன் அந்தத் தாயார் நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். மற்ற இனங்களில் கண்ணுக்கு நிறைந்த மகனையும் மருமகளையும் பார்த்துமகிழ்கிறார்கள்; செட்டிநாட்டவர்கள் பெட்டி நிறைந்த'பணத்தையே எண்ணியெண்ணிப்பொருமுகிறார்கள். லெட்சுமி ஆச்சி இப்படி இருக்கும் போது நாம் ஓடி ஆடித் திரிந்தால் நன்றாக இராது' என்று சௌந்தரத்தின் பெற்றோரும் தங்கையரும் ஒரு மூலையில் ஒதுங்கி விட்டார்கள். வந்திருந்த ஒருசில உறவினர்களும் அப்படி அப்படியே பட்டும் படாமலும் இருந்து போய் விட்டார்கள். அன்று அங்கு வந்திருந்த நண்பர்களாலும், மற்ற இனத்தவர்களாலுமே அவ்விழா அவ்வளவு சிறப்பாக நடந்தது! அந்த இரண்டு காதல் பறவைகள் மட்டுமே, அன்று முழுவதும் அவ்இல்லம் அனைத்தும் கீதம் இசைத்துப் பறந்த வண்ணம் இருந்தன!

அன்று மாலையில் பெரும்பாலும் வந்திருந்தவர்கள் போனதும், வேலைக்காரர்களுக்குப்பணம்கணக்குப்பார்க்கும்போதுநாகப்பச்செட்டியார்முன்னின்று யாவும் செய்யநேர்ந்தது. ஏனெனில் முதல்நாள் அவர் தான் அவர்களிடம் சம்பளம் பேசி முடிவு செய்திருந்தார். ஒரு சிலருக்குக் கண்டிப்பாய்ப் பேசியும், சிலரிடம் சிறிது கூடுதலாகக் கொடுத்தும் அவர் ஒவ்வொருவராக அனுப்பிக் கொண்டிருந்தார். தம் அண்ணன்தானே என்ற பாசம்கூட இல்லாமல் லெட்சுமி ஆச்சி "ஊரிலே இருக்கிறவுகளுக்கெல்லாம் இங்கே நாட்டாமையா? நாங்க என்ன ஒண்டிப்

பிழைக்கவா இங்கே வந்திருக்கிறோம்? எல்லாம் கண்டவுக ராச்சியமாப் போச்சு'' என்றுஇரைந்து பேசத் தொடங்கினர். "வருசமுறை செய்ய வக்கில்லே. எங்களுக்கு முந்தி ஒரு மாதமா இங்கே வந்து திங்கத் தெரியுது'' என்று வசைபாடினர்.

ஏகம்மையாச்சியும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார்கள். இறுதியில் அவர்களுக்கும் கடுங் கோபம் வந்து விட்டது. அவர்களும் செட்டி நாட்டில் பிறந்தவர்கள்தானே, விடுவார்களா?

"எங்களைத் தெரிஞ்சுதானே வந்தீக! வச்சுக் கிட்டா வருசமுறை கொடுக்காமே ஏமாத்திறோம். எங்களுக்கும் வழி பிறந்துட்டா உடனே கொடுத் திரத்தான் போறோம். அதுக்காக இப்படி அடிக் கப்படாது!''

"வேறே வைக்கறதுக்கு முன்னாடி, இப்படி மாப்பிள்ளை பின்னாடி ஓடியாந்து திங்காட்டி என்ன? நாங்க பெத்தவுககூட வருமுன்னாடி மத்தவுகளுக்கு என்ன உரிமை?''

"எல்லாம் வழக்கப்படி வேறேவைக்கிறது தானே? அதுக்கு மனசில்லே... எத்தனை காலத்துக்கு பிள்ளைங்க இப்படியே இருக்கும். ... நாங்க ஒண்ணும் நாங்களா வரலே, அவுக வரவேணு முன்னு கூப்பிட்டுத்தான் வந்தோம்.''

"நாங்க இத்தனை வருசமா வளர்த்தோம்.. அவன் எங்க பேச்சைக் கேட்காமே அலையிறான்...யாரு மை போட்டு மயக்கினுகளோ, அவுக வீட்டிலே இழவு விழுக!''

"பொறுமையாத்தான் பேசுங்க, மதுரையிலே வந்து அடிச்சுக்கிட்டா ஊர் சிரிக்கும்.''

''ஏன் ஊர் சிரிக்குது... நாங்க இந்தாப் போய் விடறோம். .நீங்களா இருந்து அனுபவிங்க!''

''நாங்க ஏன் இருக்கப் போறோம்... அவுக கட்டாயப் படுத்தினதினாலே வந்தோம் ... வேலையைப் பார்த்தோம், கஞ்சியைக் குடிச்சோம் ... இனி எங்களுக்கு இங்கே என்ன வேலை?''

லெட்சுமி ஆச்சி முந்திக் கொண்டார்கள். தம் கணவனை 'வாங்க போகலாம்' என்று அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள். யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. தம் மகனை உண்ணாமல் உறங்காமல் ஊட்டி வளர்த்ததையும் இப்பொழுது அவன் தங்களுக்குப் பயன்படாமல் போனதையும் சொல்லிச் சொல்லி அவர்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டது ஒருபக்கம் அருவருப்பாகவும் மறுபக்கம் வருத்தம் தருவதாகவும் இருந்தது.

ஏதோ பறிகொடுத்து விட்டதைப் போன்று லெட்சுமி ஆச்சியின் கண்கள் தாரை தாரையாக நீரைச் சொரிந்தன. மெய்யன் சோமனை அழகப்பன் மிகப் பரிவோடு பார்த்தான். யாராலும் வாய் விட்டுப் பேச முடியவில்லை. 'தலைக்கு மேலே வெள்ளம் போய்க் கொண்டிருக்கிறது' என்ற திகைப்பை மெய்யன் முகம் காட்டியது. அவர்கள் சற்றும் நிற்காமல், திரும்பிப் பாராமல் பஸ்நிலையம் நோக்கி நடந்தார்கள். வேறு வழியின்றி மெய்யனும் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

இதைப் பார்த்து நாகப்பச் செட்டியாரும் ஏகம்மை ஆச்சியும் தங்கள் பெண்களைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டார்கள். ''அவர்கள் போனால் போகட்டும். நீங்கள் இருங்கள். இன்றைக்கே எல்லோரும் போய் விட்டால் நாங்கள் இரண்டு

பேருமா என்ன செய்வோம்? இரண்டு நாள் கழித்-துப் போகலாம்'' என்று அழகப்பன் எவ்வளவோ வாதாடிப் பார்த்தான். ''அடி ஆத்தி! அவர்கள் போனலும் எங்க நினைவாகவே இருப்பாக. நாளைக்கு நாங்க வந்த பிற்பாடு உங்களுக்கென்ன வேலைன்னு கேட்பாக ... சூடுசொரணை இருக்கா, மானரோசமிருக்கான்னு கேட்டுட்டாகன்னு நாங்க நாக்கைப் பிடிங்கிக்கின்னு சாகணும்'' என்று ஏகம்மை ஆச்சி கண்கலங்கக் கூறினர்கள்.

''அதுக்காக நீங்களும் இந்த 6 மணிக் காருக்கே போனல், எல்லோரும் ஒரே காரிலே போயிச் சண்டை கிண்டை வந்துட்டா ..எங்க ஆத்தா சும்மாயிருக்க மாட்டாகளே'' என்ருன் அழகப்பன்.

''எங்க அண்ணன் பேத்திவீடு திருநகர்லே இருக்காக. நாங்க அங்கே போயிப் படுத்திருந்துட்டுக் காலையிலே 6 மணிக் காரிலே போருேம்'' என்ருர் ஏகம்மையாச்சி.

''அடேயப்பா அவ்வளவு தூரத்திலேயிருந்து எப்படி ஆறு மணிக் காருக்கு வந்து பிடிக்க முடியும்? இங்கேயிருந்து போனல் நடந்தே போயிடலாம்'' என்ருன் அழகப்பன். ''போறதா இருந்தால் ராத்திரிக்குச் சாப்பிட்டுட்டுப் போங்க. எல்லாரும் இந்த ராத்திரியிலே போயித் திடீர்னு நின்னு அவங்க என்ன பண்ணுவாக...?'' என்ருள் செளந்தரம்.

''பரவாயில்லே ஆத்தா...உன் வீட்டிலே சாப்பிட்டு இனி நாங்க பேச்சுக் கேட்க முடியாது. இனி ஒரு பருக்கையை எடுத்துவச்சாக் கூட அது எங்களுக்கு ஒட்டாது. எங்கேயாவது ஓட்டல்லேயாவது சாப்பிட்டு விட்டு அங்கே படுக்கப் போயிடருேம்...

ஒருவேளை காரு கிடைக்கலேன்னுக்கூட உன்-மாமியா திரும்பி வந்தாலும் வருவாத்தா...''

''அப்படி எல்லாம் வரமாட்டாக. ஒருவழியா நின்னுட்டுக் காலையிலே போங்க...நீங்க சாப்பிடாட்டியும் பிள்ளைகளாவது சாப்பிடட்டும்!''

பெண்பிள்ளைகள் மூவரும் தங்களுக்குப் பசியில்லை என்று கூறிவிட்டார்கள். பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு எல்லோரும் சொல்லிக்கொண்டு புறப்படுகையில் சௌந்தரம் கண்கலங்கினுள். சமாதானமாக இருந்தால் அந்தக் கடல்போன்ற வீட்டில் எல்லோரும் மனமகிழ்ச்சியோடு இருந்துவிட்டு, சற்று முன்பின்னுக, ஒவ்வொருவராக, அமைதியாகப் பிரிந்து செல்லலாம்.

''பணம் படுத்துகிற பாடு இது. நகரத்தார் குடும்பங்களில் உயிருள்ள மாந்தர்களைவிட, உயிரில்லாத 'பணம்'என்ற ஒன்றுதான் எல்லாம் வல்ல முழு ஆற்றலுடன் நடமாடுகிறது. அது அவர்கள் அனைவரையும் ஆட்டிவைக்கிறது. லெட்சுமி ஆச்சியைப் பொருமை அழுக்கோடு, பொங்கும் கோபத்தோடு விரட்டியது அதுதான். ஏகம்மையாச்சி குடும்பத்தை இப்படிப் பசியோடும் பதைபதைப் போடும் திருநகருக்கு விரட்டுவதும் அதுதான். எப்பொழுது செட்டிநாட்டில் உயிருள்ளவர்களுக்கு மதிப்புக் கொடுத்து, இந்தப் 'பணத்திற்கு' இரண்டாவது, மூன்ருவது இடத்தைக் கொடுக்கிருர்களோ அன்றுதான் நகரத்தார் சமூகம் மகிழ்ச்சியான வாழ்வைஅடையும். நாள்தோறும் நரகத்தை அனுபவித்துப் பணத்தைச் சேர்த்து, ஒருநாள் இருநாள் விசேடங்களில் ஆரவாரத்திற்காக அதை அள்ளி இறைப்பதால் பயன் என்ன?''— இவ்வாறு நிலை

வாயிற்படியில் நின்றபடியே அழகப்பன் சிந்தனையை எங்கோ ஓடவிட்டிருந்தான். அவன் மனைவி தெரு முனைவரை சென்று, 'டவுன்ஹால் ரோடு' திருப்பத்தில் பெற்ரேரைவழியனுப்பிவிட்டு வந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் கவலைகளை ஒருசிறிது மறந்து, ஒரு தெம்பு வரப்பெற்றவனுக அழகப்பன் மாறினுன். தன் தாய் தந்தையைப் பற்றி இப்போது அவன் கவலைப்படவில்லை. சிறிதுசிறிதாகத் தன்னிடமும் வருவாய் கூடினுல் எல்லாம் வழிக்குவரும் என்று அவன் உள் மனம் கூறியது. 'பணம் தானே காரணம்? அது தன்னிடமும் வந்துவிட்டால்...!' கதவைத்தாழிட்டுவிட்டு இருவரும் மேல் மாடிக்குச் சென்ருர்கள்.

## 12

அழகப்பன் அவ்வளவு கவலையின்றிக் காணப்பட்டான். அவனுக்குத் தன் பெற்ரேர்மீது அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டிருந்தது. 'துன்பம் தொலைந்தது' என்பது போன்ற மனநிலையில்தான் அவன் இருந்தான். தன் மாமியார் குடும்பமும் புறப்பட்டுப் போனதில் அவனுக்குச் சற்று மனக்குறை இருந்தது. ஆனுல் அதுவும் அவனை உள் மனத்திற்சென்று தாக்கவில்லை. இப்போது அவன் மனம் எதிர்காலத்தைப் பற்றியே திட்டம் தீட்டிக் கொண்டிருந்தது. நல்ல மருத்துவன் என்ற பெயர் எடுக்கவேண்டும்; மிகுதியாக வருவாய் ஈட்ட வேண்டும். அந்த வருவாயைக் கண்டு, தன் பெற்ரேரே வாயடைத்துப் போகவேண்டும். அவர்கள் தன் வழிக்கு வருவதற்கு அந்தப் பணம் உதவி செய்யும். வெறும் சொற்களோ, கெஞ்சிக் கூத்தாடுவதோ, அதட்டி ஆர்ப்பரிப்பதோ பயனளிக்காது. நகரத்தாரில் யாரேனும் ஒருவரைப் பிற எதனுலும் வழிப்படுத்த முடியவில்லையென்ருலும்

தவித்துப் போவார்களே? ஒரு நாள் புதுக்கோட்டையில் ஆத்தாளுக்கு வைத்தியம் பார்க்கப் போன போது, இரவு பணமில்லாமல் பட்ட பாடு! நல்ல வேளையாக, உள்ளூரில் பாலூத்திய கோனரு, புதுக்கோட்டையில் எதிர்ப்பட்டு நாற்பது ரூபாய் கடனுக் கொடுத்திட்டுப் போனரு. இரக்கப்பட்ட மனுசன். இல்லேன்னு மறுநாள் பட்டினி கிடக்க நேர்ந்திருக்கும். அன்றைக்கு இராத்திரி, அப்பச்சியும் ரொம்ப நேரமா வராமேக் கவலைப்பட்டு, நான்கு பெண்பிள்ளைகளுமா அழுத அழுகை! ஆத்தா ஆஸ்பத்திரியிலே! அப்பச்சி எப்படியாவது, யார் கிட்டேயாவது பணம் வாங்கிக்கிட்டு வருகிறேன்னுட்டுக் கடைத்தெருப்பக்கம் போனவுக வரலே...வாழ்க்கையே வெறுத்துப் போச்சு...நாம் நாலுபேரும் தானே சுமை...நாலுபேருமே ஒண்ணுச் செத்துப் போயிடுவமா என்று பேசினதும், கேவிக் கேவி அழுததுவும்...வள்ளி அழுகையை நிறுத்தப் பெரும்பாடாப் போச்சு. இப்பவும் ஊருக்குப் போறதுக்குப் பணம் வச்சிருக்காகளோ, இல்லே தேனியைப் பார்த்துக் கேட்டு வாங்கிக்கிட்டுத்தான் போகப் போருகளோ?'' சௌந்தரவல்லி இவ்வாறு பல வழிகளில் மனம் குழம்பினுள்.

தான் ஓர் ஆணுகப் பிறந்திருந்தால் இவ்வாறு அவர்கள் அனுதைகள் போலப் போகத் தான் செயலற்றுக் கிடக்க வேண்டியநிலை வந்திருக்குமா? என்னயிருந்தாலும் ஆண் ஆண் தான், பெண் பெண் தான். தன்னை ஆணுக்கு ஆணுகவும் பெண்ணுக்குப் பெண்ணுகவும் கருதிச் செல்லமாக வளர்த்ததை யெல்லாம் அவள் நினைவுகூர்ந்தாள். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை இருந்தால் இப்படி அவர்களை விட்டுவிட்டுத் தவித்துக் கொண்டிருப்பானு? கண-

வனுடைய பெற்றோர் போனதற்கும் தன் பெற்றோர் போனதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடிருப்பதாக அவள் உணர்ந்தாள். அவர்கள் பணத்திமிரினால் போனார்கள்; வண்டி கிடைக்காவிட்டால், வந்த கோபத்தில் வாடகைக்கார் வைத்துக் கொண்டு கூடப் போய் விடுவார்கள். இவர்கள் நிலை அப்படியில்லையே. மானத்திற்கு அஞ்சி, வசைக்கு அஞ்சி இவர்கள் அவ்வாறு வெளியேற நேர்ந்தது.

ஓர் ஆண் தன் பெற்றோருக்குக் கடமையாற்ற, தன் பெற்றோரைக்காப்பாற்ற உரிமையுண்டென்றால், ஒரு பெண்ணுக்கும் தன் பெற்றோரைப் போற்ற, பேண உரிமையில்லையா? கடமையில்லையா? பெண்ணுக்குத் தன் பெற்றோரின் வீடு உறவற்றதாகவும் அப் பெற்றோர்க்குத் தன் பெண்ணின் வீடு அன்னியமாகவும் போய்விடுமா? அவர்களுக்குள் இரத்த பந்தம், சுற்றத்துரிமை எதுவுமே கிடையாதா?

மதுரைக்கு வந்த ஒன்றிரண்டு நாட்களுக்குள்ளாகவே சௌந்தரம் சில பெண் டாக்டர்களையும், அலுவல்கங்களில் வேலைபார்க்கும் பெண்களையும் சந்திக்க நேர்ந்தது. அவர்களைப் போல் தானும் படித்துப் பட்டம் பெற்று, வேலை பார்த்திருந்தால் கைநிறையச் சம்பளம் வாங்கித் தன் தாய் தந்தையரையும் உடன் பிறந்தவர்களையும் காப்பாற்றியிருக்கலாமே என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள். இனிமேல் எந்தச் சமூகத்திலும் 'பெண் வேலைக்குப் போவதா?' என்று கேட்க முடியாது. வேலைக்குப் போகிற பெண்கள் தான் வேண்டுமென்றும், சம்பாரிக்கும் தகுதியுள்ள மனைவி தான் வேண்டுமென்றும் கருதுகிற காலம் வந்து கொண்டிருக்கிறது. வேலைக்குப் போவதால் பெண்-

கள் கெட்டு விடுகிறுர்கள் என்பதெல்லாம் அங் கொன்றும் இங்கொன்றும் நடப்பதை வைத்துக் கயிறு திரிப்பதாகும். ஆனுலும் 'இதையெல்லாம் எண்ணி யெண்ணி என்ன பயன்? தன்னைப் படிக்க வைத்துப் பட்டதாரி ஆக்கவில்லையே? அப்படிச் செய் திருந்தால் இப்போது தன் பெற்ருேரை யார் தயவு மின்றித் தான் காப்பாற்றியிருக்கலாமே?' என்று அந்த எளிய நெஞ்சம் அன்பால் நெகிழ்ந்தது.

"பெண்ணுக்கும் உரிமை வேண்டும். பெண்ணை மாடாக அல்லவா மதிக்கிருர்கள். இந்த வலையபட்டி அயித்தைக்குத் தான் எத்தனை செருக்கு? ஒரேயடி யாகத் தலைமுழுகி விட வேண்டும் என்கிருர்களே?" —எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணிச் சௌந்தரத்தின் உள்ளம் புண்ணுகிக் கொண்டி ருந்தது. நேரமோ மிகவும் கடந்து விட்டது. தான் தன்னையுமறியாமல் அடுப்படியிலேயே படுத்துக் கிடந்து விட்டதை நினைத்துப் பதைத்துப்போன சௌந்தரம் அங்கிருந்து எழுந்து புறப்பட்டாள். அங்கே படுக்கையறையில் அழகப்பனைக் காண-வில்லை.

○ ○ ○

படுக்கையில் விழுந்து, தலையணையில் முகம் புதைத்துத் தேம்பி அழுதுகொண்டிருந்தாள் சௌந் தரவல்லி. மேலே விசிறிய மின்காற்ருடியின் சுழற்சி யில் அவள் கூந்தல் பல இழைகளாகப் பிரிந்து பறந்து கொண்டிருந்தது. குழம்பிய மனத்தோடு கீழே மருத்துவமனையில் இருந்துவிட்டு வந்த அழகப்பன் தேம்பிக்கொண்டு கிடக்கும் தன்மனைவி யைக் கண்டான். சௌந்தரத்தின் கண்களில் வழிந் தோடிக்கொண்டிருந்த நீர் அழகப்பனின் நெஞ் சத்தை நனைத்து விட்டது. அவள் அருகில் அமர்ந்த அவன் கண்களிலும் ஈரம் தட்டியது. அப்படியே அவளை அரவணைத்துக்கொண்ட அழகப்பன் தான்

பிறந்த சமூகத்தையே மனத்திற்குள் நினைந்து நினைந்து நைந்து கொண்டான். எத்தனை பெண்கள் இந்தச் சமூகத்தில் திருமணமே கிட்டாமல் தெருவில் நிற்கிறார்கள்; வாழ்வை இழக்கிறார்கள்; வழிதவறிப் போகிறார்கள்! திருமணமான பெண்களையும், இப்படி ஏதோ அந்த முறையில் கொஞ்சம் குறைந்து விட்டது; இந்த முறையில் கொஞ்சம் விடுபட்டு விட்டதென்று பெண்ணைப் பெற்றவர்களைப் பிடுங்கித்தின்னலாமா?

என்றைக்கு ஒருபெண் கட்டிக்கொடுக்கப்பட்டுக் கணவன் வீட்டுக்குப் போய்விட்டாளோ, அன்றிலிருந்து அவள் அந்த வீட்டுத் திருமகளில்லையா? மற்ற இனத்திலெல்லாம் கட்டிக் கொடுக்கிறவரை தான் கவலை. இந்த இனத்திலோ கட்டிக்கொடுத்த பிறகும் கவலை. சேச்சே... நல்ல செட்டியவீடு இது!... அழகப்பன் சிறிதே கண்ணயர்கின்றான்.

"கழுகு ஒன்று பிணத்தைக் கொத்தித் தின்னுகிறது. கோட்டான் எங்கோ கூவிஅழுகிறது. நரி நான்கு திசையிலும் ஊளையிடுகிறது. எங்கும் பிண நாற்றம்!" ஏதோ ஒரு கனவிலே ஒரு மணித்துளி ஆழ்கிறான் அழகப்பன்... "அப்பப்பா! பணம் என்ற பேய் அங்கே நடனமாடுகிறது. லெட்சுமி ஆச்சி தலைவிரி கோலமாய் நின்றாடுகிறார்கள். திடீரென்று பணம் பாம்புபோல் மாறி வருகிறது; சீறுகிறது; சௌந்தரத்தைக் கடிக்கப் போகிறது. சௌந்தரம் ஓடோடி வருகிறாள்! 'அத்தான், அத்தான்!' என்று கத்துகிறாள். அழகப்பன் ஓடிப்போய் அவளை எதிரேற்று அணைத்துக்கொள்கிறான். ஆனாலும் என்ன பயன்? சௌந்தரத்தைச் சுற்றி இரத்த வெள்ளம் ... அந்தப் பணப்பாம்பு அவளைக் கடித்து விட்டது... 'அத்தான்...அத்தான்... நீங்களாவது நன்றாயிருங்கள்!'...சாய்ந்து விழுகிறாள் சௌந்தரம்."

'சௌந்தரம், சௌந்தரம்' என்று கத்திக் கொண்டே எழுந்திருந்தான் அழகப்பன், கனவு கலைந்து. அவளும் 'என்ன, என்ன?' என்று பதறிப் போய் எழுந்திருந்தாள்.

''ஒன்றும் இல்லை.ஏதோ கெட்டகனவு கண்டேன்''.

சௌந்தரம் மௌனமாய்ச் சிரித்தாள். ஏதோ விரக்தியாய் வேண்டா வெறுப்பாய்த் தலை தூக்கினாள். அவளை அப்படியே கைத்தாங்கலாய் எழுந்து, உட்காரவைத்து, அழகப்பன் கூறினான். ''ஒண்ணும் கவலைப்படாதே! நாம ரெண்டுபேரும் இங்கேயே இருந்திருவோம். ஊருக்குப் போனாத் தானே வம்புவரும்!''

''நம்ம செட்டிய வீட்டுச் சாதி அப்படி இல்லையே அத்தான்! நூறு முறை ஊருக்குப் போக வேண்டிவரும். நீங்க படிச்சுக்கிட்டே இருந்துட்டிக. உங்களுக்கு ஒண்ணும் தெரியாது! உங்க ஆத்தா என்னை வாழவிடமாட்டாக...... முதல்லேயிருந்தே எங்க குடும்பத்து மேலே ஒரு வெறுப்பு...பணமில்லை என்பதுதான் எங்க குறை...உங்க தரத்துக்கு நாங்க சரியில்லை ... கலியாணத்துக்கு நாங்க முன்வந்திருக்கப் படாது...''

''எனக்கு முறைப்பொண்ணு நீ ...அம்மான் மகள் ... நம்ம ரெண்டு குடும்பமும் தரத்திலே ஒண்ணுங்கிறதுக்கு இது போதாதா?''

''நீங்க படிச்ச மெடிக்கல் காலேஜிலே அப்படி ஏதாவது கேள்விப்பட்டிருப்பீக! நம்ம சாதியிலே பணம் இருந்தால்தான் தரமுண்ணு ஒத்துக்குவாக. இல்லைன்னா தரங்கெட்டவுகண்ணு பேசுவாக ... எல்லாத்தையும் எழுதி வச்சு வித்துச்சுட்டு என்னைச் செஞ்சு கொடுத்தாக. என்ன மிச்சம்? இவ்வளவும்

பண்ணுனவுகளுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் கிடைக்காமேப் போச்சு... என் தலைவிதி... நான் வாழாவெட்டியாப் போகணும்னு ... எழுதியிருக்கு.''

''சேச்சே! அப்படிச் சொல்லாதே . . . நீ நல்லா வாழப் போறே. வாழ்வரசியா விளங்கப் போறே.''

''அதெப்படி அத்தான்! உங்களையும் நான் வாழ விடலையோன்னு எனக்குப் பயமா இருக்கு.''

''இல்லை . . . .என்னோடே நீ இருக்கிறவரை, நம்மை யாரும் பிரிக்க முடியாது . . பிரிக்கவே முடியாது!''

''அதுக்குச் சொல்லலை. அங்கே ஒங்க ஆத்தா நினைச்சு நினைச்சு வெந்துக்கிட்டிருக்காக . . . .இங்கே ஒங்ககூட நான் இருந்தாலும், அவங்க அனுமதியில்லாமே இருக்கிறேமேன்னு என் மனசு குத்திக்கிட்டிருக்கு. அவங்களா மனசுமாறி நம்மளை வாழவிட்டாங்கன்னு, அப்படியே சந்தோசத்திலே நான் பூரிச்சுப் போவேன் . .''

அழகப்பன் சிரித்து விட்டான். ''வாழவிடலைன்னுப் போறுக. அவங்களை நாம புறக்கணிச்சிட வேண்டியதுதான். அதெல்லாம் பழைய காலம் . . இப்ப ஒத்து வரலைன்னு அவங்க வேறே, நாம வேறே!''

''அதுதானே நீங்க தெரியாமேப் பேசறீக. நம்ம சாதியிலே அது முடியாது. இதிலே கட்டுகள் அதிகம். முதல்லே தாய்தகப்பனைப் புறக்கணிக்கப் பங்காளிகள் விடுவாகளா சொல்லுங்க. .''

''அந்தப் பங்காளிகள் இப்ப நடக்கிறது நியாயமுன்னு நினைக்கிறுகளா? ஒரு பெண்ணை வாழவைக்க

உதவிக்கு வராத பங்காளிகள், குடும்பம் ரெண்டு பட்டுருமேன்னு மட்டும் கவலைப்படுவாங் களாக்கும்?''

''அது எப்படியோ? சரி...எங்க அப்பச்சிக்கு ஒரு வேலை பார்த்துக்கொடுக்கிறீகளா? மாதம் நூறு, நூத்தம்பதோ கிடைச்சாக்கூட, அது அவங்களுக்கு வயித்துப் பாட்டுக்கு உதவும்.. நீங்க எத்தனை பேர்கிட்டே பழகிறிக.. உங்களுக்கு இங்கே செல்வாக்கு ரொம்ப.. எங்க அப்பச்சி ஒங்ககிட்டே சொல்லக் கூச்சப்பட்டு, எங்கிட்டேச் சொல்லிட்டுப் போனாக.. 'ஆத்தா, மாப்பிள்ளை நினைச்சா அஞ்சு நிமிஷத்திலே எனக்கு வேலைவாங்கித் தந் திருவாக...நான் ரொம்ப நாணயமா நடந்து,பேரைக் காப்பாத்திருவேன்னு சொல்லு ஆத்தா. எந்த வேலையா இருந்தாலும் சரி...பார்க்கிறேன்னு' சொன்னாக.... 'தங்கச்சிகளையும் ஆத்தாளையும் பசியாமேச் சாப்பிட வைக்க வேறு வழியே இல்லை... இனிக் கடன் யாரும் தரமாட்டாக ... ஒரு வேலை வாங்கித்தரச் சொல்லு ஆத்தா! இந்த ஊரிலே வந்திருந்தா ஒருவேளை தொந்தரவா இருக்கு மோன்னு நினைச்சா, வேறே ஊரிலேயாவது கேட்டுப் பார்க்கச் சொல்லு.. இந்த ஊரிலே இருந்தாலும் நாங்க ரொம்ப தூரம் தள்ளி, தனியாப் போயிடு வோம். பாரமா இருக்கமாட்டோம். நீங்களா ஏதாவது உதவி கேட்டா வருவோம்.. கேட்டுக் கடுதாசு எழுதிப்போடு ஆத்தா...மாப்பிள்ளைக்கு வேலை அதிகம்... அதனாலே நீ எழுதிப் போடு ஆத்தா!'ன்னு படிச்சுப் படிச்சு அப்பச்சி சொல் லிட்டுப் போனாக. என்ன அத்தான்? என்னடா இவளாலே தொந்தரவுன்னு மலைக்கிறீகளா? அப்ப' வேண்டாம் அத்தான்... அப்பச்சி சொன்னாக,

'ஒருவேளை மாமனுர்க்கு இப்படி வேலை கேக்கிறது கௌரவக் குறைச்சல்னு மாப்பிள்ளை நினைச்சா . . என்னை யாரோ தூரத்து உறவுக்காரர்னு சொல்லி வேலை கேக்கச் சொல்லு . . அப்படியும் பொய்சொல்லிக் கேக்கிறது சரியில்லேன்னு நினைச்சா . .விட்டுடு ஆத்தா ...மாப்பிள்ளை கௌரவம்தான் முக்கியம். நான் எங்க பெரியையா மகன் சேக்கப்பண்ணனுக்கு மதருசுக்கு எழுதியிருக்கேன். அவுக இப்ப ரொம்ப நல்லா இருக்காக. அவுக தம்பி வீடு தான் நம்மளாட்டம் நொடிச்சுப் போனுக . .... சேக்கப் பண்ணங்கிட்டேப் போயி, நேரிலே பேசி, ஒரு வேலை தேடிக்கிறேன்'னு அப்பச்சி சொல்லிட்டுப் போனுக!''

சௌந்தரம் ஒரு சொற்பொழிவுபோல் தன் மனச் சுமையை இறக்கி வைத்து முடித்தாள். அழகப்பன் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அவளுக்கு ஆறுதல் கூறி. கௌரவமான வேலை ஒன்றைப் பார்த்துத் தருவதாகவும் வாக்களித்தான். சௌந்தரம் முகம் மலர்ந்ததைக் கண்டு, அவளை அவ்வாறே கவலை தோன்ருமல்—வீட்டு நினைப்பு வராமல்—கொண்டு செல்ல வேண்டும் என்று அழகப்பன் மனத்திற்குள் முடிவு செய்து கொண்டான்.

○ ○ ○

அழகப்பன் மருத்துவ மனை மிகச் சிறப்பாக விளங்கியது. காலையும் மாலையும் கூட்டம் குறைய வில்லை. இரவு 10 மணிகூட ஆகும், அவன் மாடிக்குச் செல்வதற்கு. சௌந்தரம் அடிக்கடி கீழேயிறங்கி வந்து, அவனுக்கு உதவி செய்தாள். நண்பகல் பொழுதில் அவனுக்கு அவள் விருப்பமான நல்ல உணவு வகைகளைச் சமைத்துப் பரிமாறி, அவனைச்

சற்றுக் கூடுதலாகவே சாப்பிட வைத்து மனம் மகிழ்வாள். மாலையில் கூட்டம் அதிகமாகும்போது, வந்து நின்று நோயாளிகள் சிலரோடு பேசிப் பழகுவாள். குழந்தைகள் அழுதால் வேண்டியன கொடுப்பாள்.ஒரு நாள் வசந்தி என்ற பெண் கணவனுல் கைவிடப்பட்டவள் ஒருத்தி வந்திருந்தாள். அவள் கணவன் வேருெருத்தியைக்கூட்டுச்சேர்த்துக் கொண்டு இவளை வீட்டை விட்டே விரட்டி விட்டானும். எழுத்தர் வேலை பார்க்கும் பொறுப்பான மனிதர்களே இப்படி நடந்துகொள்கிருர்களே என்று செளந்தரம் வருந்திளுள். ஆணும் பெண்ணும் சேர்ந்து அலுவலகங்களில் வேலை பார்க்கலாம். அதற்காக அலுவலகத்தில் உடன் வேலை பார்க்கும் பெண்கள் மீது ஆசைப்பட்டு, அவர்களை இழுத்துக் கொண்டு, இப்படி மனைவி மக்களைக் கைவிட்டு விட்டால் எப்படி? வசந்திக்காகச் செளந்தரம் மிகவும் மனம்வருந்திளுள். அவளோ வாயும்வயிறுமாக இருந்தாள்.தலைப்பிரசவமாம்! மருந்துவாங்கக்கூடப் பணமில்லை என்று அழுதாள், அந்தப் பெண். டாக்டரிடம் காட்டியபிறகு, மருந்துச் சிட்டைப்படி மருந்துகள் வாங்குவதற்குச் செளந்தரம் உதவிளுள். பத்தும் பத்தாததற்கு உதவிசெய்து, எல்லாமருந்துகளையும் வாங்கிக் கொடுத்து வசந்தியை அனுப்பி வைத்தாள் செளந்தரம்.

ஞாயிறன்று மாலை மட்டும் மருத்துவமனைக்கு விடுமுறை. அந்நேரம் முழுவதையும் தன் மனைவியுடன் உலாவச் செல்வதற்கும், மனமகிழ்வோடு பொழுதைப் போக்குவதற்கும் என்று அழகப்பன் பயன்படுத்திக் கொண்டான். எப்படியும் வாரம் இருமுறை சினிமாவிற்குத் தன் மனைவியை அழைத்துக் கொண்டு போய்விடுவான். படித்த காலத்தி-

லெல்லாம் அவன் திரைப்படமே பார்த்தது கிடையாது. உடன் படித்த மாணவர்களும் அவனை 'அடைக்கோழி' என்று கேலி பேசுவார்கள். அதைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. இப்போது, தன் மனைவிக்குத் துன்பநினைவு வரக்கூடாதென்று இரண்டாவது ஆட்டத்திற்குக்கூடச் சளைக்காமல் போய்வர ஆர்வம் காட்டினான், அவன்.

சௌந்தரத்திற்குப் பொருத்தமான புடவைகளை அவன் தேடி எடுத்துக்கொடுத்தான். நிறப்பொருத்தம் பார்த்து இரவிக்கைத் துணிகளையும் தேர்ந்தெடுப்பான் அவன். நேரத்திற்கு ஒரு உடையணிய வைத்து, பூ வாங்கித் தலைநிறைய வைத்துக் கொள்ளச் சொல்லி, அவளை அடிக்கடி அழகு பார்ப்பதில் அவனுக்கு வெகு பிரியம். வெள்ளிக் கிழமைகளில் அவள் தலை முழுகி விட்டு, கூந்தலை உலர்த்தும்போது, மயில் தோகையை விரித்துக் கொண்டு நிற்பதுபோல இருக்கும். அன்று மட்டும் காலை பத்துமணியுடன் ஆஸ்பத்திரி அலுவல்களை முடித்துக் கொண்டு, மனைவியுடன் மாரியம்மன் கோவிலுக்குப் போய்வர அவன் தவறுவதில்லை. காரில் மிகவும் நெருக்கடியாக இருக்குமென்று, இழுவண்டி கொண்டுவரச் சொல்லி அதில் போய்த் திரும்புவார்கள். கார்த்திகைதோறும் சின்னக்கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, திருப்பரங்குன்றம் போய்த் திரும்புவார்கள். சௌந்தரம் முன்னைவிடச் சற்றுப் பருத்துக் காணப்பட்டாள். ஓரளவு அவள் ஊர்க்கவலைகளை மறந்திருந்தாள். அவள் எதையாவது நினைக்க அழகப்பன் இடம் கொடுத்தால் தானே? காலையில் எழுந்தவுடன் மருத்துவமனை துப்பரவு செய்யப்பட்டு, வீட்டுமுன் கூட்டிச் சாணிதெளித்துக் கோலமிட்டிருக்கிறதா

என்று பார்க்க வேண்டும். மாடியைச் சுத்தம் செய்ய வேண்டும், விளக்கிக் கழுவித் தந்துவிட்டு வேலைக்காரி போகுமுன், அவளிடம் அரைக்கக் கரைக்க வேண்டியவற்றை அரைத்து வாங்கிக் கொள்ள வேண்டும். 6 மணிக்குள் அத்தானுக்குக் காபி போட்டுக் கொடுக்க வேண்டும். 8மணிக்" கெல்லாம் மருத்துவமனைக்குக் கீழே இறங்கி விட்டால் பிறகு 11 மணிக்குத்தான் அழகப்பன் திரும்பு. வான். காலையில் அவனுக்குப் பலகாரம் கொடுத்து விட்டுப் பிறகு 10 மணிக்கு ஒரு காபி எடுத்துச் செல். வாள், சௌந்தரம். அவள் காலடியோசை எப்படித் தான் கேட்குமோ அவனுக்கு; உடனே வந்து காபியைப் பருகிவிட்டுத் தன் மனைவியோடு ஆசை. யாக ஐந்து நிமிடம் பேசிவிட்டு மீண்டும் கடமையில் மூழ்குவான் அழகப்பன். நண்பகல் 1 மணிக்கெல்லாம் உணவு தயாரித்து விடுவாள் சௌந்தரம். இடையே தன் கடமைகளையெல்லாம் அவள் முடித்துக்கொள்வாள். 10 மணிக்குக் காபி கொண்டு போகும் பொழுதே குளித்துத் தலைமுழுகிப் புதிய உடையுடுத்து, தலைவாரிப் பூச்சூடி, பூவும் பொட்டு-மாய்ச் சௌந்தரிய தேவதை போல அவள் விளங்கு-வாள். ஒவ்வொரு நாளும் 10 மணிக்கெல்லாம் அவள் புதுமணப் பெண் போலப் பூத்துக் குலுங்கி வரு-வதைப் பார்த்துப் பார்த்து, அழகப்பன் பூரித்துப் போவான். பிற்பகல் சற்றே இளைப்பாறிவிட்டு 4 மணிக்கெல்லாம் ஒரு காபி குடித்துவிட்டுக் கீழே இறங்கினால், பிறகு இரவு 9 அல்லது 9½ மணிகூட ஆகும் அவன் வேலை முடிந்து மேலே வருவதற்கு. பிற்பகல் சற்று நேரம் கூட உறங்கிப் பழகாத சௌந்தரம் வீட்டுவேலைகளைக் கவனமாகப் பார்ப்-பாள். கணவன் வருமானத்தைக் கணக்கெழுதி

வைப்பாள். கடைச்சாமான்கள் வாங்கிவருவாள். சுவையான உணவு வகைகளைச் சமைப்பாள். கொண்டவன் மனமறிந்து நடப்பாள். எப்போதும் தன் கணவனைப் புன்னகையோடு தான் எதிரேற்பாள். அவளை ஒரு கடலுக்கு ஒப்பிடலாம். பிறந்த வீட்டுக் கவலைகள், மாமியார் பற்றிய நினைவுகள் என்ற பெரிய திமிங்கிலங்கள், எல்லாவற்றையும் உள்ளே அடக்கிக் கொண்டு, அமைதியாக அலை வீசும் கடலாகக் காட்சியளித்தாள்.

ஆறேழு மாதங்கள் இப்படி இன்ப மயமாக உருண்டோடின. அந்தக் குடும்பம் என்ற உலகத்தில் இருவர் ஞாயிறும் முழுமதியமுமாய்—சூரியனும் நிலவுமாய்ச் சுழன்று சுழன்று இயங்கிக் கொண்டிருந்தார்கள். எத்தனையோ நோயாளிகள் என்ற நட்சத்திரங்கள் ஒளி மழுங்கி வரும்; ஒளி பெற்றுத் திகழ்ந்து போய்விடும். அங்கே அறிவுடைய இருவர் வாழ்வில் இன்பம் மேலோங்கித் திகழ்ந்ததால், விளக்கடியில் இருள்போலத் துன்பம் பதுங்கிக் கிடந்தது.

○ ○ ○

லெட்சுமி ஆச்சிக்கு எந்த நேரமும் தன் அனுமதி இல்லாமல், தன் மகன்வீடு மதுரையில் 'கொட்டமடிப்பது' வயிற்றெரிச்சலாக இருந்தது. எந்த நேரமும் அவர்கள் தேவையில்லாமல் கும்பிகொதித்து, எதையாவது கூறிக் கொண்டிருந்தார்கள். எந்த வகையில் எதிர்ப்பைக் காட்டலாம்; எந்த வகையில் சௌந்தரத்தின் வாழ்வைத் தகர்க்கலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாய்த் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொடுத்த அம்புகளெல்லாம் குறிதவறி விழுந்து கொண்டிருந்தன. எல்லாமா தவறிவிடும் என்ற தெம்பிலே அவர்கள் எய்தவண்ணம் இருந்தார்கள்.

மெய்யன் சோமநாதனை விட்டு நீண்ட கடிதம் எழுதச் சொன்னார்கள். தரையைப் பகைத்துக் கொள்வது நல்லதல்ல என்றும், முறைப்பணம் முழுவதும் தரும் வரை சௌந்தரத்தை அவள் தாய்வீட்டுக்கு அனுப்பி விடவேண்டும் என்றும், அப்படி அனுப்பவில்லையென்றால் விபரீதங்கள் ஏற்படுமென்றும் எழுதச் சொல்லி, மூன்று முறை படித்துக் காட்டச் சொல்லி, கடிதத்தைத் தபாலில் போட்டிருந்தார்கள் கும. அவர்கள் இதிலெல்லாம் தலையிட மறுத்தார்கள். பையன் சொல்லைமீறிப் போய்விட்டான் என்று அவருக்கு வருத்தம். 'ஆனா-லும் போய்த் தொலையட்டும் என்று விட்டுவிடுவது-தான் நல்லது' என்பது அவர் கருத்து. லெட்சுமி ஆச்சி அப்படி இலேசில் விடுவதாயில்லை.

. கடிதத்தைப் பெற்றதும் அதை அழகப்பன் சௌந்தரம் கண்ணில் படாமல் மறைத்துவிட்டான். பிறகு பங்காளி வீட்டில், கலியாணச் சாமான்கள் வாங்கவந்த சாலியாச்சி மூலம் திட்டுதிட்டென்று திட்டியனுப்பியிருந்தார்கள் லெட்சுமி ஆச்சி. அவர்-கள் வந்தபோது சௌந்தரம் வீட்டில் இல்லை. அழகப்பனிடம் அவர்கள் எல்லாவற்றையும் சொல்லி, 'தம்பி! சௌந்தரத்தை உடனே ஊருக்கு அனுப்புங்க. இப்படியே காலம் போயிடாது. அவுங்களும் சரிபண்ணி ஆயிரம் ரூபாயை ஆத்தாகிட்டக் கொடுத்தால் எல்லாம் சரியாகப் போய்விடும். பிறகு நீங்க நல்லாக் கூட்டியாந்து வச்சுக்கங்க... உங்க ஆத்தா நிலைமை பரிதாபமா இருக்கு... ஒரே பிடிவாதமா இருக்காக ... பெரியவுக... அரை மேனியாப் போயிட்டாக...இன்னம் எவ்வளவு காலத்துக்கு இருக்கப் போருக ... அவங்க மனசு போல நடந்துக்கங்க'' என்றார்கள்.

அழகப்பனுக்கும் ஒரு எண்ணம் தோன்றியது. இரண்டொரு வாரத்தில் வலையபட்டி போய்த் தாயைக் கெஞ்கிக் கூத்தாடி மனத்தை மாற்ற முயலாம் என எண்ணினுன். அதை அவன் இன்னும் சௌந்தரத்திடம் கூடச் சொல்லவில்லை. அதற்குள் அவசரப்பட்டு அவனுடைய தாயார் நடந்து கொண்ட விதந்தான் அவன் மனத்தை மேலும் கல்லாக்கிவிட்டது.

## 13

சனிக்கிழமைச் சந்தையில் வலையபட்டி லெட்சுமி ஆச்சி வேகுப்பட்டி ஏகம்மை ஆச்சியைப் பார்த்து விட்டார்கள். உடனே வசைபுராணம் தொடங்கியது. காய்கறிக் கடைக்காரர்கள் எல்லோரும் இதை வேடிக்கை பார்த்தார்கள். 'செட்டிய வீட்டுச் சனங்கள் இப்படித்தான் சண்டை போடும்' என்று அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் ஏளனமாக ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டார்கள், வலையபட்டி ஆச்சி அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. பொன்னமராவதியையே கதிகலங்க அடித்துவிட்டார்கள் அவர்கள். ''மருந்து போட்டு மாப்பிள்ளையைச் சேர்த்துக் கிட்டா அந்த மலையாண்டி சும்மா விடுவாரா? நான் பெத்தது என்ன? வளர்த்தது என்ன? இப்ப மானமில்லாமேப் போயித் திங்கிருக. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. வருமானத்தையெல்லாம் வாரிக் கொட்டிக்கிருக. என் வயித்தெரிச்சல் சும்மா போகாது. அந்த வெட்டுடையாள் இருந்தாக் கேக்கட்டும் ... நாசமாப் போறவுக ... நாதியத்துப் போறவுக...'' இப்படியே கேட்கக்கூடாத, வாயால் பண்புள்ளவர்கள் பேசக்கூடாத எல்லாவற்றையும்

லெட்சுமி ஆச்சி பேசித் தீர்த்தார்கள். செட்டி-மார் நாட்டில் விருந்து பேணுவதைக் கண்டால், அவர்களைக் கோபுரக் கலசத்தில் ஏற்றிவைத்துக் கும்பிடத் தோன்றும். சந்தையிலோ, சந்தியிலோ, வீட்டு எதிரிலோ அவர்கள் தம் உறவினர்களோடு சண்டை பிடித்துக் கொள்வதைப் பார்த்தால் காறித் துப்பிவிடவும் தோன்றும்! எல்லாவற்றுக்கும் பணம் என்கிற போதை தரும் மாத்திரைதான் காரணம். அஃதாவது பணம் என்பது ஒரு போதைப்பொருள். அதை நினைத்தாலே நல்லவர்களும் கெட்டவர்-களாக மாறிவிடுவார்கள். யாருக்குத்தான் பணத்-தின்மீது மோகம் இல்லை? பணமே ஒரு கொடிய நோயாக மாறி ஒரு சமூகத்தைப் பீடிக்கிறது; 'எலும்புருக்கி நோய்' போல அச் சமூகத்தையே இதய எலும்பற்ற கூடாக்கி வருகிறதென்றால், அதைச் செட்டி நாட்டிலே தான் மிகுதியாகக் காணலாம்.

ஏகம்மையாச்சி தன் மகள்கள் இன்பவல்லி, வள்ளியுடன் தூக்க முடியாத சுமைகளைத் தூக்கிக் கொண்டு வேகுப்பட்டியைச் சென்றடைந்தார்கள். ஆனால் அந்தச் சுமைகளையெல்லாம் அவர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் சுமந்து சுமந்து பழக்கப்-பட்டவர்கள்தான். இப்போது அவர்கள் லெட்சுமி ஆச்சி நான்கு பேருக்கு முன்னிலையில் ஏசியது பெரும் சுமையாக - நெஞ்சம் தாங்காத பாரமாக இருந்தது. வீட்டிற்குள் போய்ப் பெட்டி, கூடை-களை இறக்கி வைத்ததுதான் தாமதம் - ஓவென்று கூவி அழுதார்கள்! 'என்ன என்ன' என்று, நாகப்-பச் செட்டியார் ஓடோடி வந்தார். ''ஒங்களைக் கட்டிக்கிட்டது போதும். ஒங்க தங்கச்சி இப்படி எங்களை ஊரு ஒலகத்துக்கு முன்னாடித் திட்டிப் பொசுக்கிறதும் போதும்—!'' மீண்டும் அழுகை.

''பழைய கதை தொலையட்டும். இப்ப சௌந்தரம் கலியாணத்திலேதான் இந்த வம்பு வந்தது. இந்த வம்பை நீங்கதானே விலைக்கு வாங்கினீக. நானா வாங்கினேன் ... சரி சரி என்ன நடந்ததுன்னு சொல்லிட்டு அழு—''

அழுதார்களே தவிர ஆச்சி வாய்திறந்து பேசவில்லை. பின்னர் மகள்கள் வாயிலாக நடந்ததெல்லாம் கேள்விப்பட்ட நா. உடனே மதுரைக்குப் புறப்பட்டார். 'மீண்டும் முறைதலைக்காக ஆயிரம் ரூபாய் கிடைக்கிற பொழுது சௌந்தரத்தைக் கொண்டுபோய் விடலாம். அந்த நல்ல நேரம் வருகிற வரை சௌந்தரம் நாம குடிக்கிற கஞ்சியைக் குடிச்சிக்கிட்டு நம்ம கூடவே இருக்கட்டும்' என்பது அவர்கள் அனைவரின் முடிவாக இருந்தது. நா. புறப்படும்போது ஏகம்மை ஆச்சி உடம்பு 103 டிகிரி காய்ச்சலில் நெருப்பாகத் தகித்துக் கொண்டிருந்தது. பெட்டிக்கடை ஆறுமுகத்திடம் பதினைந்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு நா. மதுரைக்குக் காரேறி விட்டார். தம் மனைவியைப் பற்றிக் கவலைப்படவோ, தயங்கவோ அவருக்கு மனமில்லை; நேரமுமில்லை. 'பணமில்லை என்பதற்காக என்னதான் பேசலாம்? மானம் போய் உயிர் காவலா?' எனத் துடித்தது அவர் நெஞ்சம்.

○ ○ ○

லெட்சுமி ஆச்சி தமக்கு உடல் நலமில்லை என்று பொய்த்தந்தி கொடுத்திருந்தார்கள். அதை உண்மையென்று நம்பிப் புறப்பட்ட அழகப்பன் மதுரை பஸ் நிலையத்திலேயே உள்ளூர்க்கார வியாபாரி ஒருவரைப் பார்க்க நேர்ந்தது. அவர் முதல் நாள் மாலையில் லெட்சுமி ஆச்சி உடல் நலத்தோடு கடைக்கு வந்ததையும் வாயில்

வந்தபடி தம் சம்பந்தி வீட்டைப் பேசியதையும் கூறினுர். ''எங்கே என்னை மீறி இவுக மகள் வாழ்ந்து விடுவாளா, பார்க்கலாம்'' என்று சபதம் போட்ட-தையும் கூறினுர். அவர் வேறு இனத்தவராதலால் நடந்ததையெல்லாம் அப்படியப்படியே கூறினுர். ஒன்றும் புரியாமல் திகைப்படைந்த அழகப்பன் வீட்டிற்குப் போய்விட்டு மறுநாள் சிந்தித்துக் கொண்டு ஊருக்குப் போகலாம் என முடிவு செய்தான். அவன் வீட்டிற்குத் திரும்பியபோது தன் மாமனுர் அங்கு வந்திருக்கக் கண்டான். வெற்றிலைப்பேட்டை பஸ் நிறுத்தத்தில் இறங்கி அவர் வீட்டிற்கு வந்திருந்தார்.

நடந்ததையெல்லாம் கூறித் தாம் வந்திருந்த நோக்கத்தையும் நா. கூறினுர். அழகப்பனுக்குத் தன் மனைவியை அனுப்ப உள்ளூறச் சம்மதமே இல்லை. அவளுக்கும் கணவனைப் பிரிய மனமே இல்லை. நா. அவர்கள் ''ஏகம்மைக்கு 103 டிகிரி காய்ச்சல். நீ வரலைன்னு செத்துக்கூடப் போயிடு-வாள். அவளாலே பேசக் கேட்க முடியலை. எங்க மானம் பெரிசா? உன் வாழ்வு பெரிசா? உடனே புறப்படு!'' என்று முகத்தை மாற வைத்துக் கொண்டு பேசினுர். மறுகணம் செல்வ மகள் கண்ணீர் பொலபொலவென்று உதிரப் பெட்டியை எடுத்தாள்; பொருள்களை எடுத்து அடுக்கினுள். அழகப்பன் வாயும் வயிறுமாக இருக்கும் தன் மனைவியை எவ்வளவோ பேணிக் காப்பாற்ற எண்-ணினுன். தாயின் கடிதமும் அவன் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. பணம் என்ற பேய் தங்களை வெட்டிப் பிரிப்பதை அவனுல் தடுக்க முடியவில்லை. ஒரு சமூகத்தையே ஆட்டுகிற பேய் அவனை மட்டும் விட்டுவிடுமா? தன் மனைவியை

நல்ல ஆடை உடுக்கச் சொல்லி, தலை நிறையப் பூ வாங்கிக் கொடுத்து வைத்துக் கொள்ளச் சொல்லி, கன்னம் குழிவிழுகச் சிரிக்கச் சொல்லி அழகப்பன் அழகு பார்த்தான். ஏதோ பைத்தியம் பிடித்தவன் போல் அவன் பேசியதும், சிரித்ததும்...சே! நாகப்பச் செட்டியார் மனம் கூட உருகிவிட்டது. ஆயினும் அந்தப் பணம்...மானம் என்ற உயிர்—அவரை முன் வைத்த காலைப் பின் வைக்க விடவில்லை. விடை பெறும் போது செளந்தரவல்லி அழுதுவிட்டாள். ஏதோ இருவரும் இனிச் சந்திக்காமலே போய் விடு-பவர்கள் போலப் பெருமூச்சு விட்டார்கள்; அழுதார்கள். மாலை ஆறு மணி வண்டி, அந்த இரண்டு அன்றிற் பறவைகளையும் ஒன்றை விட்டு ஒன்று பிரித்து விட்டது.

○ ○ ○

செய்தியைக் கேட்டதும் லெட்சுமி ஆச்சி மதுரை வந்து மகனுடன் தங்கிவிட்டார்கள்.

ஐந்தாவது மாதமும் போய்விட்டது. செளந்தரம் தாய் வீட்டிலேயே 'மருந்து' குடித்தாள். அந்தச் சடங்கையும் முறைப்படி நடத்த முடியவில்லை. முன்னைய முறையையே கொடுக்க முடியாதவர்களுக்கு, இதற்கு எங்கிருந்து பணம் வரும்? மகளுக்கு மருந்து கொடுத்து, அவள் வயிற்றில் இருக்கும் சிசுவோடு வாடுவதைப் பார்த்து, ஏங்கிய ஏகம்மை ஆச்சி மாறி மாறிப் படுக்கையில் விழுந்து எழுந்திருக்கவே மாட்டாமல் போய்விட்டார்கள். அவர்கள் காலமானதுகூட உரிய நேரத்தில் மாப்பிள்ளைக்கு அறிவிக்கப்படவில்லை. செய்தி கிடைத்த-தும் அழகப்பனும் ஆத்தாவும் வேகுப்பட்டி போனார்கள். குமு. வலையபட்டியிலிருந்து வந்திருந்தார். செட்டிநாட்டில் இழவு கேட்பதும் ஒரு சடங்குதான்.

சடங்கு முடிந்ததும் தன் மனைவியைக் கூடப் பார்க்க விடாமல் பையனைக் கையோடு மதுரைக்குக் கூட்டிப் போய் விட்டார்கள், லெட்சுமி ஆச்சி. சௌந்தரம் பிரிந்ததிலிருந்து மருத்துவமனை வேலைகளை ஒரு எந்திரம் போல் பார்த்து வந்தான், அழகப்பன். லெட்சுமி ஆச்சி அவன் இப்பக்கம் அப்பக்கம் போய்விடாமல் கண்காணித்து வந்தார்கள். அண்ணன் மனைவி காலமானதைக் கேள்விப்பட்ட பிறகும்கூட, அவர்கள் மனம் இளகவில்லை. அழகப்பன் வாடி, மெலிந்து அரை ஆளாகி விட்டிருந்தான். போதாக் குறைக்கு, அவர்கள் மறு கலியாணத்திற்குப் பேசத்தொடங்கினார்கள். செட்டிநாட்டில் ஒருசிலர் அழகப்பனுக்கு —எல்லாம் தெரிந்தும் —பெண் தருவதாகச் சொல்லி விட்டார்கள். லெட்சுமி ஆச்சிக்குச் சொல்ல வேண்டுமா? மதுரையிலிருந்தபடியே பெண் தேர்வு செய்வதிலும், இடம் பார்ப்பதிலும் அவர்கள் ஈடுபட்டார்கள். ஒரு நாள் அழகப்பன் கடுமையாகப் பேசிய பிறகுதான் அவர்கள் அம் முயற்சியைக் கைவிட்டார்கள்.

குமர. வுக்கு லெட்சுமி ஆச்சியின் போக்கு ஒத்து வரவில்லை. அந்த ஆச்சிக்கு எதிராக நடக்கவும் துணிவு வரவில்லை. இந்த நிலையில் அவர் மதுரைக்கு வரமுடியாதென்று ஊரிலேயே தங்கி விட்டார். கடைசி காலத்தில் வேலைக்காரர்கள் பொங்கிப் போட்டதைத் தின்று, உடல் நலன் கெட்டு அவரும் படுத்த படுக்கையானார். மருத்துவன் என்ற பட்டத்தோடு நூற்றுக்கணக்கானவர்களை அழகப்பன் படுக்கையினின்றும் எழுந்து நடமாட வைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய மனைவி மருத்துவவசதி ஏதுமின்றி, பூரண கர்ப்பிணியாய் நலிந்து மெலிந்து படுக்கையிற் கிடக்க நேர்ந்தது

அவனுடைய தந்தையோ இறுதிக்காலத்தில் கவனிப்பாரின்றி மோசமான நிலையையடைந்து விட்டார். இந்த நிலையில் 'தந்தைக்கு ஆபத்து' என்ற தந்தி வரவே தாயும் மகனும் வலையபட்டிக்கு விரைந்தார்கள். உடனே சென்று மருத்துவ ஏற்பாடுகளைச் செய்ததால் கும. பிழைத்துக் கொண்டார். அவரை மதுரைக்குத் தனிக் காரில் கொண்டு வந்து அரசு மருத்துவ மனையில் சேர்த்தான் அழகப்பன். எந்த நேரமும் தந்தையின் நலன் கருதி அவன் ஓடியாடி உதவி செய்தான்.

வேகுப்பட்டியில் சௌந்தரம் முதன் முதலாகக் கருவுற்றிருந்தும், சத்துள்ள உணவுகளைச் சாப்பிட இயலாமல்,மருந்துகள் வாங்கப் பணமும் இல்லாமல் துயருற்றாள். மதுரை மருத்துவ மனையில் வசந்தா என்ற பெண்ணுக்குத் தான் உதவியது அவளுக்கு நினைவுக்கு வந்தது. இப்போது தனக்கு உதவுவதற்கு எவருமில்லாமல் தவித்தாள் அந்தப் பேதைப் பெண்.

○ ○ ○

காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஏகம்மை ஆச்சி இறந்து நான்கு மாதம் போய்விட்டது. நாகப்பச் செட்டியார் மனைவியைப் பறிகொடுத்த ஏக்கத்திலும் கடன் தொல்லையினாலும் அரைமேனியாகப் போய் விட்டார். அடிக்கடி இருமல் துளைத்தெடுத்தது. 'பணமில்லாதவன் பிணம்' என்பது உலகப் பழமொழி. நகரத்தாரிடையே அது உணரப்படுமளவு வேறு யாராலும், எங்கேனும் உணரப்படுகிறதா என்பது ஐயமே? தன் மகள் சௌந்தரத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், அவர் கண்களில் நீர் பெருகி நிறைந்தது. அன்றைக்கு மானமே பெரிதென்று மதுரைக்கு ஓடோடிப் போய், அவளைக் கூட்டிவந்தது தப்பு என்று அவர் மனம் படாத பாடு

பட்டது. ''மாப்பிள்ளை எவ்வளவோ வாதாடியும், தான் பிடிவாதமாய்க் கூட்டிவந்து இப்பொழுது என்ன ஆயிற்று? ஒருவேளை சத்தான உணவுண்டா? முதற்பேறு ஆயிற்றே என்று ஒரு மருந்து உண்டா? 'குங்குமப்பூ' வாங்கிப் பாலில் போட்டு அடிக்கடி கொடுக்க வேண்டும். 'ஐந்தாவது மாதம் முதல் அப்படிக் கொடுத்துவந்தால்,பிள்ளை செக்கச் செவே-லென்று - சந்தனத்துச் சிற்பம் போல்-கொளுகொளு வென்று பிறக்கும்' என்று மாப்பிள்ளை பேச்சுக்குப் பேச்சு சொல்வாரே? அவரிடத்திலேயே விட்டிருந்-தால் அவர் நினைக்கிறபடி பிள்ளை பிறந்திருக்குமே. அட பாவமே! நடக்க முடியாமல் திண்டாடுகிருள் சௌந்தரம்; மெலிந்து, முகம் வெளுத்து, பொலிவை இழந்து உலர்ந்த சருகு போலிருக்கிருளே! முதன் முறை கருவுற்ற தாய்க்கு இருக்க வேண்டிய களை சிறிதுகூட இல்லையே?'' நாகப்பச் செட்டியார் கண்-களில் நிறைந்த நீர் அங்குமிங்கும் அலைபாய்ந்தது; இடமின்றி நிலமகளைச் சரண்புகுந்ததுபோல், தரை-யில் விழுந்தது.

'பேறுகாலம் வந்துவிட்டதே? இன்றோ, நாளையோ இடுப்பு வலித்தால் என்ன செய்வது? யாரிடம் கடன் கேட்பது? எங்குக் கூட்டிப்போவது? ஒரு பொட்டுத் தங்கம்கூட இல்லையே, அடகு வைப்போமென்ருல்! இந்த நிலையில் மாப்பிள்ளைக்கு மறு கலியாணம் பேசு கிருர்களாம். செட்டிநாட்டில் எத்தனையோ பேர் தங்கள் பெண்ணைக் கொடுப்பதாக, மதுரைக்கே போய் விரட்டுகிருர்களாமே? அட பாவிகளா? வாழ முடியாமல் முதல் மனைவி தவிக்கும்போது,வம்புக்குப் பேசினுல், இப்படியா போய் விழுவது? பாவ, புண்ணியம் என்பதெல்லாம் பேச்சோடு சரி. சமய-மும் சந்தருப்பமும் நேர்ந்தால் எது செய்யவும் தயார், இந்த இனம்.'

'மனித மனம் அப்படித்தானே? ஒருவேளை மாப்பிள்ளை சம்மதித்து விட்டால்...! கூடவே இருக்கும் லெட்சுமி ஆச்சி மனத்தை மாற்றி விட்டால்...! மகளைத் தான் அன்று கூட்டிக்கொண்டு வந்தது தவறு என்று நாகப்பர் மனம் அவரையே வாட்டியது. ஆனால் தங்கச்சி பேசிய பேச்சு ... அதைக் கேட்டால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டுமே...மானம் போகிறதென்று ஏகம்மை அழுஅழு என்று அழுதாளே. ... இப்போ அவளும் போய் விட்டாள், என் தலையிலே கட்டிவிட்டு. நானு இதற்கெல்லாம் ஆளு . . நான் போயி, அவ இருந்திருந்தால் பிரசவம் பார்த்துப் பெண்ணைக் காப்பாத்தலாமே... நான் இப்ப என்ன செய்வேன்? புத்தியில்லாமேப் போயிக் கூட்டிக்கிட்டு வந்துட்டேனே ...? அட ராமா, சோதனை போதாதா...!'

'ஏகம்மை! ஏகம்மை! நீ தானே மானம் பெரி சென்று, என்னையும் ஏசினாய்? இப்போ நீ உயிரை விட்டுட்டியே அம்மா? இன்றைக்கு உன் மகளைப் பிரசவம் பார்க்க, ஒரு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போகாட்டா என்மானம் போயிடுமே? யாருகிட்டேப் போவேன்? கட்டிக்கொடுத்த பெண்ணைக் கூட்டி வரவே கூடாது. திட்டினால் திட்டு அவங்களோடே இருக்கட்டும். நாம என்ன தப்பு செய்தோம்...நகை போட்டோம் ... சீதனம் கொடுத்தோம் ... மாமியார் சாமானுக்குக் கொடுத்தோம் ...அதனாலே கடன் பட்டு எல்லாத்தையும் இழந்துட்டுல்ல நிக்கிறோம்? கடைசியா ஒரு வருசத்து முறைக்குமட்டும் ஆயிரத்துச் சில்லரை ரூபாய் கொடுக்க முடியல்லே...உலகத்திலே அவனவன் சீதனத்துக்கே சீட்டெழுதிக் கொடுக்கிறதில்லையா? சீதனம் சீட்டோடே போன கதை எத்தனையோ எனக்குத் தெரியுமே! நாங்கள்

ஒரு சிறு தொகை தானே...வட்டியும் முதலுமா அதையும் என்னிக்கிருந்தாலும் கொடுத்திருவமே ... ஏமாத்தவா போருேம் ..! இப்போ சௌந்தரத்தை மதுரையிலே கொண்டுபோய் விட்டுடவா? மாப்பிள்ளே கண்ணுங் கருத்துமாப் பார்த்துக்குவாக? லட்சுமி கிடக்கிரு பத்ரகாளி. நமக்கு மாப்பிள்ளேதான் முக்கியம் ... அதுக்கில்லே ஏகம்மை! அவுகளுக்கு மறு கலியாணம் பேசுகிருகளாம் ஏகம்மை! மறு கலியாணம்... தங்கமான மாப்பிள்ளேயாச்சே ... மனசு மாறிட்டா ... நான் சௌந்தரத்தை உடனே கூட்டிக்கிட்டு மதுரைக்குப் போகட்டுமா... என்ன ஏகம்மை! ஏகம்மை!''

சௌந்தரம் தந்தையார் புலம்புவது கேட்டு ஓடோடி வந்தாள்: ''என்ன அப்பச்சி! ஆத்தா பேரைச் சொல்லி இப்படி வாய் புலம்பிக்கிட்டே இருந்தா நல்லாயிருக்கா... செத்தவுக வரவா போருக...அதது தலேயெழுத்துப்படிதான் நடக்கும். விதியை யாராலே வெல்ல முடியும்''?

தங்கைமார்கள் இன்பவல்லி, வள்ளி இருவரும் தங்கள் தந்தையாரைப் பரிவோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். சௌந்தரம் ஒருத்திதான் பேசினுள் என்ருலும் எல்லோருக்கும் அதே கருத்துத்தான் என்று முகங்கள் பேசின. நாகப்ப செட்டியார் தட்டுத் தடுமாறித் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர் போல் பேசினுர்:

''அதுக்கில்லே ஆத்தா(ள்)! இப்போ உன்னேக் கூட்டி போயி மதுரையிலே விட்டிடுவோமுன்னு நினேச்சேன் — அதுதான் ஒங்க ஆத்தாவை நினேச்சுக்கிட்டேன்.''

''ஆத்தா இருக்கிறவரைக்கும் ஒவ்வொண்ணுக்கும் கலந்து யோசிப்பீக. சண்டை அடிச்சுக்குவீக...கடைசியா ஆத்தா(ள்) சொல்றபடிதான் பெரும்பாலும் செய்வீக!''

''அது தான்'த்தா இப்போ தப்பாப் போச்சு. கேள்விப்பட்டியாத்தா(ள்) மாப்பிள்ளைக்கு மறு கலியாணம் பேசுருளாம் அந்தச்சிறுக்கி... புறப் படா'த்தா! இப்பவே மதுரைக்குப்போவோம்... அவளை என்ன சேதின்னு கேட்க வேணும்!''

''அதுக்கா கவலைப்படுறீக... எனக்கு எல்லாம் தெரியும்? உங்க மாப்பிள்ளை அப்படியில்லே... கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதிச்சாலும் அவுக வேற கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டாக... அப்பச்சி! அவுக அப்படி வேறே கலியாணம் பண்ணிக்கினாலும் நான் தாங்கிக்குவேன். அவுக அவ்வளவு நல்லவுக.அவுக ஆத்தாதான் அப்படி...''

''லட்சுமி கூட நல்லாத்தான் பாசத்தோட வளர்ந்தா(ள்).பணந்தான் அவளைப் பேயா மாத்திப் பிடிச்சு!''

''உங்க மாப்பிள்ளை அன்னிக்குக் குறுக்கே நின்னுக அப்பச்சி! என்னை அனுப்புறதுக்குச் சம்மதிக்கவே இல்லை. நீங்க 'மானம் மரியாதை போகுது'ன்னு கண்டிப்பாப் பேசப்போக, அவுகளாலே மறு வார்த்தை பேச முடியலே. அதிலேயும் உங்ககிட்டே அவுகளுக்கு ரொம்ப மரியாதை. கடைசியா என்ன சொன்னுக தெரியுமா? 'நீ போ சௌந்தரம்...விரைவிலேயே உன்னைக் கூட்டிக்கிருப்பிலே முயற்சி செய்றேன்'னு சொன்னுக... நமக்குக் காலம் வெல்லலே... ஆத்தாளும் போயிட்டா(ள்). நானும் என் வீட்டுக்குப் போறதுதான்

நல்லது. ஆனால் இந்நிலையிலே வேண்டாம் அப்பச்சி. மாமியா தூத்திப்பிடுவா... பிள்ளை பொறந்ததும் தூக்கிக்கிட்டு நானும் போயிடறேன் அப்பச்சி. இனி நான் உங்களுக்குச் சுமையா இருக்கப்படாது! மத்த சாதியிலேயெல்லாம் கட்டிக்கொடுக்க வேண்டிய பொண்ணுகதான் சுமையாயிருக்கும். நம்ம சாதியிலேதான் கட்டிக் கொடுத்தவளும் சுமையா இருக்கிறதைப் பார்க்கிறோம்...நான் இனி மேல் ஒருத்தருக்கும் சுமையா இருக்க மாட்டேன் அப்பச்சி... மதுரையிலே போயி, அவுகஅடிச்சாலும் உதைச்சாலும் ...அங்கேயே கிடப்பேன்...ஒரு வேளை அவுக வேறே கலியாணம் பண்ணிக் கிட்டா லும் நான் அவுக வீட்டிலே வேலைக்காரியாவாவது இருப்பேனே தவிர, திரும்ப வரவேமாட்டேன்... உங்கமாப்பிள்ளை சுகம் தான் என் சுகம். அவுகளா வேறே கலியாணம் தேவைன்னு நான் குறுக்கே நிக்கமாட்டேன்... அவுக ஆஸ்பத்திரியிலே நர்சா வாவது இருப்பேன். நீங்க இன்னும் ரெண்டு பொண்ணுகளைக் கரையேத்த வேணும்... இப்படிக் கவலைப்பட்டீகன்னு அப்பறம் இந்தப் பொண்ணு-களுக்கு இந்த உலகத்திலே யாரு இருக்கா...எனக் காவது அவுக இருக்காக...நீங்க கவலைப்படாதீக அப்பச்சி...'.

பெண்கள் மூவரும் விசும்பினார்கள், தேம்பி-னார்கள், நெகிழ்ந்தார்கள்; நிலைமாறி அழுதார்கள். சௌந்தரம் வாய்விட்டு அரற்றி அழலானாள். நாகப்பசெட்டியாரின் மார்பு, பனியன் எல்லாம் கண்ணீரால் நனைந்தன. உலகம் முழுவதும் இருள் கவிந்து கொண்டு வந்தது. நெடுநேரமாகியும் அந்த வீட்டில் இன்னும் விளக்கேற்றப்படவில்லை. ஒருவர் முகம் ஒருவருக்குச் சரியாகப் புலனாகாத இருளில்,

தேம்பலும் விசும்பலும் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தன.

## 14

லெட்சுமி ஆச்சி வாய்சிவக்க வெற்றிலை போட்டுக் கொண்டு, தன்னைப் பார்க்க வந்திருந்த சிவல்பட்டிச் சிட்டாச்சியுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அடிக்கடி பணிக்கத்தை எடுத்து இருவரும் எச்சில் துப்பித்துப்பி, அதன் வாயெல்லாம், அவர்கள் வாய்போல் எச்சில் வடிந்து கொண்டிருந்தது. நண்பகல் உணவுக்குப்பிறகு ஓய்வெடுக்கும் நேரமாகையால் அழகப்பன் தன் அறையில் சற்றே படுத்திருந்தான். அவனுக்கு உறக்கம் வரவில்லை. தன் மனைவிக்கு மகப்பேறு நெருங்குகிறது என்ற நினைவு அவனுக்கு ஓடிக் கொண்டேயிருந்தது. தன் மாமியாரும் இறந்து போன நிலையில், அந்தக் குடும்பம் மிகவும் சீர் கெட்டிருப்பது அவன் எண்ணத்தில் தோய்ந்து கிடந்தது. இதற்கொரு தீர்வுகாண வேண்டுமே? உடனே புறப்பட்டுப்போய் மனைவியை அழைத்து வந்து விடுவதே மேலென அவன் உள்ளுணர்வு கூறியது. தாயார் என்றும் போல் தடையாக இருப்பார்கள்; ஏசுவார்கள் என்று அவன் எண்ணினாலும் முன்புபோல அதற்காக அவன் கவலைப்படவில்லை.

ஒரு மாதம் முன்னதாக அவனுடைய தகப்பனுர், சிறிது உடல் தேறியதுமே 'வலையபட்டிக்குப் போய்விடுவோம்' என்று லெட்சுமி ஆச்சியைக் கூப்பிட்டார். அந்த ஆச்சி தம் மகனை விட்டுப் போகப்பிரியப்படவில்லை. செளந்தரவல்லி மீண்டும் அங்கு வந்துவிட்டால் என்ன செய்வது? அவனை

எப்படியும் வாழாவெட்டியாக்க வேண்டும் என்பதே அவரின் நோக்கும் போக்குமாக இருந்தது. எப்படியோ தங்கள் பேச்சைக் கேட்காமல் அழகப்பன் சௌந்தரவல்லியை அழைத்துவந்து ஆறேழு மாதம் வாழ்ந்து விட்டான். அவளும் கருவுற்றுவிட்டாள். தன் சபதம் பிழைக்கிறதே என்று பத்திரகாளியாக மாறிய லெட்சுமி ஆச்சி அவர்களைப் பிரித்தது மட்டுமின்றி, 'இனி ஒன்று சேர விடுவதில்லை' என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அதனால் கும. மட்டும் தனியாக வலையபட்டிக்கு மீண்டும் போக நேர்ந்தது.

இப்போது எதற்கும் தயங்குவதில் பயனில்லை. உடனே தன் மனைவியை அழைத்து வந்து விட வேண்டும் என்று அழகப்பனின் உள்ளுணர்வு துடித்தது. ஏதோ ஆபத்து வரப்போவது போல-வும் அதைத்தடுக்க வேண்டும் போலவும் அவன் நெஞ்சம் அவாவியது, மறுநாள் ஒரு பெரிய 'ஆப-ரேஷன்' சிகிச்சை ஒன்றிருந்தது. அறுவை மருத்து-வர் ஒருவரை ஏற்பாடு செய்துவிட்டதாலும், தன் மருத்துவமனையில் தஞ்சம் புகுந்து, வந்துசேர்ந்த நோயாளியை இடையில் கைவிட்டு விட்டுப் போகக் கூடாது என்பதாலும் ஒருநாள் போனாலும் நோயாளியின் உயிருக்கு ஆபத்து என்பதாலும் அழகப்பன் மறுநாளே போவதென்பதை அதற்கு அடுத்த நாளில் போவதென மாற்றிக் கொண்-டான்.

அவன் காதில் சிட்டாச்சி குரல் தெளிவாக விழுந்தது.

'பொண்ணு சிகப்பு. கிளிமாதிரி இருப்பாள். எத்தனை நாளைக்கு உம் மகனை இப்படி நீபார்த்துக்க முடியும். அங்கே உன் மகனுக்கு அப்பச்சி, வேலைக்

காரங்க பொங்கிப் போடுறதைத் தின்னுக்கிட்டு எத்தனை நாளைக்குக் கிடப்பாக. பாவம் பொடுக்குப் பொடுக்குன்னு இருக்கிருக. உம் மகனைக் கேட்டுச் சொல்லு. அவசரமில்லை, வசதியான இடம்...''

தொடர்ந்து லெட்சுமி ஆச்சி குரலும் கேட்டது.

''சத்தம் போட்டுப் பேசாதே. அவன் மனசை அந்த மாரியாத்தாதான் மாத்தணும். இந்த ஒண்ணு மத்தவுக வீட்டிலே கலியாணம் பண்ணி ஒண்ணும் விடியலே. கேட்டியா ... ஏகம்மை செத்த வீட்டிலே செலவழிக்கப் பணமில்லாமே, வந்தவுகளைக் கவனிக்கவே இல்லையாம்...சனங்க காறித் துப்புது''.

''அடி அந்த லட்சுமணய்யர் தன் கிளப்பிலே தான் கடனுக்கு, அன்னிக்குச் சோறு போட்டா-ராம். நானூறு ரூபாய் பாக்கியாம். அதுவே இன்னம் கொடுக்கலையாம்...அந்த மனுசனும் முடியாதவராப் போயிட்டாரு.''

''எப்படி முடியும்? எனக்குத் துரோகம் பண்ணுன ...எனக்குக் கொடுக்க வேண்டிய முறை-களை இல்லைன்னுக...இப்ப அவனை ஏமாத்தி மகளைக் கலியாணம் பண்ணினுக ... கடைசியா வருச முறைக்கு கையை விரிச்சாக. உருப்படாமேப்-போனுக ... ஆண்டவனுப்பார்த்துக் கூலியைக் கொடுத்துட்டான்...''

''அவுக போருக... இப்போ நீங்க இவ்வளவு பணமிருந்தும் ஒரு மகனுக்குச் சௌகரியமா எல்லாம் செய்து வைக்காமே விடப்படாது. நாலைந்து இடம் வருது. குளிபிறைப் பொண்ணுதான் இடமும் நல்ல இடம்; பொண்ணும் அழகான பொண்ணு ... நீ நாளைக்கே மெதுவாக் கேட்டுட்டா நல்லது.''

''ஆமா அவுக சுமாராக் கொடுப்பாகளா?''

''நல்லாக் கேட்டியே? ஒங்க கிட்டே மாதிரி அவுககிட்டேயும் நல்லாப் பணமிருக்கு''

''அப்புறம் ஏன் ரெண்டாந்தாரமாக் கொடுக்கிருக!''

''உங்க தரத்தையும் பணத்தையும் கேள்விப்-பட்டுத்தான்.''

''இல்லே. பொண்ணைப்பத்தி ஏதோ சொல்ருகளே...''

''பொண்ணு அழகா இருகிறதினுலே ஆயிரமும் சொல்லுவாக. கூடப் படிச்ச பையனிட்டே சிரிச்சுப் பேசினுளாம். பொண்ணு வெகுளி, இதை வச்சுக்-கிட்டுக் கதை கட்டுருக!''

'அதான் கேட்டேன், வேறே ஒண்ணுமில்லே'

''பவுன் 105 போடுவாக. வயிரப் பூச்சரம், காதோலை, காப்பு எல்லாம் போடுவாக. முப்பதி-ஞயிரம் சீதனமும் பதினையாயிரம் மாமியார் சாமா-னுக்கும் தருவாக...இன்னம் மாப்பிள்ளைக்கு...'' திடீரன்று ஒரு குரல் பின்னேயிருந்து பேசியது.

''மாப்பிள்ளைக்கு விலங்கு போடுவாக... ஒருத்-தியை வச்சிட்டு இன்னொருத்தியைச் செய்ய இப்பச் சட்டம் கிடையாது. ஏன் இப்படி வெட்டி வம்பு பேசிக்கிட்டு இருக்கிறீக.வந்தால் வந்த வேலையைப் பார்த்துட்டுப் போகக் கூடாதா...?'' என்று அழகப்பன் குரல் அதிர ஒலித்தது.

''அட நம்ம சிட்டாச்சியிடா! நான்தாண்டா சொல்லிவிட்டிருந்தேன்.''

"ஆமா உனக்கும் வேறே வேலே இல்லே. என்னேச் செயிலுக்கு அனுப்பிச்சுட்டுத்தான் விடுவே."

"ஏண்டா அப்படி? கட்டின கணவனே செயி-லுக்கு அனுப்புவாளா உன் பெண்டாட்டி?"

"முதல் பெண்டாட்டி மறுத்தா, புகாரைக் கிளப்பினுத்தான் சிக்கலாம். சௌந்தரம் அப்படிப் பட்டவள் இல்லேயே தம்பி," என்று சிட்டாச்சியும் கூடப் பேசினர்கள்.

"அது தெரிஞ்சுதான் அவள் வாழ்வையே பாழ-டிக்க வந்திருக்கீக. இல்லேயா?"என்று கடிந்தான் அழகப்பன்.

"நாமளா வேண்டாமுங்கிறோம். அவனேப் பெத்தவுகளுக்குல புத்தி வேணும். சொல்றது ஒண்ணு; செய்யிறது ஒண்ணு. ஊரை ஏமாத்தலாம்; உத்தவுகளேயும் ஏமாத்தலாமா?"

"ஒருத்தரையும் ஏமாத்தக் கூடாது. இப்ப ஒருத்-தரும் ஏமாத்தலே. இந்தக் கலியாணத் தாக்கலேத் தவிர வேறே தாக்கல் பேசுங்க... ஆமா... அப்புறம் நான் பொல்லாதவனு மாறிடுவேன்... ரெண்டு நாளிலே சௌந்தரம் இங்கே வந்திருவா... அவளோடே இருக்க முடியுமுன்னு, இங்கேயே நீங்களும் இருக்கலாம். இல்லேன்னு, இன்னேக்கே வலேயபட்டிக்குப் புறப்படுங்க. அப்பச்சிக்கு மறு-படியும் உடம்பு சரியில்லேயாம்...!" —அழகப்பன் பொரிந்து தள்ளிவிட்டு விருட்டென்று கீழிறங்கிப் போய் விட்டான். ஆச்சிகள் இருவரும் ஒருவரை ஒருவர் திகைப்போடு பார்த்துக் கொண்டனர். பேச்சு எழவில்லே.

அழகப்பன் மனம்மாறவேண்டும் என்று லெட்சுமி ஆச்சி மனத்திற்குள் மலையாண்டியை வேண்டிக் கொண்டார்கள். அவன் மட்டும் குளிபிறைப் பெண்ணைக் கட்டிக் கொள்ளச் சம்மதித்துவிட்டால் 105 பவுன், வயிரப்பூச்சரம், காதோலை, வயிரக்காப்பு, ரொக்கமோ இன்னும் கேட்டது கிடைக்கும்! மாமி-யார் சாமானுக்கென்று வண்டிவண்டியா வாங்கலாம். ஊரே மெச்சும். மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரியப்படுவார்கள் எல்லோரும். லெட்சுமி ஆச்சி மனம் மவுனமாக அலைபாயத் தொடங்கியது. அழகப்பன் அதட்டிய பிறகும் அந்த அலை ஓயவில்லை.

''கொண்டுவந்தா(ல்) அப்படிப்பட்ட பெண்ணுக் கொண்டு வரணும். இப்படியா? ஒரு வருசத்து முறைப்பணம் ... ஆயிரத்துச் சில்லரை ... இதைக் கொடுக்க முடியாத, வக்கத்த வறளி வீட்லே போயி சம்பந்தம் பண்ணிேனுமே... சேச்சே மானக் கேடு... இந்த சௌந்தரத்தை வாழாவெட்டியா அடிக்கணும். இந்தப் பக்கம் தலைகாட்ட விடப்-பிடாது. நான் மதுரையை விட்டுப் போயிட்-டேன்னு வந்து புகுந்துடுவாக. அதுக்காகத் தானே, நான் அவுக வயதான காலத்திலே முடி-யாமே இருக்கிருகன்னு தெரிஞ்சும் வலையபட்-டிக்கே போகாமே, இங்கேயே காத்துக்கிட்டுக் கிடக்கிறேன். எப்படியோ அந்த மீனுட்சி புண்ணி-யமா, அழகப்பன் மனசு மாறி என் வீட்டுலே விளக் கெரியணும். அவள் பிள்ளை பெத்துடுவாள். பெத்து என்ன பண்றது...? அதுக்கு அரைப்-பவுனுலே செஞ்சுபோட, அவ பொறந்த வீட்டிலே வக்கு இருக்கா? வசதி இருக்கா? ஒண்ணு மத்த கழுதைக்குப் பிள்ளை ஒருகேடா? வேகுப்பட்டி

யிலே தானுப் பெத்து வச்சுக்குவா(ள்). நான் ஒண்ணும் மசியப் போறதில்லே. என் வீட்டிலே பணக்காரக் குடும்பத்திலே பிறந்த, அந்தஸ்துள்ள ஒருத்திக்குத்தான் வாழ்க்கை. ஒரே மகனைப் பெத்துவிட்டு இப்படி வறண்டவுக வீட்டிலே மாட்டிக்க எனக்கென்ன தலையெழுத்தா? இரண்டு மூணு ஆம்பிள்ளைப்பிள்ளை இருந்தாலும், ஒருத்தனுக்கு இல்லாட்டி ஒருத்தனுக்கு நல்லா முறைதலை வாங்கிச் செய்யலாம். ஒரே பையனுக்கு இப்படிப் போறதுக்கு எனக்கென்ன தலைவிதியா? எங்க வீட்டிலே வசதியில்லையா? பணமில்லையா? நாங்க ஏன் அப்படி எல்லாத்தையும் விட்டுவிட்டுப் போகணும்? அப்படி இந்த அண்ணன் வீடுதான் எனக்கு என்ன செய்தாக?''

இவ்வாறு எண்ணமிட்ட லெட்சுமி ஆச்சி அழகப்பன் போனதிலிருந்து பிரமை பிடித்தது போல், வெற்றிலையை மென்று தின்று கொண்டிருந்த சிட்டாச்சியிடம், குளிபிறைப் பெண்ணை எப்படியும் முடிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர்கள். சிட்டாச்சி 'கேட்டுப் பார்க்கிறேன்' என்று சொன்னலும் 'இனி இந்தப்பக்கம் தலைகாட்டக்கூடாது' என்று மனத்திற்குள் நடுங்கிக் கொண்டே, கீழே இறங்கி, அழகப்பன் கண்ணில் படாமல் நடையைக் கட்டினுர்கள்.

அழகி இப்போதெல்லாம் படிப்பில் ஆழ்ந்திருந்தாள். மதுரையில் ஒரு 'கான்வெண்டில்' அவளைச் சேர்த்திருந்தார்கள்.

## 15

வலையபட்டியில் குமட. தன்னந்தனியாக வீட்டில் இருந்தார். அவருக்குச் சமைத்துப்போட

வேலைக்கார வெள்ளையன் இருந்தான். கூடமாட வேலைசெய்ய நாகு என்ற சின்னக்குட்டி ஒருத்தியும் இருந்தாள். வீட்டின் பின்புறத்தில் இரண்டு சிறு குடிசைவீடுகளில் ஆசாரி ஒருத்தரும் தோட்டக்-காரன் ஒருத்தனும் குடியிருந்தார்கள். இருந்தாலும் இவர்கள் எல்லாம் மூன்றுங்கட்டையும் தாண்டி, சமையற்கட்டு வீட்டிற்குப் பின் புறத்திலேதான் இருந்தார்கள். கடல்போன்ற அந்தப் பெரிய வீட்-டில் முகப்பு, ஆல்வீடு, பட்டகசாலை, வளவு, இரண்டாங்கட்டு, மூன்றுங்கட்டுவரை குமர. ஒருவர்-தான் நடந்து கொண்டிருந்தார். வீடு வெறிச்-சோடிக் கிடந்தது. கூட்டி மெழுகுவதற்குக்கூட யாரும் கவலை எடுக்காமல், குப்பை படிந்தும் இருளடைந்தும் போனது அந்தவீடு. அன்றைக்கு வந்த செய்தித்தாளை முதல்வரிமுதல் கடைசிப்-பக்கத்தின் கடைசிவரி வரை மனப்பாடம் செய்வது போல் படித்து முடிப்பதுதான் குமர. வின் அன்றாட முக்கிய அலுவல். வெளியில் அவசியமிருந்தாலன்றி அவர் போவதே இல்லை. அன்றையத்தாளில் "ஒருவருமில்லாத வீட்டில் புகுந்து கொள்ளை. ரொக்கம் இருபதாயிரமும் நகை ஐம்பதாயிரத்-துக்கும் களவு. போலீசு நாய் துப்புத்துலக்க வரவழைக்கப்பட்டிருக்கிறது," என்ற செய்தியைப் படித்த அவர் சட்டென்று ஊரைக் கவனித்தார். அதில் பொள்ளாச்சி என்று போடப்பட்டிருந்ததைக் கண்டு பெருமூச்சு விட்டார்.

இப்படியே அவர் ஆறு பக்கமுள்ள செய்தி ஏட்டில், ஐந்து பக்கம் படித்து, ஆறும் பக்கத்-திற்குத் திருப்புகிற நேரத்தில் பெட்டகம் இருக்கிற பட்டகசாலை அறைப்பக்கம் ஏதோ ஒன்று பல-கையை அறுப்பதுபோல் சத்தம் கேட்டது. சற்று

உற்றுக்கேட்ட அவர், மெதுவாகத் தள்ளாடி நடந்து சென்று விளக்கைப்போட்டுப் பார்த்தார். சந்தடியும் இல்லை, சத்தமும் இல்லை. திரும்பி வந்து உட்கார்ந்ததும் மறுபடியும் ரம்பம்வைத்து அறுப்பது போல் ஓசை கேட்கத் தொடங்கியது. சற்றுமுன் படித்த செய்தி வேறு அவர் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தது.

மனத்திற்குள் வலிமையை வரவழைத்துக்கொண்டு உறுதியுடன் எழுந்துசென்று விளக்கைப்போட்டு, அறையைத் திறந்தார். பெட்டகம் லெட்சுமி ஆச்சியின் பிடிவாதத் திருவுருவம்போல் ஆடாமல் அசையாமல் நின்றது. பெட்டகத்தையும் திறந்து பார்த்தார். கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் பெறக்கூடிய நகைகளும் ஒரு லட்சத்திற்குக் குறையாமல் இருக்கக்கூடிய ரொக்கமும் பாங்குக்கணக்குப் புத்தகங்களும் பளிச்சென்று, இருந்த இருந்த இடங்களில் இருப்பதைப் பார்த்துவிட்டுப் பத்திரங்களும் ஆவணங்களும் இருக்கிற பெட்டக அறையையும் இழுத்துப்பார்த்தார். எல்லாம் சரியாகவே, வைத்தது வைத்தபடி இருந்தன.

சற்றுநேரம் அவற்றையெல்லாம் உற்றுப்பார்த்துச் 'சரியாக இருக்கின்றன' என்று நிதானித்துக் கொண்ட பிறகு, அவர் முன்புபோல் யாவற்றையும் பூட்டி எடுத்துச் சாவிகளை வைக்கவேண்டிய இடங்களில் வைத்து விட்டுத் திரும்பவும் வளவில் வந்தமர்ந்தார்.

தம் மனைவி, மகனையும் மருமகளையும் வாழவிடாமல் அடிப்பதை நினைத்தபோது, அவர் வாய்பேசாமையாய் மனமுருகினர். "நகரத்தார் குடும்பங்களில் செட்டியார்கள் தமக்கென ஆளுமையற்ற

அடிமைகளாய், பெண் ஏவல் செய்து பிழைக்கிருர்கள். பெண்களோ அறியாமையில் மூழ்கி, தாம் செய்வது இன்னதென்று தெரியாமல் சமூகத்தையே அழிக்கிருர்கள்'' என்று நகரமலரில் யாரோ ஒருவர் எழுதிய கட்டுரை வாசகம் ஒன்று அவருக்கு அந்த நேரத்தில் நினைவுக்கு வந்தது. மருமகளை வாழாவெட்டி ஆக்கவேண்டும் என்ற வேகத்தில், தம் மனைவிதானே வாழாவெட்டிபோல் தம்மையும் பிரிந்து மதுரையில் போய்க் கிடப்பதை எண்ணியெண்ணி அவர் நைந்தார். சற்று முன் அவர் பார்த்த ரொக்கமும், நகைகளும் அவரைநோக்கி எள்ளி நகையாடின. வெள்ளிச் சாமான்களும் வெண்கலச்சாமான்களும் என இப்படியே ஒவ்வொன்ருக, வீடு முழுவதும் அறைதோறும் தூசிபடிந்து, அழுக்கேறிப் பயனற்றுக் கிடக்கின்ற செல்வங்களையெல்லாம் அவர் ஒவ்வொன்ருக நினைவுகூர்ந்தார். இவ்வளவு செல்வமிருந்தால் மற்ற சமூகத்தவர்கள், எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பார்கள்? இந்தச் சமூகம் ஒன்றிலேதான்,உலகத்திலேயே, போதிய அளவு பணமும் வருமானமும் இருப்பவர்களும் மனத்துயர்ப்பட்டு நாள்தோறும் 'சிந்திய மூக்கும் அழுத கண்ணீருமாக' இருப்பதைக் காணலாம்.

குமர. வுக்கு இரவுச் சாப்பாடு இல்லை. ஒரு வாழைப்பழத்தை மட்டும் தின்றுவிட்டு, அரைக் குவளை பால் பருகி விட்டு, அவர் படுக்கப்போனுர்.

அன்றைக்கு மோர்விற்ற காசு முப்பத்திரண்டையும் குட்டி கொண்டுவந்து கொடுத்ததைத் தலையணை அடியில் வைத்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கிடந்தார் அவர். அயர்ந்து உறங்கி ஆறுமாதம் ஆகிறது. அந்த வீட்டைக்

காக்கும் கூர்க்காவைப்போலவும், வேலையாளைப் போலவும் தாமும் கவனிப்பாரற்றுப் படுத்திருப்பதை எண்ணியபோது அவருடைய கண்ணின் கடையோரம் ஈரமாகியது.

○ ○ ○

மதுரையில் அழகப்பன் தன் மருத்துவமனையில் சேர்த்த காசநோயாளிக்கு மார்பில் அறுவை மருத்துவம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தான். அந் நோயாளி ஓர் உயர்நிலைப்பள்ளி அறிவியல் துறை ஆசிரியன். அவனுடைய மனைவியும் உறவினர் சிலரும் வந்திருந்தார்கள். அவள் ஏதோ தேசீய வங்கி ஒன்றில் வேலை பார்க்கின்றுளாம். இருவரும் சம்பாதித்தாலும் கழுத்தில் பெரிய வடம் போன்ற சங்கிலியோ, கைநிறைய விலங்கு பூட்டியது போன்ற காப்புவரிசைகளோ காணப்படவில்லை. தெளிவான, எளிய, தூய உடையுடன் விளங்கிய அவள் தன் கணவன் பிழைக்க வேண்டுமே என்ற கவலையுடன் காணப்பட்டாள், பலமுறை டாக்டர் அழகப்பனை அணுகி, ''டாக்டர்! அவருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே. மேஜர் ஆபரேஷனுயிற்றே என்று கேட்டேன்'' எனக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

முதல்நாள் மாலை வந்த உதவி மருத்துவர் ஒருவர், 'இன்னும் ஒருநாள் குளுகோஸ், ஹார்லிக்ஸ், பழரசம் கொடுங்கள். நாளைக்கு ஆபரேஷனை வைத்துக்கொள்வோம்' என்று கூறிவிட்டார். முதல் நாளே அறுவை மருத்துவம் முடிந்திருந்தால், மறுநாள் அழகப்பன் ஊர் போய் மனைவியை அழைத்து வருவதாக இருந்தான். இப்போது அது ஒருநாள் தள்ளிப்போவதனுல் காலம் நீண்டது. எனினும் தன் கடமையையே பெரிதாகக் கருதினுன்

அழகப்பன். ஊர்போய்த் திரும்பிய பிறகு ஆபரேஷன் செய்யலாம் என்பதும் அவனுக்குத் தவருகப்பட்டது. ஒரு பெண்ணின் மாங்கலியமே முக்கியம் என நெஞ்சில் நினைவோடியது.

'தனக்கு மகன் பிறக்கப்போவதாக' அவன் உள்ளூற எக்களித்தான். இப்போது தாயை அவன் அடக்கினுன்; எதிர்த்தான்; ஏறிட்டுப்பார்த்துப் போர்க்குரலில் கூவினுன்! அவனுள்ளிருந்த அந்த ஆளுமை வெளிப்பட்டது போலிருந்தது, அவனுக்கே!

தன்னிடம் கைகாட்ட வந்த அந்தக் குடும்பத்தைப் பார்த்துப் பார்த்து, நகரத்தார் குடும்பத்தோடு ஒப்பிட்டுக் குமைந்தான் அவன். இவர்கள் நாளைக்கு நாளைக்கு என்று சேர்த்துவைத்த செல்வத்தைச் செலவழிக்கப் பயந்து பயந்து நாள் தோறும் நைகிருர்கள். அவர்களோ நாளையைப் பற்றிக் கவலைப்படாமல், இன்று நன்ருக வாழ்கிருர்கள். அவர்கள் பணத்தைவிட மனித அபிமானம் சுற்றத்தின் மீது பற்று, அன்பு, பாசம் உடையவர்களாக இருக்கிருர்கள். இந்த நகரத்தார்களுக்குப் பணத்தின் மீது மோகம் முற்ற முற்ற பாசம் எல்லாம் நாசமாகிவிடுகிறது.

லெட்சுமி ஆச்சி சந்தையில் மலிவாக விற்ருல் ஒருகிலோ, இரண்டுகிலோ கத்தரிக்காய், தக்காளி வாங்கி வருவார்கள். அதை அவர்கள் ஒருவாரத்திற்கு வைத்து ஓட்டுவார்கள். முதல்நாள் அழுகிப்போன, அழுகத் தொடங்கிய, காய்ந்த, பூச்சி விழுந்தவற்றைமட்டும் எடுத்து அவற்றின் காம்பும் முனையும் அழுகிய பகுதியும் ஆகியவற்றை மட்டும் அறுத்து எறிந்துவிட்டு மற்றவற்றை நறுக்கிக்

குழம்பு வைப்பார்கள். மறுநாளும் இருக்கின்ற காய்கறியில் கெட்டவற்றை மட்டுமே எடுத்துக் குழம்பு வைப்பார்கள். இப்படியே பார்த்தால் அந்த ஒருவாரமும் அவர்கள் இவ்வாறு அழுகியவற்றையே, கெட்டுப் போனவற்றையே பயன்படுத்தி, நல்லதை நாளைக்கு நாளைக்கு என்று காப்பாற்றி அவையும் கெட்டபிறகே பயன்படுத்தியிருப்பார்கள். இதனை நாம் அப்படியே நகரத்தார் வாழ்க்கையுடன் ஒப்பிடலாம். நாளைக்காக 'இன்றையப் பொழுதை' வாழாமல் இழப்பவர்கள் அவர்கள். இந்தச் சமூகத்தில் பிறந்து வாழ்வரசிகளாக விளங்க வேண்டிய பலர், கன்னியர்களாகவே அழிந்து போகின்றார்கள். கட்டியவர்களும் கூட அல்லவா வாழமுடியாமல் திண்டாடுகிறார்கள்.

இந்த நிலையில் தன் தாயார் செய்வது 'பணத்திமிர்' என்று அழகப்பன் கொதித்தான். தன்னிடம் நோய்வாய்ப்பட்டு வந்திருக்கிற தென்காசிக் குடும்பத்தார்போல, தான் அன்போடு ஒன்றி வாழமுடியவில்லையே என்று அவன் ஏங்கினான். தன் மனைவிக்கு எப்படியும் 'இது மாதமாக' இருக்கும். விரைவில் அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டும் என்றெல்லாம் அவன் மனம் ஊசலாடியபடி இருந்தது.

லெட்சுமி ஆச்சி மிகவும் பக்தி சிரத்தையுடன் மீனாட்சி கோயிலுக்குப் போய்ச் சாமிகும்பிட்டுவிட்டு வருவதாகப் புறப்பட்டார்கள். தன்கணவனை ஊரிலே தன்னந்தனியே தவிக்க விட்டுவிட்டு, இவர்கள் கோயில்வழிபாடு செய்யும் அழகு அவனுக்கு நகைப்பை உண்டாக்கியது. ''இவர்கள் போய் என்ன வரம் கேட்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாதா? மருமகள் வாழாவெட்டியாக வேண்டும்.

மகனுக்கு மறுகலியாணம் நடக்கவேண்டும்' என்று வேண்டிக் கொள்ளப் போகிருர்கள்.''

''ஆனுல் மீனுட்சியின் திருவருளால் என் மனேவியை இந்த மாநகர்க்கு அழைத்துவந்து வாழ்வரசியாக்கப் போகிறேன்'' என்று அவன் தனக்குள்தானே சபதம் எடுத்துக் கொண்டான்.

## 16

வேகுப்பட்டி நா. வீட்டில் இன்றும் ஓர் அகல் விளக்குத்தான் ஒரு மூலேயில் ஏற்றிவைக்கப்பட்டிருந்தது. சிறிது காற்றடித்தாலும் அது தள்ளாடிக் கொண்டு இருந்தது. கவிந்த இருள் நீங்கிய பாடில்லே.

திடீரென்றுசௌந்தரவல்லி வீறிட்டுக்கத்தினுள். நாவன்னுவும் மூத்தவள் மீனுவும் இன்பவல்லியும் வள்ளியும் அந்தச் சின்ன 'ஆல்' வீட்டுக்குள் ஓடினுர்கள். அவளுக்கு 'இது மாதம்' என்பது எல்லோர் நினேவிலும் இருந்ததுதான் அதற்குக் காரணம். சௌந்தரமோ புளுப்போல நெளிந்தாள். 'அவள் எவ்வளவோ பொறுத்துக்கொள்ளுவாள். இப்போது பொறுக்க முடியாத வேதனே போலும். என்பிள்ளேகள் தங்கம்தான். ஆனுல் அதன்படி வாழவைக்க என்னிடம் பணம் இல்லேயே?' இப்படி ஓடியது நாவன்னு மனம். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள்கூட ஓடிவந்தார்கள். ஆரவாரம், கூச்சல், குழப்பம்...உடனே வலேயபட்டி பாப்பாயி ஆச்சி மருத்துவமனேக்குச் சௌந்தரத்தைக் கொண்டு போகவேண்டும் என்று பலரும் ஒரு முகமாகக் கருத்துத் தெரிவித்தார்கள். நாவன்னு மிரள மிரள விழித்தார். அவரிடம் அந்த நிலேயில் செப்பாலடித்த சல்லி கூட இல்லே. இதைக் கவனித்த, வசதி-

படைத்த செட்டியார்கள், ஆச்சிமார்கள், 'எங்கே இங்கேயே நின்ருல் தங்கள் கருணை பெருகி அல்லது யாராவது கருணையைத் தூண்டிக் கையைக் கடித்து விடுமோ' என்று மெள்ள மெள்ள நழுவினுர்கள்! அந்த மலேசியப் புதுப்பணக்காரர் ஏகப்பன் நினைத் தால் ஐம்பது, நூறு என்பது அரைக்காசுக்குச் சமம். அவர் வீட்டில் வளரும் அல்சேஷனுக்கு, அவர் அதைவிட அதிகமாகச் செலவழிக்கிருர். அவரும் கூடவந்து நின்ருர். ஆனுல் பார்த்தும் பாராதவர் போல் நழுவிவிட்டார். நகரத்தார்களுக்கு அவ்வளவு சமூக ஒப்புரவு! இனவுணர்ச்சி! நகரத்தார் மரபுணர்ச்சியைத் தள்ளுங்கள். மனிதவுணர்ச்சியே பணம் என்ற பேயினுல் மரத்துப்போய் விடுவதுண்டு! பலசரக்குக்கடைப் பாவநாசம் ஓடிவந்து, அந்தச் சிறுகூட்டத்தில் நின்ருன். அவன் செட்டியாரிடம் பணம் தருவதாகக் கரிசனத்தோடு எடுத்து நீட்டினுன். நாவன்னு நேர்மையானவர்; கண்டிப்பானவர்; உறுதிமிக்கவர். அவனிடம் பணம் பெற அந்த நிலையிலும் அவருக்கு விருப்பமில்லை. 'பரவாயில்லை' என்று முகத்தை மாற வைத்துக்கொண்டு கூறிவிட்டார். ஏனென்ருல் அந்தப் பாவநாசம் ஒரு மாதிரியானவன். தவருன வழியில், திருமணமாகாத சில செட்டியவீட்டுப் பெண்களோடு பழகி அவர் களைக் கைவிட்டவன். ஊருக்கெல்லாம் இதுதெரியும். என்ருலும் யாரும் வாய்திறந்து பேசுவதில்லை. செட்டிநாட்டு ஊர்களில் இப்படிப்பட்ட பாவநாசங் களுக்குக் குறைவில்லை. திருமணமாகாது கணநேர உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, வாழ்வையே பாழடித்துக் கொண்டு அபலைகளாய் அலையும் 'கன்னிப் பெண்'களுக்கும் குறைவில்லை. இருந்தாலும் இதைப் பற்றியெல்லாம் யார் கவலைப்படுகிருர்கள். நாவன்னுவின் முகக் கடுமையைப் பார்த்து, பாவநாசம்

விரைந்து வெளியேறிவிட்டான். மலேசிய நண்பர் ஏகப்பன், மற்றும் நகரத்தார் பெருமக்கள் மேடை-யேறி, 'இந்த இனத்தை முன்னேற்ற' ஆயிரம் திட்-டங்களைக் கூறி, வந்தவர்களை நேரத்தோடு வீட்டிற்-குப் போகவிடாமல் நகரத்தார் சங்கங்களில் சொற்-பொழிவாற்றுவதுண்டு. ஆனால் அந்தச் சொற் பொழிவுகளால் என்ன பயன்? நாவன்னாவின் முகக் கடுமையைப்பார்த்து,பாவநாசம் வெளியேறினானே; இந்த உறுதிக்கு எந்தச் சொற்பொழிவும் இணையா-காது. ஆனாலும் என்ன பயன்? போக இருக்கும் ஓர் உயிரை யார் காப்பாற்றுவார்கள். சிகப்பட்டிச் சாலியாச்சி, தன் தாய் வீட்டுக்கு வந்திருந்தவர் ரூபாய் ஐம்பது கொடுத்து உதவினார்கள். அந்த ஆச்சியிடமும் அவ்வளவுதான் இருந்தது. கணவனை இழந்த அவர்கள் சிக்கனமாக வாழ்ந்து வந்தார்-கள். மிக நடுத்தரமான குடும்பம். இருந்தும் மனது கேட்காமல் இருந்த பணத்தை எண்ணிக் கொண்டு வந்து கொடுத்துவிட்டார்கள்.

எப்படியோ சேர்ந்த எண்பத்தைத்து ரூபா-யுடன் ஒரு நல்ல மாட்டுவண்டி வைத்துக்கொண்டு நள்ளிரவில் வலையப்பட்டி போய்ச் சேர்ந்தார்கள். டாக்டரம்மா எழுந்து வந்து பார்க்கச் சற்று நேர-மாகி விட்டது. 'கடுமையான கேஸ்' என்று அந்த அம்மாவின் முகம் பேசியது. மற்றொரு வயதான பெரிய டாக்டர் ஒருவர் அவ்வூரில் தனியே மருத்-துவமனை நடத்தி வந்தார். அவருக்கும் டாக்ட-ரம்மா அநத நேரத்தில் ஆளனுப்பியதைப் பார்த்து 'நிலைமை மோசம்' என்று எல்லோரும் புரிந்து கொண்டார்கள். புதுப்பட்டிக்கு ஆளனுப்பிச் சில மருந்துகளை, கடைகளைத் திறக்குமாறு கடைக்காரர்களை வீட்டிலேயே போய் எழுப்பியாவது வாங்கி

வரும்படி டாக்டரம்மா கூறியதனுல், அந்த நேரத்தில் ஆஸ்பத்திரி நர்சம்மாவின் கணவன் தான் வாங்கி வர முன்வந்து ஓடினுர். மெய்யன் சோமனு-தனிடம் கூறுவதற்கு, அந்தச் சின்னஞ் சிறுமி வள்ளி, 'இன்னும் விடியவில்லையே' என்பதையும் சிந்தியாமல், அச்ச மின்றி அந்த வலம்புரி நகர 'இராஜ பாட்டைகளில்' நடக்கலானுள்.

விடிகாலம் ஐந்து மணியாயிற்று. கடுமையான ஆபரேஷனுக்குப் பிறகு குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை! ஆனுலும் என்ன பயன்? டாக்டர்கள் வெளியேறவில்லை. மேலும் மேலும் ஏதோ தொந்தரவு. நர்சுகள் முகத்திலும் ஈயாடவில்லை. வேகுப்பட்டியில் வண்டியேறியதிலிருந்து 'அவுகளுக்குச் சொல்லுங்க... அவுகள் வந்துட்டாகளா ... அவுக எங்கே... அவுக கிட்டேச் சொல்விடுறிகளா... அவுக கிட்டேச் சொல்லணுமே'' — என்பதுதான் சௌந்தரம் புலம்பலாக இருந்தது. மருத்துவமனையில் இறக்கிப் படுக்க வைத்ததிலிருந்து, அவள் மூர்ச்சையாகி விட்டாள். வண்டியில் 'கடகட' என்று வந்த வேகமும், பேறுகால வலியும் கொடுமைப்படுத்தியதால் அவள் கண்களை மூடியபடி வேதனையில் முனகத்தொடங்கினுள். இன்பவல்லி நிலைமையைப்புரிந்து கொண்டு $5\frac{1}{2}$ மணிக்கெல்லாம் ஆண் குழந்தை பிறந்த செய்தியையும், தன் தமக்கைக்கு மிக மோசமாக இருக்கிறது என்பதையும் தந்தி மூலம் மதுரைக்கு அத்தானுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்தாள். மெய்யன் சோமநாதன் மூலம் கும. வுக்கும் சொல்லியனுப்பினுள் அவள். மெய்யன் கும. விடம் கூறுவது மட்டுமன்றி, வேண்டிய பணஉதவி பெற்று வருவதாகவும், மதுரைக்குத் தொலைபேசியில் உடனே தானும் கூறுவதாகவும் கூறிப் புறப்பட்டான். மணி காலை 7,

7-30, 8-00 என ஓடிக் கொண்டிருந்தது. சௌந்தரம் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தாள். அவளுக்குச் செய்தது 'மேஜர் ஆபரேஷன்' ஆகையால் மிகுதியாக இரத்தம் போய் விட்டது என்று அதே குரூப்புள்ள இரத்தம் எடுத்துச் செலுத்தத் திட்டமிட்டார்கள். ஓரளவு கண்ணயர்ந்து காணப் பட்டாள் சௌந்தரம். 'நா'வன்னு சித்தப்பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தார். பேரன் பிறந்து அழுகிற சத்தம் அவர் மனத்திலே மகிழ்ச்சியைத் தூண்டவில்லை. யாரோ ஓர் ஆச்சி, மருத்துவமனைக்கு வந்த இடத்திலும், மரபை மறவாமல் 'பேரன் பிறந்திருக்-கானே...உங்களுக்குப் பேரன் உண்டா?' என்று வழக்கப்படி பேறு கேட்டார்கள். நாவன்னு விழித்தபடி சலனமற்றுக் குந்தியிருந்ததைப் பார்த்து, அந்த ஆச்சி விருட்டென்று நடையைக் கட்டினார்கள். 'புதிய தாலி செய்யும்போது பழைய தாலிக்கு ஆபத்தை விளைவிக்கிறார்கள்; புதிய குழந்தை பிறக்கும்போது, பழைய உயிரைத் தவிக்க விடுகிறார்கள். நல்ல சமூகம் இது' என்று அழுதுகொண்டிருந்தார், அவர்.

○ ○ ○

அழகப்பன் தன் உதவி டாக்டருடன் அதிகாலை தொடங்கி, தென்காசி அன்பரின் மார்பின் வழியே துளையிட்டு, மின்சாரம் மூலம் சதை வளர்ச்சி ஒன்றைக் கருக்கி, எலும்புருக்கி நோயிலிருந்து அவரைக் காப்பாற்றப் பெருமுயற்சி மேற்கொண்டிருந்தான். டி.பி. எனப்படும் அக்கொடிய நோய் முழுவதுமாக விலகவேண்டுமேல், இவ்வளவு பெரிய அறுவை மருத்துவம் தேவைப்பட்டது. மிக அக்கறையோடும் பொறுப்போடும் அவன் 'செய்யும் தொழிலே

தெய்வம்' என்று ஈடுபட்டிருந்தான். ஆசிரியராகிய தன் கணவரின் உயிர் காக்க, அவர் மனைவி-வங்கியில் வேலை பார்க்கும் நங்கை உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவள் தன் கணவனுக்காகத் தன் உயிரையே கொடுக்கவும் தயாராக இருப்பவள் போற் காணப்பட்டாள்.

அம் மாதரசியைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்குத் தன் மனைவியின் நினைவு தோன்றியது. சௌந்தரம் இங்கு வந்துவிடக் கூடாதே என்று காவல் காக்கத்தானே இந்தத் தாய் இங்கே வந்து கூடாரம் அடித்திருக்கிறாள். இவளுடைய எண்ணம் கொடியது. தாயா இவள்? சௌந்தரவல்லியை வாழாவெட்டியாக்கப் போகிறாளாம் இவள், எங்கே பார்க்கலாம்? அழகப்பன் மனம் எகிறிப் பாய்ந்தது. அவளை வாழ்வரசியாக்கப் போகிறேன். ஆம், இனி யாருக்குப் பயப்பட வேண்டும்? கட்டிய கணவன் கைவிட்டால் ஒரு பெண்ணின் கதி என்ன ஆகும்? இதோ தன் கணவன் உயிரே கதியென நிற்கும் ஒரு மனைவி...தான் இன்னேரம் தன் மனைவி அருகே இருக்கவேண்டாமா? இது மாதமாயிற்றே அவளுக்கு. சௌந்தரம் எப்படியிருக்கிறாளோ?...

இப்படி அழகப்பன் இங்கே நினைத்துக் கொண்டிருந்த போது, அங்கே சௌந்தரம் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தாள்! ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றுப் போட்டுவிட்டு அரை உயிராய்க் கிடந்து கொண்டிருந்தாள். அவள் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. 'இரத்தம் தேவை' என்று இரத்தம் செலுத்த முயன்றனர். மதுரைக்கு ஆளனுப்ப—கார்வசதி—பணம் இருந்தால், மதுரை பெரிய மருத்துவமனையிலிருந்து கொண்டுவரலாம் என்று யாரோ கூறினார்கள். யார் கவனிப்பது?

அவள் தலைவிதி அது. அவள் கணவன் ஒரு டாக்டர். அங்கே போக இருக்கிற உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான், அவன்! இங்கே அவனுக்குப் பிரியமான ஓர் ஆருயிர் போய்க் கொண்டிருப்பது அவனுக்குத் தெரியாது விதி அவர்களைப் பிரித்து வைத்தது. விதியா? அல்ல, அல்ல! பணம்! அவள் பிறந்த வீட்டார் ஓர் ஆயிரம் ரூபாய் மட்டும் தரமுடியாமல் போனது, அவளுடைய இல்லறவாழ்வையே குற்றுயிர் ஆக்கிவிட்டது. அவள் புகுந்தவீடு பல இலட்சம் ரூபாய்க்கு உரிமையுடைய வீடு. ஆனாலும், போய்க் கொண்டிருக்கிற உயிரைக் காக்க அதில் ஒருபைசாக்கூடப் பயன்படவில்லை. அவள் தந்தை மகளைக் காக்கப் பிச்சை எடுப்பது போலப் பலரிடமும் கையேந்தும் நிலைமை இருக்கிறது. நகரத்தார் சமூகச் சிறப்புக்களில் இதுவும் ஒன்றல்லவா?

அழகப்பன் ஓர் உயிரைக் காப்பாற்றிவிட்ட வெற்றிப் புன்னகையோடு, மருத்துவமனை அறையிலிருந்து வெளியில் வந்தான். "Be happy; your husband is safe" (மகிழ்ச்சியாக இருங்கள்; உங்கள் கணவர்க்கு நலமே) எனக்கூறி, அந்த மாது மனங் குளிரச் செய்தான். அச்சமயத்தில்தான் அவனுக்குத் தூரத்துத் தொலைபேசி வந்தது; மெய்யன் பேசினான். போனை வைத்ததும், தந்தியும் வந்தது! அழகப்பன் அதன் பிறகுதான் என்ன செய்வதென்ற நினைவின்றியே சுழன்றான்; மருண்டான்; விரைந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் மூன்று டாக்டர்கள் இரண்டு காரில் இரத்த சேமிப்புநிலையக் குருதிப் போத்தல்களுடன், வடக்குநோக்கி விரைந்து கொண்டிருந்தனர். அழகப்பனைச் சேர்த்தால் நான்கு டாக்டர்கள்! அவர்களில் ஒருவர் மிகப்பெரிய பெண் மருத்துவர் லலிதா விசுவேசுவரன் ஆவார். அழகப்பனின்

தாயாரும் அழகியும் ஒரு வண்டியின் பின்னிருக்கையில் பெண் டாக்டர் அருகே இருந்தார்கள். அவர் முகத்தில் ஈ ஆடவில்லை; கவலைக்குறிகளும் இல்லை. 'உ'ம்மென்று இருந்தார்கள், எப்போதும் போல!

○ ○ ○

மெய்யன் சோமநாதன் செய்தி சொன்னவுடன், குமர. அவர்கள் பேரன் பிறந்துள்ளானே என்ற மகிழ்ச்சியினாலும் மருமகள் உயிருக்குப் போராடுகிறாள் என்ற வருத்தத்தினாலும் மிகவும் தாக்கப்பட்டார். அவர் உள்ளம் சமூகக்கட்டுக்கள், குடும்ப மரபுகள் என்ற கட்டுக்களை உடைத்து எறிய வேண்டும் என்று அந்த நேரம் மல்லாடியது. 'செட்டியார்கள் தமக்கென ஆளுமையற்ற அடிமைகள்' என்ற, அவர் படித்த கட்டுரை வாசகம் அவர் உள்ளத்தைத் துளைத்தது. பெண்கள் தவறு செய்கிறார்கள் என்பதும் அறியாமையை விட்டு விடுபடவில்லையென்பதும் சில பண ஆசைகளால் தாங்கள் பிறந்த இனமே அழிந்தாலும் தங்கள் குடும்ப ஆசை நிறைவேறுவதே சரி என்று நினைக்கிறார்கள் என்பதும் சரி தான். கல்வியறிவற்றவர்கள் நிலை அப்படித்தான் இருக்கும். ஆனால் ஆண்கள் இதற்குச் சரி என்று ஒத்துப்போகாமல், எதிர்க்க வேண்டும். எதிர்ப்பதால் பயனுண்டா? ஆண்கள் எத்தனை பேர் சீர்திருத்தம் பண்ணிவிட முடியும்? ஒருவேளை செட்டி நாட்டுப் பெண்கள் எல்லோரையும் உயர்பட்டப் படிப்புப் படிக்கவைத்தால் நிலைமை திருந்தலாம். பாவநாசம் போன்றவர்களின் அற்ப ஆசைகள் ஒழியலாம். இப்போது ஊருக்கு ஊர் அல்லவா பாவநாசம் போன்றவர் தொகை பெருகுகிறது. இந்த நிலையில் ஆண்களைப் 'பெண் ஏவல்'

செய்பவர்கள் என்று எழுதுவது எவ்வளவு அறிவீனம்? கட்டுரை எழுதியவர் அப்படிப் போல் இருக்கிறது. இவ்வாறு பொங்கியெழுந்த உணர்வுகளோடு காணப்பட்ட கும. அவர்கள் விரைந்து சென்று ஐந்நூறு ரூபாய், பெட்டகத்தைத் திறந்து எடுத்துக் கொண்டு, மருத்துவமனைக்குப் புறப்பட்டார். மெய்யன் இந்த மனமாற்றத்தைக் கண்டு அயர்ந்து போனான்.

அவர்கள் இருவரும் மருத்துவமனையை அடைந்த போது, அங்கே ஒரே பரபரப்பும் ஆரவாரமுமாய்க் காணப்பட்டது. உள்ளே சென்று மருமகளைப் பார்த்த போது, படுக்கையோடு ஒட்டிக்கிடந்த அந்தத் தங்க விக்கிரகத்தைப் பார்த்துக் கூவி அழுது விட்டார் கும. மேற்கொண்டு, அங்கு நின்று பார்க்க விரும்பாதவர் போல் வெளியில் ஓடி வந்து, ஒரு மூலையில் அமர்ந்திருந்த தன் மைத்துனர் நாகப்பச் செட்டியாரின் தோளைப் பிடித்து உலுக்கியபடி, "அட நாகப்பா! இந்தப் பொம்புளைங்க பேச்சைக் கேட்டுக் குடும்பமே நாசமாப் போச்சுடா நாகப்பா... என் மருமகள் புழைப்பாளாடா ... அடபாவி... உன் குடும்பத்தைப் பண ஆசையாலே சீரழிச் சோமே ... இதுவும் வேணும், இன்னும் வேணுமுடா எங்களுக்கு! அடபாவி ... ஆயிரம் ரூபாய் இல்லாம நீ அழிஞ்சே ... ஐஞ்சு லெச்சத்தை வச்சுக்கிட்டு நாங்கள் அழிஞ்சோமே! நீ இல்லாமே அழிஞ்சே; நாங்க இருந்து அழிஞ்சோமே! இது தாண்டா நாகப்பா செட்டிய வீடு. செட்டிய வீட்டுக்கு வேறே என்னடா தெரியும்? தொகை பகை கேட்கத் தெரியும்! நகை நட்டுக் கேட்கத் தெரியும்! சீதனம் சீராட்டுக்கு வம்பு பண்ணத் தெரியும்! வேற

என்னடா தெரியும்? பணம் இல்லாமே அழியுற வம்சத்தை மத்த சாதியிலே பார்க்கலாம். பணத்தை வச்சுக்கிட்டே அழியுற சமூகத்தை,இந்தச் சாதியிலே தாண்டா பார்க்கலாம்.'' இவ்வாறு அழுதுபுலம்பினுர் கும. நாகப்பர் தம் மைத்துனரை ஏறிட்டுப் பார்த்தார், கண்ணீர் பொல பொல வென்று உதிர! கும. இப்போது வாய்விட்டுபேச வில்லே. அவர் மனம் பேசியது ...

''ஏண்டா அப்படிப் பார்க்கிறே? நாகப்பா!மகள் கலியாண வீட்டிலே கூட நான் உன்னுேட மைத்து னன்னு இப்படிப் பேசலேயேன்னு பார்க்கிறியா? நாம் செட்டிகடா, அப்படித்தாண்டா பாசமே இல்லாமே பணத்துக்காக வாழணும்! கட்டின பெண்டாட்டியின் கூடப் பிறந்த மைத்துனன்னு ஒரு முறை கூட, 'நாகப்பா'ன்னு உன்ன நான் வாய் நிறையக் கூப்பிட்டதில்லேயே, என்னமோ நீ சின்ன வயசா இருந்தபோது கூப்பிட்டிருப்பேன். என்ன இருந்தாலும் நீ எனக்கு ரெண்டு வயசு இளேயவன் தானே? ஏன் தெரியுமா உன்ன‌ைப் பாசத்தோடே கூப்பிடவே இல்லே? உங்ககிட்டே வரவரப் பணம் இல்லே... அதனுலேதான்...நான் செட்டியாப் பொறந்தவன்டா? பணம் இருக்கிறவனைப் பார்த்-தாத்தாண்டா சிரிப்பேன்! பணம் இருந்தாத்-தாண்டா பணிவேன். பாசங் காட்டுவேன்!...நான் அப்படிப்பட்ட சாதிடா? உன் பெண்டாட்டி செத்தபோதுகூட, நான் வந்து மனம் திறந்து இழவு கேட்டேனுடா? ஏன்? நான் செட்டிடா? பண-மிருக்கவுக செத்தாத்தாண்டா, இந்தச் சாதியிலே இழவு; இல்லேனு யாருடா கவனிப்பா? நம்மைப் பிரிச்சு வச்சது பணந்தாண்டா... பணம். ... என் மருமகளுக்குப் பயன்படாத பணத்தை இந்தாச்

சூறை விடுகிறேன் பாருடா? அஞ்சுலட்சம் ரொக்க மா வச்சிருக்கேண்டா சூறைவிட..." உண்மை-யிலேயே கும. வுக்குப் பித்துப்பிடித்தது போல் ஆகிவிட்டது. அவர் கரன்சி நோட்டுக்களைச் சூறை விடுவது போல், காற்றில் தூவிவிடத் தொடங்கினுர். மெய்யன் சோமநாதன், அவரை ஆறுதல் படுத்தி ஒரு நிலைக்குக் கொண்டு வர நெடுநேர-மாயிற்று.

ஓரளவு அமைதிகொண்ட நேரம் மதுரையி-லிருந்து புறப்பட்ட வண்டிகளிரண்டும் மருத்துவ-மனை எதிரே வந்து நின்றன.

# 17

சௌந்தரத்தின் பக்கத்திற் கிடந்த குழந்தை வீறிட்டு அழுதபோது சிறிது சலனம் ஏற்பட்டது. சௌந்தரம் சிறிது அசைந்து, கண் திறந்தாள். அதற்கு மேல் அவளால் எதுவும் செய்ய முடிய வில்லை! இன்பமும் நர்சும் ஓடிவந்து குழந்தையைக் கவனித்தார்கள். குழந்தை பெற்ற மற்றொரு ஏழைத் தாய், இந்தக் குழந்தைக்கும் பால் கொடுக்க முன் வந்தாள்! அவள் எந்த இனமோ? எந்தச்சாதியோ! அவள் கண்கள் கூடக் குளமாகி வழிந்தது. சாதி என்றும் மதம் என்றும் கட்சி என்றும் மனிதர்-களைப் பிரிக்கும் நாம் வெறும் சழக்கர்கள். சாதி கடந்த இறை ஒளி அந்தத்தாயிடம் துலங்கியது. நர்சு குழந்தையைத் தூக்கிக்கொண்டு போனுள். அச் சமயம் சௌந்தரம் உதடுகள் துடிப்பதைப் பார்த்து, அருகே ஓடினுள் இன்பவல்லி; 'குழந்தையைக் கொண்டு வந்து விடுவாக' என்று ஆறுதல் கூறி-னுள், அதற்காகத்தான் ஆச்சி துடிக்கிருளோ என்று நினைத்து. சௌந்தரமோ 'அத்தான்...அத்தான்...'

என்ருள். நிலைமையைப் புரிந்து கொண்ட இன்பம் 'அத்தான் இப்போ வந்துவிடுவாக' என்று உரத்துக் கூறினுள். 'அத்தானைப் பார்த்துக்க... நீ... பார்த்துக்க' என்ற சொற்கள் எப்படியோ செளந்தரம் வாயிலிருந்து, மெல்லிய இழைபோல் வெளிப்பட்டு விட்டன. அந்தச் சொற்களை உதிர்ப்பதற்குள் அவள் பட்ட பாடு பெரிது. கண்கள் மிரட்சி பெற்றன போல் ...கடைக்கண் வழியே நீர்த்திவலைகள் சரஞ்சரமாய்க் கொட்ட... உணர்ச்சியின் மோதல்களிலே உந்தப்பட்டுச் செளந்தரம் என்ற துணியிற் சுற்றிய சிறு ஓவியம் இளங்காற்றில் அசைவதுபோலத் துடித்தது. ''அய்யோ அப்பச்சி... ஆச்சிக்கு என்னமோ பண்ணுதே!'' என்று கூவியழுது விட்டாள் இன்பம்! அந்த நேரம்தான் அழகப்பன் உள்ளே ஓடோடி வந்தான். தொடர்ந்து டாக்டர்களும் நாவன்னுவும் வந்தனர்.

உள்ளூர் டாக்டரம்மாவும் உள்ளே வந்தார். அழகப்பன் செளந்தரத்தைப் பார்த்தது பார்த்தபடி பார்த்துக்கொண்டே நின்ருன். அந்த ஆண்மகனை ஆளுமைக்கரையைக் கடந்து, அழுகை என்ற வெள்ளம் பாய்ந்தோடி விழுந்து, அவன் மார்புகளை நனைத்தது. உடனிருந்த எல்லோரும் பேசாமல் இந்தக் காட்சியிலே உணர்ச்சி வசப்போட்டுப் போய் நின்றிருந்தார்கள். செளந்தரமும் சிறிதே கண் திறந்தாள். அவள் கண்ணெதிரே படும்படி சற்றே நெருங்கித் தலைகுனிந்து நின்றவாறே ''செளந்தரம் ... செளந்தரம் ... செளந்தரம்'' என்று நெக்குருகிக் கூவிக் கூவிக் கூப்பிட்டுப் பார்த்தான் அழகப்பன். தனக்குக் கண் பார்வைகளால் பல்லாயிரம் மாலைகள் சூட்டிய அந்தச் சந்தனநிறத்துப் பாவைக்கு, இப்போது அவன் கண்ணீர் மாலைகள்

சூட்டினுன் போலும் அவனுடைய கண்ணீர் மலர்கள் தெறித்துத் தெறித்து விழுந்த சிறு அதிர்ச்சியில், செளந்தரம் சிறிது அசைந்தது, படுக்கை விரிப்போடு ஒட்டி அதில் வரைந்திருந்த ஓவிய மொன்று நெளிவது போல இருந்தது!

செளந்தரம் ஏதோ பேச நினைக்கிருள்;உணர்ச்சி வசப்படுகிருள்; பரவசமாகிருள். ஆனுல் சொற்கள் ஏதும் வெளிவரவில்லை. அவள் கண்கள் ஏதோ பேசின; அவை எதையோ சொல்ல நினைக்கின்றன. கைகள் அசைய நினைக்கின்றன;அசையமுடியவில்லை. இதழ்கள் பேச நினைக்கின்றன; பேச்சு வெளிப்படவில்லை. கண்கள் மட்டுமே ஏதோ உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது நன்கு தெரிகிறது அவள் தன் கணவனை அப்போது மிரளவிழித்துப் பார்த்ததோர் பார்வை! ''என்னிடம் வாய்பேசும் சக்தி கொஞ்சம் இருக்கிற வரையிலும்கூட வரவிடாமல் உங்கள் தாய் தடுத்து விட்டார்களா? 'செளந்தரம் கண்ணுலேயே பேசுகிருயே!' என்று என்னை அடிக்கடி வம்பு இழுப்பீர்களே. இப்போது என் கண் பேசுவதை மட்டும் பார்க்கவந்தீர்களா?'' என்று கேட்பதுபோலிருந்தது.

செளந்தரம் தன் கணவனைக் கடைசி நேரத்தில் பார்த்து விட்டாள் என்று மற்றஎல்லோரும் திருப்திப் படுகின்றனர். அந்தச் சமயத்தில், அறைக்குள் கூட்டம் அதிகமாகி விட்டதால் எல்லோரையும் டாக்டர்கள் வெளியேற்றுகின்றனர். டாக்டர்கள் ஒருவருக் கொருவர் நிலைமைபற்றிப் பேசிக் கொள்கின்றனர். இரத்தம் சிறிதே செலுத்தப் படுகிறது. மருத்துவச்சிகிச்சைகள் தொடர்கின்றன. ஆனுல் நிலைமை தெளிவடையவில்லை. கோணக் கோண இழுக்கிறது. விசிப்பு என்கிருர்கள். அழகப்பன்

மனைவியை மடியில் தூக்கிவைத்துக் கொள்கிறான். டாக்டர்கள் 'இந்த நேரத்தில் விசிப்பு வந்து தொலைந்ததே' என்று கவலைப் படுகிறார்கள். 'குளுகோஸ்' கொஞ்சம் செலுத்தி விட்டு விசிப்புக்கு ஊசிபோடலாம் என்று ஒரு டாக்டர் கூறுகிறார். மற்றொருவர் 'முதலில் விசிப்பை நிறுத்த வேண்டும். இல்லையென்றால் நோயாளி உயிர்பிழைப்பது அரிது' என்கிறார். சௌந்தரத்திற்கு வாய் கோணுகிறது. 'கறட்டுக் கறட்டென்று' வாய் வழியாகச் சத்தம் வருகிறது; கடைவாய் வழி எச்சல் ஒழுகுகிறது; கண்கள் செருகிக் கொள்கின்றன. மதுரையிலிருந்து வந்த டாக்டர்கள் தங்கள் மருத்துவத் திறமையைக் காட்டுவதற்கு இடம் வைக்காமல், அவர்கள் முறையாகத் தங்கள் சிகிச்சையைத் தொடர்வதற்கு முன்பே, சௌந்தரவல்லி தன் கணவனுடைய மடியில் அமைதி அடைகிறாள். அவள் இயற்கையெய்தி விட்டதைக் கவனித்த டாக்டர்கள் எல்லாவற்றையும், அப்படி அப்படியே போட்டு விட்டு அறையை விட்டு வெளியேறுகின்றனர். சௌந்தரம் அந்த டாக்டர்கள் வந்து தன்னைக் காப்பாற்றுவார்கள் என்று காத்திருந்தாள்? அல்ல. ஏதோ அவள் தன் கணவன் வருகைக்காகக் காத்திருந்தவள் போலவும் அவன் வந்ததும் அவனிடம் சொல்லிக் கொண்டு புறப்படுபவள் போலவும் போய் விட்டாள்! வெளியே ஒரே கூக்குரல்...அழுகை ...ஆரவாரம்! அழகப்பன் கற்சிலைபோல் தன் மனைவியைத் தாங்கியபடி ஆடாமல் அசையாமல் இருந்தான். அவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர், அந்த வாழ்வரசியைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. இனி அவன் அவளுக்குச் செய்யக்கூடிய இறுதிக்கடன் அந்நீராட்டுத் தானே!

அவனுக்கென்று அவள் தந்துவிட்டுப் போன பரிசு, அந்தச் சின்னஞ்சிறு குழந்தையைக் கொண்டு வந்து தாயின் பக்கத்திலே போட்டார்கள். இந்த அழுகையிலே பங்குகொண்டு, ஏதோ நடந்ததை அறிந்து, அந்தக் குழந்தையும் முனகி முனகி அழுதது!

இதுவரை தன் மைந்தனைப் பாராத அழகப்பனின் கடைக்கண்கள் அந்த 'மனைவியின் பரிசை', 'சௌந்தரத்தின் செல்வனை' உற்று நோக்கின. மகிழ்ச்சிக்குப் பதிலாக அழுகைதான் இரட்டித்தது!

ஆஸ்பத்திரியில் இருந்தவர்களும், வெளியில் போனவர்கள் வந்தவர்களும் செய்தியைக் கேள்விப் பட்டு, ஒவ்வொருவராக இந்தச் சோகக் காட்சியைப் பார்த்துவிட்டு, ஏதேதோ தம்முள் பேசிக்கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். மதுரை டாக்டர்கள் தம் ஊர்நோக்கிப் புறப்பட்டு விட்டனர்.

மருத்துவமனை வாசலில் நாவன்னா குடும்பத்தார், கும. யாவரும் சோகமே வடிவமாய் இருந்தார்கள். லெட்சுமி ஆச்சி ஒரு மூலையில் பிடித்துவைத்த புளி மூட்டைபோல் கும்மிப்போய் உட்கார்ந்திருந்தார்கள். பணம் என்ற அசுரன் அவர்களைவிட்டுப் போன தாகத் தெரியவில்லை. அவர்கள் தலைவிரி கோலமாக இருந்தது பணப்பேயும் இந்தநிலையைக் கண்டு அவலிப்பது போல இருந்தது.

''எவ்வளவு அழகான பொண்ணு ...கொஞ்ச வயசிலே போயிடுச்சு...வாழக் கொடுத்துவைக்கலே ... தலைவிதி யாரை விட்டது.''

''ஆண்குழந்தை அழகா, அம்மாவை உரிச்சு வைச்சமாதிரி இருக்கு...ஆனால் குழந்தை பிறந்த நேரம் அம்மாவை எடுத்துப்பிடிச்சு.''

"குழந்தை என்னய்யா செய்யும் பாவம்? எல்லாம் பெரியவங்க செய்யிற மாயம்!"

மருத்துவமனையில் இந்த 'அவதிச் சாவை' வந்து பார்த்துவிட்டுப் போனவர்கள் இப்படி ஏதேதோ பேசிக் கொண்டார்கள். உலைவாயை மூடலாம்; ஊர்வாயை மூடமுடியுமா என்பார்கள். ஊராரிடை-யே பல கருத்துக்கள்; பல எண்ணங்கள்.

"அந்தப் பொண்ணு வேகுப்பட்டியில பொறந்த தாம்...பொறந்த வீட்டிலே ஒண்ணுமில்லையாம்... ஆத்தாவும் செத்துப் போனுளாம் ...ஆம்பிளைப் பிள்ளையே இல்லையாம்...அப்பச்சி வத்திப் போயி இருக்கிருரு பார்த்தியா? செத்தவளுக்கு ரெண்டு தங்கச்சியாம்...ரெண்டும் சமைஞ்சு முழுகுதாம்... மூத்ததும் வாழாவெட்டியாம்"— இப்படிப்பொய்யும் மெய்யும் கலந்து ஒருபேச்சு.

"சௌந்தரம் அழகுக்கு ஆசைப்பட்டு, இந்த டாக்டருக்குப் படிச்ச பையன் அத்தை மகளையே கட்டிக்குவேன்னு ஒத்தக் காலிலே நின்னுனும்... அதனுலே அவுக சீர்வரிசை எதுவுமே கொடுக்கலி-யாம்"

"பையனுக்கு லட்சலட்சமாத் தருறேன்னு நூறு இடம் வந்திச்சாம், பையன் அந்த இடத்திலேயெல்-லாம் பெண்ணு பிடிக்கலேன்னுட்டானும்..."

"இவுகளுந்தான் தங்கமெல்லாம் போட்டுட்-டாங்களாம். சீர்வரிசை, நகை, நட்டு, சாமான் எல்லாம் சொன்னபடி செய்திட்டாங்களாம். கடை-சியா ஒரு வருசத்தி முறைக்குன்னு பேசின ஆயிரத்துச் சொச்ச ரூபாயைக் கொடுக்க முடிய-லியாம்..."

''இவ்வளவும் செஞ்சவுங்க அதைக் கொடுத்திருக்கலாம்.''

''வச்சிக்கிட்டா வஞ்சகம் பண்ருக... இந்தக் கலியாணத்திலே நொடிச்ச குடும்பந்தானும்ல அது... பிறகு எழுந்திருக்கவே இல்லையாம்''

''ஆயிரத்துச் சொச்ச ரூபாதானே...இதை இந்த லெச்சுமி ஆச்சி விட்டுக் கொடுத்திருக்கலாம்...!''

''அது ஆரு லெச்சுமி ஆச்சி''

''அவதாண்டி செத்தவளுக்கு மாமியா...ஒரு மூலையிலே உம்முன்னு உட்கார்ந்திருக்கால்லே...''

''அவளைப் பார்த்தா சாகக் கொடுத்தவ மாதிரி தெரியலியே''

''பெண்ணைப் பெத்தவளா இருந்தாத் தெரியும்?''

''ஆனாலும் செட்டிய வீட்டிலே முறைதான் முக்கியம். மனுசாளா முக்கியம்? நினைச்சுப்பார்த்தா, இவ்வளவு கஷ்டப்பட்டவுக, இன்னும் கொஞ்சம் கஷ்டப்பட்டு முறையைக் கொடுத்து முடிச்சிருக்கணும்...''

''அதென்னடி ஓரவஞ்சகம் பேசிக்கிட்டே இருக்கீக. ஒண்ணுமே இல்லாமே சாகிற குடும்பம் என்னதான் செய்யும் பாவம்?''

''சரி, எல்லாம் அவ தலையெழுத்து. இப்ப இந்த மாப்பிள்ளைக்கு இன்னும் நூறு இடம் வரும்... சீதனமும் ஒட்டிக்கு ரெட்டியாத் தந்து, செய்வாக.''

''செட்டிய வீட்டிலே இப்படி மாப்பிள்ளையைக் கண்டால் விடுவாகளா...நாளைக்கே பாருங்க பேச்சு வரும்...லெச்சுமி ஆச்சி அதிர்ஷ்டக்காரிதான்.''

''அடி பாவிகளா, செப்புச் சிலையாட்டம் ஒருத்தி செத்துக் கிடக்கிருள். பேச்சைப் பாருங்களேன்''.

இவ்வாறு வலையபட்டி ஊருக்குள் பலரும் பேசிக் கொண்டு, இந்தக் குடும்பத்தைப் பற்றியே அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

○ ○ ○

சௌந்தரவல்லியின் இறுதிப் பயணத்திற்கான ஏற்பாடுகள், அவள் வீட்டில் வெகு விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. பிறந்திடத்துக்-கோடி கொண்டு வந்த போது நாவன்னு உக்கி, உருகி அழுது புலம்பினர். தண்ணீர் எடுக்கப்போய்-வந்தார்கள்; பச்சை குத்தினர்கள். அந்தச் சின்னஞ் சிறுவன் பிறந்து, தாய்க்குச் சடங்கு செய்வதாக எல்லோரும் நம்பினர்கள். இன்பவல்லி அச்சிறு குழந்தையை, டாக்டர் அம்மாவும் நர்சும் சொன்ன-படி கண்ணும் கருத்துமாகக் காத்துக் கொண்டிருந்-தாள்.

பன்னீர்ப்பூக்கள் செவ்வான ஒளி ஓடையில் மின்னி உதிர்கின்றன. மெல்லிய பன்னீர் மணம் குங்குலிய வாடையோடு குமைந்து பரவுகிறது. அந்த வீடு மீண்டும் கலகலப்பாக இருக்கிறது. கஜலட்சுமிச் சிலை, நிலைப்பட்டியின் மேலே தூசி படிந்து மங்கிக் கிடக்கிறது.

சௌந்தரம் புறப்படத் தயாராகி விட்டாள். பொட்டிட்டு, மையிட்டு, கார்கூந்தல் தழையத் தழையப் பின்னிவிடப்பட்டு, ஒரு கூடை மலர்சூடி, ஏதோ எல்லோரிடமும் முகமலர்ந்து சொல்லிக் கொண்டு புறப்படுபவள்போல், அவள் ஆயத்தமாகி விட்டாள். இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தது முதற்கொண்டு அவள் பட்ட இன்னல்கள் அதிகம்;

இன்பங்கள் குறைவு. இப்போது இன்னல்களே இல்லாத உலகத்திற்குப் புறப்படுபவளைப் போல அவள் முகம் மலர்ந்து காணப்பட்டது. செத்த பிறகு, சற்றே உடல் ஊதிவிட்டதால், பழைய சௌந்தரத்தை நேரில் பார்ப்பதுபோல் இருந்தது. அவள் சாவிற்காக ஊரே அழுதது என்று சொன்னால் மிகையாகாது. ஆச்சிமார்கள் இப்படி ஒப்பாரி வைத்து அழுதார்கள்:

பொட்டோடு மையோடு
பிறந்த கொடியோடு
பொன்னு வைச்ச பொட்டோடே
புரைகழி சங்கோடே
பிறசாதிக் கொட்டோடே
பெருமாள் திசையோடே
பிள்ளைப் பவுரோடே
பூந்தோப்பு மாலை வந்து
புண்ணியவா கைக்கொடுத்து
பொட்டியிலே பொன்கழட்டி
பூவோடு தீக்குழிக்கப்
புண்ணியமும் செய்திருந்தே!

பிள்ளை பிறக்கவிட்டுப்
பெருமாளைச் சோம்பவைச்சு
நீ பேரழகியாகிப்
புறப்படவோ தவமிருந்தே!

மையோடே பொட்டோடே
வளர்ந்த கொடியோடே
மாதுவைச்ச பொட்டோடே
வடகடலில் சங்கோடே
மறுசாதி கொட்டோடே
மன்னர் திசையோடே
மைந்தன் பவுரோடே

மாந்தோப்பு மாலைவந்து
மகராசா கைக்கொடுத்து
மரவையிலே பொன்கழட்டி
மலரோடு தீக்குழிக்க
மாது தவம் செய்திருந்தே!

மைந்தன் பிறக்கவிட்டி
மன்னரை மலைக்கவைச்சு
நீ வாவரசி யாக
மாண்டும் சுகமில்லே!

பட்டெடுத்துக் கொட்டழைச்சுப்
பகட்டானை மேலவைச்சுப்
பட்டுவந்து மேலணையப்
பாங்கிதவம் செய்திருந்தே!

கொட்டழைச்சுப் பட்டெடுத்துக்
கொம்பானை மேலவைச்சுக்
கோடிவந்து மேல்விழுகக்
கோடிதவம் செய்திருந்தே!

பட்டுவடம் முத்துவடம்
படத்திலே எழுதுச்சா?
கண்டாங்கி வாங்கணும்னு
கணக்கிலே எழுதுச்சா?

கடங்கால் தெரியாமே
கண்டாங்கி வாங்கி,
முனங்கால் தெரியாமே
முத்துவடம் வாங்கிப்
படங்கால் தெரியாமேப்
பட்டுவடம் வாங்கி,
மன்னரைக் களைக்கவைச்சு, மகனைத் தவிக்கவைச்சு
நீ வாவரசி யாகி
மாண்டும் சுகமில்லே!

ஆச்சிமார்கள் சாதாரணமாக ஒப்பாரி வைத்தாலே, அழாதவர்களுக்கும் அழுகை வந்துவிடும். அதுவும் இந்த அவதிச் சாவில், பலர் உண்மையிலேயே அழுது புலம்பினார்கள்!

○ ○ ○

சௌந்தரவல்லியின் இறுதி ஊர்வலம் தொடங்கப் போகிறது. அவளை இந்த வீட்டுக்குப் பெண்ணழைத்து வந்தபோது இருந்த கூட்டத்தைவிட இப்போது இரண்டு மடங்கு இருந்தது.

அந்த நேரத்தில் அழகப்பன் ஆவேசம் வந்தவன் போல் ஒரு பையை எடுத்துக் கொண்டு வந்து, தன் ஆத்தாள் முன்பாக அதைத் திறந்து கொட்டினான். நோட்டும் சில்லரையுமாக ரூபாய்கள் விழுந்து சிதறின. "இந்தா உன் மருமகள் தனக்குக் கிடைத்த ஒரு சில மாத வாழ்வில் சேமித்த சிறுவாட்டுப்பணம் இது. என்ன இருந்தாலும் சிறுவாட்டுப் பணம் அவளுடையது தானே. உனக்கு அவள் தரவேண்டிய ஒரு வருஷத்து முறைப் பணமும், அதற்கு வட்டியும், அதுக்கு மேலேயும் இதிலே பணம் இருக்கு. இனியாவது, அவள் உன் கடனில்லாமே நிம்மதியாச் சுடுகாட்டுக்குப் போகட்டும். ... உனக்கும் திருப்தியாயிருக்கும்" என்று கத்திவிட்டு, அழகப்பன் நேரே போய்த் தீச்சட்டியை எடுத்துக் கொண்டான். இந்த நிகழ்ச்சியை யாரும் எதிர்பார்க்கவில்லை. அப்போது மனமுள்ளவர்கள் எல்லோரும் மயங்கினார்கள்; இதயம் உள்ளவர்கள் எல்லோரும் அழுதார்கள்!

சௌந்தரவல்லி தான் அந்த வீட்டில் எந்தப் பொட்டோடும் பூவோடும் நுழைந்தாளோ, அதே

பொட்டுடனும் பூவுடனும், அழகுடனும் பொலிவுடனும் புறப்பட்டு விட்டாள். தேர் புறப்பட்டு விட்டது.

அழகப்பன் கையிலே இருந்த நெருப்பு, அந்த அழகிய உடலைச் சுட்டெரிக்க வேண்டுமே என்று புகைந்து, குமைந்து கொண்டிருந்தது. அவன் நெஞ்சிலே இருந்த நெருப்பு, இந்த வீண் சம்பிரதாயங்களையும் சடங்கு சாத்திரங்களையும் முறைதலைகளையும் சுட்டெரித்து விடவேண்டும் என்று புகைந்து கொண்டிருந்தது! ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது.

## 18

சௌந்தரவல்லி இயற்கையுடன் கலந்துவிட்டாள். அழகப்பன் மனம் துணையைப் பிரிந்த அன்றிற் பறவை போல் துயரத்தில் மூழ்கியது. இழவு வீட்டில் பலரும் பலவாறு பேசிக் கொண்டார்கள். ஒருசிலர் மட்டுமே சௌந்தரத்தின் இளமை மரணம் குறித்து இரக்கப்பட்டதாகத் தோன்றியது. ‘என்னயிருந்தாலும் பூவோடும் பொட்டோடும் வாழ்வரசியாப் போகக் கொடுத்து வைத்தவள்தான்’ என்று ஆறுதல் அடைந்தவர்களும் உண்டு. ‘‘இப்படியா ஒரு முறையைக் கூடக் கொடுக்க முடியாம மொட்டையாப் போவாக...செட்டிய வீட்டுலே முறைகளை விடமாட்டாகன்னு தெரிஞ்சதுதானே ··· அதைக் கொடுக்காமே, இப்பப் பாருங்க அவுங்க குடும்பமும், இவ்வளவு இருந்தும், இப்படிப் பொலிவில்லாமேப் போச்சு...முறைதலை பேசப்படாது. பேசினால் கொடுத்துப்புடணும்...செட்டி வழியில்லே... அவ, செத்துப் போன வேகுப்பட்டியாளும் ஆம்புளையான் சொல்றதைத்தான் கேப்பாள்... இப்படி அந்தக் குடும்பம் கவைக்குதவாமேப் போச்சு’’—இவ்வாறு நியாயம் பேசியவர்கள் எண்ணிக்கையும் சற்று அதிகமாகவே இருக்கத்தான் செய்தது.

அழகப்பன் இவர்களையெல்லாம் எண்ணி மனத்திற்குள் அருவருப்படைந்தான். இந்த நகரத்தார் சமூகம் செயலினால் மட்டும் அன்று; நினைப்பினாலும் பேச்சினாலும்கூடத் திருந்தவில்லை. இனிமேலும் திருந்துகிற மாதிரி தோன்றவில்லை. பேசாமல் இந்தச் சமூகத்தைவிட்டே ஒதுங்கிவிட வேண்டியதுதான். இவ்வாறு அவன் உள்ளம் நைந்தது. இதில் என்ன சிறப்பு என்றால் அவனுக்குத் தெரியாமல், இழவு வீட்டிலேயே அவனுக்கு மறுமணம் செய்யப் பலர் முன்வந்தனர். அங்கேயே பேச்சுவார்த்தைகள் தீவிரமாகத் தொடங்கின. சிலர் அழகப்பன் காதில் விழுகிற மாதிரியும் இதைப் பேசத் தொடங்கினார்கள். அப்போதெல்லாம் அழகப்பனுக்கு வந்த ஆறுச் சினம்... அவர்களைச் சுட்டெரித்து விடலாம் போல இருக்கும். 'இந்தச் சமூகத்தையே திரும்பிப் பார்ப்பேனா?' என்று அவன் தன்னுள் உறுதி எடுத்துக்கொள்வான். அவ்வளவு கடுப்பு அவனுக்கு என்றால், அதற்குத் 'தூபதீபம்' காட்டுகிற வகையிலேதான் எல்லோரும் நடந்துகொண்டார்களே தவிர, பெரும்பாலானவர்கள் நாகரிகமாகப் பண்பாகச் சூழல் அறிந்து, அதற்கேற்ப நடந்து கொள்ளவில்லை.

○ ○ ○

சௌந்தரவல்லி இந்த வீட்டிற்கு விட்டுப் போன வாரிசு, அந்தச் சின்னஞ்சிறு பயல் அழுதுகொண்டேயிருந்தான். அவன் சித்திகள் இருவரும் அழகியுமாகச் சேர்ந்து கண்ணும் கருத்துமாகப் பேணினாலும், அவன் பசி வந்தால் ஒரே கத்தாகக் கத்தித் தீர்த்தான். ஒவ்வொரு முறை அவன் பொக்கைவாய் காட்டிச் சிரிக்கும்போது, வள்ளி தூக்கிக் கொண்டுவந்து அத்தானிடம் கொடுப்பாள். உலகையே வேண்டா வெறுப்பாகப் பார்த்-

துக் கொண்டிருக்கும் அழகப்பன் முதலில் வள்ளி-யையும் பிறகு அவள் கையிலிருக்கும் பிள்ளையை-யும் அவ்வாறுதான் பார்ப்பான். பிறகுதான் மனம் மாறி அக் குழந்தையைத் தன் மடியில் ஏற்பான். பையன் தன்னைப் போலவே இருந்தாலும், அந்தக் குமிண் சிரிப்பு சௌந்தரம் புன்னகைப்பது போலவே இருப்பதைக் கண்டு, அவன் மெய்சிலிர்ப்பான். இன்னும் சௌந்தரம் தன்னை விட்டுப் போய்விட-வில்லை என்பது போல் ஒரு நினைப்போடும். "குழந்தை அழப்போகிறுன்; கொடுங்கள்'' என்று சௌந்தரம் ஓடி வந்து வாங்குவதுபோல் ஒரு பிரமை தட்டும். அவன் கண்களில் நீர்பெருகிக் குழந்தையைக் குளிப்பாட்டும். வள்ளி அத்தானுக்கு ஆறுதல் சொல்லத் தெரியாமல் திண்டாடுவாள். அழகி அண்ணன் ஏன் அழுகிறுன் என்பதைப் புரிந்தவள்போல் தானும் அழுவாள். ஒருவாறு பதினுறு நாள்களை ஓட்டிவிட்டு அழகப்பன் மதுரை புறப்பட்டுவிட்டான்.

○ ○ ○

குமா. வுக்கு இப்போது மிகவும் உடல்நலமில்லை. இரத்த அழுத்தம், மார்புவலி அதிகமாக இருந்தது சாமியாடியிடம் சாமியழைத்துக் கேட்டபோது, 'வாவரசி முன்னே வந்து நிக்கிருள். நான் என்ன செய்வேன்!' என்று பெரிதாக ஆடி, உரக்கக் கூவினுன், அவன். லெட்சுமி ஆச்சி நடுங்கிப் போய் விட்டார்கள். ''வாவரசி வந்து நின்னு... சும்மா நிக்கிருளா...? என்னமும் கேக்கிருளா? சாமி சொன்னுத்தானே எங்களுக்குத் தெரியும்!'' என்று கூட இருந்தவர்கள் கேட்டார்கள். சாமியாடி உரக்கச் சிரித்தான், கூவினுன், பக்கஇடம் எல்லாம். எதிரொலித்தன! ஒரே ஆரவாரம் ... நடுக்கம் ... ஆங்காரம்! ''படைப்புக் கேக்கிருள் வாவரசி... இந்த வருசமே படைக்கணும் ... மாதொருத்தி வந்து

பட்ட துயர் கொஞ்சமில்லே... ஓட்டவிடாமே ஓங்கி அடிச்சியா ... பொருந்த விடாமேப் போட்டு அடிச்சியா ... பொண்டாட்டியையும் புருசனையும் பேச விடாமேப் பின்னாலே போனியா?''—சாமியாடி லெட்சுமி ஆச்சியை நோக்கி இந்தக் கேள்விக் கணைகளைத் தொடுத்தான். அந்த ஆச்சி வேறு யாராக இருந்தாலும் இந்தக் கேள்விகளுக்குச் செவியில் அறைந்தாற்போல் பதில் கொடுத்திருப்பார்கள். இது சாமியல்லவா? சாமியிடம் என்ன சொல்வது? ''ஐயோ, அவனைப் பெத்தவுக ... முறையைத் தலையை முறையாக் கொடுத்து, அவனை வாழவைக்காமே, ஒரே பிடிவாதமாக் கெடுத்ததுக்கு நான் என்ன பண்ணுவேன்''. என்று லெட்சுமி ஆச்சி கண்கலங்கி நின்றார்கள்; கையைப் பிசைந்தார்கள்.

''கண்ணைக் கசக்கிக் கடுகளவு பயனுமில்லே. இப்ப வாவரசி ரெட்டைப்பலி கேக்கிறாளே... ரெட்டைப்பலி கேக்கிறாளே . ஒன் மாங்கல்யம் நிலைக்கணுமா? நீ நிலைக்கணுமா?...'' சாமியாடியின் இக்கூக்குரலைக் கேட்டதும் லெட்சுமி ஆச்சி வாய் விட்டு அழுதுவிட்டார்கள்.

சாமி பேசியது: ''அழுது பயனுமில்லை; ஆத்ரத்தால் ஆவதில்லை. முதல் வருசம் முடிய இன்னும் முப்பத்து ஒன்பதே நாள் இருக்கு! சரியா?''

எல்லோரும் 'ஆம்' என்று தலையாட்டினார்கள். ''போ படைப்புப் போடு...ரெட்டை ஆடு வெட்டணும் ...இல்லே உன் மாங்கல்யத்துக்கும் ஆபத்து... உனக்கும் கேடு ... வாவரசி நெஞ்சமெல்லாம் நெருப்பா இருக்கு...படைப்புப்போடல்லே, முதல்லே சேவல் தடால்...அப்புறம் கோழியும் தடால்...அப்-

புறம் எங்கிட்டே வராதே போ...போ...!'' சாமி இறங்கிவிட்டது. லெட்சுமி ஆச்சி நிலை பரிதாபமாக மாறியது. விரைவில் படைப்புப் போடுவதானால் அழகப்பனுக்கு மறுமணம் செய்தாக வேண்டும். கணவனும் மனைவியுமாக நின்று படைப்பை நடத்த வேண்டும். திருமணம் பேச நூறு இடம் வருகிறது- ''அழகப்பனிடம் யார் கேட்பது? எப்படி அணுகு. வது? அவன் வாழ்நாள் முழுவதும் மறுமணமே வேண்டாமென்று இருக்கப் போவதாகக் கூறி- விட்டுப் போயிருக்கிறானமே, யார் என்ன செய்ய முடியும்? நடப்பது நடக்கட்டும்''—இப்படி அவர்- கள் பேசிக் கொண்டார்கள். ஆனால் லெட்சுமி ஆச்சிக்கு மட்டும் 'முதல்லே சேவல் படால், பிறகு கோழியும் படால்!' என்ற கோடாங்கி கூற்று நஞ்சைத் துளைத்துக் கொண்டிருந்தது.

அழகப்பனுக்கு மெய்யன் சோமனாதன் மூலம் தூதுவிட்டுப் பார்த்தார்கள். மெய்யன் சென்று எவ்வளவோ நாசூக்காக வாதாடிப் பார்த்தான். அழகப்பன் எதற்கும் அசைந்து கொடுப்பதாக இல்லை.

''ஒங்க அப்பச்சிக்கும் ஆபத்தாம்...ஒங்க ஆத்தா வுக்கும் கவலைக்கிடம்தானம்...படைப்பு நடத்- தாட்டா ரெண்டு பேரையும் எடுத்துப்பிடுமாமுல்ல... உன் ஆத்தாவைப் பார்க்கக் கண்ராவியா இருக்கு. நொப்பச்சி தொடுக்கு தொடுக்குன்னு இருக்கிருரு... நீ மனசு வச்சால் அவங்க ரெண்டு பேரையும் காப்பாத்தலாம்...சௌந்தரம் வாவரசியாச் செத்ததி னலே, கண்டிப்பாப் படைப்புப் போடணும்னு கேக்கிருளாம்'', என்று மெய்யன் வாதிட்டனவெல்- லாம் பயனற்றுப் போயின.

அழகப்பன் உறுதியாக இருந்தான். 'அவனுடைய நெஞ்சக் கோயிலில் சௌந்தரம் என்ற ஒரு தெய்வ மகளுக்குத்தான் இடமுண்டு. அதில் மற்றொருத்தி-யின் நிழல் படுவதையும் அவன் விரும்பமாட்டான்', என்பதை மெய்யன் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டான்.

○ ○ ○

குமட வீட்டிற்குத் திருமணம் செய்வதாகவும், ஒன்றுக்குப் பத்தாகச் சீர்முறை தருவதாகவும் ஆள் வந்துகொண்டேயிருந்தது. செட்டிநாட்டில் கேட்க வேண்டுமா? பெண்ணைப் பெற்றவர்கள் ஏராளம். லெட்சுமி ஆச்சி அதையெல்லாம் கேள்விப்படு-வதும், கொஞ்சம் ஆசையோடு பேசிப் பார்ப்பதும், பிறகு அலுத்துப் போவதுமாய் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் இப்படி யாரேனும் பேச்செடுத்து வருவதே அவர்களுக்கு நல்ல சித்திரவதையாய் இருந்தது. இலட்சலட்சமாய் முறைவாங்க ஆசைப் பட்ட மனம், கனவு கண்டதுபோல், தனக்குக் கிடைக்கக்கூடிய முறைவகைகளைக் கேள்விப் பட்டுக் கேள்விப்பட்டே வருந்தியது; செய்வதறி-யாது திகைத்தது! அம் மனக் குரங்கு ஆசைக் கொம்பின் உச்சிக்கு ஏறி ஏறித் திரும்பியது. வேக-மாகப் படம் எடுத்தாடிய அந்த ஆசை நாகம் திரும்பத் திரும்பக் கூடைப் பெட்டிக்குள் போய்ச் சுருண்டு கிடக்க வேண்டியதாயிற்று.

குமட இதைப் பற்றியெல்லாம் அக்கறை காட்டவே இல்லை. அவர் தம் மகன் மனத்தை நன்-கறிவார். எனவே அவர் 'இந்தப் பொம்பிளை இப்-படித்தான் கிடந்து அலைவாள். அவளாக அலைந்து அலைந்து ஓயட்டும். நாம் ஏதாவது சொல்லப் போனால் நம்மால் தான் கெட்டுவிட்டது என்பாள்',

என்று எண்ணி முற்றிலுமாக மௌனம் சாதித்து விட்டார், எப்போதும்போல. அவர் இதுபற்றி யாரும் தம்மிடம் நெருங்க விடுவதில்லை. காலப்போக்கில் அவர் உடல்நிலை மிக மோசமாகிக் கொண்டு வந்தது. ஒரு நாள் காலையில் பலகாரம் சாப்பிட்டு விட்டுக் கை கழுவப் போனவர், கேணியடியில் வழுக்கி விழுந்து விட்டார். அவர் நிலை ஆச்சுப் போச். சென்று ஆகிவிட்டதால், அழகப்பனுக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. அழகப்பன் வந்து சேர்வதற்குள் அவர் ஆவி பிரிந்து விட்டது!

○ ○ ○

குமா. வீட்டுப் பன்னீர் மரம் இலையெல்லாம் கொட்டி வெறிச்சோடி நின்றது. முகப்புப் பொலிவிழந்து காணப்பட்டது. மருமகள் செத்து ஓராண்டும் முடியவில்லை. மாமனாரும் செத்து விட்டார். அந்தக் குடும்பத்திற்காக ஊரே இரக்கப்பட்டது. லெட்சுமி ஆச்சி மனத்திற்குள் கணக்குப் போட்டார்கள்; மருமகள் செத்து ஓர் ஆண்டு முடிய இன்னும் ஓரிரு நாள்கள் தான் உள்ளன. முறைப்படி, நட்சத்திரம் பார்த்து, இன்னும் ஒரு வாரத்தில் அவளுக்குத் திவசம் கொடுக்க வேண்டும் என்று பஞ்சாங்க அய்யர் சொல்லியனுப்பியிருந்தார். ஆனால் அதற்குள் இவ்வளவு பெரிய அதிர்ச்சி நடந்துவிட்டது. கோடாங்கி சொன்னது உண்மையாகி விட்டதே. 'ஒரு வருசத்துக்குள் படைப்புப் போடலே, முதல்லே சேவலுக்கு ஆபத்து; பிறகு கோழிக்கும் ஆபத்து' என்று ஆடினானே. இதைச் சிந்திக்கச் சிந்திக்க லெட்சுமி ஆச்சி மனது படாத பாடு பட்டது அவர்களை நோக்கி எமன் ஒவ்வொரு காலடியாக எடுத்து வைத்து நடந்து வருவதுபோல இருந்தது. ஒவ்வொரு நாளும் கூற்றுவன் அவர்-

கள் எதிரே பற்களை நறநறவென்று கடித்து நடனமாடிக் கொண்டிருந்தான். சில சமயம் தூக்கத்தில் தான் செத்து விட்டதாகக் கனவு கண்டு புலம்பினுர்கள். 'கோழியும் தடால்' என்று அவர்கள் நெஞ்சம் கூவிக்கூவி அழுதது. சாவதென்பது அவர்களுக்குக் கசப்பாக இருந்தது. ஒவ்வொரு நாளும் அவர்கள் இந்த நினைப்பினுலேயே செத்துக் கொண்டிருந்தார்கள். பார்த்தவர்கள் கணவன் செத்துப் போனதால் ஆச்சி மெலிந்து விட்டதாகப் பேசிக்கொண்டார்கள். மேலும் அவர்கள் வருகிறவர்களுக்கு இழவு சொல்லி அழுதழுதும் மெலிந்து போனுர்கள். இழவு கேட்க வந்தவர்கள் எல்லாம் 'இந்தச் சோகக் கதை' எப்படியாகுமோ? என்று கவலைப்பட்டார்கள்.

○ ○ ○

குமரன் மறைவுக்குப் பிறகு, தமது நிலையும் என்ன ஆகுமோ என்று கவலைப்பட்ட லெட்சுமி ஆச்சி, முற்றிலும் மாறிப் போனுர்கள். பேரன் ஒருவன் பிறந்து, வீட்டுக்கு வாரிசாக வளர்வதால், சௌந்தரம்தான் வெற்றி பெற்று விட்டாள் என்று அவர்கள் உள்ளுணர்வு பேசியது. 'இனி அந்தப் பயலுக்குத்தான் எல்லா உரிமையும்; நமக்கு என்ன இருக்கிறது' என்று அவர்கள் நெஞ்சகம் நினைத்தது. இப்போது அவர்கள் 'இந்த வீடு அவனுடையது என்றும் இன்பவல்லி அவனுடைய சித்தி என்றும் நாகப்பச் செட்டியார் அவனுடைய ஆயாவீட்டு ஐயா என்றும்' இவ்வாறு எதையும் நோக்கினுர்கள். நகரத்தார்களிடையே ஊறியுள்ள பண்புகளில் இதுவும் ஒன்று. அவ்வாறு நினைத்ததனுல், 'தானும் அந்தச் சிறுவனுடைய அப்பத்தா என்பதனுல், தனக்கும் அவ்வீட்டில் இடம் கிடைத்திருப்பதாக' அவர்களுக்குப் பட்டது. 'என் வீடு, என்சொத்து, என் பணம்' என்ற எகத்தாளம் போய் அந்தச்

சின்னஞ்சிறுவனைப் பார்க்குந்தோறும், அவன் அழுகை ஒலியைக் கேட்குந்தோறும், அந்தப் பொக்கைவாய்ச் சிரிப்பைக் கவனிக்குந்தோறும் 'இவையெல்லாம் அவனுடையன, இவையெல்லாம் அவனுடையன' என்று அறைகூவுவது போல இருக்கும் அந்த ஆச்சிக்கு. ஒவ்வொரு முறை அந்தக் குட்டிப்பயல் வேலன், தன் அப்பத்தாளைப் பார்த்து அப்படிச் சிரிப்பான். அது அவர்களைக் கேலி செய்வது போலிருக்கும்.'என்னடி,என் வீட்டில் உனக்கு வேலை?'என்று அவன் நையாண்டி செய்வது போல இருக்கும்! 'அடசாமி! போற வயசுடா! கொஞ்ச நாளைக்கு உன்வீட்டில் இருந்திட்டுப் போ-றேண்டா!' என்று கெஞ்சுவது போல், லெட்சுமி ஆச்சி தன் பேரனைக் கனிவோடும் மிகப்பணிவோடும் பார்த்துக் கன்னத்தைக் கிள்ளி முத்தமிடுவார்கள்.

ஒரு பெண்ணின் இதயத்தில் எவ்வளவு பெரிய மாறுதல்! அந்த ஆச்சியின் உள்ளத்தில் இருந்த 'பணத்தாசை' என்ற அரக்கி எங்கே? வருச முறைக்கு வம்படி பேசும் காளி எங்கே? அந்தச் சிறுபையன்— குலந்தழைக்க வந்துவிட்ட கோமகன் — வெற்றி நடைபோட்டுக் காவடியாட்டம் ஆடி வீறு தழைக்க வந்த வேலன்- செய்த மனமாற்றம் மிகப்பெரியது. உண்மையில் அவன் பழனிமலையில் வீற்றிருக்கும் வடிவேலனாகத்தான் இருக்க வேண்-டும். ஒரு பெண்ணின் மனத்தில் ஊன்றித் தழைத்-திருந்த 'யான், எனது' என்ற செருக்குகளை வேரோடு களைந்துவிட்டானே?

ஒருவழியில் பார்த்தால் இந்த வெற்றி சௌந்தரத்தையே போய்ச்சாரும். 'வாழாவெட்டி' ஆக்குவதாகச் சபதமிட்ட மாமியார் கையில்,

தன்னையே வார்த்தெடுத்த தந்தச் சிலையாக ஒரு மகனைத் தந்து, 'நான் வாழ்வரசியாகி விட்டேன்; பார்த்தாயா!' என்று சொல்லாமற் சொல்லிச் சென்றுவிட்டாள். ஒருவேளை சௌந்தரம் சாகாமலிருந்தால், பேரனைப் பார்த்த பிறகு மனம்மாறி, குடும்பம் சீர்பட்டிருக்கக் கூடும். யார்கண்டார்கள்?

'சேவல் தடால்; கோழியும் தடால்' என்று சாமியாடி கூவக் கேட்ட பிறகுதான் அவர்களுக்கு இந்த உலகம் நிலையில்லாதது, தம் வாழ்வும் நிலையற்றது என்ற எண்ணமே தோன்றியது'. அன்றுவரை 'எல்லோரும் சாகப் போகிறவர்கள் என்றும், 'தான் ஒருத்தி மட்டுமே வாழப்போகிறவள்' என்றும் தான் அவர்கள் மனம் எக்களித்துக் கொண்டிருந்தது. அடுத்து, கும. அவர்களும் சாகவே அந்த ஆச்சியின் மனம் பெரிதும் கலங்கிப் போய் விட்டது.

பொதுவாக ஒரு சமூகம் முன்னேற வேண்டும் என்றால், அந்த இனத்தில் பெண்களை நன்கு படிக்க வைக்க வேண்டும். ஒரு குடும்பத்தின் அடிமரமும் வேரும் ஆணிவேரும் போன்றவர்கள் பெண்கள் தான். மரம் தழைத்துக் காய் கனி தந்து செழிக்க வேண்டும் என்றால், இந்த வேர்களும் அடிமரமும் நன்றாக இருக்க வேண்டும். அவற்றிற்கு 'அறிவு' என்ற உரமிடவேண்டும்; 'அனுபவம்' என்ற நீர் பாய்ச்ச வேண்டும்; 'நல்லுணர்வு' என்ற ஒளி அடிக்கடி படுமாறு செய்ய வேண்டும். 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்து,' கல்வியறிவும் நல்காததால்தான், இன்று பல குடும்ப மரங்கள் தழைக்காமல் பட்டுப் போகின்றன.

கல்வியறிவு பெற மேலும் மேலும் படிக்கவைப்பதனால் சிற்சில குறைகள் நேர்தல் கூடும். எந்த

ஒரு முயற்சியிலும் சீர்கேடுகள் குறுக்கிடும். கல்வியறிவே இல்லாமல், அடுப்படிப் பூனைகளாய்ப் பெண்களை வளர்த்து அல்லற் படுவதைவிடக் கல்வியறிவு தருவதனால் விளையும் தீங்குகள் குறைவாகவே இருக்கும். கல்வி ஒரு பெண்ணின் கண்களைத் திறந்துவிடுகிறது; நல்ல அனுபவம் பெற வழி செய்கிறது. 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை', அன்பு, இரக்கம், ஈகை யாவற்றையும் நல்குகிறது. நகரத்தார் பெண்களை வாழ்வரசியராக்கும் ஓரே வழி, அவர்களை நிறைந்த கல்வியறிவு பெறச் செய்வதுதான். அடுத்தது, ஒவ்வொரு பெண்ணும் தன் காலில் நிற்கும்படியான தொழிற்பயிற்சியை நல்குவது.

இப்போது லெட்சுமி ஆச்சியின் மனம், இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு, அச்சத்தினாலும் பேரனைப் பெற்ற அனுபவத்தினாலும் மாறியது. கல்வியறிவு இல்லாததால், இம் மாற்றத்திற்கு இவ்வளவு நீண்ட காலம் தேவைப்பட்டது.

இப்போது அந்தவீட்டுக் கணக்குகளையெல்லாம் நாகப்பச் செட்டியார்தான் பார்த்துக் கொண்டார்கள். லெட்சுமி ஆச்சியே அவரிடம் யாவற்றையும் ஒப்படைத்த மாதிரிதான் சூழ்நிலை போய்க்கொண்ருந்தது. இனி வடிவேலனுக்குரியவற்றைத் தன் உறவுக்காரர்களிடம்விடக்கூட லெட்சுமி ஆச்சி நினைக்கவில்லை. முறைப்படி அழகப்பனிடம் ஒப்படைக்க வேண்டும். அவனோ மருத்துவமனைக் கடமைகளில் மூழ்கியிருக்கிறான். இவற்றையெல்லாம் அவன் கவனிக்க மாட்டான். இந்த நிலையில் தமக்கென்று இல்லாமல், அந்தப் 'பேராண்டிக்கு' நம்பிக்கையாக நடக்கக் கூடியவர் அவனுடைய தாய்வழி ஐயாவாகத்தான் இருக்கமுடியும் என்று ஆச்சியவர்களின் அடிமனம் கூறியது.

மதுரையிலே தன் மருத்துவப் பணிகளில் மன அமைதியைத் தேடிக்கொண்டிருந்தான் அழகப்பன். தன் மைந்தன் வடிவேலனுக்குச் சிறிய சளிக்காய்ச்சல் என்று மாமனுர் எழுதிய கடிதத்தைப் பார்த்ததும் அவன் வலையபட்டிக்கு ஓடோடி வந்துவிட்டான். எல்லாவிதமான மருத்துவ உதவிகளும் செய்து, தன் மகனைப் பார்த்துக் கொண்டு, இரண்டு நாளாக மதுரையை மறந்திருந்தான் அழகப்பன். எல்லோருக்கும் இது வியப்பாகக் கூட இருந்தது. தனக்குப் பதிலாக ஒரு டாக்டரை ஏற்பாடு செய்து, தன் மருத்துவமனையையும் கவனிக்குமாறு கூறி வந்திருந்தான் அவன்.

தன் மைந்தனைப் பார்க்கும் போது மட்டுமே அவன் மனம் அமைதிகண்டது. மற்ற நேரமெல்லாம் அவன் பேயறைந்தவன் போல் காணப்பட்டான். அவன் முகம் சற்றும் பொலிவின்றி இருந்தது. லெட்சுமி ஆச்சி அழுதழுது கரைந்தாலும் அவன் சிறிதும் அசையவில்லை.

லெட்சுமி ஆச்சிக்குத் திடீரென்று சாமி வந்து ஆட ஆரம்பித்தது. அந்தச் சாமியும் படைப்புப் போட வேண்டும் என்றுதான் கோபம் கோபமாக வெருட்டியது. அதற்கு மற்றவர்கள் ''நீதான் அழகப்பன் மனசிலே புகுந்து, அவனைக் கலியாணம் பண்ணிக்கும்படி சொல்லணும். அவன் நீ சொன்னுத் தானே கேட்பான். மனுசாள் சொன்னுக் கேக்கலையே......பாவம் இந்த மனுசனும் போயிட்டாரு... இந்த மனுசி கண்ணுேடே அவன் ஒரு கலியாணம் பண்ணிக்கிட்டா...இன்னும் கொஞ்சம் நாளைக்கு இவள் இருந்து, இந்தப் பேரம் பேத்திகளைப் பார்த்துக்குவா... அழகி கலியாணம் இருக்கு ... ஏதோ ஒரு பிள்ளைக்குப் புதுமையைச் செய்து பார்த்துட்டுப்

போனுள்னு நல்லது. பணம் கிடக்குது வெள்ளமா?'' என்று பேசினுர்கள். ஆனுலும் லெட்சுமி ஆச்சி மீது வந்த சாமி, மேலும் ஓங்காரமிட்டுத் தரையை அடிஅடியென்று அடித்தது. அத்தனையும் 'ஹிஸ்டீரியா' என்ற நோயின் விளைவு என்றுதான் அழகப்பன் எடுத்துக்கொண்டானே தவிர, அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

○ ○ ○

லெட்சுமி ஆச்சி தன் மீதே சாமி வந்து இப்படிச் சொன்ன நாளிலிருந்து மேலும் சிறிது மனம் மாறினுர்கள். நாகப்பச் செட்டியார், தம் மைத்துனர் இறந்த போது வருந்தியதும், தம் தங்கையிடம் தாலி வாங்கி வெள்ளைச் சேலை கொடுத்த போது அழுத அழுகையும் அந்த ஆச்சியின் கல் மனத்தையும் கொஞ்சம் கரைத்திருந்தன. இப்போது கோடாங்கி முன்பு கூறியதும் தம் மீதே சாமி வந்தாடியதும் வேறு பெருந்துன்பமாக ஆகி விட்டன.

இன்பவல்லியை எவ்விதச் சீரும் இன்றித் தாமே தம் மகனுக்குக் கொள்ள, இப்போது லெட்சுமி ஆச்சி மனம் ஒருப்பட்டது. 'எத்தகைய மாறுதல்?' என்று கண்டோர் வியக்கும்படி இருந்தது அது.

அடுத்த வருடமும் படைப்புப் போடவில்லை யென்ருல் வாழ்வரசியாகச் செத்த சௌந்தரம் கோபப்பட்டு என்ன செய்வாளோ? அவள் உயிரோடிருக்கும் வரை கோபப் பட்டதே கிடையாது. இப்போது தெய்வமாகிவிட்டவள், இந்தக் குடும்பத்தைப் போட்டு இப்படி ஆட்டுகிருளே என்று லெட்சுமி ஆச்சி ஒருபக்கம் அஞ்சினுர்கள். ஒருவேளை தம்மை-

யும் எடுத்து விட்டால், பிறகு இந்த வீட்டை முழுவதும் அழகப்பனு கவனிக்கப் போகிருன் என்றும், அண்ணனும் அவர் பிள்ளைகளும்தானே இதைக் கவனிக்க வேண்டும் என்றும், தமக்குப் பிறகு நடப்பது இப்போதே நடக்கட்டுமே என்றும் இவ்வாறு லெட்சுமி ஆச்சி சிந்தனை ஓடியது. அதற்கு ஏற்ப, அழகியும் ''அதுதான் சரி... இன்பவல்லி அய்த்தியாண்டியை அண்ணனுக்குக் கட்டிக் கூட்டி வந்து விட வேண்டும்'' என்று தாயிடம் அடிக்கடி வற்புறுத்திஞள். அழகியும் படிப்பை நிறுத்திவிட்டு, வலையபட்டியிலேயே தங்கிவிட்டாள்.

இதை அழகப்பனிடம் யார் கேட்பது என்ற சிக்கல் முன்நின்றது. மெய்யன்கூட முடியாது என்று மறுத்து விட்டான். இந்த நிலையில் நா. அவர்களிடமே லெட்சுமி ஆச்சி கெஞ்சிக் கேட்டார்கள்.

''அண்ணே, அண்ணேன்!''

''என்ஞத்தா... சும்மா சொல்லு!''

''எம் மேலே கோபப்படாதீங்க ... ஊரு ஒலகத்தைப் போல நடக்கலையேன்னு நினைச்சிருப்பேன். யாருக்கும் நான் கெடுதல் நெனைச்சதே கிடையாது. இப்ப நம்ம அழகப்பனுக்கு இன்பத்தைக் கட்டிக் கூட்டிக்கிட்டு வந்தால்...''

நா. அவர்கள் உடல் ஒரு குலுக்குக் குலுக்கியது. ''அதுக்கு இல்லே ஆத்தா... நான் சொல்ல வந்தது...!''

அவரைப் பேச விடாமல் லெட்சுமி ஆச்சி, ''எதுவும் நீங்க கவலைப்பட வேண்டாம்... எல்லாம் எங்க செலவு... நீங்க வீடு விளக்கெரிய வச்-

சாப் போதும்... உங்க மாப்பிள்ளையை நீங்கதான் மனசை மாத்தணும் ... இல்லேன்னு ... செத்துத் தெய்வமா இருக்காளே அவதான் மாத்தணும்...'' என்று இடைமறித்துப் பேசியவர்கள், தாமும் முடிக்க முடியாமல் விக்கி விக்கி அழுதார்கள்.

''ஒம் மனசு புரியுது லட்சுமீ... கலியாணமே வேண்டாமுங்கிறவுகளை எப்படிக் கேக்கிறது, என்ன நினைச்சுக்குவியோ... சௌந்தரம் செத்து ஒண்ணே முக்கால் வருசம் ஆகப்போகுது. இது வரை அவுக என்னை ஏறெடுத்துப் பார்த்துப் பேசல்லே. எனக்கும் முகம் கொடுத்துப் பேசத் தெம்பில்லே... அன்றைக்கு சௌந்தரத்தை அனுப்பவே மாட்டமுன்னு தடுத்தாக லட்சுமி. நான்-தான் மாட்டேனுன்னு கூட்டி வந்து குடியைக் கெடுத்தேன் லட்சுமி...!''— நா. அவர்கள் சிறு குழந்தைபோல் தேம்பினார்கள்.

அழகப்பன் மதுரைக்குப் புறப்பட ஆயத்த-மானான். அவனை எல்லா வழியிலும் தடுத்து நிறுத்த அனைவரும் முயன்றார்கள். வேலனுக்குக் குணம் ஆகட்டும்என்று கூறிவைத்தார்கள்! இரண்-டொரு நாள் அவன் தங்கியிருந்தால், அவன் மனத்தை மாற்ற முடியாதா என்பது அவர்கள் ஏக்கம்.

பன்னீர் மரம் மீண்டும் பூத்து வெண்ணிற மலர்களைத் தூவி அந்த வீட்டை வாழ்த்திக் கொண்டு நின்றது. கோலக்கஞ்சார் கும. வீட்டு முகப்பு மீண்டும் பழைய பொலிவை அடைந்து கொண்டிருந்தது.

இருந்தாலும் உள்ளே எல்லோர் முகங்களும் அழுது, வீங்கிப் பொலிவிழந்துதான் இன்னும்

காணப்பட்டன. அந்தச் சின்னஞ்சிறுவன் குமரப்பன் என்ற வடிவேலன் கூப்பிட்ட குரலுக்குத் திரும்பினுன். 'வேலா! வேலா!' என்ருல், அந்தத் திசைநோக்கி அவன் தள்ளாடி நடந்து வரும் அழகைப் பார்க்க வேண்டுமே! அந்த நடை, அந்தச் சிரிப்பு... அழகப்பன் மனத்தினுள் சௌந்தரம் வருவாள், மறைவாள் வடிவேலனைக் காணும் போது! அதுமட்டுமன்று, அழகப்பன் 'அப்பா' என்ற மழலைக்குரல் கேட்டு, மனம் நெகிழலானுன். அந்தச் சிட்டுக்குருவி, கையைப் பிடித்திழுத்துக் கொண்டு போய் அப்பாவை அம்மா படத்தின் முன்னே உள் வீட்டில் நிறுத்திவிட்டு, விழுந்து விழுந்து கும்பிட்டு எழுந்ததைப் பார்த்தபோது உடலெல்லாம் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க உணர்ச்சி வசப்பட்டான் அழகப்பன். அப்படியே தன் மைந்தனைத் தூக்கி உள்ளங்கால் முதல் உச்சிவரை முத்தமிட்டு முத்தமிட்டுக் களித்தான்.

## 19

வடிவேலனுக்கு அழகப்பன் யானையேற்றம் காட்டி விளையாடினுன். காவடிகள் தூக்கிச் சுற்றி மகிழ்ந்தான். கரகம் ஆடினுன். இப்படி அவன் மனம் மகிழ்ந்திருப்பதைப் பார்த்து, நா. அவர்கள் அவனிடம் கலியாணப் பேச்சை எடுக்கலாமா என்று எண்ணினுர். லெட்சுமி ஆச்சியும் கண்ணைக் காட்டினுர். வேலன் பசி எடுத்ததால் 'அம்மா, அம்மா' என்று கூவிக் கொண்டு, இன்பவல்லியிடம் ஓடினுன். அவளும் எங்கோ வேலையாக நின்றவள், அதை அப்படியே போட்டுவிட்டு ஓடோடி வந்து, இரண்டு கைகளையும் விரித்துத் தாவி விழுந்த பாலகனை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டாள். இந்தக்

காட்சி லெட்சுமி ஆச்சியை உறுதிகொள்ளச் செய்தது. 'அந்தப் பாலகனுக்கு ஒரு தாய்; தம் மகனுக்கு ஆறுதல் தர ஒரு மனைவி; தம் அந்திய காலத்தில் தம்மைப் பேண ஒரு மருமகள்; இந்த வீடு விளக்கெரியவைக்க ஓர் இளவரசி - வேண்டும்... பணத்துக்கா பஞ்சம்......... இன்பவல்லிதான் பொருத்தம்'—இப்படி அவர்கள் மனம் ஓடியது; எழுச்சி கொண்டது.

''சும்மா கேளுங்கண்ணே... அவன் நம்ம பிள்ளை தானே! சொன்னால் கூடவா தப்பு. அப்பச்சி... அழகப்பா... உன் மாமனாரு ஒங்கிட்டே ஏதோ சொல்ல நினைக்கிருக...!''

அழகப்பன் பேசவில்லை. ஒருமாதிரியாக, ஒரு விதக் கவலைக்குறியோடு, தன் மாமனாரைப் பார்க்கிறான்.

நாவன்னா தடுமாறுகிறார்: ''வந்து மாப்பிள்ளே ...இப்ப...நம்ம சௌந்தரம் இருந்திருந்தால் எவ்வளவோ நல்லது தான்... போறாத காலம்... செத்துப் போயிட்டாள்... உலகத்திலே எத்தனையோ பேர் இப்படிச் சாகக்கொடுத்தவுக மறுதாரம் கட்டிக் கலையா? அதனாலே...''

அழகப்பன் பார்வை கடுமையாகியது. நாகப்பருக்கு வார்த்தைகள் தடைப்பட்டன. லெட்சுமி ஆச்சி நிலைமையறிந்து தொடர்ந்தார்கள். நாவன்னாவின் பெண் பிள்ளைகள் உள்ளே ஆல்வீட்டுச் சன்னல் வழியே வளவில் நடப்பதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வேலன் அவனாகத் தட்டில் வைத்த நெய்ச்சோற்றை எடுத்து வாயில் பாதியும் மேலில் பாதியும் அப்பித் தின்று கொண்டிருந்தான்.

''அந்தப் பிள்ளையை யாரு வளர்க்கிறது? இந்தா எனக்குத் தள்ளாடுது ... தாயில்லாப் பிள்ளையை வளர்க்க ஒருத்தி வேண்டாமா?''

''அந்தப் புத்தி முன்னாலேயே இருந்திருக்க வேண்டும்,'' அழகப்பன் உரத்துப் பேசினான்.

''அது இல்லாமேத்தாண்டா தங்கமான மருமகளை விட்டுட்டுத் தவிக்கிறேன். உங்க அப்பச்சியைச் சாகக்கொடுத்துட்டு நான் கைம்பெண்டாட்டியாக் கிடக்கிறேன். அவள் வாவரசியாப் போயிட்டாள்...இது போதாதா? இந்தத் தண்டனை போதாதா எனக்கு?...நான் இப்பத் திருந்தியிட்டேண்டா, அழகப்பா! திருந்தியிட்டேன்...இப்போ உன் தாய் உங்கிட்டே பிச்சை கேட்கிறாள்...உன் பிள்ளைக்கு ஒரு தாய்...''

இதைக்கேட்டுக் கண்களை இடுக்கி, நெற்றியைச் சுருக்கிக்கொண்டு, தன் தாயை ஏறிட்டுப் பார்த்தான் அழகப்பன். அங்கே அவன் கண்கள் ஒரு சாரதாமணி அம்மையாரைக் கண்டன. தன் கண்களை நன்றாகத் துடைத்துவிட்டுத் தன் தாய்தான் என்று உறுதி செய்து கொண்டான் அவன்.

அவன் உதடுகள் விரிந்தன. ஏளனமாகச் சிரித்து விட்டு, அவன் கேட்டான்: ''ஏன்? நிறையச் சீதனம் வருகிறதா? நிறைய மாமியார் சாமான் கிடைக்கிறதா? வருசத்துமுறை தந்திருவாக இல்லையா? தங்கம், வயிரம், வெள்ளிச் சாமான் கடைகள், பாத்திரக் கடைகள் எல்லாம் பரப்புவார்கள் கொள்ளை கொள்ளையா, நீங்க நினைச்சபடி தருவாங்களாக்கும்! அதனாலே...''

லெட்சுமி ஆச்சி தம் மகன் தம்மை இடித்துக் காட்டுவதைப் பார்த்து உள்ளம் நைந்தார்கள்.

அவர்கள் மனஉறுதியோடு, தெளிவாகக் கணீரென்ற குரலில், "அந்த நினைப்புள்ளவள் செத்துப் போயிட்டா ... இப்ப நான் எவ்வளவோ மாறிட் டேண்டா தம்பி! இப்ப இன்பத்தை எல்லாச் செல-வும் நாமளே போட்டுக் கூட்டிக்கிட்டு வருவோம்-நீ மட்டும் சம்மதமுன்னு சொல்லு!"

"அவுகளே செலவெல்லாம் போட்டுக் கூட்டி விட்ட பொண்ணு, ஒரு வருசத்து முறையினுலே வாழாமேப் போனுள் முழுதும் நாமே போட்டுக் கூட்டி வந்தால், அந்தப் பொண்ணு கதி என்னு-குமோ?" என்று கேட்டுவிட்டு அழகப்பன் ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்தான். லெட்சுமி ஆச்சி பதில் பேச முடியாமல் தேம்பியழுதார்கள். நா. அவர்கள் இடைமறித்து, மாப்பிள்ளையிடம் பேசப் போனவர்கள், ஏதோ பேச வாயெடுத்துப் பிறகு வாயடைத்து அமைதியாகி விட்டார்கள்.

அழகப்பன் சற்று உரக்கவே பேசினுன், தாயைப் பார்த்து: "உங்க மனசு மாறினது உண்மை-யானுல், அந்தப் பொண்ணுகளை நல்ல இடங்களாப் பார்த்து, நீங்களே செலவழிச்சுக் கட்டிக்கொடுங்க. உங்க அழகியைப் போலவே அதுகளையும் நினைச்சுக் கட்டிக் கொடுங்களேன், பார்க்கலாம்! நீங்க செய்த பாவம் கொஞ்சம் கரையும்" என்ருன்.

"நான் செய்து வைக்கத்தாண்டா போறேன். ...இருந்தாலும் முதல்லே நம்ம வீட்டிலே விளக்-கெரியச் செய்யி. பிறகு நானே நின்னு மத்ததைக் கட்டிக்கொடுக்கலேன்னுப் பாரு...".

அழகப்பன் தலையை ஆட்டிக்கொண்டே சிரித்-தான்: "இந்த மனக்கோயில் சௌந்தரத்திற்காகக் கட்டியது. இதிலே வேறு யாரையும் என்னுலே

எடுத்து வைக்க முடியாது...அப்படி நினைக்கக்கூட என்னாலே முடியாது!'' என்று முடிக்குமுன்பே, கண்ணீர் கரைய, முகப்பை நோக்கி விரைந்து நடந்தான். அவன் மனத்திண்மையைக் கண்ட ஒவ்வொருவர் இதயமும் அழுதன. லெட்சுமி ஆச்சி கண்கள் மகன் மீது படிந்து பின்வாங்கின. 'எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம், எத்தகைய அன்றில் பறவைகளைப் பிரித்துவிட்டோம்', என்று அவர்கள் அடிமனம் எண்ணி ஏங்கியது.

○ ○ ○

கடைசியாக அன்று அழகப்பன் புறப்படுவதாக இருந்தது. நா.வும் லெட்சுமி ஆச்சியும் அவனிடம் நேரே கேட்ட திருமணத் தாக்கல் காரணமாகவும் மனக் குழப்பத்தினாலும் வண்டியை விட்டுவிட்ட அழகப்பன் மறுநாள் காலையில் முதல் வண்டிக்கு மதுரைக்குப் புறப்பட எண்ணினான். பொதுவாகத் தன் மனைவி இறந்ததிலிருந்து மதுரையிலும் அவன் வெளியில் எங்கும் செல்வதில்லை. தன் மருத்துவமனைப் பணியிலேயே பெரும்பொழுதைக் கழித்துவிடுவான். எஞ்சிய நேரங்களில் அறநூல்களை—இராமதீர்த்தர், இராமகிருஷ்ணர், தாயுமானவர், வள்ளலார், திருமூலர், மணிவாசகர் எழுதிய அறவுரைகளையும் பத்திமைப் பாடல்களையும்-அவன் படிப்பது வழக்கம்.

வலையபட்டியில் தன் வீட்டில் அவன் திருக்குறள் புத்தகம் ஒன்று பரிசுப் பதிப்புக் கிடப்பதைப் பார்த்து எடுத்தான். அது அவர்களுக்குத் திருமணத்தன்று, அவனுடைய நெருங்கிய நண்பன் ஒருவன் பரிசளித்தது. ஒரு கருத்தில்லாமல் அப்

புத்தகத்தை அங்குமிங்கும் திருப்பிக் கண்ணிற் கண்ட குறள்களைப் படித்துக் கொண்டிருந்தான். அதில் 'துறவு' என்ற அதிகாரம் கண்ணிற்பட்டபோது அதில் மிகவும் ஈடுபட்டுப் படித்தான். திருவள்ளுவர் புறவேடங்களை நகையாடிக் கண்டித்து, மனத்துறவைப் போற்றியிருந்தது அவனுக்கு மிகவும் பிடித்தது. 'துறவு' என்பது உள்ளத்தளவில் உண்மையாக அமைய வேண்டும். அல்லாமல் வெளியே துவராடை பூண்டு, இல்லறவாசிகளிலும் பற்று மிக்கு வாழ்வது உலகை ஏமாற்றுவதாகும். நெஞ்சினுல் துறவாமல், துறந்தார்போல் வஞ்சித்து வாழ்பவர்களை வள்ளுவர் நகையாடியிருந்தார். தன்னைப் பொறுத்தவரை மனம் முற்றுந் துறந்த முனிவரின் மனத்துக்கு ஈடாக இருப்பதாக அவன் தனக்குத்தானே பெருமைப்பட்டுக் கொண்டான். தன்னை மீண்டும் இவ்வுலகில்—உலக பாசத்தில்-ஒட்டவைத்துக் கொண்டிருக்கும்படி செய்யும் அந்தச் சின்னஞ்சிறு சிசுவை அவன் அப்போது நினைவுகூர்ந்தான். அக்குழந்தையின் புன்னகையிலும் மழலைப் பேச்சிலும் தள்ளாடும் நடையிலும் தான் தன்னை இழந்து விடுவதாக அவன் கணித்துக் கொண்டான்.

அவன் தன் எதிரே சௌந்தரம் நின்று வழக்காடுவது போல உணர்ந்தான். "நீங்கள் எங்கே என் பிரிவினுல் வருந்தித் துறவியாகி விடுவீர்களோ என்றுதானே இச் சிறுபிள்ளையை உங்களிடம் ஒப்படைத்துவிட்டுப் போயிருக்கிறேன். அன்று நீங்கள் மதுரையிலிருந்து நேரத்தில் வந்திருந்தால், உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுப் புறப்பட்டிருப்பேன். உங்களுக்கு உங்கள் கடமை-

தான் முக்கியம். அதனுல் ஏறத்தாழ நான் பிரிகிற நேரத்தில் வந்தீர்கள். நல்லவேளை, கடைசியாக உங்களைப் பார்த்து விட்டுப் பிரிந்தேனே. இல்லை-யென்ருல் எனக்கு அதுவும் வாய்த்திருக்காது'' என்று செளந்தரம் செல்லமாகக் கோபிப்பதுபோல இருந்தது.

ஏதோ குறிப்பிட்ட வண்டிக்குப் புறப்படுபவரை, வழியனுப்ப வேண்டியவர் நேரத்திற்கு வராதது போலவும் நல்லவேளையாக வண்டி புறப்படப் போகிற சமயத்திற்கு வந்து வழியனுப்பியதைப் போலவும் அவனுக்கு ஒரு மனமயக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவன் மனைவி தனியே ரயிலில் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிருள். அவனிடம் தன் குழந்தையைக் கொடுத்துவிட்டு, அவனைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி பன்னிப் பன்னி பத்து முறை சொல்லிவிட்டு, அவள் புறப்படுகிருள். வண்டி நகர்கிறது. அவள் கையை அசைக்கிருள்; அழகப்பனும் கையை அசைக்கிருன். அவன் கையில் குடி கொண்டிருக்கும் வடிவேலனும் தன் பிஞ்சுக் கரங்களை மெல்லவே அசைத்துத் தாயை வழி விடுகின்ருன். வண்டியோ விரைகிறது, ஓடுகிறது ... கூவிக் கூவி ஓடி ஒரு புள்ளியாகிச் சேய்மையிலே, கண்ணுக் கெட்டாமல் மறைந்து விடுகிறது!

இப்படிப் பட்ட மனத்தோற்றத்திலேயே—நெட்டைக் கனவுகளிலேயே—அழகப்பன் தோய்ந்து விடுகிருன்; தன்னை மறந்துவிடுகிருன்; தன்னை இழந்துவிடுகிருன். ஒருமுறை அவனிடம் அவள் கூறிஞள், ''உங்கள் தாயார் நான் உங்களுடன் வாழ்வதை எப்படித் தடுக்கமுடியும்? நான் மனத்-

திஞலேயே உங்களுடன் எப்பொழுதும் வாழ்ந்து-கொண்டுதானே இருக்கிறேன்? நீங்கள் என் அருகி-லேயே இருப்பது போலவும் நான் உங்களுக்குப் பணிவிடைகள் செய்வது போலவும் நினைத்து நினைத்து நான் வாழ்ந்து கொண்டுதானே இருக்-கிறேன்? இப்படி மனத்திஞலேயே வாழ முடிந்த-வளை உங்கள் தாயார் எப்படி வாழாவெட்டி ஆக்க-முடியும்?'' என்று. இப்போது அவனை அவ்வாறு அவளுடன் மனத்திஞலேயே வாழ வைத்துவிட்டு அவள் போய்விட்டாள். அவனே எந்நேரமும் அவள் நினைவாக, அவளோடு வாழ்வதாக மனப்-பால் குடித்துக்கொண்டு, ஒரு கனவுலகில் வாழ்-பவன் போல் காணப்படுகிருன்.

இப்படியே சிந்தனையும் குழப்பமுமாக, உறக்க-மின்றி முன் முகப்பில் படுத்திருந்த அழகப்பன், உள்ளே 'குய்யோ, முறையோ' என்ற பேரிரைச்சல் கேட்டு ஓடிஞன். அவனுடைய தாய்க்கு ஏதோ கெட்ட கனவு தோன்றியதாம். அந்த ஆச்சி திடீ-ரென வாய் புலம்ப, அந்த நேரத்தில், இரவு பதி-ஞேரு மணியளவில் எல்லோரும் விழித்துக்கொண்டு அவர்களிடம் ஓடி வந்திருக்கிருர்கள். அந்த ஆச்சி சாமி வந்தவர் போல் ஆடி, வாய்க்கு வந்ததை உளறியது, எல்லோரையும் அச்சுறுத்தி விட்டது-''கொள்ளி வைக்கிறவன் போகு முன்னுடி பச்சை குத்துங்கடி, குளிப்பாட்டுங்கடி......சரிசரி, போதும் கொள்ளி வைக்கச் சொல்லுங்கடி!'' என்று இவ்வாறு லெட்சுமி ஆச்சி, தொடர்பில்லாமல் பேசவே, எல்லோருக்கும் அது கவலையை உண்டாக்கி விட்-டது. கொஞ்ச நாட்களாகவே அவர்கள் தாம் செத்துப் போவதாகக் கனவு கண்டு புலம்பத் தொடங்கி இருந்தார்கள். அது இன்று அதிகமாகி விட்டது, மகன் காலையில் போய்விடுவான் என்று,

ஒரு வழியாக அந்த ஆச்சியை ஆசுவாசப்படுத்தி விட்டு எல்லோரும் உறங்கப்போக நெடுநேரம்ஆகி விட்டது. சிறுவன் வடிவேலன் மட்டும் விழித்துக் கொண்டவன் தூங்காமல் விளையாடிக் கொண்டிருந்தான்.

○ ○ ○

அழகப்பன் மாடியின் உச்சிக்குப் போய் அங்கே நிலவொளியில் ஒரு மூலையில் அமர்ந்தான். அவன் மனத்தில் பெரிய குழப்பம் இருந்தது. அங்கிருந்து சுற்றும் முற்றும் பார்த்தால் வலம்புரியின் மேற்கு, வடக்கு எல்லையோரப் பகுதிகளும், உலகம்பட்டி போகும் வண்டிப் பாதையும் தெளிவாகத் தெரியும். கண்ணைச் சுழற்றி ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் தன் வீட்டைப் பார்த்து, ஒரு காலத்தில் இந்த வீடு எவ்வளவு கலகலப்பாக இருந்தது என்று நினைத்துக் கொண்டான். இப்போது தன் தாயாருக்கும் நெடுநாட்கள் ஓடாது என்று தோன்றியது. தன் தாயாரைத் தண்டிக்க வேண்டும் என்று அவன் எதுவும் திட்டமிட்டுச் செய்யவில்லை, ஆனால் தனக்குப் பிடித்தமே இல்லாத ஒன்றை எப்படிச் செய்வது என்றுதான் அவனுக்குப் புலப்படவில்லை.

தன் தாய் சொல்வதையோ, தந்தையார் சொல்வதையோ தான் தட்டாமல் வளர்ந்த காலத்தை நினைத்துப் பார்த்தான். இந்தத் திருமணம் காரணமாகவே கருத்து வேறுபாடு வந்தது.

இப்போது முழுவதுமாக மனம் மாறி, மனம் சமநிலைப்பட்டிருக்கிறது. ஆனால் திருமணம் என்பது ஒருவன் விரும்பி மேற்கொள்ளவேண்டிய ஒன்றல்லவா? அதில் மாட்டிக் கொண்டு என்ன செய்வது?

எனவே 'இறைவன் விட்ட வழி' என்று அவன் தன்னைத் தானே அமைதிப்படுத்திக் கொள்ள முயன்றான்.

பொழுது விரைந்துகொண்டிருந்தது. அழகப்பன் கண்கள் சற்றே அயர்ந்தன. கீழே இறங்கிப்போய்ப் படுக்கையில் விழுந்து உறங்கிவிடலாம் என்று எண்ணுகிற நேரம்.

ஏதோ பட்டுடை தகதகக்க ஒரு பெண் நடந்து வருகிற காலடி ஓசை கேட்டது. சலக்கு சலக்கு என்ற சதங்கை ஒலி நெஞ்சைத் தொட்டது. அழகிய நாச்சியம்மன் கோயில்-சுற்றுப்புறம் - நிலவொளி- இது என்ன கனவா? சௌந்தரவல்லியே நடந்து வருகிறாளே ... வடிவேல் முருகனையும் அல்லவா தோளில் சுமந்து கொண்டு வருகிறாள். அன்று வள்ளியின் கொலுசுகளைக் காணவில்லையென்று, கையைப் பிசைந்துகொண்டு, அழகிய நாச்சியம்மன் கோவிலைச் சுற்றிச்சுற்றி வந்த அதே இளமையுடன், அதே அழகுடன் வருகிறாளே. என்னைப் பிரிந்-திருக்க முடியாமல் தேடிக் கொண்டு வருகிறாளோ ...அதே சிரிப்பு, அதே நடை, அதே பாவனை, அதே சாயல் ... மணமகள் போலத் தன்னை ஒப்பனை செய்து கொண்டிருக்கிறாள். தலைமுடியை வாரிப் பின்னி விட்டுப் பட்டுடை உடுத்தி வருகிறாள். அன்று திருமணத்தன்று, உடுத்தியிருந்த அதே புடவை ... அத்தனை அணிகலன்களையும் ஒன்று விடாமல் எடுத்துப் பூண்டிருக்கிறாள். தலையில் இவ்வளவு முல்லை மலர்களைச் சூடியிருக்கிறாளே, எனக்குப் பிடிக்கும் என்று! தேவதை போல நடந்துவரும் இவள் பாதங்கள் நிலத்தில் நன்கு பதிகின்றனவே. கடைக்கண்ணால் பார்த்து, ஏதோ பேச நினைப்பவள்

போற் சிரித்து, சொல்ல வருவதைச் சொல்லாமல் தயங்கி... அச்சச்சோ ... இவள் சௌந்தரவல்லியே தான்! எப்படி இவள் உயிர்பெற்று வந்தாள்...?கண்கள் இமைக்கின்றன; கார் குழல் காற்றில் அசைகின்றது. அந்தப் பாலகன் இவள் தோளின் அரவணைப்பில் நிம்மதி அடைகிருன் போலும்!... சிறிதும் அசையாமல் எப்படிப் படுத்திருக்கிருன்? போக்கிரிப்பயல்! நம்மிடம் எவ்வளவு முரண்டு பண்ணுகிருன்? அங்கே மட்டும் இவ்வளவு அமைதியா? வரட்டும் பயலைத் தூக்கி முத்தமிட்டு, வம்பிழுக்க வேண்டியது தான்!

அருகே வந்து நிற்கும்அவள் நாணத்தால் தலை கவிழ்கிருள். மனம் நெகிழ்ந்த அழகப்பன் 'சௌந்-தரம்' என அழைக்கின்ருன். அவள் மெதுவே சிரிக்-கின்ருள். 'அத்தான்' என அவள் உதடுகள் அசை-கின்றன. அப்போதுதான் புரிகிறது; அந்தக் குரல் சொல்லுகிறது, அவள் சௌந்தரமல்ல, இன்பவல்லி என்று!கண்களை உற்றுப்பார்க்கிருன்.இன்பவல்லியை இதற்குமுன் இவ்வளவு அண்மையில், பக்கத்தில் உற்றுப் பார்த்ததில்லை. அதனுல் உண்மை புரிகிறது! அவள் கண்களில் கண்ணீர்! மாமியின் துயரம் அதிகப்பட்டு உயிருக்கு மன்ருடி அரற்றி அழுவதைப் பார்த்துச் சௌந்தரமே, இன்பவல்லி போல வந்து நின்று தன் மனத்தை மாற்றப் பார்க்கிருளா? அல்லது... அல்லது... இன்பவல்லிதான் சௌந்தரம் போலவே வந்து நின்று, அந்த மாமிக்காக, தன் தந்தைக்காக, இந்தப் பயலுக்காக நாடகம் ஆடு-கிருளா? அழகப்பன் தன் கண்களை நன்கு துடைத்து விட்டுக் கொள்கிருன்.

சௌந்தரம் அல்ல என்றதும் அழகப்பன் முகத்தை மாறவைத்துக்கொள்கிருன். புரிந்து

கொண்ட அவள் குழந்தையை அவனிடம் நீட்டிக் கொடுத்து விட்டுத் தனக்கு இனி வேலை இல்லை என்பவள் போல் திரும்பி நடக்கிருள். அந்த நடையும் சௌந்தரம் போலவே இருக்கிறது.

சரியாக உறங்காத வடிவேலன் அப்பாவின் தோளில் நன்குசாய்ந்து உறங்காமல், கைமாறியதில் விழித்துப் பார்த்து, போய்க் கொண்டிருக்கும் இன்பத்தை 'அம்மா! அம்மா!' என்று அழைக்கிருன். அவள் தயங்குகிருள், போனுல் அவன் அழுவானே என்று. நடந்து சென்றவள் தயங்கித் தயங்கி நின்று நின்று சற்றே தலையை மட்டும் திருப்பிப் பார்க்கிருள்.

அவளிடம் கொண்டு போய் விடும்படி வேலன் அடம் பிடிப்பான் போல் இருக்கிறது: அழப்-பார்க்கிருன் அவன். அந்தக் கட்டாயத்திஞல் அழகப்பனும் குழந்தையை இன்பவல்லியிடம் கொடுக்கச்சற்று முன்ஞக நடக்கிருன். அவளும் பிள்ளையை வாங்கிக் கொள்ளத் திரும்பிச் சில அடி எடுத்து வைத்து வருகிருள்.

தன் 'அம்மா'வின் கைகளில் தாவப்போகின்ற மகிழ்ச்சியில் வடிவேலன் துள்ளிக் குதிப்பதைப் பார்க்கவேண்டுமே! அப்பப்பா! கொள்ளை மகிழ்ச்சி, அந்தப் பிஞ்சுப் பிள்ளைக்கு!!

*

# வாழ்வரசி



தமிழண்ணல்